வெளியீடு: 9-3-2007
தமிழ்நாடு ஆவண காப்பகம்
14 மே 07
சென்னை-600 008

Issued: 9-3-2007

750
13.06.07
6
13/06/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு.

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 1, 2006—தொகுதி 6—எண் 1
Tuesday the 1st August, 2006—Volume 6—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V211,31 P0x
P06.61.
227416

[Price Rs. 3.00

**1–8–2006**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| Governor and Council of Ministers | ix-xiii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xvii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 1 |
| **2. கவன ஈர்ப்பு—** | |
| பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு நீர்த்தேக்கம் கட்டுவதாகச் செய்தி வெளியானது | 2-14 |
| **3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—** | |
| தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனத்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2006 | 14-15 |
| **4. விதி 110-ன்கீழ் அறிக்கை—** | |
| தேர்தல் வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றி வருதல்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 15-18 |
| **5. அரசினர் தீர்மானங்கள்—** | |
| (அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல் | 18-19 |
| (ஆ) பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்கள் தேர்தல் | 19 |
| (இ) பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் தேர்தல் | 20 |
| (ஈ) உரிமைக் குழு உறுப்பினர்கள் தேர்தல் | 20-21 |

| | பக்கங்கள் |
|---|---|
| **6. அறிவிப்புகள்—** | |
| (அ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தல்-கால அட்டவணை | 21 |
| (ஆ) மானியக் கோரிக்கைகள், 2006—2007, முன்மொழிதல் (ஆசெ.) | 21-22 |
| (இ) செல்ஃபோன் இயக்கம் நிறுத்தி வைத்தல் | 121 |
| **7. மானியக் கோரிக்கைகள், 2006—2007, விவாதமும் வாக்கெடுப்பும்—** | |
| (அ) கோரிக்கை எண் 14—எரிசக்தித் துறை<br>(ஆ) கோரிக்கை எண் 44—சிறுதொழில்கள் துறை | 22-177 |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 22,40,59, 115,125-162 |
| திரு. ஆர்.டி. கணேசன் | 57-68 |
| *திரு. எஸ்.எஸ். சிவசங்கர் | 69-78 |
| டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் | 79-90 |
| திரு. அ. தமிழரசு | 93-100 |
| *திருமதி ரா. லீமா றோஸ் | 100-108 |
| திரு. தி. இராமசாமி | 108-114 |
| *திரு. நா. இராமகிருஷ்ணன் | 115-120 |
| *திரு. அ. சின்னசாமி | 121-124 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 178 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கரும்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி & தமிழ்ப் பண்பாடு மற்றும் கடவுச் சீட்டுகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றம் மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு மற்றும் புள்ளியியல்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு

**7. பொதுப் பணித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

227416
சென்னை-600 008
நூலகம்



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**11. வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் மற்றும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள்-அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

**12. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

D
V 2',3' Pob
Pob. 6.1

13. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

14. உணவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எ. வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

15. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம், இட வசதிக் கட்டுப்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

16. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

17. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர்கள், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



18. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

19. கைத்தறித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

20. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

21. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

22. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இஸ்லாமிய அறக்கட்டளை (வக்ஃபு)

23. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

24. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

25. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் மறுவாழ்வு

26. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

27. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள்

28. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

29. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

30. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** - **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Mines and Minerals, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture and Passports

2. **Minister for Finance** - **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislature and Elections

3. **Minister for Electricity and Rural Industries** - **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development, Rural Industries including Cottage Industries and Small Industries

4. **Minister for Rural Development and Local Administration** - **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko. Si. Mani:**

Co-operation and Statistics

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology and Welfare of Ex-Servicemen

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K. N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M. R. K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act



11. **Minister for Revenue and Law** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Law, Courts, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

12. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

13. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

14. **Minister for Food** .. **The Hon. Thiru E. V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

15. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board, Accommodation Control and Wasteland Development

16. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

17. **Minister for Labour** .. **The Hon. Thiru T. M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control, Census, Urban and Rural Employment

18. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K. R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

19. **Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

20. **Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

21. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

22. **Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

23. **Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



24. **Minister for Highways** .. **The Hon. Thiru M. P. Saminathan:**

Highways and Ports

25. **Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

26. **Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

27. **Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

28. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

29. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

30. **Minister for Khadi** **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodan and Gramdhan

## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

### செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 24-7-2006 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எல்., பி.எட். | .. துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடானை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்



42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராயநகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்

63. குமரகுரு, திரு. இரா - திருநாவலூர்
64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. எஸ்.வி. - மதுரை மேற்கு
72. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
73. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
74. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
75. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
76. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
77. சாமி, திரு. ஆர். - மேலூர்
78. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
80. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
81. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
82. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
83. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
84. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்



85. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
86. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்
87. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
88. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
89. சின்னப்பன், திரு. பொ. - விளாத்திகுளம்
90. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
91. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
92. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
93. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
94. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
95. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
96. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
97. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
98. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
99. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
100. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
101. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
102. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
103. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
104. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
105. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
106. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. என். - முசிறி

108. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
109. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி
110. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
111. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
112. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி-2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

154. பிரபாவதி, திருமதி பெ. - தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். - அவினாசி (செ.வ.)
156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். - கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. - கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) - ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். - திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. - பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். - பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
167. பொன்னுதுரை, திரு. செ. - பெருந்துறை
168. போளூர் வரதன், திரு. ம. - செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. - திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. - உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. - திருவோணம்
173. மணி, திரு. எஸ். - பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. - மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. - திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. - கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. - குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. - நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். - திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. - முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. - திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. - சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. - காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. - வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். - சேலம்-I
193. ராணி வெங்கடேசன், திருமதி - சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. - கோவில்பட்டி
195. ராமசந்திரன், திரு. கா. - கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. - பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். - இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். - மயிலாடுதுறை

199. ராஜசேகரன், திரு. மா. - தொட்டியம்
200. ராஜன், திரு. அ. - நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பெ. - ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. - திருப்பத்தூர்
203. லட்சுமணன், திரு. ச. - போடிநாயக்கனூர்
204. லதா, திருமதி ஜி. - குடியாத்தம்
205. லீமா ரோஸ், திருமதி ரா. - திருவட்டாறு
206. வசந்தகுமார், திரு. எச். - நாங்குநேரி
207. வரதராஜன், திரு. ரா. - விருதுநகர்
208. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
209. விடியல் எஸ். சேகர், திரு. - காங்கேயம்
210. விஜயகாந்த், திரு. - விருத்தாசலம்
211. விஜயகுமார், திரு. கே.எஸ். - கும்மிடிப்பூண்டி
212. விஜயகுமார், திரு. பெ.சு. - போளூர்
213. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. - செய்யாறு
214. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். - பேராவூரணி
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - சேலம்-2
216. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
217. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
218. வேலுசாமி, திரு. இல. - தருமபுரி
219. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
220. வேலுமணி, திரு. சு.ப. - பேரூர்
221. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி



222. வேல்முருகன், திரு. தி. - பண்ருட்டி
223. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
224. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். - கிள்ளியூர்
225. ஜாண் ஜோசப், திரு. ஞா. - விளவங்கோடு
226. ஜெகன்மூர்த்தி, திரு. மு. - அரக்கோணம் (செ.வ.)
227. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
228. ஜெயக்குமார், முனைவர் கு. - நாமக்கல் (செ.வ.)
229. ஜெயபால், திரு. எஸ். - குளச்சல்
230. ஜெயராமன், திரு. எஸ்.பி. - வந்தவாசி (செ.வ.)
231. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
233. ஹசன் அலி, திரு. கு. - இராமநாதபுரம்
234. (வெற்றிடம்) - மதுரை மத்தி
235. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் - நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை - மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 16, விய - திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஆகஸ்ட் 1, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை*
*ஆராய்வான் செய்க வினை"*

வருமானம் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி, வளங்களையும் பெருக்கி, இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கிட வல்லவனே செயலாற்றும் திறனுடையவன்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**Tmt. BADER SAYEED:** Hon. Speaker Sir, yesterday while I was in the house, I was treated very badly. I was manhandled by the .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடு)* Sit down. (Interruption) Only today you have given a motion. It is under consideration. Kindly sit down. (Interruption) Of course, I agree with you. Please sit down. (Interruption) Of course, I agree with you. Please sit down. (Interruption) It is under consideration. Please sit down. (Interruption)

***திரு. பொ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திக்குளம் தொகுதியில் சிக்-குன்-குன்யா காய்ச்சலால் இரண்டு பேர் பலியாகியுள்ளார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

## 2. கவன ஈர்ப்பு

### பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு நீர்த்தேக்கம் கட்டுவதாகச் செய்தி வெளியானது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. கே. பாண்டுரங்கன் ஆகியோரில் ஒருவர் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு பேர் அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இரண்டு பேருக்கும் வாய்ப்புக் கொடுப்போம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு 250 கோடி ரூபாய் செலவில், 160 அடி உயர அணை கட்ட அரசாணை பிறப்பித்து (குறுக்கீடுகள்) டெண்டர் விட்டு, பணிகள் தொடங்கப்பட்டதால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** "ஆந்திர அரசு, பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவது தொடர்பாக அரசாணை வெளியிட்டுள்ளதால், ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)



### அறிக்கை

பாலாறு நதி கர்நாடகா மாநிலத்தின் கோலார் மாவட்டத்தில் நந்தி துர்க் என்ற இடத்தில் உற்பத்தியாகி கோலார் மாவட்டத்தில் 92 கி.மீ. பயணித்து, ஆந்திரா மாநிலத்தில் நுழைந்து, சித்தூர் மாவட்டத்திலுள்ள குப்பம் வட்டத்தில் 33 கி.மீ. பயணித்து தமிழ்நாட்டில் வேலூர் மாவட்டத்தில் நுழைகிறது. அங்கிருந்து வேலூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் 222 கி.மீ. பயணித்து வயலூர் என்ற இடத்தில் வங்காள விரிகுடா கடலில் கலக்கிறது.

2. பாலாற்றின் மொத்த நீர்ப் பிடிப்பு பரப்பு 18,300 சதுர கிலோ மீட்டர் ஆகும். இதில் கர்நாடகாவில் 3,123 சதுர கிலோ மீட்டரும், ஆந்திராவில் 4,267 சதுர கிலோ மீட்டரும், தமிழ்நாட்டில் 10,910 சதுர கிலோ மீட்டரும் அடங்கும். இவ்வாற்றின் வடிநிலம் உற்பத்தியாகுமிடத்தில் 37 கிலோ மீட்டராகவும் தமிழ்நாட்டில் வங்காள விரிகுடா கடலில் கலக்குமிடத்தில் 135 கிலோ மீட்டராகவும் உள்ளது. தமிழ்நாட்டில் வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் 45 வட்டாரங்களை 'பாலாறு வடிநிலம் உள்ளடக்கியுள்ளது.

3. பாலாறு நதி தமிழ்நாட்டில் வேலூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மக்களுக்கு உயிர் நாடியாக விளங்குவதுடன் பாசனம், குடிநீர் மற்றும் தொழிற்சாலை பயன்பாட்டிற்கான நீரை அளித்துக்கொண்டிருக்கிறது. மேலும் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தூணாகவும் விளங்குகிறது.

4. வேலூர் மாவட்டத்தில் வாலாஜா வட்டத்தில் புதுப்பாடி என்ற இடத்தில் 1858 ஆம் ஆண்டு ஒரு அணை கட்டப்பட்டது. இதன் வடிநிலத்தின்கீழ் உள்ள 324 ஏரிகளின் வாயிலாக 37,796 எக்டேர் நிலம், வேலூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பாசனம் பெறுகிறது. இதனைத் தவிர 132 கால்வாய் (Spring Channel) வாயிலாக 563 எக்டேர் நிலமும், 101 கால்வாய் (Kasam Channel) வழியாக 2,427 எக்டேர் நிலமும் பாசன வசதி பெறுகிறது.

5. ஆந்திர மாநிலத்தில் சித்தூர் மாவட்டத்தின் குப்பம் வட்டத்தில் கணேசபுரம் என்ற இடத்தில் பாலாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுவதற்கான ஆயத்தப் பணிகளை ஆந்திர அரசு செய்து வருவதாக 2006 ஜனவரி திங்களில் பரவலான செய்தி வெளியானதைத் தொடர்ந்து பாலாற்றினால் பயன்பெற்று வரும் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

[டாக்டர் க. பொன்முடி] [2006 ஆகஸ்ட் 1

6. பாலாறு ஏற்கெனவே நீர்ப் பற்றாக்குறையுடைய நதியாகவே இருந்து வருகிறது. பருவ மழைக் காலங்களில் மட்டும் அரிதான நீர் குறைந்த கால அளவில் இந்நதியில் வருகிறது. இந்நீரைக் கொண்டு வட தமிழ்நாட்டில் சுமார் ஒரு இலட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதே மிகவும் சிரமமாக உள்ளது. பாலாறு, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் சென்னை மாவட்டங்களில் உள்ள பல கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கு குடிநீர் அளிக்கும் ஓர் ஆதாரமாகும். பாலாறு நதியின் வடிநில இடங்களில் ஏற்கெனவே தூய்மைக்கேடு உள்ளதால் இதில் நீர் வரத்து குறைந்தால் சுகாதாரக்கேடு மற்றும் குடிநீர் பயன்பாடும் கெட்டுப்போவதற்கான சூழல் ஏற்பட நேரிடும்.

7. பாலாறு, மாநிலங்களுக்கிடையே ஓடுகின்ற நதியாகும். 1982 ஆம் ஆண்டைய பன் மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் ஒப்பந்தத்தின் இணைப்பில் அட்டவணை 'A' யில் குறிப்பிட்டுள்ள ஷரத்தின்படி இந்நதிகளில் கீழாக இருக்கும் மாநிலத்திற்கு (Down Stream State) தேவையான நீரை எக்காரணம் கொண்டும் மேலிருந்து வரும் மாநிலங்கள் தடுக்கவோ, திருப்பிவிடவோ, தேக்கவோ கூடாது. இவ்வொப்பந்த ஷரத்து II-ன்படி (Clause-II) நீர்த்தேக்கம் கட்டுவது தொடர்பாக ஆந்திர மாநிலம் தமிழ்நாட்டினை அணுகியிருக்க வேண்டும். அவ்வாறு நீர்த்தேக்கம் அமைப்பது சம்பந்தமான கருத்துரு பற்றிய திட்டத்தை தமிழ்நாட்டிற்குத் தெரியப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், தமிழ்நாட்டிற்கு இத்திட்டத்தைப் பற்றி தெரியப்படுத்தவோ, இவ்வாசின் இசைவையோ கோரவில்லை.

8. இத்திட்டத்தை நிறைவேற்றினால், வட தமிழ்நாட்டிலுள்ள விவசாயம் பாதிக்கப்படுவதுடன் குடிநீர் ஆதாரங்களும் பாதிக்கப்படும். இந்நதியிலிருந்து குடிநீர்ப் பயனைப்பெறும் வேலூர், ஆற்காடு, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் சென்னைக்கு அருகே உள்ள நகரங்கள் இத்திட்டத்தினால் பாதிப்படையும். மேலும், கல்பாக்கம் அணுமின் நிலையம், கல்பாக்கம் நகரத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும். இவ்வாற்றின்மூலம் பயன்பெறும் 250 குடிநீர்த் திட்டங்களைப் பாதிப்படையச் செய்வதன் மூலம் 20 நகராட்சிகள், 32 சிறப்பு கிராமப் பஞ்சாயத்துக்கள் மற்றும் நூற்றுக்கணக்கான கிராமங்களுக்குக் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படும். இப்பகுதிகள் எப்பொழுதும் வறண்ட பகுதியாகவே உள்ளதால், குடிநீர்ப் பிரச்சினை எப்போதும் இருந்து கொண்டேயிருக்கும். எனவேதான், 1963—ல் தமிழ்நாடு அரசு பாலாற்றுப் படுகையில் நீர்ப் பாசனத்திற்காக கிணறுகள் வெட்டுவதைத் தடை செய்துள்ளது.



2006 ஆகஸ்ட் 1] [டாக்டர் க. பொன்முடி]

9. மேற்கண்ட கூற்று மற்றும் காரணங்களின் அடிப்படையில், 5—1—2006 அன்று, தமிழ்நாடு அரசு ஆந்திர அரசிடம் பாலாற்றின் குறுக்கே அணைகட்டும் திட்டம் பற்றிய விவரத்தைக் கோரியதுடன், அவ்வாறு எந்தத் திட்டத்தையும் செயல்படுத்துவது 1892 ஆம் ஆண்டைய பன்மாநிலங்களுக்கிடையேயான ஒப்பந்தத்திற்கு மாறாக இருப்பதால், அத்திட்டத்தை நிறுத்துமாறும் தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

10. மேற்கண்ட வேண்டுகோளுக்கு ஆந்திரப் பிரதேச முதல்வர் அவர்கள், தனது 2—2—2006 நாளிட்ட நேர்முகக் கடிதத்தில் ஆந்திர அரசு, சித்தூர் மாவட்டம், குப்பம் வட்டத்தில் பாலாற்றின் குறுக்கே ஓர் அணைக்கட்டு கட்ட உத்தேசித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

11. இது தொடர்பாக தமிழ்நாடு அரசு, ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே அணைகட்டும் திட்டத்தை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை 1—2—2006 அன்று கேட்டுக்கொண்டது. மேலும், இது தொடர்பாக மத்திய அரசு யாதொரு நடவடிக்கையும் எடுக்காத நிலையில் இவ்வரசு சட்டப்படி உச்ச நீதிமன்றத்தை அணுக வேண்டியிருக்கும் என்றும் மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. இதுசம்பந்தமாக யாதொரு பதிலும் மத்திய அரசிடமிருந்து இந்நாள் வரையில் பெறப்படவில்லை.

12. மேற்கண்ட நிலையில், தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தை அணுக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதன் காரணமாக, 10—2—2006 அன்று உச்ச நீதிமன்றத்தில் இப்பிரச்சினை தொடர்பாக சிவில் வழக்கினை (Suit) தாக்கல் செய்துள்ளது.

13. ஏற்கெனவே, உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சிவில் வழக்கினை விரைவுபடுத்துவதன் மூலம் சட்ட ரீதியான பரிகாரம் காண அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

14. இவ்வாசு, தமிழ்நாட்டிலுள்ள, குறிப்பாக பாலாறு ஆற்றின் மூலம் பயன்பெறும் விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடுகள்) இல்லை, அடுத்து, வாய்ப்புக் கொடுக்கப்படும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** விதி 55—ல் மிகத் தெளிவாக இருக்கிறது. இதிலே பிரதான எதிர்க்கட்சி அல்லது அதற்குக் குறைந்த கட்சி அல்லது Group என்றெல்லாம் கிடையாது. யார் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு அந்த விதியிலே கேட்க இடம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) ஆகவே, (குறுக்கீடுகள்) இவர் இதிலே அதுமாதிரி எல்லாம் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. (குறுக்கீடுகள்) இதுகுறித்து இரண்டு கேள்விகள் கேட்கலாம். (குறுக்கீடுகள்) கேள்வி கேட்கட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே முதலில் அவர் சொல்லட்டும். அதற்குப் பிறகு திரு. பாண்டுரங்கன் பேசலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** இது தெரியாமல் பிரதான எதிர்க்கட்சி என்று. (குறுக்கீடுகள்) He has no right at all. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டுரங்கனும் இதிலே கருத்து சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் முதலில் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, எதிலே, எந்த Point—லே வருகிறது பிரதான எதிர்க்கட்சி என்று? (குறுக்கீடுகள்) Let him argue. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்பில் திரு. ஞானசேகரன், திரு. பாண்டுரங்கன் இருவரும் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள்தான் இந்தக் கவன ஈர்ப்பை இங்கே எழுப்பியிருக்கின்றார்கள். அதற்கு அமைச்சர் அவையிலே பதிலை வைத்திருக்கிறார். திரு. ஞானசேகரன், இப்போது ஒரு துணைக் கேள்வியைக் கேட்கிறார். அதுகுறித்து அதற்கு அமைச்சர் பதில் சொன்ன பிறகு, திரு. பாண்டுரங்கன் அவர்களையும் அந்தக் கேள்வியைக் கேட்பதற்குத் தாங்கள் அனுமதிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாறு என்பது எங்களுடைய வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை ஆகிய 5 மாவட்டங்களுக்கு உயிர்த்



தண்ணீரைக் கொடுத்துக் கொண்டிருக்கிற ஒன்று. பல ஆண்டுகளாக பாலாற்றை நம்பியே, இந்தப் பகுதிகளில் விவசாயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குடிநீரும் அங்கிருந்துதான் நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். அதேபோல, நம்முடைய அமைச்சருடைய விவர அறிக்கையிலேகூட, 20 நகராட்சிகள், 32 சிறப்பு கிராமப். பஞ்சாயத்துக்கள் மற்றும் 250 குடிநீர்த் திட்டங்கள் எல்லாம் இந்தப் பாலாற்றை மட்டுமே நம்பி இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன என்று இருக்கிறது. இந்த பாலாற்றின் குறுக்கே கர்நாடக அரசு பேத்தமங்கலத்திலே ஓர் அணையை ஏற்கெனவே கட்டி முடித்துவிட்டார்கள். இப்போது ஆந்திர அரசு 32 இடங்களிலே— நான் சென்ற சனிக்கிழமைக்கூட உதவும் உள்ளங்களுடைய அமைப்புத் தலைவர் திரு. சந்திரசேகரன், அதேபோல பாலாறு பாதுகாப்பு இயக்கத்தினுடைய தலைவர் திரு. பஷீர்பாய் ஆகிய எல்லோரையும் அழைத்துக்கொண்டு அந்த இடத்திற்கே, கணேசபுரத்திற்கு எல்லாம் போய்ப் பார்த்தேன். 32 இடங்களிலே அவர்கள் தடுப்பணைகளைக் கட்டிவிட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 9-35

நம்முடைய தமிழகத்தினுடைய எல்லை ஆரம்பிக்கிற இடத்திலே புல்லூர் பக்கத்திலே பள்ளத்தூர் என்கிற இடம், கடப்பநாச்சியம்மன் கோயில் இருக்கிறது. அந்தக் கோயில் அருகிலேகூட ஒரு பெரிய தடுப்பணையை அவர்கள் கட்டி தண்ணீரைத் தேக்கிவிட்டிருக்கிறார்கள். இப்படி இவர்கள் எல்லாம் தண்ணீரை ஆங்காங்கே—33 கிலோ மீட்டர்தான் ஆந்திராவிலே அந்த பாலாறு ஓடுகிறது. அந்த 33 கிலோ மீட்டருக்குள்ளே, 32 இடங்களிலே அவர்கள் தடுப்பணைகளைக் கட்டி தண்ணீரை நிறுத்திவிட்டிருக்கிற காரணத்தினாலே இப்போது நம்முடைய மாவட்டத்தினுடைய எதிர்காலம் என்ன ஆகப்போகிறது என்பது கேள்விக்குறியாகிவிட்டது.

முன்பெல்லாம் பார்த்தால் நாங்கள் சிறு வயது பிள்ளைகளாக இருக்கிறபோது மூன்று மாதங்கள் பாலாற்றிலே தண்ணீர் வந்து கொண்டிருக்கும். அதில்தான் நாங்கள் நீச்சல் அடித்துக்கொண்டிருப்போம். பரிசல்களிலே போவோம், இப்படியெல்லாம் இருந்த காலம் ஒன்று உண்டு. ஆனால் இப்போது அது பாழாறாக மாறிவிடுமோ என்கிற ஓர் ஐயம் எங்களுக்கு இருக்கிற காரணத்தினாலே நான் மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், உடனடியாக தமிழகத்தினுடைய

முதலமைச்சரை முதலில் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், ஏனென்றால் இந்த ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது முதலிலே நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அருமை அண்ணன் துரைமுருகன் அவர்களும், நானும், அதேபோல ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய கட்சிகள் எல்லாம் சேர்ந்து அணைகட்டுவது குறித்து சென்ற ஆட்சிக் காலத்திலே நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்னாலே போராட்டங்களை நடத்தினோம். அப்போதே இவர்கள் அணைகட்டுவதை எல்லாம் விட்டுவிட்டு உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடுக்க வேண்டுமென்று சொன்னோம், தடை ஆணை பெற வேண்டுமென்று சொன்னோம். அது நடக்கவில்லை. முதலமைச்சரோடு பேசுங்கள் என்று சொன்னோம், பேசவில்லை. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம் எங்களுடைய மாவட்டத்து மக்கள் உங்களை மட்டுமே நம்பியிருக்கிறார்கள். நீங்கள் அந்த மாநிலத்தினுடைய முதல்வரோடு தயவுசெய்து பேசி இந்த கணேசபுரத்திலே 250 கோடி ரூபாயிலே 160 அடி உயரத்திற்கு அணைகட்டப்படக்கூடிய சூழ்நிலையை உடனடியாகத் தவிர்க்க வேண்டும். பேச்சுவார்த்தைமூலமாக தாங்கள் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

5 ஆம் தேதி நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அங்கே கிருஷ்ணா நதிநீர் குறித்து பேசுவதற்காக செல்வதாககூட அவையிலே நான் பொது விவாதத்திலே கலந்துகொண்டு கேள்வி கேட்டபோது அறிவித்தார்கள். அப்பொழுதும் நீங்கள் முதலமைச்சருடைய கருத்தையும் அங்கே சொல்லி, முதலமைச்சரும் தேவைப்பட்டால் அங்கே சென்று பேச்சுவார்த்தை நடத்தியோ அல்லது அந்த முதலமைச்சரை இங்கே வரவழைத்து பேச்சுவார்த்தை நடத்தியோ, எங்களுடைய மாவட்டத்து மக்களுடைய கொந்தளிப்பிற்கு நீங்கள் ஒரு முற்றுப்புள்ளியை வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இது பல மாநிலங்கள் சேர்ந்த தண்ணீர்ப் பிரச்சினை. 1892-லேயே Agreement of Mysore Government என்று போட்டிருக்கிறார்கள். மகாராஜா இருக்கிற காலத்திலே, அப்போது அந்த Government, ஆந்திராவும் தமிழ்நாடும் ஒன்றாக இருந்தபோது, ஒரு Agreement-ஐப் போட்டிருக்கிறார்கள். அதிலே 15 நதிகளுடைய பெயர்களைச் சொல்லி, எட்டாவது நதியாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிற பாலாற்றின் குறுக்கே யாரும் அணைகட்டக் கூடாது என்று ஒப்பந்தமே இருக்கிறது.



அப்படி ஒப்பந்தம் இருக்கிறபோதும் அதை மீறி 32 இடங்களிலே அணைகளை ஆந்திர அரசு கட்டிவிட்டிருக்கிறது. கர்நாடக அரசு பேத்தமங்கலத்தில் கட்டிவிட்டிருக்கிறது. நம்முடைய தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து இனி கட்டப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும், ஒன்று.

காவிரி நதிநீர் ஆணையம் அமைத்ததுபோல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, பல மாநிலங்கள் சேர்ந்து தண்ணீரைப் பகிர்ந்துகொள்ளக்கூடிய விஷயமாக இருக்கிற காரணத்தினாலே, இதில் பாலாறு நதிநீர் ஆணையத்தை அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டுரங்கன்.

***திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை மாவட்ட மக்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினை குறித்து இந்தச் செய்தி தெரிந்தவுடன், கேள்விப்பட்டவுடன் திங்கட்கிழமை அன்றே காலை 9-00 மணி அளவிலே நான் ஒத்திவைப்புத் தீர்மானமாகத் தங்களிடத்திலே, துறையினுடைய செயலாளரிடத்திலே கொடுத்திருந்தேன். தர்மரீதிபடி முதலாவதாக ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தவர் என்ற முறையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதலில் subject-க்கு வாருங்கள். subject–ல் பேசுவதற்கு உங்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறேன். உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். கவன ஈர்ப்பு சம்பந்தமாகச் சொல்லுங்கள்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** அனுமதி கொடுத்திருந்தாலும்கூட ** நான் இந்தச் சபையிலே பதிய வைப்பது என்னுடைய தலையாய கடமை என்று கருதுகிறேன். சட்டமன்றச் செயலரிடத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த ** என்கிற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. கு. பாண்டுரங்கன்:** தயவுசெய்து மன்னிக்கவும்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

முற்பகல் 9-40 [2006 ஆகஸ்ட் 1

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருந்தாலுங்கூட, அவருடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களே, ஐந்து நாட்களாகப் பொது விவாதத்திலே கலந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரனும் பொது விவாதத்திலே பேசுகிறபொழுதே, இதைப்பற்றிப் பேசியிருக்கிறார். உங்களுக்கு அந்தப் பிரச்சினையிலே அவ்வளவு அக்கறை இருந்திருக்குமானால், உங்கள் கட்சி உறுப்பினர்களிடம் சொல்லியே பேச வைத்திருக்கலாம். அதனால், இதிலே ஒன்றும் உரிமைப் பிரச்சினையோ, ** கிடையாது. பேச வேண்டுமென்றிருந்தால் பேசியிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர். நீங்கள் கருத்தைச் சொல்கிறீர்களா?

**திரு. கு. பாண்டுரங்கன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இருக்கட்டும். முதலில் நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்கிறீர்களா? என்ன கேள்வி என்று கேள்வியை மட்டும் கேளுங்கள். அதைவிட்டுவிட்டு, இதெல்லாம் record ஆகாது. நீங்கள் முதலில் உங்கள் கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து மாவட்ட மக்களுடைய ஜீவாதார, வாழ்வாதாரப் பிரச்சினையாக இது இருக்கின்றது. விவர அறிக்கையைப் படித்ததிலே, என்னுடைய சந்தேகமெல்லாம், ஆந்திர அரசால், ஆந்திர மாநிலத்தில் இருக்கின்ற கணேசபுரத்திலே அணை கட்டுவதற்காக, அரசாணை வழங்கப்பட்டிருக்கின்றதா, இல்லையா? அப்படி வழங்கப்பட்டிருந்தால், மத்திய அரசினுடைய சுற்றுச்சூழல் துறையினுடைய அனுமதியைப் பெற்றிருக்கின்றார்களா, இல்லையா? ஆந்திர மாநில அரசினுடைய பொதுப் பணித் துறையினுடைய தலைமைப் பொறியாளர் அவர்கள், 2.50 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இரண்டு தலைமைப் பொறியாளர்களுடைய தலைமையிலே, 12.5 பொறியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளதாகவும், 12.5 உதவிப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2006 ஆகஸ்ட் 1] [திரு. கு. பாண்டுரங்கன்]

பொறியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளதாகவும், போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்திருக்கின்றார்கள். ஆந்திர அரசினுடைய தலைமைப் பொறியாளர் திரு. வெங்கடேஷ் குப்தா அவர்கள், பேட்டியிலே தகவல் தெரிவித்திருக்கின்றார்கள். நான் அறிய விரும்புவதெல்லாம், ஐந்து மாவட்ட மக்களுடைய ஜீவாதார, வாழ்வாதாரப் பிரச்சினை, இவ்வளவு மேலோங்கியிருக்கின்ற இந்தத் தருணத்திலே, ஐந்து மாவட்ட மக்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினையிலே, இந்த அரசுக்கு அக்கறை இருக்குமேயானால், ஆந்திர அரசோடு உடனடியாகத் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, அப்படி அரசாணை வழங்கப்பட்டிருக்கின்றதா என்று கேட்டு, நாட்டுமக்களுக்குத் தெரிவித்திருக்க வேண்டும் என்பது என்னுடைய தலையாய கேள்வி.

அடுத்ததாக, ஆந்திர மாநிலத்திலிருந்து அரசு அதிகாரிகளெல்லாம் இங்கே வருகை தந்தபோதுகூட, இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களோ சம்பந்தப்பட்ட அலுவலர்களோ, இதுபோன்ற ஒரு செய்தி வந்திருக்கின்றதே, அது உண்மையா, அப்படி உண்மையென்றால், இது சம்பந்தமாக, அதைத் தடுப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றது என்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே அறிய விரும்புகின்றேன். நான் இன்னொன்றையும் அறிய விரும்புவது, மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி. ஆந்திராவிலே காங்கிரஸ் ஆட்சி. இங்கே கூட்டணியிலே காங்கிரஸ் அங்கம் வகித்துக் கொண்டிருக்கிறது. ஐந்து மாவட்ட மக்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினையிலே, கேள்விக்குறியாகி இருக்கின்ற இந்த நிலையிலே, மத்திய ஆட்சியிலே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சுற்றுச்சூழல் துறை அமைச்சரால் இந்த அணையைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றதா? அப்படி அனுமதி வழங்கப்படாமலிருந்தால், அணை கட்டுவதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்ற ஆந்திர அரசினுடைய இந்த நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்குத் தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது? நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், அப்படி ஆந்திர அரசு அணை கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தால், மத்தியிலே அங்கம் வகித்துக் கொண்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைச்சர் இராஜிநாமா செய்வதற்குத் தயாராக இருக்கின்றாரா?...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்வியை மட்டும் கேட்டுவிட்டு உட்காருங்கள். கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** கேள்வியைத்தான் கேட்டுக் கொண்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்று கேள்விகள் கேட்டுவிட்டீர்கள்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** கேள்வியைத்தான் கேட்டுக் கொண்டிருக்கின்றேன். இந்தச் செய்தியை, எங்களுடைய அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மத்தியிலே யார் ஆளுகிறார்கள், மாநிலத்திலே யார் ஆளுகிறார்கள் என்பது மக்களுக்குத் தெரியும். உட்காருங்கள்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** கேள்விப்பட்டவுடன், உடனடியாக ஆந்திர அரசினுடைய முதலமைச்சரோடு கடிதத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார்கள். அதற்கு அடுத்தாற்போன்று, உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடுப்பதற்காக, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், போர்க்கால நடவடிக்கையை மேற்கொண்டார்கள். நான் அறிய விரும்புவதெல்லாம், இன்றைக்கு ஆந்திர அரசு அணை கட்டுவதற்குண்டான போர்க்கால நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கின்ற இந்தச் சூழலிலே, இன்றைக்கு மத்திய ஆட்சியிலே அங்கம் வகித்துக்கொண்டிருக்கின்ற, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைச்சர், இன்று அந்த அணை கட்டுவதற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், மத்தியிலே யார் ஆள்கிறார்கள், மாநிலத்திலே யார் ஆள்கிறார்கள் என்பது எல்லாம் மக்களுக்குத் தெரியும். இதையெல்லாம் நீங்கள் சொல்ல வேண்டும் என்பதல்ல. கேள்வியை மட்டும் இப்போது கேளுங்கள். அவையிலே இல்லாதவர்களைப் பற்றிப் பேசக் கூடாது. உட்காருங்கள், முதலிலே. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** One minute. நீங்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** உறுப்பினர், கேள்விதான் கேட்கலாம். பேசுவதற்கு அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நாங்களும் இருந்திருக்கிறோம். நாங்களும் சட்டமன்றத்திலே இருந்திருக்கிறோம். கவன ஈர்ப்புத் தீர்மானம் என்றால், கேள்வி கேட்பதற்குத்தான் அனுமதிப்பார்கள். பேசுவதற்கு யாருக்குமே அனுமதி கிடையாது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி கேட்பதற்குத்தான் அனுமதி. நீங்கள் கருத்துகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** நீங்களும் மூத்த சட்டமன்ற உறுப்பினர். முன்னாள் முதலமைச்சராகக் கொஞ்ச நாட்கள் இருந்தவர்கள். இது தெரியாதா உங்களுக்கு? பேசிக்கொண்டேவா இருக்க முடியும்? கவன ஈர்ப்பிலே கேள்வி கேட்பதற்கு மட்டும் அனுமதிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரை நிகழ்த்துவதற்கு நேரம் கொடுக்கவில்லை. அவர் கேள்வி கேட்பதற்குத்தான் அனுமதி கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். கேள்வியை மட்டும் கேட்டுவிட்டு, உட்காருங்கள்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** தொடர்பு கொள்ளவேண்டுமென்று கேட்டபோது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேட்டுவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடு)

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/– ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 237, திரு. விடியல் எஸ். சேகர்.



**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மத்திய மாநில அரசுகளால் சிறுதொழில் வளர்ச்சிக்கு அளிக்கப்படுகின்ற பயிற்சி மற்றும் மானியம் குறித்து செய்திகள் மக்களுக்குச் சென்று சேரவில்லை. இந்தக் குறையைப் போக்க அரசு, செய்தி மற்றும் விளம்பரங்களின்மூலம் மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்த விழிப்புணர்ச்சி முகாம்கள், பயிற்சி அரங்கங்கள் அமைத்து மக்கள் பிரதிநிதிகளை வைத்து விழா எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/– ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 417, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பண்ருட்டி தொகுதியில் SIDCO தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 526, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் தச்சு வேலை செய்யும் கலைஞர்களை ஊக்கப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/– ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 625, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் பனை மரங்கள் சம்பந்தமான பனை பொருள் உற்பத்திக்கான தொழிலை ஊக்குவிப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 744, திரு. கே.வி. ராமநாதன்.

**திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பவானி தொகுதியில் SIDCO தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1082, திரு. டி. மூர்த்தி. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1102, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட சிறு சிறு நகரங்களான தேசூர், பெரணமல்லூர், சேத்துப்பட்டு ஆகிய பேரூர்களுக்கு மையமான இடத்தில் கிராமங்களை உள்ளடக்கிய இடங்களில் ஒரு தொழிற்பேட்டை உருவாக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1108, திரு. த.அ. மேகநாதன்

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திச் செய்யும் பொருட்களை விற்பனை செய்ய விற்பனைக்கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1400, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்ற தொகுதியில் படித்துவிட்டு வேலையற்று இருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் சிறு தொழில் பூங்கா தொடங்க வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1500, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பகுதியில் பட்டு அதிக அளவில் உற்பத்தி செய்வதால், பட்டு ஏற்றுமதி மையம் பெண்ணாகரத்தில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1172, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், அரூரில் மாலிப்டினம் தொழிற்சாலை தொடங்குவதாக அறிவித்து அதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அரூரில் மாலிப்டினம் தொழிற்சாலை தொடங்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1324, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 858, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலம் தொகுதியில் நெல் உமியில் இருந்து நுண்ணுயிர் உரம் தயார் செய்யும் சிறு தொழில் தொடங்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 188, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடுமலைப்பேட்டை தொகுதியில் கிராமத் தொழில்கள் வளர்ச்சிக்கு சிறுதொழில்கள் துறை மூலம் கடனுதவி வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1418, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கையில் கிடைக்கும் கிராஃபைட்டை வைத்து சிறுதொழில்கள் தொடங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 997, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை பகுதியில் தென்னையைச் சார்ந்த தொழில் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1213, திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், ஆயக்குடி பேரூராட்சியில் இருக்கும் பூம்புகார் நிறுவனத்தைச் சார்ந்த பெரிய தொழிற்கூடம் கடந்த சில ஆண்டுகளாக அடைக்கப்பட்டிருப்பதை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1196, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சிப் பகுதி, திருமுல்லைவாயலில் தொழிற்பேட்டைக்கு சாலை வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 996, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி பகுதியில் விளையும் பனைப் பொருட்கள், முருங்கை மற்றும் தென்னை ஆகிய மூலப்பொருட்களைக் கொண்டு சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1008, திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்.

**திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி சட்டமன்றத் தொகுதியில் தென்னையை நம்பியே விவசாயிகள் உள்ளனர். அது சார்ந்த தொழில்கள், சிறு தொழில்கள் ஆரம்பிக்க உதவிடவும் ஏழை விவசாயிகள் முன்னேறவும் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 915, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பல்லடம் சிப்காட் சிறு தொழில் மையத்திற்கு பாதுகாப்பு, சுற்றுச்சுவர், சாலை மற்றும் கட்டடப் பராமரிப்பு போன்ற பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 929, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரத்தநாட்டில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 937, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதியில் ஜவ்வரிசி தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கபெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1230, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பூக்களிலிருந்து வாசனைத் திரவியம் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலை மற்றும் சிறுமலைப் பழங்களைக் கொண்டு பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1195, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, ஊசூரில் சிட்கோ (SIDCO) தொழிற்பேட்டை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1366, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் பனை ஏறும் தொழிலாளர்கள் அதிகமாக வசித்து வரும் பகுதியில் அரசுமூலம் தொழிற்கூடம் அமைத்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1346, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியத்தில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1305, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், வரகூர் தொகுதியில் உள்ள தொணி, கொளக்காநத்தம் பகுதியில் பீங்கான் தொழிற்சாலை அமைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1237, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் வாகன மற்றும் சாக்குப் போக்குவரத்து வாகன



தொழிலுக்கு முக்கியத்துவம் நிறைந்த இடமாகும். பெரும்பாலான மக்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். எனவே, நாமக்கல் தொகுதியில் சிறு தொழிற்பேட்டை ஒன்றை நிர்மாணிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 158, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் அதிகமாக உள்ள தென்னை நாரில் கயிறு திரிக்கும் சிறு தொழில் புரிபவர்களுக்கு உபகரணங்களை மானியமாக வழங்கிட நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 38, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் தொகுதி, வேலூர் நகரில் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில் அரசு ஊதுவத்தி தயாரித்தல், கற்பூரம் தயாரித்தல், தோல் பொருள் தயாரித்தல், ரெடிமேட் ஆடைகள் தயாரித்தல், மசாலா பொடி தயாரித்தல் போன்ற அடிப்படையில் நிறைய சிறு தொழிற்சாலைகளை அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 316, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்ட தொழில் மையங்கள் மூலம் படித்த இளைஞர்களுக்கு சிறு தொழில் தொடங்க பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 377, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதியில் முக்கிய விவசாய விளைபொருளாக தென்னை இருந்து வருகிறது. தென்னையிலிருந்து கிடைக்கும் பல்வேறு பொருட்கள் மூலம் சிறுதொழில்கள் உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 633, திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மற்றும் கோவை மாவட்டங்களிலிருந்து



பட்டுக் கூடுகளை உற்பத்திச் செய்பவர்கள் அவற்றை விற்க மைசூருக்குச் செல்வதை தவிர்க்கும் வகையில் கோபிசெட்டிபாளையத்தில் ஒரு பட்டுக்கூடு விற்பனை மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 641, திரு. இரா. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நத்தம் சட்டமன்றத் தொகுதியில் SIDCO - SIPCOT மூலமாக சிறு தொழில்கள் வளாகம் புதியதாக ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 462, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதியில் படித்த இளைஞர்கள் அதிகமாக உள்ளதால் புதியதாக சிறுதொழில் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 361, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களை (products) சிட்கோ மூலமாக கொள்முதல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 472, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி மிகமிக பின்தங்கிய தொகுதி. இந்தத் தொகுதியில் சிட்கோ அல்லது சிப்காட் மூலம் தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 369, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதியில் முந்திரி அதிகம் விளைவதால் பருப்பு எடுக்கும் தொழிற்சாலை, முந்திரி எண்ணெய் தொழிற்சாலை, முந்திரி பதப்படுத்தும் குளிரூட்டும் பெட்டகம், சுமார் 40,000 ஏக்கரில் தைல மரங்கள், சவுக்கு மரங்கள், மூங்கில் மரங்கள் விளைவதால் இங்கு காகித ஆலை அமைத்துக் கொடுத்தல், ஜெயங்கொண்டம் வட்டம்



பிற்படுத்தப்பட்ட பகுதி, வறட்சிப் பகுதியாக உள்ளது. அதனால் இங்குள்ள விவசாயக் கூலி ஆட்களுக்கு வேலை கிடைக்காமல் திருப்பூர், கேரளா வெளிமாநிலங்களுக்கு வேலை தேடி போவதால் இங்கு வேலைக்கு ஆள் கிடைக்கவில்லை. என்பதால் இங்கு தொழிற்சாலை அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 890, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேண்டேஜ் ரக துணிகளுக்கு மாநில அரசு விதித்துள்ள விற்பனை வரியை இரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 859, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட குறிச்சி நகராட்சி சிட்கோ பகுதியில் நலிவடைந்த சிறுதொழில் கம்பெனிகளுக்குக் குறைந்த வட்டியில் கடனுதவி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 879, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை பகுதியில் அதிகமாக விளையும் தேங்காய் பொருட்களைக் கொண்ட சிறுதொழில்கள் தொடங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 779, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெண்கள் சுய உதவி மேம்பாட்டுக் குழுவினர் தொடங்கும் தொழிலுக்கு Tariff Concession வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 795, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி மற்றும் செல்லம்பட்டி யூனியன்களில் வசிக்கும் பொதுமக்கள் நலன் கருதி சிறுதொழில் அமைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/–



மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 834, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதியில் திருத்தணி நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் சிறுதொழில்களை ஊக்குவிக்கும்வகையில் சிறுதொழில்கள் வளாகம் உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 846, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதியில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மக்கள் வசிக்கின்றனர். தொழில்நுட்பக் கல்வி கற்ற இளைஞர்கள் நிறைய பேர் வேலைவாய்ப்பின்றி உள்ளனர். பொன்னேரி தொகுதியில் சிறு தொழிற்பேட்டை ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 651, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி, மாவட்டத்தின் தலைநகராக விளங்குவதால் புதியதாக சிறுதொழில்பேட்டை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 662, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதியில் உள்ள சிப்காட்டில் 40% தனியார் ஆலைகள் மூடிக்கிடக்கின்றன. அவற்றைத் திறக்க நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 660, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்தில் சிறுதொழில்கள் நலிவடைவதைத் தடுத்து வளர்ச்சி ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,21,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிசக்தித் துறை மற்றும் சிறு தொழில்கள் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். முதலில் திரு. ஆர்.டி. கணேசன். நிறையப் பேர் பேச வேண்டியிருக்கிறது. 10 நிமிடத்திற்கு மிகாமல் பேச்சை முடிக்க வேண்டும்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இரண்டாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக்கி, எரி சக்தித் துறை மற்றும் சிறு தொழில் துறை மானியக் கோரிக்கையில், இந்த மாமன்றத்தில் பேசிட வாய்ப்பளித்த கழகப் பொதுச் செயலாளர் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு அதிகப்படியான வாக்களித்து வெற்றியடையச் செய்து மீண்டும் பணியாற்றிட வாய்ப்பளித்த தேனி சட்டமன்றத் தொகுதி மக்கள் அனைவருக்கும், ஜனநாயக மக்கள் கூட்டணி நிர்வாகிகளுக்கும் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-20

1996-2001 ஆம் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 5 ஆண்டுகள் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பல பிரிவுகளில் 5 ஆண்டுகள் உற்பத்தி செய்த மின்சார உற்பத்தி 560.69 மெகாவாட் ஆகும். இந்த உற்பத்தித் திறனையும் சேர்த்து, கடந்த ஆட்சியில் மொத்தம் 8,127 மெகாவாட் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றது. கடந்த 2001-2006 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 1-ல் குறிப்பிட்டதுபோல 11,090 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டதாக கூறப்பட்டிருக்கின்றது. ஆக, 2001-2006 மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் 5 ஆண்டுகளில் கூடுதலாக

@ 179 முதல் 222 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

1,884 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பதனை இந்தப் பேரவைக்குத் தெரியப்படுத்திக் கொள்கின்றேன். கடந்த தி.மு.க. ஆட்சியில் இருந்து வந்த மின் வெட்டினை தமிழகத்தில் 2001-2006 ஆம் ஆண்டில் மின் வெட்டு இல்லாத மாநிலமாக மாற்றியமைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழ்நாட்டில் வடசென்னை, தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்கள் மின் உற்பத்தியில் தொடர்ந்து 2001-2006 ஆண்டு வரை தங்கம், வெள்ளிப் பதக்கங்கள் பெற்று வந்துள்ளன என்பதை 2006-2007 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருப்பது தமிழகத்தின் அனைத்துத் துறைகளிலும் கவனம் செலுத்திய மாண்புமிகு அம்மா அவர்கள் மின் துறையிலும் எவ்வாறு பணியாற்றினார்கள் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

கடந்த மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அனல் மின் நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டது குறித்து மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் கோடிட்டமைக்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

1996-2001 ஆம் ஆண்டில் காற்றாலைமூலம் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் 256 மெகாவாட் மின்சாரம் மட்டுமே பெறப்பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் 2001-2006 ஆம் ஆண்டில் 2,898 மெகாவாட் மின்சாரம் பெறப்பட்டுள்ளது. காற்றாலைமூலம் இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த மின் உற்பத்தியில் தமிழகத்தில் மட்டும் 55 சதவிகிதம் மின் உற்பத்தி செய்கின்ற ஒரு மாபெரும் நிகழ்வினை ஏற்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மத்திய அரசு, தமிழ்நாடு மின்சார வாரியத்தினை மூன்று தனித் தனி வாரியங்களாகப் பிரிக்க வேண்டுமென்று கோரி வருவதாக அறிய வருகிறேன். ஒன்று, மின் உற்பத்தி—Generation. இரண்டு, மின்சாரத்தை எடுத்துச் செல்லுதல்—Transmission. மூன்று, விநியோகம்—Distribution. இவ்வாறு மூன்றாக வாரியங்களைப் பிரிக்கின்றபட்சத்தில் வீணாக கூடுதல் நிர்வாகச் செலவும், குழப்பங்களும் ஏற்படுகின்ற நிலையும் ஏற்படுகின்றது. ஆகவே, மத்திய அரசு வலியுறுத்துவதை ஏற்று, மாநில மின் வாரியத்தை மூன்று வாரியங்களாகப் பிரித்து, இதற்காக மூன்று



அமைச்சர்களை நியமிக்க உள்ளீர்களா அல்லது மின் துறை வாரியத்தைப் பிரிக்க வேண்டாம் என்று வலியுறுத்தி மத்திய அரசைக் கோரப் போகிறீர்களா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசின் நிலக்கரி நிறுவனம் தமிழ்நாடு மின்சார வாரியத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி வழங்க வேண்டிய நிலக்கரியின் அளவில் ஆண்டுக்கு 14 சதவிகிதம் குறைத்து வழங்கி வருகின்றது. இதனால் அனல் மின் நிலையங்களில் நிலக்கரி பற்றாக்குறை ஏற்படுகின்ற சூழ்நிலை உள்ளது. மின் உற்பத்தி பாதிக்கப்படும் நிலையிலும் உள்ளது. ஆகவே, இந்த அரசு மத்திய அரசிடம் பேசி தேவையான நிலக்கரி நமக்கு நியாயப்படி கிடைக்க வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு, மின் உற்பத்தியாகிற எரிவாயு தனியாருக்கு ஒதுக்கீடு செய்யக் கூடாது என்றும் தமிழகத்தில் உற்பத்தி செய்கின்ற எரிவாயு முழுவதையும் தமிழக மின்சார வாரியத்திற்கே ஒதுக்க வேண்டுமென்றும் கூறியுள்ளது. அவ்வாறு தனியாருக்கு வழங்குகின்றபட்சத்தில் மின்சாரம் உற்பத்தி செய்து அது வாரியத்திற்குதான் வழங்குகின்றது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் எரிவாயு உற்பத்திக்கான கட்டுமான வசதிகள் இருந்தும் வாரியத்திற்கு இழப்பு ஏற்படுகின்ற வகையில் தனியாருக்கு வழங்குவதை இரத்து செய்ய மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மின் வாரியத்தில் ஒப்பந்தப் பணியாளர்களாக சுமார் 20,000 பேர்களுக்குமேல் பணியாற்றி வருகின்றார்கள். கடந்த மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அனைத்து தொழிற் சங்கங்களையும் அழைத்து வருடா வருடம் 2,500 நபர்களை நிரந்தரம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டு, கடந்த ஆண்டு 2,500 நபர்களை நிரந்தரமாக்கியுள்ளார்கள். தற்சமயம் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் எந்தத் துறையில் ஒப்பந்தப் பணியாளர்கள் இருந்தாலும் அவர்களை நிரந்தரமாக்குவதற்கு, காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்படுவார்கள் என்று அறிவித்துள்ளார்கள். ஆகவே, தற்சமயம் மீதமுள்ள, மின் துறையில் தற்காலிகமாகப் பணியாற்றி வருகின்ற 17,000 ஒப்பந்தப் பணியாளர்கள் காலமுறை ஊதியத்திற்கு அனுமதிக்கப்படுவார்களா அல்லது மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட வருடத்திற்கு 2,500 நபர்களை நிரந்தரமாக்குகின்ற பணியினைச் செய்வீர்களா என்பதைத் தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆசு ஊழியர்களுக்கு அவர்கள் வாங்கும் அகவிலைப்படி 50 சதவிகிதத்தை அடிப்படை ஊதியத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் சேர்த்ததுபோல மின் வாரியத் தொழிலாளர்களுக்கு 50 சதவிகிதம் அகவிலைப் படியை அடிப்படை ஊதியத்துடன் இணைத்து வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-25

மக்கள் நலனில் அக்கறை காட்டிக்கொள்வதுபோல் காட்டும் தி.மு.க. ஆட்சியில், மகளிர் தொழில் முனைவோர், 8,400 பேருக்கு மட்டுமே பயிற்சி அளித்து கடன் வசதி ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். ஆனால், சுமார் 5 இலட்சம் மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளித்து அதில் 30,000 பேர்கள் சுயமாகத் தொழில் தொடங்குகின்ற நிகழ்வினையும், மகளிர் குழுவிற்கு பல்வேறு கடனுதவித் திட்டங்களையும் வழங்கி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த மானியத்திற்கும் நீங்கள் பேசுவதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா? (குறுக்கீடுகள்)

**திரு. ஆர்.டி. கணேசன்:** சிறு தொழிலில் வருகிறது. சிறு தொழில். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, பேசட்டும்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், அமைச்சர் அவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளவும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, அதனால் ஒன்றும் தவறில்லை.

**திரு. ஆர்.டி. கணேசன்:** தொழில் புரட்சியை ஏற்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். கடந்த 1996-2000 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் சிறு தொழில்களுக்காக பின்தங்கிய தாலுகாகளையும், ஊராட்சி ஒன்றிய வாரியாக பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய பகுதிகளாகப் பிரித்து மானியங்கள் வழங்கப்படும் என்று அன்றையதினம் அறிவித்துவிட்டு, தொழில் தொடங்காத நிலையில் இத்திட்டத்தை கடந்த தி.மு.க ஆட்சியில் ஏமாற்று வேலையாக விட்டுச் சென்றார்களே தவிர, இத்திட்டத்தை நிறைவேற்றவில்லை. மீண்டும் இந்த ஆண்டுமுதல் இந்தத் திட்டம் தொடரப்படும் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்கள். 2001-2002 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், புதிய அண்ணா



மறுமலர்ச்சித் திட்டத்தினை 385 ஊராட்சி ஒன்றியங்களில் வேளாண்மைச் சார்ந்த சிறு தொழில்கள் தொடங்குவதற்கு ரூபாய் 25 இலட்சம் முதல் 1 கோடி வரை அனுமதி வழங்கி, இதில் ரூபாய் 260.32 கோடி மதிப்பில் 242 வட்டாரங்களில் 402 திட்டங்களில் உற்பத்தியைத் தொடங்கியவர், மாண்புமிகு அம்மா அவர்கள்.

தொடர் நடவடிக்கையாக 112 கோடியில் 212 திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மேலும், 153.99 கோடியில் 227 திட்டங்களுக்கு பல்வேறு நிதி நிறுவனங்கள்மூலம் நிதியுதவி பெற விண்ணப்பித்துள்ளது. இத்திட்டத்தில், ஒவ்வொரு வட்டாரத்திலும், முதலீட்டில் 15 விழுக்காடு அதிகபட்சமாக ரூபாய் 5 இலட்சத்திற்கு மிகாமல் மானியம் வழங்கவும், மின் கட்டணத்தில் முதலாம் ஆண்டு 30 விழுக்காடு, இரண்டாம் ஆண்டு 20 விழுக்காடு, மூன்றாம் ஆண்டு 10 விழுக்காடு மானியம் வழங்கி, தொழிற் புரட்சியை ஏற்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

தேயிலை ஏல மையங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற தேயிலைத் தூளுக்கு நியாயமான விலை கிடைக்க கடந்த தி.மு.க. ஆட்சியில் ஏதும் செய்யாத நிலையில், வெளிப்படையான தேயிலைத் தூள் ஏலத்தை உறுதி செய்யவும், மின்னணு முறையில் புதிய ஏல மையத்தை உருவாக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் 'Tea serve' என்ற கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் 28-8-2002-ல் பதிவு செய்யப்பட்டு, மின்னணு ஏலம் மையம் தொடங்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்திலுள்ள 23,000 சிறு தேயிலை விவசாயிகளை உறுப்பினராகச் சேர்த்து, தேயிலை விலை வீழ்ச்சியடையும் ஆண்டுகளில் ஒவ்வொருவரும் 1,000 ரூபாய் பெற்றுப் பயனடையலாம் என்ற நிலை இருந்தது. இந்தத் திட்டத்தில் சேர ஒவ்வொரு உறுப்பினரும் ரூ.500/- வீதம் பங்களிப்பாகச் செலுத்த வேண்டும். சிறு தேயிலை விவசாயிகளால் செலுத்தப்படுகின்ற பங்களிப்புத் தொகையான 115 இலட்சம் ரூபாயை 23,000 சிறு தேயிலை விவசாயிகளுக்கு வழங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

நீலகிரி மாவட்டத் தேயிலைக்கு தமிழ்நாட்டில் மிகப் பெரிய அளவில் சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தி, ஊட்டி டீ விற்பனைத் திட்டத்தைத் தொடங்கி, 12,500 சிறு விவசாயிகள் பயன்பெறுகின்ற வகையிலே, திட்டத்தை நிறைவேற்றியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

இந்தியாவிலேயே முதன்முதலாக மகளிருக்கான தொழிற்பேட்டையை சென்னை அருகே திருமுல்லைவாயில், மதுரை

கப்பலூர், திருச்சி கோவைக்குறிச்சி, சேலம் கருப்பூர் ஆகிய இடங்களில் அமைப்பதற்கு உத்தரவிட்டவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

அம்பத்தூர், கிண்டி தொழிற்பேட்டையில் ரூபாய் 50 கோடி மதிப்பில் வெளி நாட்டிற்கு இணையாக தொழில் கட்டமைப்புகளை மாற்றியமைத்த பெருமை மாண்புமிகு அம்மா அவர்களைச் சாரும். உலகத் தரத்தில் உயர் தொழில்நுட்பம் அடைய இயந்திரங்கள் வாங்குவதற்கு வங்கிகள் நிறுவனங்களுக்குக் கடன தரவேண்டிய பட்சத்தில் கடனுக்கான வட்டியில் 3 சதவிகிதம் வரையில் ஒவ்வொரு அலகிற்கும் 5 ஆண்டுகளுக்கு அதிகபட்சமாக ரூபாய் 15 இலட்சம் வரை பின்முனை வட்டி மானியத்தை சிறு தொழில் முனைவோருக்கு வழங்கியவர் இந்தியாவிலேயே மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று I.S.O.9000 தரச் சான்றிதழ் பெறுவதற்காக, வங்கியில் கடனுதவி பெற்றாலோ அல்லது அறிவு சார்ந்த சொத்துரிமை பதிவு செய்வதற்காக கடன் பெற்றாலோ கடனுக்கான வட்டியிலே 3 சதவிகிதம் வழங்கியது மாண்புமிகு அம்மா அவர்கள்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் திட்டமிட்டு செயல்படாத தன்மையினால் அதிக அளவில் கதர் துணிகளை உற்பத்தி செய்து சுமார் 42 கோடி ரூபாய் அளவில் கதர் துணிகள் விற்பனை ஆகாமல் தேங்கும் நிலையில் இருந்ததை மாண்புமிகு அம்மா அவர்கள் 2001-ல் பதவியேற்று, முதியோர் ஓய்வூதியத் திட்டத்திற்கும் அதிக அளவு தள்ளுபடி 30 சதவிகிதம், 20 சதவிகிதம் என்று வழங்கி விற்பனை செய்து சாதனை படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

I.S.I. முத்திரை பெறாத பம்பு செட் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு கலால் வரி விலக்கை மத்திய அரசு இரத்துச் செய்வதாக அறிவித்துள்ளது. இதனால், அந்த நிறுவனங்கள் 8 சதவிகிதம் கலால் வரி செலுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளன.

இந்தச் சட்டம் அமலானால், தமிழகத்தில் பம்ப் செட் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், சார்பு நிறுவனங்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பாதிக்கக் கூடும். அவற்றில் பணிபுரியும் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையை இழப்பார்கள். எனவே, ஐ.எஸ்.ஐ. சான்று பெறாத சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும், மின்விசையால் இயங்கும் பம்ப் செட்டின் உற்பத்திமீது தான் விதித்திருக்கும் 8 சதவீத கலால் வரியை மத்திய அரசு உடனடியாக இரத்து செய்ய வேண்டும் என்ற மாண்புமிகு



அம்மா அவர்களின் கோரிக்கையினை இப்பேரவையில் நினைவு கூற விரும்புகிறேன். இது சம்பந்தமாக மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கான சுமார் 11,000 திருக்கோவில்கள் கட்டுவதற்கு, சுமார் 25,000 ரூபாய் என அறிவிக்கப்பட்டு வழங்கி, இதில் 6,000 திருக்கோவில்களுக்கு பணி நடைபெறுவதற்கான ஒப்பந்தம் கோரப்பட்ட நிலையில், தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டதால், அப்பணி நடைபெறுவதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பதனை அறிய விரும்புகிறேன்.

தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களின் உயிர்நாடியான முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டத்தினை உயர்த்த வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் கோள அரசு மறுசீராய்வு கோரி, மனு தாக்கல் செய்துள்ளதை உச்ச நீதிமன்றம் நிராகரித்திருக்கின்றது. தற்சமயம் கேரள அரசு சட்டமன்றத்தில் நீர் மட்டத்தினை உயர்த்துவது குறித்து, அணை பாதுகாப்பு ஆணையம் அமைக்கப் போவதாக சட்டம் நிறைவேற்றி உள்ளது. இந்த அரசு, 5 மாவட்ட மக்களின் முக்கியப் பிரச்சினையான முல்லைப் பெரியாறு அணையின், நீர்மட்டத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க கவனம் செலுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

கல்வித் துறையில் அக்கறை காட்டிக்கொள்வதாகக் காட்டிக்கொள்ளும் தி.மு.க. அரசு, இந்த ஆண்டு தரம் உயர்த்தப்பட்ட துவக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளின் பட்டியலில் தேனி மாவட்டத்திலிருந்து ஒரு பள்ளிகூட தரம் உயர்த்தப்படவில்லை என்ற நிகழ்வு தேனி மாவட்ட மக்களை வேதனையில் ஆழ்த்தியுள்ளது என்பதனைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, சட்டமன்றத் தொகுதியின் கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அறிவிக்கப்பட்ட, 5 கோடி மதிப்பீட்டில் பி.டி.ஆர் வாய்க்கால் மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால் தரம் உயர்த்துகின்ற பணியினைத் துரிதப்படுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

தேனி, மாவட்டத்தின் தலைநகரமாக விளங்குவதாலும், பேருந்து நிலைய நெரிசலைப் போக்க புதிய பேருந்து நிலையம் அமைக்க வனத் துறைக்குச் சொந்தமான 9 ஏக்கரினை, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், மூன்று முறை மத்திய வனத் துறைக்கு அனுமதி கோரி அனுப்பியிருந்தார்கள். மத்திய அமைச்சரவையில் அங்கம் வகித்திருந்த தி.மு.க.வினர், எந்த ஒரு விலை உயர்ந்த மாங்களும், வன விலங்குகளும் இல்லாத அந்த இடத்திற்கு அனுமதி வழங்க மறுத்துள்ளார்கள். அந்த இடத்திற்குப் பதிலாக 18 ஏக்கர் நிலமும் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டு இருக்கின்றது. திட்டமிட்டே மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அனுமதி வழங்காதவர்கள், தற்சமயம் மத்திய, மாநில அரசுகளில் தி.மு.க.வினரே அமைச்சராக விளங்குவதால், மிகவும் நெரிசலாக உள்ள பேருந்து நிலையத்தினை மாற்றியமைக்க, புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு, வனத் துறை இடத்தினை வழங்கி, அந்தப் பகுதி பொது மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முன் வா வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

தேனி நகராட்சிக்கு சுமார் 25 கோடி மதிப்பீட்டில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அனுமதிக்கப்பட்ட பாதாளச் சாக்கடைத் திட்டத்தையும், சின்னமனூர் நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பாதாளச் சாக்கடைத் திட்டத்தையும் செயல்படுத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் அறிவிக்கப்பட்ட வீரப்ப அய்யனார் கோயில் அணைத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த கேட்டுக்கொள்கின்றேன். வளர்ந்து வரும் தேனி நகரில் மின்மயானம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

தேனி நகராட்சி, சின்னமனூர் நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் நீர்நிலை இல்லாத புறம்போக்கு நிலங்களில் வசிக்கின்ற சுமார் 5,000 குடும்பங்களுக்கு இலவசப் பட்டா வழங்கிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** தொகுதி பிரச்சினை. தேனி நகரின் இரயில்வே இருப்புப் பாதையின் இருபுறமும் சுமார் 500 குடும்பங்கள் பிழைப்பிற்காக, பல்வேறு கிராமங்களில் இருந்து தேனிக்கு வந்து, இரயில்வே துறைக்குச் சொந்தமான புறம்போக்கு இடங்களில் சுமார் 50



ஆண்டு காலமாக வசித்து வருகின்றார்கள். தற்சமயம் இரயில்வே துறை அந்தக் குடியிருப்புகளில் குடியிருப்பவர்களைக் காலி செய்ய நோட்டீஸ் அனுப்பி உள்ளது. எனவே, அங்கு குடியிருக்கின்ற 500 குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு மாற்று இடம் வழங்கிவிட்டு, குடியிருப்புகளைக் காலி செய்வதற்கு, மத்திய அரசில் அங்கம் வகிக்கின்ற மாநில அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தேனி அரசு என்.ஆர். தியாகராஜன் மருத்துவமனையில் உள்ள வெளி நோயாளிகள் பிரிவு, முழு நேர மருத்துவமனையாக செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கின்றேன்.

வீரபாண்டி பேரூராட்சி, ஸ்ரீ கௌமாரியம்மன் திருக்கோவிலுக்கு ரூ.40 இலட்சம் மதிப்பீட்டிலும், குச்சனூர் பேரூராட்சி, சனீஸ்வர பகவான் திருக்கோவிலுக்கு ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுலாத் துறையின்மூலம் மேம்படுத்தும் பணிக்கான மதிப்பீடு தயார் செய்து, அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அப்பணி விரைந்து நடக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

சின்னமனூர் நகராட்சியில் மயானச் சாலையும், எள்ளுக்கட்டை சாலையும், குச்சனூர் பேரூராட்சியில் துரைச்சாமிபுரம் கழுவத்தேவர் காலனி சாலையும் அமைத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

சண்முகா நதித் திட்டத்தின்கீழ் நாயக்கர்குளம், கருவேலன்குளம், தாதமுத்தன் கண்மாய் நீர் பெருகுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

தேனி நகராட்சியில் மதுரை ரோடு, பெரியகுளம் ரோட்டில் அமைந்துள்ள தெரு விளக்குகள் சாலையின் இருபுறம் உள்ளதை சாலையின் மையமாக அமைப்பதற்கு நகராட்சிமூலம் மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதைப் பரிசீலித்து சாலையின் நெரிசலைக் குறைக்கக் கேட்டுக்கொள்கின்றேன்.

தேனி நகராட்சிக்கு நிரந்தர குடிதண்ணீர்க் குறையினைத் தீர்க்கும்பொருட்டு வைகை அணையின் அருகே புதியதாக கிணறு அமைத்து, புதிய குடிநீர்த் திட்டம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

தேனி தாலுக்கா, ஆண்டிப்பட்டி தாலுக்கா விவசாய மக்கள் நிலவள வங்கிக்குச் செல்ல வேண்டுமானால் உத்தமபாளையம், பெரியகுளம்

செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. அந்தத் தூரத்தினைக் கணக்கில் கொண்டு தேனியை மையமாக வைத்து கூட்டுறவு நிலவள வங்கி துவக்கிட கேட்டுக்கொள்கின்றேன்.

காற்றாலைமூலம் மின் உற்பத்தி செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி காலத்தில் தேனி மாவட்டம், போடி பகுதி, டி. மீனாட்சிபுரம் மற்றும் ஆண்டிப்பட்டி பகுதிகளில் இடம் தேர்வு செய்யப்பட்டிருந்தது. அந்த இடங்களில் மின் உற்பத்தி தொடங்குவதற்கு இந்த அரசு கவனம் செலுத்த வேண்டுமாய் கேட்டு, வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்ததாக, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.எஸ். சிவசங்கர்.

***திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நான் இந்த இடத்தில்—மகத்தான வரலாறு கொண்ட மக்களவையான இந்த இடத்தில்—நிற்க, நின்று பேசக் காரணமான உலகத் தமிழர்களின் ஓரே தலைவர், கண் துஞ்சாது தமிழ் காத்து, தமிழ் உணர்வு காத்து, தமிழர் நலன் காத்து, தமிழர் பாரம்பரியம் காத்து, தமிழகம் காத்து, தமிழகத்தின் நிலை உயர்த்த அயராது பாடுபடும் எங்கள் தலைவர்—எங்கள் தலைவர் என்று சொல்லிக் கொள்வதிலேயே எங்களை இறும்பூதடையச் செய்யும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எரிமலை பெற்ற அக்னி குஞ்சு, சோதனைக்ளையே புடம் போட்ட சாதனைத் தங்கம், உள்ளாட்சியை வெளிப்படையான ஆட்சியாக்கியுள்ள எங்கள் எதிர்காலம், தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு தளபதி அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மகத்தான மக்கள் பட்ஜெட் கொடுத்து, மாற்றாரை மிரள வைத்துள்ள மாண்புமிகு இனமான பேராசிரியர் அவர்களுக்கும், எரி சக்தி மற்றும் ஊரகத் தொழில் மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனது தேர்தல் வெற்றிக்குப் பாடுபட்ட எங்கள் மாவட்டக் கழகச் செயலாளர் மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் அண்ணன் அ. ராஜா அவர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்த மதிப்பிற்குரிய ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என்னுடைய வெற்றிக்குப் பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் காணிக்கையாக்கிக் கொள்கின்றேன்.



நான் ஆண்டிமடத்தில் இருந்து வந்திருக்கிறேன். அந்த பெயரே சொல்லும் ஆயிரம் விளக்கம். மிக மிக பின்தங்கிய தொகுதியின் பிரதிநிதி. இன்னும் சொல்லப்போனால், கடந்த மூன்று முறையாக ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இல்லாத காரணத்தினால் சவலைப் பிள்ளையாக இருக்கின்ற தொகுதி. இன்றைக்கு ஆளுங்கட்சி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதால் 15 வருடத் தேக்கத்தை, தேவைகளை மக்கள் உடனடியாக எதிர்பார்க்கிறார்கள். அதற்குப் பின்னர் வருகிறேன். இப்போது மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு வருகின்றேன். இன்றைய கால கட்டத்தில் மரபுசாரா எரிசக்தித் துறை ஒரு கருப்புக் குதிரை. அதன் அருமைகளை இன்னும் மக்கள் உணரவில்லை. இந்த மரபுசாரா எரிசக்தியை எந்த அளவிற்குத் திறமையாக நாம் பயன்படுத்துகிறோமோ அந்த அளவிற்கு நாட்டின் வளர்ச்சி அதிகமாக இருக்கும். மரபுசார்ந்த எரி சக்தித் துறையில் இன்றைக்கு இந்தியாவில் தயாரிக்கப்படும் மின்சாரம் 70 சதவீதம் நிலக்கரியைக் கொண்டே தயாரிக்கப்படுகிறது. ஆனால், என்றாவது ஒரு நாள் தீர்ந்து போகக்கூடிய கனிம வளம் நிலக்கரி. இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலக்கரி வளத்தின் அளவு 70 மில்லியன் டன்கள் ஆகும். இது உலக வளத்தில் 11 சதவீதம். தற்போது இந்தியாவில் ஒரு வருடத்திற்கு மின்சாரம் தயாரிக்க செலவாகக்கூடிய நிலக்கரி 320 மில்லியன் டன்கள், இருப்பு இருப்பதோ 70 மில்லியன் டன்கள். எனவே, பெருகி வரும் மக்கள் தொகையால் மின் தேவை பெருகும்போது, இந்த நிலக்கரி இருப்பு இன்னும் 30, 35 வருடங்களுக்கே தாக்குப் பிடிக்கும். எனவேதான், மாற்று எரி சக்திகளை, மரபுசாரா எரி சக்திகளை அடையாளம் காண்பது அடுத்த தலைமுறைக்கு நாம் அளிக்கும் மாபெரும் கொடையாக இருக்கும். இதற்கு நாம் செய்ய வேண்டிய பணிகள் குறிப்பாக தமிழ் நாட்டிலே தென் மாவட்டங்களிலும், மேற்கு மாவட்டங்களிலும், மலைப் பகுதிகளிலும், கடலோரப் பகுதிகளிலும் காற்றைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்க காற்றாலைகள் பயன்பாட்டை அதிகப்படுத்த வேண்டும்.

முற்பகல் 10-40

அதேபோல, சூரிய சக்தி சுடுநீர் கலன்கள், சூரிய ஒளி மின் சாதனங்களின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும். குறிப்பாக, அரசு அலுவலகங்களில் மின் விளக்குகள், தெரு விளக்குகள் போன்றவற்றில் சூரிய சக்தியைப் பயன்படுத்தினால், மின்சார உற்பத்திச் செய்கின்ற

அளவினைக் குறைக்கலாம். அதேபோல, நகராட்சி சட்டப்படி, பெரிய கட்டடங்களில் சூரிய சக்தி சுடுநீர் கலன், சூரிய ஒளி மின்சாதனங்களைப் பயன்படுத்துவதை இன்னும் கட்டாயமாக்க வேண்டும். சர்க்கரை ஆலைகளில் அமைக்கப்பட்டு வருகின்ற மின் உற்பத்தி நிலையங்களை இன்னும் அதிகப்படுத்த வேண்டும்.

அதேபோல, தாவரக் கழிவுகளைக் கொண்டு மின் உற்பத்தி செய்வதனை இன்னும் கூடுதலாக்க வேண்டும். உதாரணத்திற்கு, பரமக்குடி அருகில் தனியார் மின் உற்பத்தி நிலையம், அந்தப் பகுதியிலே கிடைக்கின்ற கருவேல மரங்களைக் கொண்டு, எரிசக்தி தயாரிக்கின்றார்கள். இன்னும் சொல்லப்போனால், தமிழகத்திலே ஒரு கிராமத்தில் — குறிப்பாக எனக்குப் பெயர் தெரியவில்லை — ஊராட்சி நிருவாகமே தாவரக் கழிவைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கின்றது. அதுபற்றிய செய்தி ஏடுகளிலே வந்தது. அதனை முன்னோடியாகக் கொண்டு, ஒரு தொகுதிக்கு ஓர் ஊராட்சியில் தாவரக் கழிவுகளிலிருந்து எரிசக்தி தயாரிக்கும் அந்தத் திட்டத்தை நம்முடைய அரசு கொண்டு வந்தால், எதிர்காலத்திலே மின்சாரத் தேவையினை சுயமாகப் பூர்த்தி செய்துகொள்ளக்கூடிய அளவிற்கு வாய்ப்பு கிடைக்கும்.

இன்றைக்கு தமிழ்நாடு மின் வாரியம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் இந்தியாவின் சிறந்த மின் வாரியமாக திகழ்கிறது. மின் கட்டணம் வசூலிப்பதில் இந்தியாவிலேயே தமிழகம்தான் முதலிடத்தில் இருக்கிறது. 99.1 சதவீதம் மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதேபோல, மின் தொடர் இழப்பு, line loss குறைவாக இருப்பது தமிழகத்தில்தான்; இந்தியாவில் முதல் 5 மாநிலங்களில் ஒரு மாநிலமாகத் திகழ்கிறது. 18 சதவீத அளவில் line loss உள்ளது. அதேபோல, அதிக பயன்பாட்டு நேரங்களில், மின்வெட்டு இல்லாத மாநிலம் தமிழகம்தான். இது வடமாநிலங்களில் அதிகம்.

ஒரு கோரிக்கையாக எங்கள் மாவட்டத்தையும் சேர்த்து வைக்க விரும்புகிறேன். வருங்காலத்தில், வழங்கப்படவுள்ள ஒற்றை விளக்குத் திட்டத்தில், பின்தங்கிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து உதவ வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல தொடர் மின் இழப்பிற்கு தற்போதுள்ள 18 சதவீதத்தை 17 சதவீதமாகக் குறைக்க, 192 கோடியில் திட்டப்பட்டுள்ள திட்டத்தைத் தொடர்ந்து, அடுத்த வருடம் 15 சதவீதமாகக் குறைக்கவும், தொடர்ந்து, 8 சதவீதம் அளவிற்குக் குறைக்கவும் ஒரு திட்டத்தைத் தீட்டினால் வருங்காலத்தில் மின் வாரியம் இன்னும் இலாபகரமாக இயங்கும்.



தமிழ்நாட்டிலே இன்னும் 156 குடியிருப்புகளுக்குக் கம்பி வழியாக மின்சாரம் கொடுக்க இயலாத நிலை. அந்த இடங்களில் சூரிய சக்தியின்மூலம் மின் வசதி செய்து கொடுக்க வேண்டும். சென்ற ஆட்சிக் காலத்தில், அதற்கான சான்றிதழைக் கொடுக்காத காரணத்தினால், மத்திய ஊரக மின்மயமாக்கல் துறைக்குக் கொடுக்காத காரணத்தினால் இன்னும் அந்த வசதி பெறவில்லை. அந்தச் சான்றிதழைக் கொடுத்திருந்தால், மரபுசாரா எரிசக்தித் துறை மூலம், 90 சதவீத மானியத்தைப் பெற்று, அந்த வசதியினைப் பெற்றிருக்கலாம். அதேபோல, மத்திய அரசின் இராஜீவ் காந்தி கிராமிய மின்மயமாக்கல் திட்டத்தின்கீழ் 29 மாவட்டங்களுக்கு-(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விசுவநாதன், கன்னிப் பேச்சிலே குறுக்கிடக் கூடாது என்பது உங்களுக்குத் தெரியும். (குறுக்கீடு) இல்லை, அவர் பேசி முடித்தவுடன் பேசுங்கள். நான் allow செய்கிறேன். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும். நீங்கள் சொல்லுங்கள். நான் allow செய்கிறேன். (குறுக்கீடு) நான் allow செய்கிறேன்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** இதற்கு சுமார் 450 கோடியில் திட்டம் தீட்டப்பட்டது. இதற்கு 90 சதவீதம் மத்திய அரசின் மானியம் கிடைக்கும். சென்ற ஆண்டில் பார்த்தால், உத்தரப்பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் 1,000 கோடியைப் பெற்று, திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கடந்த ஆட்சியில் மெத்தனமாகக் கிடப்பில் போடப்பட்டுவிட்டதால், இன்றைக்கும் கிராமங்களில் அந்தக் கட்டமைப்பு வசதி ஏற்படுத்தப்படாமல் உள்ளது. அதனை நம்முடைய அரசு செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, தூத்துக்குடியில் நெய்வேலி நிலக்கரி நிறுவனமும் தமிழ்நாடு மின்சார வாரியமும் 1,000 மெகாவாட் மின்நிலையம் அமைப்பது எனவும், வட சென்னையில் 500 மெகாவாட் மின்நிலையம் அமைக்கின்ற திட்டமும், மேட்டூரில் 500 மெகாவாட் மின்நிலையம் அமைக்கின்ற திட்டமும், மெத்தனமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்குத் தலைவருடைய ஆட்சியில் அவற்றை விரைந்து செயல்படுத்தினால் வருகின்ற காலத்தில் இந்தியாவில் தமிழகம் மிகுதியாக மின் உற்பத்தி செய்கின்ற மாநிலமாகத் திகழும்.

முற்பகல் 10-45

இந்த நேரத்தில், ஜெயங்கொண்டத்தில் ஆயிரம் மெகாவாட்
திறனுடைய ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரித் திட்டத்தை,
நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் செயல்படுத்த இசைவளித்த
மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எங்கள் பகுதி மக்களின்
சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன். இது நீண்ட
காலமாக கிடப்பில் கிடக்கின்ற திட்டம். சென்ற ஆட்சிக் காலத்தில்
இதோ வருகிறது, அதோ வருகிறது என்று சொன்னார்கள். ஆனால்,
இன்றைக்கு தலைவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த 30 நாட்களில்
நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலே,
அதிகாரிகளின் கூட்டமும், நெய்வேலி நிலக்கரி நிறுவன அதிகாரிகளின்
கூட்டமும் கூட்டப்பட்டு, இன்றைக்கு நடைமுறைக்கு வந்திருக்கிறது.
அதற்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்தத் திட்டத்திற்கு அரசு கையகப்படுத்தியுள்ள நிலத்தில்,
கிட்டத்தட்ட 75 சதவீத நிலம் என்னுடைய ஆண்டிமடம் தொகுதியைச்
சேர்ந்தது. எனவே, இந்த நிலம் அளித்தவர்கள் இன்னும் கூடுதல்
இழப்பீட்டுத் தொகை எதிர்பார்க்கிறார்கள். அதேபோல நிலம்
அளித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை கிடைத்திடவும்,
கிணறு மற்றும் ஆழ்குழாய் போன்றவற்றுக்கு இழப்பீட்டுத் தொகை
கணக்கிடப்படாமல் உள்ளது, அதைக் கணக்கிடவும் தலைவர் கலைஞர்
முதல்வர் அவர்கள் உதவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே
கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, எங்கள் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான
அரியலூர் மாவட்டத்தை அளித்து, இன்றைக்கு மூன்று தொகுதி
மக்களின் மனதைக் குளிர வைத்துள்ளார் தலைவர் அவர்கள்.
அவர்களுடைய பாதத்திற்கு எங்களுடைய நன்றியைச்
சமர்ப்பிக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு அந்த
ஆட்சியில் தூங்கி எழுந்து பார்த்தால், பலரது பதவி போயிருக்கும்.
அதேபோல் ஒரு நாள் எங்கள் மாவட்டமும் பறி போனது.
தூங்கும்போதுகூட அல்ல, விழித்திருக்கும்போதே வேட்டி
உருவப்பட்டது போல எங்கள் மாவட்டம் உருவப்பட்டது. (மேசையைத்
தட்டும் ஒலி) ஆனால், இன்றைக்கு தலைவர் அவர்கள் அதைத் திருப்பிக்
கொடுத்து எங்கள் மானத்தைக் காத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும்
ஒலி) அன்றைக்கு அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளர் என்ற
முறையில், அந்த ஆட்சியில் போராடி பட்டபாடு எங்களுக்குத்தான்
தெரியும். இன்னும் வழக்குகள் நிலுவையிலுள்ளன. போராட்டமே



பிடிக்காத அரசாங்கம். இன்றைக்கு அந்த இரணத்திற்கு முதல்வர்
அவர்கள் மருந்து தடவியிருக்கிறார்கள். எங்கள் மக்கள் மனதைக் குளிர
வைத்திருக்கின்றார்கள்.

அடுத்ததாக, எங்கள் பகுதியை உள்ளடக்கிய முந்திரி விளை நில
ஏற்றுமதி மண்டலத்தின் பணிகள் செம்மைப்படுத்தப்படும் என்று நிதி
நிலை அறிக்கையில் அறிவித்த அறிவிப்பிற்கு எங்களது நெஞ்சார்ந்த
நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். நெல், கரும்பு
பயிர்களுக்கு விலை நிர்ணயம் செய்து இருப்பதுபோல, முந்திரிக்கும்
விலை நிர்ணயம் செய்தால், எங்கள் பகுதி ஏழை முந்திரி
விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்தது போல் இருக்கும். சில
வருடங்களில் முந்திரி ஒரு மூட்டை 5 ஆயிரம், 6 ஆயிரம் ரூபாய்
விலைக்கு விற்கிறது. சில வருடங்களில் 2 ஆயிரம், 2,500 ரூபாய்க்கு
விலை சரிந்துவிடுகிறது. எனவே, விலை நிர்ணயம் செய்தால்,
பெரம்பலூர், கடலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை,
கன்னியாகுமரி பகுதி விவசாயிகளுக்கு அது பெரிய விடிவாக
அமையும். அதேபோல, அரசு முந்திரிக் காடுகளில் வனத் தோட்டக்
கழகம் தைல மரங்கள் நடுவதைத் தவிர்த்து, தொடர்ந்து முந்திரி
பயிரிட்டால் எங்கள் பகுதிக்கு இன்னும் உதவியாக இருக்கும்.

அடுத்ததாக, நிதி நிலை அறிக்கையிலே அளித்த ஒரு சலுகைக்கு
எங்கள் பகுதி நெசவாளர்களின் சார்பாக நன்றி
தெரிவித்துக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்களுக்கு 100 யூனிட்
இலவச மின்சாரமும், சிட்டா நூலுக்கு முழு வரி விலக்கும்,
பொங்கலுக்கு இலவச வேட்டி, சேலை வழங்குவதன்மூலம், கூடுதல்
கொள்முதல் போன்ற முத்தான திட்டங்களை அளித்து, தலைவர்
அவர்கள் நெசவாளர்களின் வாழ்விலே விளக்கேற்றியுள்ளார்கள்.
(மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத்
தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, எனது தொகுதியைச் சார்ந்த செந்துறை ஒன்றியத்தை
உள்ளடக்கிய பெரம்பலூர் மாவட்டத்தின் பல பகுதிகளுக்குமான
கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு இந்த நிதி நிலை அறிக்கையில் நிதி
ஒதுக்கிய முதல்வர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர்,
எங்கள் தளபதி அவர்களுக்கும், எங்களது கோடானு கோடி நன்றியைத்
தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) 1996-2001 ஆம்
ஆண்டு நமது ஆட்சியில் திட்டம் தீட்டப்பட்டு, இடையிலே அந்த
ஆட்சி வந்து, அந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டது. எங்கள்
பகுதி என்றாலே பிடிக்காதோ என்னவோ, காரணம் தெரியவில்லை.

இன்றைக்கு தலைவரால் உயிர் பெற்றுள்ள அந்தத் திட்டத்திற்கு அந்தப் பகுதியிலே உப்புத் தண்ணீரையும், நிறம் மாறிய தண்ணீரையும் குடித்து வாழ்ந்தும் அவதிப்படுகின்ற எங்கள் மக்கள் சார்பாக, தாகம் தீர்த்த தலைவர் அவர்களையும், தளபதி அவர்களையும், கார் உள்ளளவும், கடல் உள்ளளவும் என்றைக்கும் மறக்க மாட்டோம் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

தொகுதி சார்பாக சில கோரிக்கைகளை இந்த நேரத்திலே வைக்க விரும்புகின்றேன். எங்கள் பகுதியிலே உற்பத்தி ஆகின்ற பால், 80 கிலோ மீட்டர் கடந்து பெரம்பலூர் குளிர் பதனிடும் நிலையத்தைத்தான் அடைய வேண்டும். அப்படி அடைகின்ற நேரத்திலே, சில நேரங்களில் பால் கெட்டுவிடுகிறது, தயிராக ஆகி விடுகிறது. சென்ற நம்முடைய ஆட்சிக் காலத்திலே, அரியலூர் பகுதியிலே தேளூர் பகுதியிலே குளிர் பதனிடும் நிலையம் தொடங்குவதற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு, திட்டத்திற்கான மதிப்பீடுகள் போடப்பட்டது. கடந்த ஆட்சியில், அந்தத் திட்டமும் கிடப்பில் போடப்பட்டது. தற்போது, நம்முடைய ஆட்சியில் தலைவர் அவர்கள், அந்தத் திட்டத்தினைச் செயல்படுத்தித் தந்திட வேண்டுமென்று எங்கள் பகுதி சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-50

அதேபோல, ஆண்டிமடம், ஜெயங்கொண்டம் தொகுதி மக்களின் நீண்ட நாளைய கோரிக்கை. தற்போது எங்கள் பகுதி மக்கள் கும்பகோணம் செல்லவேண்டுமென்றால், அணைக்கரை வழியாக ஐம்பது கிலோ மீட்டர் தூரம் சுற்றிச் செல்கின்றோம். அணைக்கரைப் பாலம் பிரிட்டிஷ் காலத்திலே கட்டப்பட்டது. இன்றைக்கு அது வலுவிழந்து காணப்படுகிறது. எனவே, மதனத்தூர், நீலத்தநல்லூர் இடையிலே கொள்ளிடத்திலே ஒரு பாலத்தினை அமைத்துக் கொடுத்தால் எங்கள் பகுதி மக்கள் கும்பகோணத்தை அடைவதற்கு ஐம்பது கிலோ மீட்டர் என்பது 24 கிலோ மீட்டராகக் குறைந்து எங்களுக்கு உதவிகரமாக இருக்கும். இந்தக் கோரிக்கை, கடந்த காலத்திலே மறைந்த சட்டமன்ற உறுப்பினர், அண்ணன் கா.சொ. கணேசன் அவர்களாலும், என்னுடைய தந்தையார் சிவசுப்பிரமணியன் அவர்களாலும் சட்டமன்றத்திலே வலியுறுத்தப்பட்ட கோரிக்கை. இன்னும் சொல்லப்போனால், நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆதரிக்கின்ற கோரிக்கையாக இந்தக் கோரிக்கை இருக்கும். எனவே, இந்தக் கோரிக்கையை ஏற்று உதவிட வேண்டுகின்றேன்.



அதேபோல, எங்கள் பகுதியிலுள்ள இராஜேந்திர சோழ மன்னனால் உருவாக்கப்பட்ட கங்கைகொண்ட சோழபுரம், வரலாற்றுப் பிரசித்திப் பெற்ற இடம். இன்றைக்கும் இந்தப் பகுதி மக்கள் வந்து செல்கின்ற இடமாக இருக்கின்றது. வெளிநாட்டு மக்களும், வெளி மாநிலத்து மக்களும் வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். அதைச் சிறந்த சுற்றுலா மையமாகத் தரம் உயர்த்தித் தந்தால் எங்கள் பகுதி மக்களுக்கு உதவிகரமாக இருக்கும். இராஜேந்திர சோழன் அமைத்ததை இந்த மனுநீதி சோழன் உயர்த்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஊரகத் தொழில் துறை சார்பாக செய்து கொடுக்க வேண்டிய ஒரு கோரிக்கை. ஜெயங்கொண்டத்தில் அனல்மின் நிலையம் வருகிறது. எங்கள் ஆண்டிமடம் தொகுதியில் இரண்டு சிமெண்ட் ஆலைகள் உள்ளன. அரியலூர் தொகுதியில் இரண்டு சிமெண்ட் ஆலைகள் உள்ளன. இன்னும் இரண்டு சிமெண்ட் ஆலைகள் வர இருக்கின்றன. அந்தப் பகுதியிலே SIPCOT அல்லது SIDCO மூலமாக ஒரு தொழிற்பேட்டை அமைத்துக் கொடுத்தால், அதன் வாயிலாக சிறு தொழில்கள் வளர்வதற்கும், எங்கள் உள்ளூர் மக்கள் வேலை வாய்ப்புகள் பெறுவதற்கும் வசதியாக இருக்கும். இதனை மனதிலே கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, நீண்டநாள் கோரிக்கையாக ஆண்டிமடத்திலே ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருக்கின்றது. அதேபோல, ஆண்டிமடம், செந்துறை ஆகிய இடங்களிலே பேருந்து நிலையங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை மக்கள் நீண்ட நாட்களாக வைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அதேபோல, எங்கள் தொகுதியை உள்ளடக்கிய பொன்பரப்பி, சன்னாசிநல்லூர், மாத்தூர் போன்ற பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்து, நீண்டதூரம் அவர்கள் பயணித்து சுகாதார வசதி பெறுவதனைத் தவிர்க்க உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல், என்னுடைய தொகுதியிலே ஒரு தீவு போல இருக்கின்ற அயன்தத்தனூர் என்ற கிராமத்திற்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விரைவில் முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** ஒரு மேம்பாலம் அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றைக்கு என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற சிமெண்ட் ஆலைகளைப் பயன்படுத்துகின்ற வகையிலே செந்துறை, பெண்ணாடம் சாலையை இருவழிச் சாலையாக அமைத்துத் தர வேண்டுகின்றேன்.

எங்களுடைய தொகுதியிலே இருக்கின்ற செந்துறை, குமிழியம் ஆகிய இரண்டு மருத்துவமனைகளுக்கும் 30 படுக்கைகளுடன் கூடிய கூடுதல் கட்டட வசதி அமைத்துத் தர வேண்டுகின்றேன். இரும்புலிக்குறிச்சி பகுதிக்கு புதிய துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுகின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மூன்று நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். அவருக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இன்னும் இரண்டு பள்ளிகளை வருகின்ற ஆண்டிலே மணப்பத்தூர், வீராக்கன் ஆகிய கிராமங்களிலே உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தந்திடவும், பொன்பரப்பி, ஆண்டிமடம் ஆகிய இரண்டு இடங்களிலே பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைத்துத் தந்திடவும் வேண்டுகின்றேன்.

அதேபோல, எங்கள் பகுதியிலே இருக்கின்ற ஒரே ஒரு ஓடையான ஆனைவாரி ஓடையைத் தூர் வாரி ஆக்கிரமிப்புகளை அகற்றி, அதனைச் சார்ந்த நீர் நிலைகளையும் தூர் வாரி விவசாயிகளுக்கு உதவிட வேண்டுகின்றேன்.

அதேபோல, எங்கள் பகுதி விவசாயிகள் மின் இணைப்பிற்கு கூடுதல் Load கேட்டு, Additional Load கேட்டு விண்ணப்பித்துள்ளனர். காரணம், எங்கள் பகுதியிலே நிலத்தடி நீர் மட்டம் 400 அடியிலிருந்து 500 அடியாக இருக்கின்றது. அதற்கு Additional Load கொடுத்தால்தான் அவர்கள் தங்களுடைய விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கு உதவிகரமாக இருக்கும். அருள்கூர்ந்து இதனைச் செய்து தர வேண்டுகிறேன்.

முற்பகல் 10-55

அதேபோல, என்னுடைய பக்கத்துத் தொகுதியான விருத்தாசலத்தில் உள்ள பீங்கான் தொழில்நுட்பப் பயிற்சி மையம், தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஒரே பயிற்சி மையம். அதுவும் நம்முடைய ஊரகத் தொழில் துறையின்கீழ் வருகின்றது. அதிலே இருக்கின்ற மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையை அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.



அதேபோல, என்னுடைய பக்கத்துத் தொகுதியான சிதம்பரம் தொகுதியைச் சேர்ந்த திருமுட்டம் பகுதியையும், என்னுடைய தொகுதியைச் சார்ந்த வரதாராஜன்பேட்டை பகுதியையும் உள்ளடக்கிய பகுதியில் நிலக்கரி வளம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனையும் நெய்வேலி நிலக்கரி நிறுவனம் எடுத்து நடத்தி, எங்கள் பகுதியை வளப்படுத்திட, தலைவர் கலைஞர் அவர்கள் கருணைகூர்ந்து உதவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

எங்களுடைய மாவட்டம் சார்பாக ஒரு சிறு கோரிக்கை. அரியலூர் அரசு சிமெண்ட் ஆலையில், 1-8-1979 முதல் இதுவரை 84 தொழிலாளர்கள் சிமெண்ட் லோடு ஏற்றும் பணியை ஒப்பந்த முறையிலே செய்து வருகின்றார்கள். அவர்களை நேரடித் தொழிலாளர்களாக நிரந்தரம் செய்து தருமாறு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, எனது தொகுதியைச் சேர்ந்தவர்கள், இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டைச் சேர்ந்த பலபேர், பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் Diploma in Sanitation படித்தவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்குத் தமிழ்நாட்டிலே இன்னும் அங்கீகாரம் வழங்கப்படவில்லை. மத்திய அரசின்கீழ் வரும் நிறுவனங்களில் அவர்களுக்கு வேலை கிடைக்கின்றது. திண்டுக்கல் காந்தி கிராமக் கல்லூரியின் பாடத் திட்டத்தை அடிப்படையாகப் பின்பற்றி அந்தப் பாடத் திட்டம் அமைந்துள்ளது. அவர்களுக்கு அங்கீகாரம் அளித்து உதவிட இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்களும், நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும் அளித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கை, இந்தியாவிலேயே மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் (மணியடிக்கப்பெற்றது) திரும்பிப் பார்க்கின்ற வகையிலே, நாமும் இதைப் பின்பற்ற வேண்டும் என்ற வகையிலே, ஒரு முன்னோடி நிதிநிலை அறிக்கையாக இருக்கின்றது. இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிச் சொல்லவேண்டுமென்றால், கிராமப்புறங்களிலே சொல்லுகின்ற ஒரு வார்த்தையைச் சொல்லவேண்டும். நாங்கள் எல்லாம பள்ளி, கல்லூரிகளிலே படிக்கின்ற காலத்திலே திரைப்படத்திற்குச் சென்றோமானால், அந்தப் படத்தைப் பற்றி விமர்சனம் செய்யும்போது, விளையாட்டாகச் சொல்வோம்; 'அந்தப் படத்திலே இருக்கின்ற ஒரு பாடலுக்கே கொடுத்த காசு சரியாப் போச்சு; அந்தப் படத்திலே வருகின்ற ஒரு சண்டைக் காட்சிக்கே கொடுத்த காசு சரியாப் போச்சு' என்று சொல்வோம். அதேபோல, தலைவர் அவர்கள், பதவியேற்ற

நிமிடத்திலே அறிவித்த அந்த 3 திட்டங்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் இருக்கின்ற மக்கள் அளித்த வாக்கு சரியாகிவிட்டது. ஒரு உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால்,..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரமாகி விட்டது, திரு. சிவசங்கர், முடியுங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் நடித்த முதல் மரியாதை திரைப்படத்திலே ஒரு காட்சி வரும். ஒரு காட்சியிலே ஒரு மீனை எடுத்து வாயிலே வைத்து வெளியிலே இழுப்பார்; முள் மாத்திரம்தான் வரும். அதைப் பார்த்துவிட்டு இன்றைக்கும் எல்லோரும் சொல்வார்கள். மிகச் சிறப்பான அந்த ஒரு காட்சிக்கே அந்தப் படம் சரியாகப் போனது என்று. அதைப்போன்று, தலைவருடைய ஆட்சி, அந்த ஒரு நாள் அறிவிப்பிற்கே, எதிர்க்கட்சிகள் சென்ற காலத்திலே நடத்திய 5 ஆண்டு கால ஆட்சி ஈடாக வராது. அதற்காக அவர்கள் அதை முயற்சி செய்து பார்க்க வேண்டாம். முயற்சி செய்தால், அவர்களுடைய நாக்கிலே அந்த முள் பட்டு, இரத்தம் வந்துவிடும் என்று இந்த நேரத்திலே தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த உதாரணத்தை மீன் வளத் துறை மானியத்திலே சொல்லியிருந்தால் இன்னும் கொஞ்சம் சிறப்பாக இருந்திருக்கும். (சிரிப்பு) அடுத்ததாக திரு. இரா. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கன்னிப் பேச்சில் குறுக்கிட வேண்டாமென்று நினைத்தேன். இருந்தாலும்கூட, சென்ற ஆட்சிமீது, அரசுமீது ஒரு தவறான தகவலை இங்கே பதிவு செய்திருப்பதால், அதற்கு மறுப்பு தெரிவிக்க வேண்டிய காரணத்தினால், அதிலே குறுக்கிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது, மத்திய அரசின் ஊரக மின்மயமாக்கல் கழகத்தின்மூலமாக, தமிழ்நாட்டில் மின்சார வசதி பெறாத கிராமங்களுக்கு, மின் வசதியைப் பெறுவதற்காக மத்திய அரசின் நிதியுதவியை, மத்திய அரசினுடைய ஊரக மின்மயமாக்கல் கழகத்தினுடைய நிதியுதவியை மாநில அரசு பெறத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டை இங்கே சொன்னார்கள். மாநில அரசு முறையாக அணுகாததன் காரணமாக, அந்த வாய்ப்பினை, அந்த நிதியினைப் பெறுவதற்கு மாநில அரசு தவறி விட்டது என்ற தவறான



தகவலைத் தெரிவித்திருக்கிறார்கள். நான் அவருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்: சென்ற ஆட்சிக் காலததிலே. அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே, தமிழகத்திலேயிருக்கின்ற 5,100 கிராமங்கள் மத்திய அரசினுடைய ஊரக மின்மயமாக்கல் கழகம் நிர்ணயித்த வரைமுறைக்குட்பட்டு, அந்த condition–க்கு ஏற்ப, தேர்வு செய்யப்பட்ட 5,100 கிராமங்கள் மின் இணைப்பு பெறுவதற்காக, கூடுதல் வசதி பெறுவதற்காக 73.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நமது தமிழ்நாடு மின்சார வாரியம் ஊரக மின்மயமாக்கல் கழகத்திற்கு ஒரு கோரிக்கை வைத்தது. ஆனால், அங்கே இன்றைக்கு இருக்கின்ற மத்திய அரசும் மத்திய அரசின் ஊரக மின்மயமாக்கல் கழகமும் அந்த 73.5 கோடி ரூபாயை மாநிலத்திற்கு, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தரவில்லை என்பதுதான் உண்மை. இதற்காக பலமுறை நாங்கள் முயற்சி செய்து பார்த்தோம். கடிதம் எழுதியிருக்கிறோம். நேரிலும் சென்று முயற்சி எடுத்திருக்கிறோம். ஆனால், கொடுக்க வேண்டிய அந்தப் பணத்தைக் கொடுக்கத் தவறியது மத்திய அரசுதான் என்பதை இந்த நேரத்திலே நான் குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 11–00)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்தே பழமையும் பெருமையும் வாய்ந்த இந்தத் தமிழ்நாட்டின் மாமன்றத்திலே பேச வாய்ப்பளித்த அன்பின் பிறப்பிடம், எளிமையின் உறைவிடம், அடக்கத்தின் கருவூலம், சேவையின் மொத்த உருவம், பொறுமையின் ஓரே வடிவம், செயலின் இருப்பிடம், தியாகத்தின் மறுவடிவம், எங்கள் பாரதத்தின் நம்பிக்கை நட்சத்திரம் இராகுல் காந்தியை ஈன்றெடுத்த தாயும் எங்களின் தெய்வமுமான அன்னை சோனியா காந்தி அவர்களுக்கு இந்தக் கன்னிப் பேச்சை சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தலைவர் திரு. சத்தியமூர்த்தி, மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், அறிஞர் அண்ணா, கக்கன்ஜி, ஏ.கோவிந்தசாமி, மாணிக்கவேல் நாயக்கர், இராமசாமி படையாட்சியார், என் தொகுதியான செய்யாறில் இருந்த பா. இராமச்சந்திரன், புலவர் கோவிந்தன், நீதிக் கட்சியின் தந்தை என அன்போடு அழைக்கப்படும் தமிழ்வேள் திரு. பி.டி.ராஜன், என்னுடைய பாட்டனார் தணிகை மீட்ட

தளபதி வினாயகம் ஆகியோர் அலங்கரித்த இந்தச் சபைக்கு என்னையும்
அழைத்து வந்த தமிழகத்தின் பெட்டகம், பாரதத்தின் பொக்கிஷம்,
தமிழுக்கு மணிமகுடமாய், தமிழர்களுக்கு ஒளிவிளக்காய் திகழ்கின்ற ஓரே
தலைவர், உன்னதத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர்
கலைஞர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றிதனைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்கள் பொய்மையைக் களைந்தார்,
வேற்றுமையைக் களைந்தார், இல்லாமையைக் களைந்தார்,
இயலாமையைக் களைந்தார், வறுமையைக் களைந்தார், அதனால்தான்
நாம் அன்போடு இவரை கலைஞர் என்று அழைக்கின்றோமோ
என்னவோ? மேலும், என்னுடைய பாட்டனாரோடு இதே சபைக்கு
வந்து சேவைபுரிந்த டாக்டர் கலைஞர் அவர்களைப் பார்க்கும்போது
ஒரு இமாலய அனுபவம். குங்குமச் சிமிழுக்குள் அடக்கமாக
அமர்ந்திருப்பதை என்னால் காண முடிகின்றது. மேலும்,
உள்ளாட்சியாக இருந்தால் என்ன, வெளியாட்சியாக இருந்தால் என்ன,
மக்களுக்கு நல்லாட்சியைத் தந்தே தீருவேன் என்று கங்கணம்
கட்டிக்கொண்டு சுழன்றுக்கொண்டிருக்கும் ஓய்வறியா தங்கம், பாசமிகு
அண்ணன் தளபதி அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத்
தெரிவித்துக்கொள்கின்றேன்.

தளபதி அவர்கள் என்னுடைய தேர்தல் பிரச்சாரத்திற்கு செய்யாறு
தொகுதிக்கு வந்தபோது அவருடன் அவருடைய துணைவியாரும் அந்த
வண்டியிலேயே வந்தார்கள். நானும் இருந்தேன். மாவட்ட அமைச்சர்
திரு. வேலு அவர்களும் அதே வண்டியிலே வந்துகொண்டிருந்தார்கள்.
என்னுடைய செய்யாறு தொகுதியானது தமிழகத்திலேயே second rice
bowl of Tamil Nadu என்று சொல்லப்படக்கூடியது. அதிகப்படியான
நெற்சாகுபடியாகும் தஞ்சைக்கு அடுத்த மாவட்டம் செய்யாறு தொகுதி.
எனவே, வந்த வழியிலே நிறைய நெற்கதிர்களை, வயலிலே இருந்து
அறுக்கப்பட்ட நெற்கதிர்களை, வைக்கோல்களை சாலைகளிலே காய
வைத்திருப்பார்கள். இது எங்களுடைய தொகுதியிலே வழக்கம்.
அதிகப்படியான மகசூல் என்பதனால் ஆங்காங்கே அதிகப்படியான
உயரத்திலே இருந்த அந்த வைக்கோல் நாங்கள் வந்துகொண்டிருந்த
வண்டியிலே சிக்கி, வண்டியானது நிற்க வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு
வந்துவிட்டது. வண்டியும் நின்றாகிவிட்டது. எப்படி மலரைப் பார்த்து
மகரந்தத்திற்காக அங்கு வண்டுகள் மொய்க்குமோ, அதைப்போல
தளபதி வந்துவிட்டார் என்ற செய்தி அந்த ஊர் பூராவும் பரவியதன்
காரணமாக, ஊரே திரண்டு வந்து, அந்த வண்டியை சுற்றிக் கொண்டது



பார்த்ததும்
பாருங்கள். அப்போது சிறு குழந்தைகளைப் பார்த்ததும்
அவருடைய துணைவியார் அவர்கள் தன்னிடம் இருந்த பிஸ்கட்
பொட்டலத்தையும், ஆரஞ்சு பழங்களையும் கொடுத்து இரசித்தபோது
நான் நினைத்தேன், மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே இந்தக்
குடும்பம் இருக்கின்றது என்ற ஒரு எண்ணம் என் மனதில் தோன்றியது.
அடித்தட்டு மக்களுக்கு, அவர்களுடன் சென்று சகஜமாகப் பழகி,
மக்கள் பிரச்சினை என்ன என்பதனை தெளிவாகப் பேசிக்கொள்ளும்
பாங்கு தளபதிக்கு உண்டு என்பதனை அன்று நான் கண்டறிந்தேன்.
அதுமட்டுமல்ல, உள்ளாட்சித் துறை மிக மிக முக்கியமான துறை.
அந்தத் துறைக்குத் தேவையான அனைத்து அணுகுமுறையும் தளபதிக்கு
இருக்கிறது என்பதற்கு மேலும் ஒரு சான்று. உடனே அவர் மாண்புமிகு
அமைச்சர் திரு. வேலுவைப் பார்த்து, ஏன் இங்கே போதிய
நெற்களங்கள் இல்லையா என்று கேட்டார். உடனே அவர் சொன்னார்.
நாம் வந்தவுடன் இந்த செய்யாறு தொகுதிக்கு நிறைய நெற்களங்கள்
தந்தாகவேண்டும் என்று சொன்னார். கடந்த வாரம் மாண்புமிகு
அமைச்சர் திரு. வேலு அவர்கள், தளபதி அவர்கள் தன்னை அழைத்து,
எத்தனை நெற்களங்கள் இருக்கின்றன என்று கணக்கெடுக்கச்
சொன்னார் என்று சொன்னபொழுது, நான் நினைத்தேன், ஞாபக
சக்தியிலும் தளபதி அவர்கள் சளைத்தவர் அல்ல என்பதனை
என்னால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

(முறபகல் 11-05

எங்களுடைய மாவட்ட அமைச்சர் திரு. வேலு அவர்களை, எங்கள்
தொகுதியிலே அன்போடு அழைப்போம். 'வேலு என்று சொன்னாலே,
என்ன வேண்டும் கேளு' என்றுதான் சொல்வார்கள். அந்த அளவிற்கு
மக்களுக்கு என்ன தேவை என்பதனைப் புரிந்துகொண்டு,
கேட்கும்முன்பே கொடுக்கும் பாங்கு எங்களுடைய மாவட்ட அமைச்சர்
திரு. வேலு அவர்களுக்கு உண்டு என்பதனை இந்த நேரத்திலே சொல்லி,
அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், எங்களுடைய காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத் தலைவர்
ஐயா திரு. சுதர்சனம் அவர்களுக்கும் என்னுடைய பணிவான
நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனத்
தலைவர், டாக்டர் ஐயா அவர்களுக்கும், கம்யூனிஸ்ட் தோழர்களுக்கும்,
முஸ்லீம் லீக் நண்பர்களுக்கும், புரட்சி பாரதம் தலைவர்
அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு,
என்னுடைய வெற்றியை நிர்ணயம் செய்த என்னுடைய செய்யாறு
தொகுதி மக்களுக்கு பணிவான நன்றியினைச் சமர்ப்பிக்கின்றேன்.

சிறப்பான நன்றியினை டாக்டர் கலைஞர் அவர்களுக்குச் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றேன். ஏனென்றால், நான் பேசப்போவது, சிறுதொழில் மானியம். சிறுதொழில் என்றாலே, புதிய அமைச்சரைத்தான் இதுவரை தமிழகத்திலே கண்டிருக்கின்றோம். ஆனால், சிறுதொழில் எவ்வளவு முக்கியம், நாட்டிற்கு அது எவ்வளவு முக்கியம், அவசியம் என்பதனை வலியுறுத்துவதற்காகத்தான் திறமை வாய்ந்த, அறிவுத் திறன்படைத்த அனுபவமிக்க ஒரு தலைவரை, ஓர் அமைச்சரை, அதாவது, மாண்புமிகு அமைச்சர் திரு. ஆற்காட்டார் அவர்களைக் கொடுத்திருப்பதற்கு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய சிறப்பான நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சிறுதொழில். சிறுதொழிலில், இன்று தமிழகத்தின் நிலை என்ன? அகில இந்தியாவிலேயே சிறுதொழிலில் முதலிடம் பெற்றிருப்பது. பஞ்சாப் மாநிலம். இரண்டாவது, மகாராஷ்டிராவிலே இருக்கின்ற புனே. ஆனால், தமிழகத்திலே சிறுதொழிலின் நிலைமை என்ன? காந்தி அவர்கள் இருந்த காலத்திலிருந்தே, கதர் ஆடைகள் கைத்தறிக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்ததனால், சிறுதொழில் பெருகியது. ஆனால், இன்றோ, 1970 ஆம் ஆண்டு, தமிழகத்திலே சிறுதொழில் மென்மேலும் வளர வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, TANSIDCO என்ற ஒரு நிறுவனம் உருவாக்கப்பட்டது. ஆனால், அதற்கு முன்பு, 1952 ஆம் ஆண்டிலிருந்து 1970 ஆம் ஆண்டு வரை, 35 தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டுவிட்டன. ஆனால், 1970 ஆம் ஆண்டிலே உருவான TANSIDCO நிறுவனம், இன்றுவரை வெறும் 43 தொழிற்பேட்டைகளைத்தான் உருவாக்கியிருக்கிறது என்பது நிதர்சனமான உண்மை. இதை யாராலும் மறுக்க முடியாது. மொத்தம் 78 தொழிற்பேட்டைகளிலே, 35 தொழிற்பேட்டைகள் 18 வருடங்களிலே உருவாக்கப்பட்டன. ஆனால், கடந்த 36, 37 வருடங்களாக, வெறும் 45 தொழிற் பேட்டைகளைத்தான் இந்த TANSIDCO நிறுவனம் உருவாக்கியிருக்கிறது என்று சொன்னால், இதனுடைய உண்மை நிலை என்ன என்பதனை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டிய காலச்சூழலிலே இருக்கின்றோம்.

தொழில் மற்றும் தொழிற்சாலை என்றாலே, 1,000 மில்லியன் டாலர் முதலீடு, ஆயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு, பல இலட்சம் ரூபாய் இலாபம், அன்னியச் செலாவணி. அதுபோல, அன்னியச் செலாவணிதான் கிடைக்க வேண்டும் என்ற நிலையிலே, சர்வதேச நிறுவனங்களை நம்பியிருக்கின்ற ஓர் அவல நிலை இருக்கின்றது. இந்த



நிலை மாற வேண்டும். இப்போதும், Hyundai, Ford, Saint Gobain, B.H.E.L., N.L.C., Information Technology வளர்ந்திருக்கின்ற இந்த நேரத்திலே, Nokia, Motorola போன்றவற்றையெல்லாம் வரவேற்கின்றோம். ஆனால், இதிலே வேலைவாய்ப்பு எண்ணிக்கை முதலீட்டிற்கு ஏற்றவாறு இருக்க வேண்டும். இருந்தால் மகிழ்ச்சி. ஆனால், 100 பேர் செய்யக்கூடிய ஒருவேலையை, ஒரே இயந்திரம் செய்து முடித்தால், ஒரு சாமானிய ஏழை விவசாயிக்கோ, பட்டதாரிகளுக்கோ என்ன இலாபம் என்பதனை இந்த அரசாங்கம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெரிய முதலீடு, பெரிய தொழிற்சாலை, நல்ல இலாபம், நாட்டிற்குப் போதிய அன்னியச் செலாவணி, அடித்தது யோகம் முதலீட்டாளர்களுக்கு. ஆனால், தன் நிலத்தை, தொழிற்சாலை வரும் என்ற ஓர் அற்ப ஆசையிலே தாரை வார்த்து நிற்கின்றானே அந்த விவசாயி, அவனுடைய துயர் துடைக்கப்படுமா? அவனுடைய வீட்டிலே ஒளிவிளக்கு ஏற்றப்படுமா என்றெல்லாம் இந்த அரசாங்கம் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த நிலை மாறவேண்டும். இந்த வாட்டத்தைப் போக்க வேண்டுமென்று சொன்னால், தமிழகத்திலே, சிறுதொழில்தான் ஒரே வழி என்பதனை இந்த நேரத்திலே பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தனி நபருடைய வருமானத்தைப் பெருக்கவும், இந்நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்கவும் சிறுதொழில்தான் ஒரே வழி என்பதனையும் மீண்டும் ஒருமுறை ஆணித்தரமாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக, Information Technology-யிலே Japan, Korea போன்ற நாடுகளெல்லாம், Camera Spare Parts, கணினி உதிரிப் பாகங்கள், மருத்துவக் கருவிகளுடைய உதிரிப் பாகங்களைச் சிறுதொழிலாகவே செய்து சாதனை படைத்துக் கொண்டிருக்கின்றன என்பதனை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். சிறுதொழில், அதனுடைய முக்கிய நோக்கமே, வேலைவாய்ப்பைப் பெருக்குவதுதான். Employment generation, not automation. ஆனால், இன்றோ 50 இலட்சம் படித்த பட்டதாரி இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்து காத்துக்கொண்டிருக்கின்ற ஒரு அவலநிலையை நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது. இவர்களுடைய நிலை என்ன? படித்த பொறியியல் பட்டதாரிகள் travel agent-ஆகவோ, குமாஸ்தாவாகவோ இன்று வேலை செய்கின்றார்கள். இந்த நிலையை மாற்றவேண்டுமென்று சொன்னால், சிறுதொழில் செய்ய இடம், மூலப்பொருள், கடன் உதவி எளிதாகக் கிடைத்தல், விற்பனைக்கு உதவுதல், technology assistance தர முன்வர வேண்டும்.

முற்பகல் 11-10

இன்று எந்த வங்கியிலும் எளிதாகக் கடன்பெற முடியவில்லை. இதுதான் யதார்த்தமான உண்மை. எந்த வங்கிக்குச் சென்றாலும், பெரிய project-ஐக் கொண்டுவா, கடன் தருகிறேன் என்று சொல்கிறார்கள். பெரிய project-ஐக் கொண்டுவருவதற்கு ஏற்ப அவனுடைய நிலைமை இருந்தால் அவன் ஏன் சிறு தொழிலுக்குச் செல்லவேண்டும்? அவனே 4, 5 கிலோ மீட்டர் நடந்துசென்று ஏற்றம் இறைத்து, ஏர் ஓட்டி, மாடுகளைக் கட்டிவிட்டு பிறகு கல்வி கற்கின்றான். இதுதான் இங்கு பெரும்பாலான கிராமங்களிலே நிலவிக்கொண்டிருக்கிறது.

அப்படி கல்வி கற்றவன் சிறு தொழில்களைச் செய்யவேண்டுமென்று முன்வரும்பொழுது அவனுக்குத் தேவையான உதவிகளையும், ஊக்கங்களையும் இந்த அரசாங்கம் கொடுக்கவேண்டும். கடனுதவிக்குச் சென்றால் ஏன் collateral கேட்கிறார்கள்? அதாவது பிணையம். அவன் பிணையம் கொடுக்கின்ற நிலையில் இருந்தால் அவன் ஏன் கடனுதவிக்கு ஒரு வங்கிக்குச் செல்லவேண்டும்? அவனுடைய நம்பிக்கையையும், அவனுடைய கல்விச் சான்றிதழையுமே பிணையமாகக் கொண்டு, முதலீடாகக் கொண்டு, joint venture என்ற முறையிலே, அதாவது அவனுடைய சான்றிதழும், அரசாங்கமும் சேர்ந்து joint venture என்ற முறையிலே ஏன் ஒரு சிறுதொழிலைச் செய்ய முடியாதா? இதைச் செய்தால் அதன்மூலம் கிடைக்கும் பணத்தை வைத்துக்கொண்டே அந்த இடத்தைக் கிரயம் செய்யக்கூடிய நல்ல ஒரு வாய்ப்பை இந்த அரசாங்கம் செய்து தரவேண்டும்.

Joint venture என்று சொன்னாலே இன்னொன்றுதான் நினைவுக்கு வருகின்றது. என்னுடைய தொகுதியிலே பெரும்பாலான இடங்களிலே கள்ளச் சாராயம் ஆறுபோல் ஓடுகின்றது. கள்ளச் சாராயம் சிறு தொழிலாகவே நடந்து கொண்டிருக்கின்ற ஒரு அவலநிலை என்னுடைய தொகுதியிலே இருக்கின்றது. அதில் மட்டும் கள்ளச் சாராய வியாபாரிகளும், அதிகாரிகளும் joint venture முறையிலே சிறப்பான ஒரு தொழிலைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அன்பைச் சாராமல், வாழ்க்கையைச் சாராமல், குடும்பத்தைச் சாராமல், அரசைச் சாராமல், சட்டத்தைச் சாராமல் இருப்பதனால், எதையுமே சாராமல், சாராமல் இருப்பதனால் இதற்குச் சாராயம் என்று பெயர் வந்ததோ என்றுகூட எனக்கு நினைக்கத் தோன்றுகின்றது. எனவே, இந்தச் சாராயத்தை நாம் உடனடியாக ஒழித்துக்கட்டவேண்டும். இதற்கு ஒரு மாற்றுவழியும் நாம் காணவேண்டும். ஏனென்றால், மனிதனுக்கு ஒரு பழக்கம் வந்துவிட்டால் அதை நிறுத்தமுடியாது. ஆனால், மடை மாற்றிவிடலாம்.



எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணப்பன் அவர்களும் சொன்னார்கள், கள்ளுக் கடையை திறந்தால் இந்தக் கள்ளச் சாராயம் ஒழியும் என்ற நிலை வந்தால், நிச்சயமாக அதையும் இந்த அரசு மீண்டும் ஒருமுறை பரிசீலனை செய்யவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் 28-ல் நடந்த விவாதத்தில் அப்பொழுது அமைச்சராக இருந்த திரு. பெரியசாமி அவர்கள் சொன்னது, "தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தைப் பொறுத்தளவிலே கட்டடம், இயந்திரம் வாங்கக் கடன் வழங்குகின்றோம். ஆனால், நடைமுறை முதலீடு, running capital வாங்க கடன் தர வங்கிகள் மறுக்கின்றன. தேங்கிக் கிடக்கின்ற தொழில்களை நடத்த தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலமாக ஒரு commercial வங்கியை உருவாக்க மாண்புமிகு முதல்வரிடம் ஆலோசனை மேற்கொள்ளப்படும்" என்றார். அப்படியானால் அதன் நிலை இன்று என்ன என்பதை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். Page 131, அன்றே திரு. மோகன் கந்தசாமி பேசும்பொழுதும் சிட்கோவில் நிறைய ஷெட்டுகள் விற்கமுடியாமல் இருக்கின்றன. அதை 5 ஆண்டு வாடகைக்கு விட்டு தொழில் செய்து அவர்கள் ஈட்டிய பொருளை வைத்து கிரயம் செய்ய யோசனை சொன்னார். அதற்கும் அமைச்சர் அவர்கள் ஒரு மேல்மட்டக் குழு அமைக்கப்படுகிறது என்றார். அதன் நிலை என்ன என்பதையும் தாங்கள் இம்மாமன்றத்தில் தெளிவுபடுத்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

சிறு தொழிலை ஊக்குவிப்பது எப்படி என்று சொன்னால், சிறு தொழிலுக்கு இந்த அரசாங்கம் முக்கியத்துவம் தருகின்றது. அக்கறை காட்டுகிறது என்ற எண்ணம் சாமானிய மக்களுடைய மனதிலே போய் சென்றடைய வேண்டும். எங்கிருக்கிறது TANSIDCO? SIDCO எங்கிருக்கிறது? யாரைப் பார்க்கவேண்டும்? யாரை அணுகவேண்டும்? அதற்கு நமக்கு தகுதி இருக்கிறதா? இல்லையா? இதுபோன்ற எண்ணங்கள் படித்த இளைஞர்களுடைய மனதிலே எழுகின்றது. இதையெல்லாம் போக்கவேண்டுமென்று சொன்னால், விளம்பரம் மூலமாக விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவேண்டும். எப்படி AIDS Awareness Programme, Tobacco-புகையிலை விழிப்புணர்வு programme, oral polio இதை எல்லாம் மக்களிடம் எடுத்துச் சென்றோமோ, அதுபோல் சிறுதொழில் செய்வதற்கும் இந்த அரசாங்கம் பக்கபலமாக இருக்கும் என்ற எண்ணம் மனிதனுக்கு வரவேண்டும். படித்த இளைஞர்களுக்கு அதுவந்தால்தான் அவன் டாக்டராக வேண்டும், என்ஜினியராக வேண்டும், அட்வகேட் ஆகவேண்டும் என்பதில் வெற்றி அடையலாம்.

எதுவுமே இல்லையென்றால் அரசியல்வாதி ஆகவேண்டும் என்றெல்லாம் எண்ணம் வராமல், சிறு தொழில் செய்ய எப்படி முன்வருவான் என்பதனை நீங்கள் அனைவரும் இந்த நேரத்திலே புரிந்துகொள்ளவேண்டும்.

முற்பகல் 11—15

I.I.T.-யிலே Campus interview என்று வைப்பார்கள். படித்த இளைஞர்களுக்கு Campus interview—லேயே தேர்ச்சி பெற்று வேலை கிடைத்துவிடும். அதுபோல கல்லூரியிலேயே நம்முடைய அரசாங்க அதிகாரிகள் சென்று சிறுதொழில்களின் முக்கியத்துவத்தையும், நாங்கள் இருக்கின்றோம், அரசாங்கம் உங்களுக்கு பக்கபலமாக இருக்கின்றது என்ற எண்ணத்தையும் விதைத்தாலே போதும். நிச்சயமாகச் சொல்கிறேன், ஒரு நாள் தமிழகம் சிறுதொழிலிலே பட்டொளி வீசிப் பறக்கும் என்பதிலே எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால், இந்த சிறு தொழிலிலே ஒரு அதிர்ச்சிகரமான விஷயத்தை இங்கே சொல்லவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, TANSI– Tamil Nadu Small Industries Corporation என்ற ஒரு நிறுவனத்திலே வரவு—செலவு கணக்கிலே 2004—2005 ஆண்டுக் கணக்கைச் சற்று புரட்டிப் பார்த்தோம் என்று சொன்னால், கடந்த வருடம் 2004—2005—லே 60 கோடி ரூபாய் நஷ்டத்திலே இருந்திருக்கின்றது. எது? சிறுதொழில் பெருக வேண்டும், வளர வேண்டும் என்ற எண்ணத்திலே, அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட, அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற TANSI நிறுவனம் 60 கோடி ரூபாய் நஷ்டத்தில் இருந்திருக்கின்றது. ஆனால், அதுவே, 2004—2005-லே மட்டும் வெறும் 9 இலட்சம் ரூபாய்தான் இலாபம் ஈட்டியுள்ளது.

ஆகமொத்தம், 59 கோடியே 91 இலட்சம் நஷ்டத்தில் இருக்கிறது இந்த TANSI நிறுவனம். நஷ்டத்தில் இருக்கின்ற இந்த நிறுவனத்தை நாம் சிறு தொழிலை ஊக்குவிப்பதற்காக, நடத்திக் கொண்டிருக்கின்றோம். மேலும், 2000 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை sales tax assessment நடக்கவில்லை. யாராவது ஒரு வியாபாரி assessment செய்யவில்லை என்றால், அரசாங்கத்திலிருந்து நோட்டீஸ் வந்துவிடாதா? ஆனால், அரசாங்கமே நடத்திக் கொண்டிருக்கிற இந்த TANSI நிறுவனத்திற்கு 2000—லிருந்து இதுவரை எந்தவித sales tax assessment-ம் நடைபெறவில்லை. 'C' form submit செய்யவில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.



மேலும், இங்கே இருக்கின்ற பணியாளர்களை, V.R.S. மூலம் அனுப்ப வேண்டுமென்று சொன்னால், 10 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இதற்கெல்லாம் மணிமகுடம் சூட்டுவது போல ஒரு கணக்கை நான் படித்தேன். TANSI—லே அந்த வரவு—செலவு கணக்கிலே நிர்வாகச் செலவு ரூபாய் 94 இலட்சம் செய்திருக்கிறார்கள், கடந்த வருடம் 2004—2005—ல் ரூபாய் 94 இலட்சம் நிர்வாகச் செலவு செய்து, வெறும் 9 இலட்சம் ரூபாய் இலாபத்தை ஈட்டியிருக்கிறார்கள். இது ஒரு பக்கம் இருக்கட்டும். ரூபாய் 94 இலட்சம் நிர்வாகச் செலவிலே ரூபாய் 46 இலட்சம் miscellaneous expenses. அதாவது, இதர செலவுகள். நாம் சாதாரணமாக வியாபாரத்திலே miscellaneous expenses என்றால் என்ன போடுவோம், தேநீர் செலவு, ஆயுத பூஜை கணக்கு போன்றவைகளைத்தான் miscellaneous expenses என்று போடுவோம். ரூபாய் 94 இலட்சம் செலவு செய்கின்ற ஒரு நிறுவனம், ரூபாய் 46 இலட்சத்தை இதர செலவுகள் என்று கணக்கு காண்பிக்கின்ற ஒரு அவல நிலையை இந்த அறிக்கையிலே என்னால் காணமுடிகிறது. Right to Information Act இருக்கிறது. Transparency இருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால், miscellaneous expenses ரூபாய் 46 இலட்சத்தை காண்பித்தால், எங்கே போய் சொல்வது, இந்த ஒரு கேவலமான நிலைமையை? மேலும், இப்போது நிறைய sheds—கள் இருக்கின்றன, விற்கப்படாமல் இருக்கின்றன. அவற்றை ஏலத்தின்மூலமாக விற்க முயற்சிக்கப்படுகிறது. தயவுசெய்து, தமிழக அரசு ஏலத்தில் விட்டால் பணக்காரர்கள்தான் அதை எடுக்க முடியும். சாமானிய மக்கள், படித்த பட்டதாரிகள் எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய சிறுதொழிலிலே காலூன்றி நிற்க வேண்டும் என்ற இளைஞர்களுக்கு என்ன வாய்ப்பு கிடைக்கும் என்பதனை சிந்தித்து தயவுசெய்து--ஏலத்தில் விடாமல்--ஒதுக்கீட்டு முறையிலே விடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அப்போதெல்லாம், Board of Revenue என்று ஒன்று இருந்தது. அதைத்தான் Super Cabinet என்று சொல்வார்கள். White elephant என்பார்கள். அந்த முறையை ஒழித்தவர், நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள்தான். எனவே, இந்த நிறுவனங்கள், – யாரையும் நான் குறை கூறவில்லை – Super Cabinet போல் செயல்படாமல் இந்த அரசாங்கத்தின் இலட்சியத்தை அடைய வேண்டுமென்று சொன்னால், சிறுதொழில்கள்தான் ஒரே வழி என்பதனை நாம் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறை அமைச்சர் இருப்பதனால் ஒரு கருத்து. கடந்த வாரம் அமைச்சர் அவர்கள் கூறிய ஒரு கருத்து என்னவென்று சொன்னால், இதுவரை 5 இலட்சத்து 40 ஆயிரம் விவசாயிகள் மின்சார connection-க்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஒரு வருடத்திற்கு 40 ஆயிரம் connection-கள் கொடுக்க முடியும் என்றும் சொன்னார்கள். சந்தோஷம்தான். நடைமுறைப்படுத்தும்போது சில பிரச்சினைகள் இருக்கும். இடையூறுகள் இருக்கத்தான் செய்யும்.

முற்பகல் 11—20

அவருடைய கருத்துப்படி 5 இலட்சத்து 40 ஆயிரம் விவசாயிகளில் கடைசி விவசாயியாக காத்துக்கொண்டிருக்கிறானே, அவனுக்கு connection கிடைக்கும்போது 13 வருடங்கள் வீணடிக்கப்படுகின்றது. மின் சக்தி வேண்டும், வேண்டும் என்று ஒரு விவசாயி உங்களிடம் அணுகினால், அதற்கு 13 வருடங்கள் பிடிக்குமானால் அவனுடைய அடிப்படை சக்தியே போய்விடுமே? இதை நீங்கள் கணக்கில் எடுத்துக்கொண்டு மாற்று வழிகள் ஏதாவது இருந்தால் பாருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

Hydro power மற்றும் காற்றாலை, Bio-degradable waste மூலம் மின் சக்தியைப் பெறலாம். Solar power மூலம் பெறலாம். ஒரு உதாரணத்திற்கு இந்த மாமன்றத்திற்கு மேலேயே நாம் சூரிய ஒளியின்மூலம் மின்சாரத்தை எடுக்க முற்பட்டோம் என்று சொன்னால் அது ஒரு முன்மாதிரியாக இருக்கும். ஏனென்றால், நம் தமிழ்நாட்டிலே வெயிலுக்கா பஞ்சம்? இதை வைத்துக்கொண்டு நிறைய மின்சாரத்தை நாம் உற்பத்தி செய்யலாமே என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து.

கடைசியாக என்னுடைய தொகுதி பற்றிய பிரச்சினை. SIPCOT தான் என்னுடைய தொகுதியின் முதல் பிரச்சினை. 1996—2001—லே 580 ஏக்கர் SIPCOT—க்காக வழங்கப்பட்டது. டாக்டர் கலைஞர் அவர்கள்தான் முயற்சி மேற்கொண்டு, இந்த SIPCOT நிறுவனம் பெறப்பட்டது. ஆனால், இன்றுவரை எந்தத் தொழிற்சாலையும் வரவில்லை. அதனால் மக்கள் வேதனை அடைகின்றார்கள். எங்கள் தொகுதிக்கு SIPCOT இந்த வருடமாவது வந்தாக வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

மேலும், செய்யாறிலே Bye-pass சாலை தேவை. இவ்வாண்டு இது இடம்பெறவில்லை. மனதிற்கு வேதனை அளிக்கின்றது. எனவே,



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்யாறு Bye-pass சாலையை உடனடியாக தர வேண்டும். ஏனென்றால், முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், 30 ஆம் தேதி, மே மாதம். "என்னை இராவணன் என்று சிலர் சொல்கிறார்கள், எனக்கு பத்து தலை இல்லை, தமிழக மக்கள்மீது பற்றுதலை" என்று சொன்னார்கள். நான் சொல்வதெல்லாம் ஐயா அவர்களே, பற்றுதலையிலே எங்களுக்கு ஆறுதலை கொடுங்கள், செய்யாறும், நானும் என்றென்றும் உங்களுக்கு நன்றிக் கடன்பட்டிருப்போம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிரம்மதேசம்—புதூர் பாலம். பிரம்மதேசம்—புதூர் பாலம் எங்களுக்குத் தேவை. பிரம்மதேசம் என் தொகுதியிலே இருக்கிறது. புதூர், சோளிங்கர் தொகுதியிலே இருக்கிறது. 2 தொகுதிகள், 2 மாவட்டங்கள், 2 கிராமங்கள். National Highways—லே வந்து சேருகின்றன. ஆக. பிரம்மதேசம்—புதூர் பாலம் தேவை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** காழியூர்—அத்திப்பாலம் தேவை. கொர்காத்தூர்—மணல்வாடி பாலம் தேவை. செய்யாறிலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் தேவை. நெடும்பிறை என்ற கிராமத்திலே நாமக்கட்டி செய்வதுதான் உலகத்திலே மிக பிரசித்தி. நாமம் போடுவதிலே அல்ல, நாமக்கட்டி செய்வதிலே. டாக்டர் கலைஞர் அவர்கள்தான் இதற்கு வரி விலக்கும் செய்தார்கள். எனவே, கொள்முதலையும் அரசாங்கமே ஏற்று நடத்திட வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

கடைசியாக, குத்தனூர் மற்றும் மேல்சீசமங்கலத்திலே கால்நடை மருத்துவமனையும் தேவை. இறுதியாக ஒன்றைக் கூற கடமைப்பட்டிருக்கின்றேன். எல்லோரும், இந்த பட்ஜெட்டை பாராட்டினார்கள். நான் சொல்வதெல்லாம், தமிழுக்கு இலக்கணமாகத் தொல்காப்பியம் இருக்கின்றது; நன்னூல் இருக்கின்றது. அதேபோல, இந்த பட்ஜெட்டுக்கு இலக்கணமாக இவர்கள், பேராசிரியரும், டாக்டர் கலைஞரும் தந்தார்களே, இது இலக்கண பட்ஜெட் என்று இந்த அவையிலே பதிவு செய்துகொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணப்பன் அவர்கள் சொன்னார்கள். இது புத்தகம் இல்லாத நூலகம் என்று சொன்னார்கள். ஆம், உண்மைதான். இது புத்தகம் இல்லாத நூலகமே. ஏனென்றால், கடந்த ஆட்சியிலே நிறைய புத்தகங்கள் சிறைச்சாலைக்குச்

சென்றிருக்குமேயானால், நிச்சயமாக இது புத்தகம் இல்லாத நூலகம் என்றுதான் கருதத் தோன்றுகிறது. ஆனால், உண்மை அதுவல்ல. இது புத்தகம் இல்லாத நூலகம் அல்ல, கலைஞர்கள் நிறைந்த பல்கலைக்கழகம் என்பதைப் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) கைதிகள் இல்லாத சிறைச்சாலை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** அனாதைகள் இல்லா அனாதை இல்லம், நோயாளிகள் இல்லா மருத்துவமனை.

வரப்புயர நீர் உயரும்,
நீர் உயர நெல் உயரும்,
நெல் உயர நாடு உயரும்,
நாடு உயர கோன் உயர்வான்

என்று சொல்லி என் உரையை மீண்டும் தொடர்வதற்கு முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர் செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கள்ளுக் கடைகளைக் கொண்டுவர வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் பேசி இருக்கிறார்கள் இது நேரு வழியில், காந்தி வழியில், காமராஜர் வழியில் வந்திருக்கிற காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கையா என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விஷ்ணுபிரசாத் அவர்கள் பேசுகின்றபோது தன்னுடைய தொகுதியிலே நிறைய பேர் கள்ளச் சாராயம் அதிகமாக விற்கிறார்கள், அதன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வேண்டுகோள் வைத்து, அதற்கு மாற்று வழியாக ஏதாவது செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். முதன்முதலாக அவர் தன்னுடைய கன்னிப் பேச்சைப் பேசுகிறார். ஆதங்கத்தின் அடிப்படையிலே கள்ளுக்கடைகளையாவது திறந்து விடுங்கள் என்று சொன்னார். காங்கிரஸ் கட்சியின் கொள்கை கள்ளுக்



கடைகளைத் திறப்பது அல்ல என்பதை மட்டும் சொல்லி, பூரண மதுவிலக்குதான் காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கை என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பதில் சொல்லிவிட்டார்களே! (குறுக்கீடு) நிறைய பேர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஒரேயொரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் தொகுதியிலே கள்ளச் சாராயம் விற்கிறார்கள் என்பதை அவர் ஒத்துக்கொள்கிறாரா? அப்போது இந்த ஆட்சியில் கள்ளச் சாராயம் ஆறெடுத்து ஓடுகிறதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) வேண்டாம், வேண்டாம். அடுத்தது, தமிழரசு. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர்

**திரு. ம. போளூர் வரதன்:** Deputy Speaker Sir, ஒரு நிமிடம் சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் காவல் துறை மூலமாகத் தொடர்ந்து இரண்டு மாத காலமாக, சென்ற ஆட்சியிலே அதிகமாக கள்ளச்சாராயம் ஓடிக் கொண்டிருப்பதைக் கட்டுப்படுத்துவதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மாவட்டத்தினுடைய கண்காணிப்பாளர் அவர்கள் நேரடியாக ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று, ஆங்காங்கு ஊராட்சி மன்றத் தலைவர்களை வைத்துக்கொண்டு, குழுக்களை எல்லாம் போட்டு, 'திருடனாய் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது' என்பதைப்போல ஒரு கட்டுப்பாட்டை இன்றைக்கு உருவாக்கிக் கொண்டிருப்பதன் மூலமாக பல கிராமங்களிலே இன்றைக்கு அது கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது, ஒன்று.

அப்படிக் கட்டுப்படுத்துகிறபோது, பெரணமல்லூர் தொகுதி உறுப்பினர் நம்முடைய எதிரொலி மணியன் அவர்கள்கூட காலையிலே ஒரு மனுவைக் கொடுத்தார்கள். இப்படி கூட்டத்தைக் கூட்டி பேசிக

கொண்டிருக்கிறபோது, ஒரு கள்ளச்சாராய வியாபாரக்காரன், தனக்கு வியாபாரம் சரியாக நடைபெறவில்லை என்ற கோபத்திலே அந்தச் சாராயத்தை ஊற்றி, அதன்மூலமாக இரண்டுபேர் எரிக்கப்பட்டு, ஆஸ்பத்திரியிலே அவர்கள் இன்றைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக்கூட பழுவாகக் கொடுத்திருக்கிறார்கள் முதலமைச்சரிடத்திலே. எனவே, திருவண்ணாமலை மாவட்டத்திலே இப்போது கள்ளச் சாராயத்தை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கு அரசு மேற்கொண்டு பல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. எனவே, அந்தப் பழைய நிகழ்ச்சியைத்தான் இங்கே சுட்டிக்காட்டினார் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்தது, உறுப்பினர் திரு. தமிழரசு. (குறுக்கீடு) நிறைய பேர் பேச வேண்டியிருக்கிறது. அதனால்தான். (குறுக்கீடு) திரு. தமிழரசு, ஒரு நிமிடம்.

**திரு. ம. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நம்முடைய அண்ணா தி.மு.க.வினுடைய கொறடா அண்ணன் செங்கோட்டையன் அவர்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுவது, விற்பது காங்கிரஸின் கொள்கையா? (குறுக்கீடு) கள்ளுக் கடையைத் திறப்பது காங்கிரஸின் கொள்கையா என்று கேட்டார்கள். இல்லை, கள்ளுக்கடைதான்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சார், அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவேன். நீங்கள் உட்காருங்கள், டைம் ஆகிவிட்டது. வேறு ஏதோ புதிய செய்தி சொல்கிறீர்கள் என்று நான் அனுமதித்துவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் பேசுங்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** கள்ளுக்கடை திறப்பது காங்கிரஸின் கொள்கையா என்று கேட்டார்கள். எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர் அவர்கள்.. (குறுக்கீடு) பேசாதே என்று சொல்வதற்கு யாருக்கும் உரிமை இல்லை. நான் இந்த அவையினுடைய உறுப்பினர், கடந்த காலத்திலே இருந்த சாராயக்கடை, கள்ளுக்கடையைப் பற்றிச் சொன்னால், நன்றாக இருக்காது. அவர் கேட்டதற்கு நான் பதில் சொல்கிறேன். கள்ளுக்கடை திறப்பது காங்கிரஸின் கொள்கை அல்ல, காங்கிரஸ்காரன் கள்ளச்சாராயம் குடிக்க மாட்டான். ஆனால், கடந்த கால ஆட்சியிலே எந்தக் கடை ஓடியது என்று உங்களுக்குத் தெரியும், நாட்டிற்கும் தெரியும். நான் கேட்க விரும்புவது, (மணியடிக்கப்பெற்றது) எங்களுடைய மாவட்ட அமைச்சர் ஒரு கருத்தைச் சொன்னார்.



என்னுடைய தொகுதியிலேகூட கடந்த வாரம் 50–க்கும் மேற்பட்டவர்கள், காய்ச்சுபவர்கள், விற்பவர்கள், நாங்கள் சரண்டர் ஆகிவிடுகிறோம், எங்களைக் காப்பாற்றுங்கள் என்று என்னிடம் வந்திருக்கிறார்கள். அதை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயும், S.P.–யிடத்திலேயும் சொல்லியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர், அப்படி சரண்டர் ஆகக்கூடியவர்களுக்கு அரசு கடனுதவி செய்யும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், உண்மையிலேயே அவர்களுக்கு அக்கறை இருக்குமானால், கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கு முனையுங்கள், முயற்சி செய்யுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை விட்டுவிட்டு காங்கிரஸ்—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்ததாக, திரு. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்கு என்னை வேட்பாளராக அறிவித்த பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் தமிழ்க் குடிதாங்கி, இட ஒதுக்கீட்டு நாயகர், வாழும் பெரியார், மருத்துவர் அய்யா அவர்களுக்கும், இந்தியாவில் புகையிலைப் பயன்பாட்டினைக் கட்டுப்படுத்தி, இந்திய மக்களின் சுகாதாரத்தைப் பேணிக்காத்து, அமெரிக்காவில் உலக புகையிலை கட்டுப்பாட்டு மாநாட்டில் பாராட்டு பெற்ற மாண்புமிகு மத்திய சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களை இந்தச் சட்டப் பேரவையில் வழிநடத்திச் செல்லும் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர், தியாகச் செம்மல், மேட்டூர் சட்டப் பேரவை உறுப்பினர் அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும், தமிழாய்ந்த தமிழன் தலைமையில் ஒரு நல்ல தமிழக அரசு அமைந்திட இந்தத் தமிழரசுக்கு வாக்களியுங்கள் என ஓமலூர் தொகுதிக்கு வருகை தந்து, எனக்கு தேர்தல் பிரச்சாரம் செய்த முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், சேலம் மாவட்டத்தில் உள்ள 11 தொகுதிகளிலும், சேலம் மாவட்டத் தேர்தல் பணிக்குழு தலைமைப் பொறுப்பையேற்று, மிகச் சிறப்பாக இராஜ தந்திரத்தோடு தேர்தல் பணியாற்றி, என்னோடு 10 சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றிக்கு வித்திட்ட மாண்புமிகு வேளாண்மைத் துறையினுடைய அமைச்சரும், சேலத்து சிங்கமுமான அண்ணன் வீரபாண்டியார் அவர்களுக்கும், எனது வெற்றிக்காக, ஓமலூர் வந்து பிரச்சாரம் செய்த திராவிடக் கழகத் தலைவர் அய்யா வீரமணி அவர்களுக்கும், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் பாசமிகு அண்ணன்

கே.வி. தங்கபாலு அவர்களுக்கும், எனது வெற்றிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்து, உணவு, உறக்கமின்றி உழைத்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் முன்னணிப் பொறுப்பாளர்களுக்கும், சுதந்திரம் அடைந்த காலம் முதல் ஓமலூர் தொகுதியில் தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படாத நிலைமையை மாற்றி, தொகுதியைச் சார்ந்த எனக்கு வாக்களித்து, என்னை ஓமலூர் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெறச் செய்த எனது தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதன்முதலில் என்னுடைய கன்னிப் பேச்சை மாமன்றத்தில் தொடங்குகின்றேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11—30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. தமிழரசு:** இன்று, எரிசக்தித் துறை மற்றும் சிறுதொழில்கள் துறை மானியத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் எனது கருத்துகளை இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

*"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்*
*சொல்லிய வண்ணம் செயல்"*

என்றார் வள்ளுவர். அதேபோல், சொல்வதைச் செய்பவர், செய்வதைச் சொல்பவர்தான் நம்முடைய முத்தமிழ் அறிஞர், தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக, வரவு-செலவுத் திட்டத்திலே, அதாவது நிதிநிலை அறிக்கையிலே பக்கம் 44, பத்தி 115—ல் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற, 'விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டதைப்போல, நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம் விரிவுபடுத்தப்படும்' என்று தேர்தல் அறிக்கையிலே சொன்னதை, முதலாவது நிதிநிலை அறிக்கையிலே சொன்னதை, இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருப்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்று, பாராட்டி, நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகள் தனியாருக்குக் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பு நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள் குரல் கொடுத்தார்கள். அனைத்து அரசியல் கட்சிகளும் குரல் கொடுத்தன. தொழிற்சங்கங்கள் போராடின. ஆனால், 'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல்



கொடுப்போம்' என்னும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் நிலையில், உரிமைக்கு உரியவாறு குரல் கொடுத்து, தமிழகத்தில் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் உரிமையை நிலைநாட்டிய பெருமை, முதல்வர் அவர்களுக்கு உண்டு.

தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளைத் தொடங்க முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்படுகிறது. இன்னும் பல்வேறு முன்னுரிமைகள், சலுகைகள் வழங்கப்படுகின்றன. ஆனால், தமிழ்நாட்டின் உயிர்நாடித் தொழிலான, ஆதாரத் தொழிலான, விவசாயிகள் பம்ப்செட் மின் இணைப்புக்கு விண்ணப்பித்தும் 15 ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. இன்றைய நிலையில் டீசல் எஞ்ஜினில் விவசாயம் செய்ய முடியுமா, கட்டுப்படியாகுமா என எண்ணிப் பார்க்கவேண்டும். இதைத்தான் நேற்றைய பொது விவாதத்தில்கூட எங்கள் கட்சியின் மாநிலத் தலைவர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். இது எங்கள் கருத்து மட்டுமல்ல. எல்லாக் கட்சிகளும், எல்லா விவசாயிகளும் சொல்லக்கூடியதுதான். எனவே, எப்படியாவது விவசாயிகளின் பம்ப்செட்டுக்கு, விண்ணப்பித்துள்ள அனைவருக்கும் உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டுமென இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் காற்றாலை மின் உற்பத்திக்கு நல்ல சூழ்நிலை உள்ளது. எனவே, பல்வேறு மாவட்டப் பகுதிகளில், காற்றாலை மின் உற்பத்தியை மேலும் ஊக்குவிக்க, மின் உற்பத்தியைப் பெருக்க, நிறைய பயனாளிகளுக்கு மானியத்துடன்கூடிய கடன் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். நமது மாநிலத்தில் சூரிய ஒளி வெப்பம் கணிசமாக உள்ளது. எனவே, சூரிய ஒளி மின்சாரத்தை நிறைய பயன்படுத்த வாய்ப்பு உள்ளது. எனவே, வீட்டு உபயோக விளக்குகள், தெரு விளக்குகள், எரிவதற்குக் கூடுதலாக வாய்ப்பு அளிக்கலாம். இன்னும் விடுதிகள், மருத்துவமனைகள் போன்ற இடங்களில் குளிப்பதற்கு நீரைச் சூடேற்ற, சூரிய ஒளி மின்சாரத்தைப் பயன்படுத்தலாம். அதற்கு மானியம் வழங்குவதற்கு ஊக்குவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் துப்புரவுக் கழிவுகள், விவசாயக் கழிவுகளிலிருந்து மின் உற்பத்தியைக் கூடுதலாக்கலாம். மின் கசிவு, மின் திருட்டு மூலம் நமக்கு நிறைய மின் இழப்பு ஏற்படுவதாக கணக்கிடப்பட்ட புள்ளி விவரங்கள் கூறுகின்றன. மின் கசிவைத் தடுப்பதற்கும், மின் திருட்டைத் தடுத்து நிறுத்துவதற்கும் விரைவான நடவடிக்கை தேவை. அக்கறை செலுத்தாத,

துணை போகும் அலுவலர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்த மன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

*முற்பகல் 11—35*

மின்சார வாரியத்தில் நீண்ட காலமாக ஒப்பந்த அடிப்படையில் குறைந்த அளவு சம்பளத்தில் பணியாற்றி வரும் தொழிலாளர்கள் அனைவரையும் நிரந்தரப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கீழ்மேட்டூர் நீர் மின் திட்டம், கதவணை—I, போல்நாயக்கன்பட்டி—I—ல் நிலம் கொடுத்தவர்களுக்கு வேலை கொடுக்க நேர்முகத் தேர்வுகூட நடத்தப்பட்டு, பல வருடங்களாக இன்னும் வேலைவாய்ப்பு அளிக்கப்படவில்லை. இதற்கான கோரிக்கைகளும், பெயர்ப் பட்டியலும் மாண்புமிகு அமைச்சர் ஆற்காட்டார் அவர்களிடம் தலைவர் அவர்கள் கொடுத்துள்ளார்கள். இதைக் கனிவோடு நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோல், அப்பகுதியில் கதவணை I—ல் போல்நாயக்கன்பட்டி ஊராட்சிப் பகுதியில் நீரைத் தேக்க தடுப்புச் சுவர் கட்டுவதாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் பழைய அளவுக்குமேல் கூடுதலாகத் தண்ணீர் தேக்குவதாலும், தடுப்புச் சுவர் கட்டப்படாததாலும், மேலும் பல பேர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, அதை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து பரிசீலனை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு உள்ள பனை பொருட்களுக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது. தென் மாவட்டங்களிலும், வட மாவட்டங்களிலும், பனை மரங்கள் அதிகமாக உள்ளன. பனை ஓலையிலிருந்து செய்யப்படும் பை, கூடை, பொம்மைகள் போன்றவற்றை உற்பத்திச் செய்து ஏற்றுமதி செய்திட முன் வருவோருக்கு பயிற்சி அளித்து, தொழிலில் ஈடுபட ஊக்கம் அளிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். தென்னை நார் கயிறு, கற்றாழை நார் கயிறு போன்ற கயிறு உற்பத்தி, சில இடங்களில் மட்டுமே உள்ளன. இதுவும் பரவலாக்கப்பட்டு, நிறைய பேர்களுக்கு பயிற்சி அளித்து, கயிறு உற்பத்தி செய்து ஏற்றுமதிக்கு வழிவகை செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில்கள் மேலும் மேலும் நலிவடைந்து விடாமல் பாதுகாக்க வேண்டும். பன்னாட்டு நிறுவனங்களும், பெரும தொழில் நிறுவனங்களும், சிறு சிறு பொருட்களையெல்லாம் உற்பத்தி செய்து,



சந்தை விலைக்கு வருகிற சூழ்நிலையில், சிறு தொழில் நிறுவனங்கள் நெருக்கடிக்கு உள்ளாகின்றன. எனவே, சிறு தொழில் முனைவோர்களை அழைத்துப் பேசி, அவர்களது சங்கடங்களைத் தீர்த்து, சிறு தொழில் வளர்ச்சிக்கு ஊக்குவிக்க வேண்டுமென இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இன்று சிறு தொழில்கள் வளர்ச்சி தமிழ்நாட்டுக்கு பெரிதும் தேவையாக உள்ளது. காரணம், படித்துவிட்டு வேலையில்லாதோர் தமிழகத்திலே 57 இலட்சம் பேருக்கு மேல் உள்ளனர். எனவே, சிறு தொழில்கள் வளர்ச்சியினால் வேலைவாய்ப்பை உருவாக்க முடியும். உற்பத்தியைப் பெருக்க முடியும். விற்பனை மற்றும் ஏற்றுமதியைக் கூடுதலாக்கி, வாங்கும் சக்தியை அதிகரிக்கச் செய்து, வறுமையைப் போக்கலாம். சிறு தொழில்கள் ஊக்குவிக்கப்படவேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு, ஆங்காங்கே தொழிற்சாலைகளை உருவாக்கலாம். அந்த அடிப்படையில் ஒரு தொகுதியில் குறைந்தபட்சம் 500, 1,000 பேருக்கு வேலை கிடைக்கின்ற வகையில், தொகுதிக்கு ஒரு தொழிற்சாலை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது ஓமலூர் தொகுதி, தொழிற்சாலை இல்லாத ஒரு தொகுதியாக இருந்து வருகிறது. இங்கே அதிக அளவில், தினமும் டன் கணக்கில் பூக்கள், மரிக்கொழுந்து, மல்லி போன்றவை உற்பத்தியாகி பெங்களூருக்குச் செல்கின்றன. எனவே, அவற்றைப் பயன்படுத்தி ஒரு செண்ட் தொழிற்சாலை அங்கே அமைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதை அமைச்சர் அவர்களும், முதல்வர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் அருள்கூர்ந்து செய்து கொடுக்க வேண்டுமென இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதேபோல, கரும்பு உற்பத்தி, அங்கு மிக அதிகமாக இருக்கிறது. கரும்பு உற்பத்தி அதிகம் இருக்கின்ற காரணத்தாலே, சர்க்கரை ஆலை அமைப்பதற்கான அதிக நிலம் அங்கே இருக்கிறது; வாய்ப்பு இருக்கிறது. அதையும் ஓமலூர் தொகுதி நலன் கருதி அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான சின்ன அய்யா என்று அழைக்கப்படும் அன்புமணி அய்யா அவர்கள் பெரும் முயற்சியினால் சேலம் அரசு மருத்துவமனை மேம்பாட்டிற்காக Super speciality மருத்துவமனையாக, அந்த மருத்துவமனையை மேம்பாடு செய்ய.

மத்திய அரசு நிதியிலிருந்து ரூ.120 கோடியை அங்கே ஒதுக்கி இருக்கிறார்கள். அதற்காக இந்த நேரத்திலே மாவட்டத்தின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மருத்துவமனை மேம்பாடு அடைவதற்கு அங்கு போதிய இடம் சற்று.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி.

**திரு. அ. தமிழரசு:** குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே, அந்த இடத்திற்கு எதிரே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அங்கு மாற்றப்படுவதாக அறிகிறேன். எனவே, அந்த இடத்தை மேலும் மேம்படுத்துவதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை—தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் பங்களாவாக இருக்கின்ற 37 ஏக்கர், அந்த நிலத்திலே அதை மாற்றி அமைப்பதற்கான நல்ல சூழல் இருக்கிறது. எனவே, நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், முதல்வர் அவர்களும் அதை அருள்கூர்ந்து பரிசீலனை செய்து, அந்த 120 கோடி ரூபாயையும் நல்ல முறையில் பயன்படுத்துகின்ற வகையிலே, அந்த மாவட்ட மக்கள் எல்லாம் பயன்படுகின்ற வகையிலே அந்த மருத்துவமனையை அமைத்துக் கொடுக்க வேண்டுமென இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் 17 இலட்சத்து 68 ஆயிரத்து 52 விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், அதிலே 5 இலட்சத்து 40 ஆயிரம் பேர் இருப்பதாகவும் சொல்லியுள்ளார்கள்...
(மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11—40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தமிழரசு, சீக்கிரம் பேச்சை முடித்து விடுங்கள்.

**திரு. அ. தமிழரசு:** பேச்சை முடித்து விடுகிறேன். இங்கே ஏற்கெனவே இருக்கின்ற உறுப்பினர்கள் சொன்னதைப்போல், நமது அரசு 40,000 மின் இணைப்புகளுக்கு இலக்கு வைத்துள்ளார்கள். எனவே, இம்மின் இணைப்பு வழங்குவதற்கு—விரைவாக அனைத்து விவசாயிகளுக்கும் மின் இணைப்பு வழங்க உதவி செய்ய வேண்டுமென இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தைத் தவிர, வீடு, சிறு, பெரு தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்களுக்கெல்லாம் விண்ணப்பித்த உடனே மின் இணைப்பு கிடைக்கிறது. விவசாயிகளுக்கு உடனே மின் இணைப்பு கிடைக்கிற வகையிலே மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென இங்கு நான்



கேட்டுக்கொள்கிறேன். அண்டை மாநிலமான கர்நாடகத்திலேகூட 90 நாட்களிலே மின் இணைப்பு வழங்கப்படுகிறது. 31—3—2006—ல் மின்சார உற்பத்தி 10,011 மெகாவாட். இதில் நீர் மின் சக்தி 2,137 மெகாவாட், அனல் மின் சக்தி 2,970 மெகாவாட், இயற்கை எரிவாயு மின் சக்தி 420 மெகாவாட், காற்றாலை மின் சக்தி 2,879 மெகாவாட், மைய அரசு நிறுவனம் வழங்கும் மின் உற்பத்தி 2,841 மெகாவாட், பயோ மாஸ் மின் உற்பத்தி 3,208 மெகாவாட், சோலார் – சூரிய ஒளி 185 மெகாவாட், இதர வகைகள் 360 மெகாவாட். தோராயமாக சுமார் 8,000 மெகாவாட் விற்பனை செய்யப்படுகிறது. மீதமுள்ள 2,000 மெகாவாட் திருடு போகிறது. இதைத் தடுத்தாலே, விவசாயிகளுக்கு, அந்த மின் இணைப்பை வழங்குவதற்கு நமது அரசு முடியுமென்று இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

தொழில் துறையை ஊக்குவிக்கும் வகையில் கடந்த 1996—2001 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக் காலத்திலே புதிய தொழிற்சாலைகளுக்குக் கொடுத்த அந்த சதவிகிதத்தின் அடிப்படையிலே மின் இணைப்பு சலுகை இந்த அரசு கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சிப் பகுதிகளிலே தெரு விளக்கிற்காக, ஊராட்சி நிர்வாகத்திற்குப் பயன்படும் மின்சாரத்திற்கு ஊராட்சி மின்சாரத் துறைக்குச் செலுத்த வேண்டிய மின் கட்டண தொகை அரசு ஊராட்சி அடிப்படை வசதிக்காக வழங்கப்படும் 12 வது நிதிக் குழு, மானிய நிதிக் குழு தொகை முழுவதும் மின் கட்டணத்திற்காகவே அங்கு வரவு வைக்கப்படுகிறது. எனவே, அந்த அடிப்படை வசதிகளை ஊராட்சி செய்து கொள்வதற்கு முடியாத ஒரு நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. எனது ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்திலே 53 இலட்சம் ரூபாய் மின் கட்டண நிலுவை இருந்திருக்கிறது. அதிலே 12—வது நிதிக்குழு மானியத் தொகை 23 இலட்சம் போக, மீதி நிலுவைத் தொகை 30 இலட்சம் ரூபாய்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்து விடுகிறீர்களா?

**திரு. அ. தமிழரசு:** இப்படி அந்த நிலுவைத் தொகை இருப்பதால், மின் கட்டணத்தை செலுத்த முடியாத நிலை அந்த ஊராட்சிக்கு இருக்கிறது. இப்போது நான் எனது தொகுதியிலுள்ள ஒருசில பிரச்சினைகளை இங்கு கோரிக்கையாக இந்த மாமன்றம் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியிலே நீண்டகாலப் பிரச்சினை, வருகின்ற மழை நீரைத் தேக்குகின்ற வகையிலே அங்கே குறுக்கே ஒரு சிறு அணை கட்டப்பட வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அங்கு தொப்பையாறு நீர்த்தேக்கம் என்ற ஒரு நீர்த்தேக்கம் இருக்கிறது. அதிலே கால்வாய் ஒன்று அமைத்துக் கொடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமான அந்தப் பகுதியிலே நீதிமன்ற வளாகம் மேட்டூரிலே செயல்பட்டு வருகிறது. அந்த நீதிமன்ற வளாகம் சிவில் வழக்குகள், ஓமலூரிலே நடைபெறுகின்ற வகையிலே நீதிமன்றத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஓமலூரிலே இல்லாத நிலை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. அ. தமிழரசு:** அதையும் அங்கே அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தமிழரசு, ஓரே வரியில் முடித்து விடுங்கள். மற்ற எல்லாவற்றையும் எழுதிக் கொடுத்து விடலாம் அமைச்சரிடத்திலே.

**திரு. அ. தமிழரசு:** முடித்து விடுகிறேன். உள்ளாட்சி நிருவாகத்திலே ஊராட்சி மன்றத் தலைவர்கள் பல்வேறு நிதிகளை செலுத்த முடியாத ஒரு நிலைக்கு கடந்த காலத்திலே, கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே அப்போதைய முதல்வர் அவர்களுடைய பிறந்த நாளுக்காக ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்திலே விளம்பரம் செய்திருக்கிறார்கள். இதைப்போன்று அந்த ஊராட்சி நிதிகள் வீணடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. போதிய மின் இணைப்புக்கு கட்டுவதற்கு பணம் இல்லாமலும் மற்ற, மற்ற தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ள முடியாத நிலை இருக்கிறது. எனவே, அந்த ஊராட்சி மன்றப் பணிகளைச் செய்து கொள்வதற்காக, ஊராட்சி மன்றத் தலைவர்கள் முறைகேட்டையும், அந்த ஊராட்சி மன்றத்தினுடைய முறைகேட்டையும் நீங்கள் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11—45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

***திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எரிசக்தி மற்றும் சிறுதொழில்கள் துறை



மானியத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கக்கூடிய நல்ல விஷயங்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறோம்.

மரபுசாரா எரிசக்தி மானியக் கோரிக்கையின் மீது நடைபெறும் விவாதத்தில் பங்கேற்கும் நேரத்தில் தமிழகத்தின் மின் தேவைக்கு உதவிடும் வகையில் இத்துறையைப் பயன்படுத்த மேலும் நடவடிக்கைகளை எடுப்பதோடு அனல் மின் உற்பத்தி, அணு மின்சக்தி ஆகியவற்றில் எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் கூடுதலான கவனம் செலுத்த வேண்டுகிறேன்.

ஏற்கெனவே இந்த அரசால் அறிவிக்கப்பட்டுள்ள வட சென்னை மற்றும் மேட்டூரில் தலா 500 மெகாவாட்டிற்கான திட்டங்களோடு, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் உள்ள வசதிகளைப் பயன்படுத்தி ஆயிரம் மெகாவாட் அனல் மின் உற்பத்திக்கும், மேலும் மத்திய அரசின் கீழுள்ள கூடங்குளம் அணு மின்சக்தி உற்பத்தி முதற் கட்டத்தை மார்ச் 2007—ல் பூர்த்தி பெறவும், இரண்டாம் கட்டம் மார்ச் 2008—ல் நிறைவுபெறவும் கவனம் செலுத்த வலியுறுத்துகிறேன். மேலும் ஜெயங்கொண்டம் மற்றும் செய்யூர் அனல் மின் திட்டங்கள் குறித்து அரசின் முடிவினைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மேலும், 21,688 Helper-கள் 6,000-க்கும் மேற்பட்ட Wireman பணியிடங்கள் இன்னும் காலியாக உள்ளன. இந்த காலிப் பணியிடப் பொறுப்புகளை ஒப்பந்தத் தொழிலாளர்களே தற்போது செய்து வருகின்றனர். மேற்சொன்ன ஒப்பந்தத் தொழிலாளர்களை வைத்து இக்காலியிடங்களை நிரந்தரமாக நிரப்ப வேண்டும். இதேபோன்று மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பகுதிநேர பெண் ஊழியர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் குறித்து 14—10—1998—ல் வாரியம் வெளியிட்டுள்ள ஆணையினை நிறைவேற்ற வேண்டுகிறேன்.

மேலும், மரபுசாரா எரிசக்திப் பகுதியில் பிரதானமான பங்கு காற்றாலைக்கு உண்டு. ஆசியாவிலேயே காற்றாலை மூலம் அதிக அளவு மின் உற்பத்தி செய்கின்ற மாநிலம் தமிழ்நாடு என்கின்ற பெருமையை நாம் பெற்றுள்ளோம். பெருமளவு காற்றாலைகள் நெல்லை, குமரி மாவட்டங்களில் அமைந்துள்ளன. இப்பெருமையை ஈட்டித் தந்த 110 ஒப்பந்தத் தொழிலாளர்கள் கடந்த 15 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகின்றனர். இவர்களைப் பணி நிரந்தரம் செய்திட பணிவோடு வேண்டுகிறேன்.

227416
சென்னை-600 008

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரி கொண்டு வரும் பணியினை செய்து வருகிறது. இதற்கான செலவை மின்சார வாரியமே கொடுத்து வருகிறது. கொள்கை முடிவுகளில் பூம்புகார் நிறுவனமும் மின் வாரியமும் சேர்ந்து செயல்படுவதால் சில விஷயங்களில் கால விரயம் ஏற்படுகிறது. இதைத் தவிர்த்து செலவுகளைக் குறைக்க பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தை மின் வாரியத்துடன் இணைக்கக் கேட்டுக்கொள்கிறேன். இதில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களையும் நிரந்தரப்படுத்திட வேண்டுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டத்தில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க அனுமதி கடந்த ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டது. தற்போது அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அறிகிறோம். புதிய அரசு அதை உடனடியாக இந்த நிதி ஆண்டிலேயே செயல்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

மாவட்டத்தின் பல பகுதிகளில் மின் அழுத்தக் குறைவு இருந்து வருவதால் அதை சீர்படுத்திட நடைக்காவு, தொழிக்கோடு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி. பேசுங்கள்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** சேரமங்கலம் போன்ற இடங்களில் புதிய துணை மின் நிலையங்கள் அமைத்திட அனுமதி கோரப்பட்டு அனுமதியும் முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு அந்த அனுமதி இரத்து செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இது சரியான நடவடிக்கை அல்ல. மேற்படி துணை மின் நிலையங்களுக்கான அனுமதியை மீண்டும் வழங்கி அவற்றை அமலாக்குமாறு பணிவாய் வேண்டுகிறேன்.

திருவட்டாறு மற்றும் விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட மருதங்கோடு மற்றும் முஞ்சிறை sub-station-களில் 10 கிலோவாட் ஒற்றைச் சுற்று மின்பாதை மட்டுமே உள்ளது. இதனால் அடிக்கடி மின் தடை ஏற்படுகின்றபோது மாற்று ஏற்பாடுகள் செய்து மின்சாரம் வழங்குவதற்கு வாய்ப்புகள் இல்லாத நிலைமை உள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் அடிக்கடி மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். எனவே, இரட்டைச் சுற்று மின்பாதை அமைத்து மக்களுடைய சிரமங்களைக் களைய உரிய நடவடிக்கை எடுத்திட



பணிவாய் வேண்டுகிறேன். மேற்படி துணை மின் நிலைங்களுக்கான அனுமதியை மீண்டும் வழங்கி அவற்றை அமலாக்குமாறு பணிவாய் வேண்டுகிறேன்.

முற்பகல் 11—50

பழமை வாய்ந்த கோதையாறு நீர்மின் உற்பத்தி நிலையம் அருகில், மேலும் 60 மெகா வாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட புதிய மின் நிலையம் அமைப்பதற்கான ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு ஆய்வறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அதைத் தமிழக அரசு விரைந்து செயல்படுத்திட வேண்டுகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியம், நெல்லை நீர்மின் உற்பத்தி வட்டத்திற்குட்பட்ட கோதையாறு கோட்டத்தில் வெள்ளச்சித்தோடு என்ற இடத்தில் அதிகமாக மழை வெள்ளம் வருவதைப் பயன்படுத்தும் வகையில் தமிழ்நாட்டின் மின் தேவையைக் கணக்கில் கொண்டு ஒரு அணைக்கட்டு கட்டி சுமார் 20 மெகா வாட் மின்திறன் கொண்ட ஒரு மின் நிலையம் அமைக்க வாய்ப்புள்ளது. நிறைவேற்றித் தர பணிவாய் வேண்டுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு சட்டப் பேரவைத் தொகுதியில் உள்ள மலைப் பகுதிகளான மணலோடை, வில்லுசாரி, புறாவிளை, காயக்கரை, கிள்ளிக்கோணம், கோரக்குழி, ஆலம்பாறை, வலியமலை, படுபாறை, தோட்டமலை, தச்சமலை போன்ற இடங்களில் வசிக்கும் ஆதிதிராவிட, பழங்குடியின மக்களுக்கு இந்நாள்வரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வந்து ஆய்வு நடத்துகின்ற நேரத்திலும் இதை எடுத்துக் கூறினேன். அன்றைக்கு அவரோடு வருகை தந்திருந்த அதிகாரிகள், மதிப்பீடு தயாரித்தளித்தால் மின்சாரம் வழங்க தனிக் கவனம் செலுத்தப்படும் என எடுத்துக் கூறினார்கள். எனவே, தமிழக அரசு இதில் சிறப்புக் கவனம் செலுத்த, மாண்புமிகு முதல்வர் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்தில் பழங்குடியின மக்கள் வாழும் பகுதியான கொடைக்கரை, அலைக்கட்டு மலைக் கிராமங்களுக்கு கடந்த 6 மாதங்களாக மின்சாரம் இல்லாமல் உள்ளது. சுமார் 400-க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு மின்சாரம் இல்லாததால் உடனடியாக இணைப்பு அளித்திட வேண்டும்.

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மலைப் பகுதிகளில் மழை, இடிகளினால் அடிக்கடி transformer-கள் பழுதடைந்துள்ளன. எனவே, சுமார் 100 transformer–களை இரு மாவட்டங்களுக்கும் வழங்கிட வேண்டுகிறேன்.

இதேபோன்று, தமிழகத்தினுடைய பல பகுதிகளில் வசிக்கும் ஆதிதிராவிட பழங்குடியின மக்களுக்கு மின்சாரம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். மலைப் பகுதிகளிலும், கடலோரப் பகுதிகளிலும் அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படுவதனால் கேரள மாநிலத்தைப் போன்று A.B.E. cable மூலம் அல்லது பூமியின் அடிப்பகுதி வழியாக கேபிள் பதித்து மின்சாரம் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வர அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டுகிறேன்.

குடியிருப்புகளுக்கும், வீடுகள் கட்டுவதற்கும் பாதிப்பாகச் செல்லும் 15 கிலோ வாட் மின் கம்பிகளையும் சாலைகளுக்கு இடையூறாக நிறுத்தும் மின் கம்பங்களையும் மின்சார வாரியத்தின் செலவிலேயே உடனுக்குடன் மாற்றியமைக்க வேண்டுகிறேன். மனுக்கள் கொடுத்து பல மாதங்கள் ஆனாலும் மின்சார வாரியம் இவற்றைக் கண்டுகொள்வதில்லை என்பதை இந்த அவையில் பதிய வைக்க விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கும், நெசவுத் தறிக்கும் அளிக்கும் இலவச மின்சாரத்தை வரவேற்கிறோம். அதே வேளையில், அரசு தொகுப்பு வீடுகளுக்கும் ஒரு விளக்கு மின்வசதி இலவசமாக வழங்க வேண்டுகிறேன். 50 ஆண்டுகளாக மின்சாரத்திற்காக ஏங்கும் பேச்சிப்பாறை அருகே வலியஏலா பகுதி மக்களுக்கு மின்சாரம் வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகிறேன்.

குமரி மாவட்டத்தில் வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கும்போது ஒரு சொத்தின் உரிமையாளர் ஆட்சேபம் தெரிவித்தால் வேறு வழியில் இணைப்பு கொடுக்க வேண்டியுள்ளது. இதுபோன்ற நிகழ்வுகளில், குறுக்கு வழி, நெடு வழி என்ற முறை மின்சார வாரியத்தால் கையாளப்படுகின்றது. நெடு வழியாக இருந்தால் இணைப்பு பெறுபவர்தான் மொத்தச் செலவினைச் செய்ய வேண்டுமென்ற நடைமுறை உள்ளது. இதை மாற்றியமைக்க வேண்டுகிறேன்.

மின்சார வாரியத்தின் அஜாக்கிரதையால் மின்சாரம் தாக்கி உயிரிழப்பு ஏற்படும்பொழுது, அக்குடும்பத்திற்கு உரிய இழப்பீட்டை அரசு வழங்க வேண்டும். 13–7–2006 அன்று குழித்துறையை அடுத்த ஈத்தவிளை...(மணியடிக்கப்பெற்றது)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** ஈத்தவிளை என்ற ஊரில் மின்னோட்டமுள்ள மின் கம்பி அறுந்து விழுந்ததில் அதே ஊரைச் சேர்ந்த சுமதி என்ற பெண்மணி இறந்துபோனார். மிகவும் ஏழ்மையில் இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு நிதியுதவி வழங்க வேண்டுகிறேன்.

சிறு தொழில்கள் எந்த அளவிற்கு வளர்க்கப்படுமோ அந்த அளவிற்கு நாட்டின் வளர்ச்சியில் அபிவிருத்தி ஏற்படுத்த முடியும். அதிக வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதோடு பொருளாதார வளர்ச்சியையும் ஏற்படுத்த முடியும். இன்று உலகமயம், தனியார்மயம் தாராளமயத்தால் இத்தகைய சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளதைக் கவனப்படுத்த விரும்புகிறேன். சிறு தொழில்களை உருவாக்கினால், அடிமட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்க முடியும். சிறு தொழில் துறையை வளர்க்கவும் தேவையான நிபுணர்களுடைய ஆலோசனைகளையும், உதவிகளையும் ஏற்படுத்த அரசு முன்வர வேண்டும்.

புதிய விஞ்ஞான வளர்ச்சியை ஏற்படுத்த தொழிலில் சந்தைப் பொருளாதாரத்தில் போட்டி போட வேண்டும் என்பதற்கு. தரமான பொருட்களை உற்பத்தி செய்ய விஞ்ஞான ரீதியில் புதிய விவாங்களும் வாய்ப்புகளும் உருவாக்கிக் கொடுப்பது மிக அவசியம். சென்ற காலத்தில் இருந்ததைவிட, மிக அதிகமான வளர்ச்சியை ஏற்படுத்த அரசு முன்வர வேண்டும். சிறு தொழில்களுக்குத் தேவையான பொருளாதார வசதிகளுக்கு, வங்கிகள் நிதியுதவி செய்ய வேண்டும். பல சட்டப்பூர்வமான உதவிகள் செய்ய விதிகளைத் தளர்த்த வேண்டும்.

முற்பகல் 11–55

சிறு தொழில்கள் உற்பத்திப் பொருட்களை விற்கச் செய்ய சந்தை வசதியை அரசே உருவாக்கிக் கொடுக்க வேண்டும். மகளிர் சுய உதவிக் குழுக்களும் சிறு தொழிலில் ஈடுபடுகின்றன. அவர்கள் செய்த உற்பத்திப் பொருட்களை அரசே கொள்முதல் செய்து, வேறு மாநிலங்களுக்கு விற்க சந்தையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். மேலும், சிறு தொழில்களுக்கு இந்த பட்ஜெட்டில் 11 கோடி ரூபாய் subsidy வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது சிறு தொழில்களுக்குச் சென்றடைய போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

கன்னியாகுமரியில் கனரக இரப்பர் நிறுவ கோரிக்கை வைப்பதைப் போன்று, சிறு தொழில் செய்வதற்கான வாய்ப்புகளும் உள்ளன. 1981-ல் பதிவு செய்யப்பட்டு செயல் இழந்த ஆனால் தற்பொழுது ஆய்வு மேற்கொண்டுள்ள, வலியாற்றுமுகம் அருகில் புல்லத்தூர் இரப்பர் தொழில் கூட்டுறவுச் சங்கத்தை மீண்டும் செயல்படுத்தினால், குமரி மாவட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கலாம் என்பதை இந்த அவையில் பதிய வைக்க விரும்புகிறேன். மேலும் கயிறு பனை ஓலைப் பொருட்கள், தோவாளை மலர்கள் போன்ற உற்பத்திப் பொருட்களை பயன்படுத்தி, சிறு தொழில்கள் உருவாக்கலாம். சுய உதவிக் குழுக்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி லீமா றோஸ். என்ன நிறைய வைத்திருக்கிறீர்களா?

**திருமதி ரா. லீமா றோஸ்:** சுய உதவிக் குழுப் பெண்களுக்கு மீன் பதப்படுத்தும் தொழில்களில் பயிற்சி கொடுத்து, நிதி அளித்து ஊக்கப்படுத்த வேண்டும். இளநீரை பாட்டில்களில் அடைத்து விற்பதற்கான வாய்ப்பினை உருவாக்கி, சிறு தொழிலை உருவாக்கலாம்.

கையினால் செய்யும் தீப்பெட்டி உற்பத்திக்கான மூலப் பொருட்களின் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. இயந்திர தீப்பெட்டியோடு போட்டியிட முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளது. கை தீப்பெட்டி உற்பத்திக்கான மூலப் பொருட்களை அரசே கொள்முதல் செய்து விற்பனை செய்திட வேண்டும். நிப்பு தொழிலகளுக்குத் தேவையான தகடுகளை, அரசிடம் நேரடியாகக் கொள்முதல் செய்து, தொழில்கள் நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். கேரளாவில் உள்ளதுபோல பள்ளி, கல்லூரி, காவல் நிலையம், நீதிமன்றம் போன்ற அரசு நிறுவனங்களில் நிப்பு பேனாக்களைப் பயன்படுத்திட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

டின் தொழில். மின்சாரத்தின் உதவியின்றி உற்பத்தி செய்யப்படும் டின்களுக்கு 16 சதம் கலால் வரி என்று மத்திய அரசு நடப்பு பட்ஜெட்டில் அறிவித்துள்ளது. இதனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்படும். எனவே மத்திய அரசு ஏற்கெனவே இருந்ததுபோல், கலால் வரியிலிருந்து வரி விலக்கு அளித்து, அந்தத் தொழிலையும், தொழிலாளர்களையும் பாதுகாக்க வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்திட வேண்டுமென பணிவாய் வேண்டுகிறேன்.



அரசு கொள்முதல் செய்ததில் கைத்தறி சொசைட்டிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை வழங்க வேண்டும். கைத்தறி சொசைட்டிக்கு வழங்கும் கடன்களுக்கு 9 சதவிகிதமாக உள்ள வட்டியை 7 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும். அதேபோன்று நலிவடையக் கூடிய பீடித் தொழிலின் அவல நிலையை அகற்றிட அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டும். அதேபோன்று...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் ஊரிலே பீடித் தொழிற்சாலை இருக்கிறதாம்மா?

**திருமதி ரா. லீமா றோஸ்:** Gauze Bandage போன்ற தொழில்களிலும் அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டும். காஞ்சிபுரம பட்டுச் சேலைகளுக்குப் பயன்படுத்தும் தூய சரிகைக்கு முழு விற்பனை வரி விலக்கு அளிக்க வேண்டுகிறேன்.

அதைப்போன்று, பெண்கள் கூடுதலாகச் செய்யும் சிறு தொழில்களான ஊதுவத்தி சாம்பிராணி, மாவு, வெல்லம், வறுகடலை ஆகியவைகளுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டுகிறேன். தொழிற்சாலைகள் எதுவுமில்லாத மிகவும் பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்தில், அரூர் தொகுதியில் SIDCO தொழிற்பேட்டை அமைத்திட 28–7–2006 அன்று சுமார் 1,000 ஏக்கர் நிலத்தைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் அரூரில் SIDCO தொழிற்பேட்டை அமைத்திட அறிவிக்க வேண்டுகிறோம். பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்க முடியும். என்னுடைய தொகுதியிலே உள்ள ஒருசில விஷயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, அமைச்சர் 1½ மணி நேரம் பேச வேண்டி இருக்கிறதம்மா.

**திருமதி ரா. லீமா றோஸ்:** ஒரு நிமிடம். ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** அருவிக்கரை அணைக்கரைப் பாலம், பாரதப்பள்ளி திக்குறிச்சி வள்ளக்கடவு பாலம், வெள்ளாங்கோடு இணைப்புப் பாலம் இந்த 3 பாலங்களையும் இந்த நடப்பு ஆண்டிலேயே செய்து தர தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று,

போக்குவரத்து நெரிசலைக் களைய அருமனையில் பேருந்து நிலையம் அமைத்துத் தரவும் வேண்டுகிறேன். எனவே, மிகப் பெரும் சேவைத் துறையான மின்சாரத் துறை மற்றும் அதிக மக்கள் பயன்படுத்தும் சிறு தொழில் துறை மானியக் கோரிக்கையிலும் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்ததாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி அவர்கள்.

**திரு. தி. இராமசாமி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தைப் பொறுத்தவரை, சிறு குறு தொழில்கள் சுமார் 10 இலட்சத்திற்கு அதிகமாக இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. விவசாயத்திற்கு அடுத்தபடியாக தமிழக மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துக் கொண்டிருக்கக் கூடிய தொழில் சிறுகுறு தொழில்கள் ஆகும். கிட்டத்தட்ட 5 இலட்சத்து 30 ஆயிரம் தொழில்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. சிறுதொழில்கள் 95 சதவீதம் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன என்பதில்–86 சதவீதம் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துக்கொண்டிருக்கிறது.

நண்பகல் 12–00

நமது தமிழக அரசைப் பொறுத்தவரை சிறு, குறுந்தொழில்களை மேம்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டு இருப்பது வரவேற்கத் தகுந்த முக்கியமான அம்சம். அதோடு குறிப்பாக நுழைவு வரி இன்றைக்கு இரத்து செய்யப்பட்டிருப்பது வரவேற்கவேண்டிய விஷயம். ஆனால், அதேசமயத்தில் குறுந்தொழில்களுக்கு மின்சாரம் 10 H.P.–யிலிருந்து 25 H.P.–ஆக சலுகை விலையில் கிடைப்பதற்கு நமது அரசு முயற்சி எடுக்க வேண்டும். இப்போது குறுந்தொழில்களுக்கு 1 H.P. ஒரு ரூபாய் 20 பைசாவுக்கு வழங்கப்படுகிறது. ஆனால், 10 H.P.–க்கு அதிகமாக அது வழங்கப்படவில்லை. 25 H.P. குறுந்தொழில்களுக்கு வழங்கவேண்டும் என்ற அந்தக் கோரிக்கை இருக்கிறது. அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற முறையில் அந்த 25 H.P.–ஆக சிறு தொழில்களுக்குச் சலுகை விலையில் மின்சாரம் கிடைப்பதற்கு அனுமதிக்க வேண்டும்.

இப்பொழுது தமிழகத்தில் சிட்கோ, சிப்காட் தொழிற்கூடங்கள் பல இடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. அது இயங்குவதில் சில குறைபாடுகள் இருப்பதாக எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். அந்த சிட்கோ, சிப்காட் தொழில் கூடங்களில் தொழில்



தொடங்க வருபவர்களுக்குக் கடன் வசதி மற்ற சலுகைகள் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக, அந்தத் தொழிற்கூடங்களில் 30 சதவீத இட ஒதுக்கீடை குறுந்தொழில்கள் நடத்துவதற்காக வழங்கப்பட வேண்டும். அதோடு தொழில்கள் நிறைந்த பகுதிகளில், அரசு நிலங்களில் இன்றைக்கு மானிய விலையில் குறுந்தொழில் கூடங்கள் கட்டித் தர வேண்டும்.

இன்றைக்கு விவசாயத் துறைக்குக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டதுபோல, அந்தக் குறுந்தொழில் கடனுக்கு வட்டி, கூட்டு வட்டி தள்ளுபடி செய்து ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் அசலை மட்டும் வசூலிப்பதற்கான ஒரு சலுகை வழங்கப்பட வேண்டும். தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி இன்றைக்கு 5 தொழில் முனைவோருக்குக் கடன் வழங்குகின்ற முறை சென்னையில் மட்டும் இருக்கிறது, அது தமிழகம் முழுவதும் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

இன்றைக்கு சென்னை நகரில் இருப்பவர்கள் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களில் இருக்கின்ற பெரும்பாலானவர்களுக்கு அது வெளியிலே இன்னும் தெரியவில்லை. எனவே, அதிலே நிபந்தனைகளைத் தளர்த்தி ஒருவருக்கொருவர் ஜாமீன் கொடுத்தால் ஒரு நபருக்கு 25,000 என்று இருக்கின்ற, அந்தக் கடன் பெறுகின்ற முறையை தமிழ்நாடு முழுவதும் விஸ்தரிப்பதற்கான முயற்சியை இந்த அறிக்கையில் கொண்டு வரவேண்டும்.

அதேபோல, மத்திய அரசு குறுந்தொழில்களுக்கு I.S.O. முத்திரை பெற வேண்டும் என்ற ஒரு நிபந்தனை வைத்திருக்கிறது. அது ஒரு நல்ல நிபந்தனை. பொருட்களை நல்ல தரமான முறையில் மக்களுக்கு வழங்குவதற்கு ஒரு நல்ல நிபந்தனைதான். ஆனால், ஆண்டுக்காண்டு அந்த I.S.O. பெறுவதில் பல்வேறு விதமான சிரமங்கள் அந்த சிறு தொழில், குறுந்தொழில்களுக்கு இருக்கின்றன. அது சம்பந்தமாக, ஓர் ஆய்வு மேற்கொண்டு, எளிய முறையில் அந்த I.S.O. பெறுவதற்கான வழிவகைகளை—பெரும் செலவு ஏற்படுகிறது இப்போது, அதைக் குறைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதேபோல, நமது அரசு ஒரு தொழில் கொள்கையை அறிவித்திருக்கிறது. அதாவது தொழில் கொள்கையில் சர்வதேச தரத்திற்குப் போட்டியிடுகின்ற அளவு, விலை குறைவாக ஏற்றுமதி செய்வது, வேலைவாய்ப்பு மூன்றையும் உள்ளடக்கிய ஒரு தொழில் கொள்கை உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத்

தொழில் கொள்கையில் கிராமத் தொழில், சிறு தொழில், குறுந்தொழில் இந்த மூன்றுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும், இந்த மூன்றையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். இதிலே தொழில் கொள்கையை உருவாக்குவதற்காக அதிகாரிகளைக் கொண்டு ஒரு கமிட்டி அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலே தொழில் முனைவோர் சங்கப் பிரதிநிதிகள், காதி கிராமத் தொழில் கமிஷன் உறுப்பினர்கள், சுய உதவிக் குழுவைச் சேர்ந்தவர்கள் இவர்களைக் கொண்டு அந்தத் தொழில் கமிட்டி அமைத்தால் சிறப்பாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம்.

*பிற்பகல் 12—05*

அதோடு சிறப்புத் தொழில் மண்டலங்கள், தொழில் பூங்காக்கள், தகவல் தொழில் நுட்பப் பூங்காக்கள், இவற்றை இணைப்பதற்காகக் கட்டமைப்பு வசதி, சாலை வசதி, இரயில் போக்குவரத்து, விமான வசதி, internet, இவையெல்லாம் செய்துகொடுத்து, இணைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலும் சொல்லப்பட்டிருக்கிறது; இந்த மானியக் கோரிக்கையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு சீனா போன்ற நாடுகள் தொழில் வளர்ச்சி பெற்றுள்ளன. உலகத்தில் தொழில் வளர்ச்சி அதிகமாகப் பெற்ற அமெரிக்கா போன்ற நாடுகளைக்கூட, ஜப்பான் போன்ற நாடுகளைக்கூட மிஞ்சக்கூடிய அளவிற்கு, உலகமே சீன நாட்டை பார்த்து, பயப்படக்கூடிய அளவிற்கு அவர்களுடைய பொருட்களும் தரமாக இருக்கின்றன, உற்பத்தியும் அதிகமாக இருக்கிறது. உலக மார்க்கெட்டிலே போட்டியிடக்கூடிய அளவிற்கு குறைந்த விலையிலும் இன்றைக்கு சீனா தொழில் வளர்ச்சி அடைந்திருக்கிறது. சீனாவின் தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையான காரணம் இப்படிப்பட்ட அந்தத் தொழில் சிறப்புக் கட்டமைப்பை கொண்டு வந்ததுதான். அப்படிப்பட்ட ஒரு பெரிய சிந்தனை நமது அரசுக்கு வந்திருப்பது உண்மையிலேயே நிரம்பப் பாராட்டப்பட வேண்டிய அம்சம். ஏனென்றால், அடிப்படையாக தொழில்கள் வளர்வதற்கு இப்படிப்பட்ட கட்டமைப்புகள் எல்லாம் அவசியம் ஆக்கப்பட வேண்டும். இதைத்தான் சோவியத் யூனியனில் தோழர் லெனின் அவர்கள் தலைமையில் புரட்சி நடந்து வெற்றி பெற்றவுடன், மின்சாரம் என்பது மக்களுக்கு முக்கியமானது, மின்சாரம் எடுக்கப்படுகின்ற இடங்கள் எல்லாம் கோயில்கள் போன்று பாதுகாக்கப்பட வேண்டும், எனவே, ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அவசியம் மின்சாரம் என மின் உற்பத்தி நிலையங்களையும், தொழில் நிலையங்களையும் இணைப்பதற்கு இரயில் போக்குவரத்தை முதலில்



தொடங்கினார்கள். அப்படிப்பட்ட ஒரு முன்னுதாரணம் நமது அறிக்கையில் வந்திருப்பது வரவேற்கப்பட வேண்டிய விஷயம்.

அதேபோல, கடந்த கால ஆட்சியில் மத்திய அரசால் தமிழகத்தில் வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய முறையிலும் தொழில்களை உருவாக்கக்கூடிய முறையிலும் அளிக்கப்பட்ட நிதியையும் முறையாகச் செலவு செய்யவில்லை. சில திட்டங்களையும்கூட புறக்கணித்தார்கள். உதாரணத்திற்கு, நமது மத்திய அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்களின் பெருமுயற்சியின் காரணமாக, சேதுசமுத்திரத் திட்டத்திற்கு மத்திய அரசு 2,500 கோடி ரூபாயை ஒதுக்கி, தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்தினை தொடங்குங்கள்; கடல் வழிப் போக்குவரத்து எளிதாக நடைபெறும்; வியாபாரம் பெருகும்; மக்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும் என்று சொல்லி, அந்த நிதி தமிழகத்திற்கு வழங்கப்பட்டது. ஆனால், அந்த வேலையை நடைபெற விடாமல் தடுப்பதில் கடந்த கால அரசு கடைசி வரை முயற்சி செய்தது. அத்தனைத் தடைகளையும் தாண்டி, அந்த வேலை இன்றைக்கு தமிழக முதல்வர் அவர்களுடைய முழுமுயற்சியின் காரணமாக, தொடங்கப்பட்டு, நடைபெற இருக்கிறது. அப்படி நடந்த ஆட்சிகளுக்கு மத்தியில் இன்றைக்கு 400 கோடி ரூபாய் முதலீட்டில் 300 ஏக்கர் நிலத்தில் மோட்டார் வாகன பரிசோதனை மையத்தைத் தமிழகத்தில் ஏற்படுத்துவதற்கான முயற்சியை நமது தமிழக முதல்வர் அவர்கள் சிறப்பாக எடுத்து, பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களை அணுகி இந்தத் திட்டத்தை, ஹைதராபாத்திற்குச் செல்லவிருந்த இந்தத் திட்டத்தை, தமிழகத்திற்குக் கொண்டு வந்து சேர்த்த பெருமை நமது தமிழக முதல்வருக்கு உண்டு. அதை உண்மையிலேயே கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் பாராட்டுகிறோம்.

அதேபோல, உயிரியல் தொழில்நுட்பத் துறைக்கு உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையம் தொடங்கப்படுவதை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம். (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விரைவாகப் பேசி முடியுங்கள்.

**திரு. தி. இராமசாமி:** இன்றைக்கு அமெரிக்காவினுடைய விதைக் கம்பெனி Monsanto விதை உற்பத்தி செய்து, அங்கு உற்பத்தி செய்த பருத்தி விதையை இந்திய நாட்டிற்குக் கொண்டுவந்து, ஒரு கிலோ 1,100 ரூபாய், 1,200 ரூபாய் என்று விற்கிறார்கள். ஆனால், அதே Monsanto கம்பெனி சீனாவில் போய் விற்கும்போது, அங்கே தடை விதிக்கப்பட்டு,

சீன நாட்டினுடைய அந்த விலைக்குக் கட்டுப்பட்டு 300 ரூபாய்க்கு விற்கிறார்கள். அப்படிப்பட்ட தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்கு இந்த உயிரியல் ஆராய்ச்சி உயர் கல்வித் துறை அமைக்கப்படுவது என்பதை நாங்கள் வரவேற்கிறோம்.

*பிற்பகல் 12–10*

இன்றைக்கு கெட்டுப் போகின்ற பழங்கள், ஒரு மாதத்திற்கு மேல் வைத்திருந்தாலும், அழுகாமல், கெட்டுப் போகாமல் எப்படி பழ வகைகளைப் பாதுகாப்பது, அதேபோல, தோட்டக் கலைப் பயிர்கள, இப்படிப்பட்ட ஆராய்ச்சிகள் தமிழ்நாட்டில் நடத்தப்பட வேண்டியிருக்கிறது. பழைய நெல், பூம்பாலை, சம்பா, இப்படிப்பட்ட நெல் எல்லாம் இன்றைக்கு தமிழ்நாட்டில் இல்லாமல் போய், புதிய இரக நெல்கள் வந்திருக்கும்போது, கலப்பின நெல் உற்பத்திக்கு நாம் முயற்சி எடுக்க வேண்டும்.

அதேபோல, மின் துறையில், தமிழ்நாடு தேவைக்குத் தகுந்தாற்போல உற்பத்தி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜெயங்கொண்டத்தில் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும், தமிழ் நாட்டினுடைய தேவை 1,100 மெகாவாட்டுக்கு மேல் இருக்கிற அந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், மரபு சாரா எரி சக்தித் துறையில் மின்சாரத்தைக் கொண்டுவருவதற்குமான முயற்சிகள் இந்த அறிக்கையிலே வந்திருக்கின்றன. காற்றாலை மின்சாரத்தை முழுக்க பயன்படுத்தும் வகையில், மின் தொகுப்போடு அந்த லைன் சரியாக சேர்க்காத காரணத்தால், அதிலே பலவிதமான குறைபாடுகளும், சில தவறான நடவடிக்கைகளும்... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேகமாகப் பேசுங்கள். Slow motion—ல் போகிறீர்கள். வேகமாகப் பேசுங்கள்.

**திரு. தி. இராமசாமி:** அதைக் கொஞ்சம் கண்காணிப்பதற்கான முயற்சி வேண்டும். அதேபோல, இப்படிப்பட்ட அந்த மின்சாரம், 2003 மின்சாரச் சட்டத்தின்படி, சுயமாக மின்சார உற்பத்தி, மின்சாரம் தயாரித்துப் பயன்படுத்துபவர்களுக்கு விதிக்கப்பட்ட அந்த 10 சதவீத வரியை இரத்து செய்ய வேண்டும். ஏனென்றால், சொந்தமாக மின்சாரம் உற்பத்தி செய்து வருபவர்களுக்கு அந்த 10 சதவீத வரி என்பது அவசியமில்லை. அவர்களை ஊக்கப்படுத்துகின்ற முறையில், வரியை இரத்து செய்து கொடுக்க வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்.



அதேபோல, மின் வாரியத்திற்கு வாங்குகின்ற உதிரி பாகங்கள், பெரும்பாலும் தமிழ்நாட்டிற்குள்ளேயே டெண்டர் போட்டு வாங்குகின்ற முறையைக் கடைபிடித்தால், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பெருகுவதற்கான ஒரு வாய்ப்பு ஏற்படும். மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இங்கே வந்து டெண்டர் போட்டு மின்சாரத்திற்குத் தேவையான உதிரி பாகங்களை வருடத்திற்கு பல்லாயிரம் கோடிக்கு நாம் வாங்குகிறோம். அதேபோல மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இன்றைக்கு சில தனியார் துறையில்கூட வேஸ்ட் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து, நமது அரசுக்கே வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு யூனிட் 6 ரூபாயிலிருந்து, 8 ரூபாய்க்கு மேலே அவர்களிடம் நாம் வாங்கி விவசாயத்திற்கு இலவசமாக மின்சாரம் கொடுக்க வேண்டியிருக்கிறது. சிறு தொழில்களுக்கு நாம் சலுகை விலையில் மின்சாரம் வழங்க வேண்டியிருக்கிறது, கைத்தறிக்கு சலுகை விலையில் மின்சாரம் வழங்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் தனியார் துறையில் வாங்குவதற்குப் பதிலாக, அந்த மூலதனத்தைப் பயன்படுத்தி, பல்வேறு வகையான முறைகளில் நாம் மின்சாரம் தயாரிப்பதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும்.

உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோன்று, கூடங்குளம் திட்டத்தை விரைவுபடுத்தி, அதிலே தமிழ்நாட்டிற்குரிய பங்கைப் பெறுவதில் கவனமாக இருந்து, அந்த இரண்டாவது திட்டத்தையும் தொடங்குவதற்கான, கூடங்குளம் திட்டத்தைத் தொடங்குவதற்கான முயற்சி செய்ய வேண்டும்.

அதேபோல, எங்கள் தொகுதியில் மூடிக் கிடக்கின்ற கூட்டுறவு மில்லைத் திறக்க வேண்டும். சிவகங்கையில் இருக்கின்ற கிராபைட் தொழிற்சாலையைத் தொடங்கி அதை வேகப்படுத்த வேண்டும்.

இன்றைக்கு சிமெண்ட் போன்ற தொழில்கள், ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை பாதுகாக்கப்பட வேண்டும். இந்தத் தொழில்களை எல்லாம் பாதுகாத்து—தென் மாவட்டங்கள் தொழில் வளர்ச்சி பெறாத மாவட்டங்கள்—அந்தத் தென் மாவட்டங்களில் எந்தத் தொழில்களைத் தொடங்குவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு கமிட்டியை மேற்கொள்ள வேண்டும். தீப்பெட்டித் தொழில் தென் மாவட்ட மக்கள் 10 இலட்சம் பேருககு அதிகமாக வேலைவாய்ப்பு கொடுக்கின்ற தொழில். அந்தத் தொழில் அழிந்து வருகின்றது. எனவே சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் எல்லாம் இப்போது machine... *(மணியடிக்கப்பெற்றது)* semi mechanised ஆக

இன்றைக்கு மாற்றுவதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கடன் வழங்குவதற்கு முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பட்டாசுத் தொழில் எங்கள் தென் மாவட்டங்களில் முக்கியமான தொழில். அந்த பட்டாசுத் தொழிலுக்கு பாக்கெட் பண்ணுகிற சரிகை பேப்பரை பிர்லா கம்பெனி ஒன்றே ஒன்றுதான் இந்தியாவில் உற்பத்தி செய்கின்றது. அந்தக் கம்பெனியை நம் தமிழ்நாட்டிற்குள் கொண்டுவருவதற்கான முயற்சி செய்து, தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழில்களை எல்லாம் பாதுகாக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, (குறுக்கீடு) தென் மாவட்டத் தொழில் வளர்ச்சிக்கு அதிகமான கவனமும் முக்கியத்துவமும் கொடுத்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன இது?

**திரு. தி. இராமசாமி:** செயல்படுத்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டு, வாய்ப்பு விடைபெற்றுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. இராமகிருஷ்ணன். (குறுக்கீடு) என்ன? என்ன வேண்டும் சொல்லுங்கள். Right, என்ன மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே இருக்கிறபோது, சிறு தொழில்களுக்காக, அதை ஊக்குவிக்கின்றவகையில், பதினைந்து சதவிகிதம் மானியத்தைத் தந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பிறகு, 75 G.O. என்று போட்டு அதை இரத்து செய்தார்கள். மீண்டும் அது வழங்கப்படுமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன்.



***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இன்றைக்கு எரிசக்தி மற்றும் சிறு தொழில்கள் மானியக் கோரிக்கையின்மீது–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பேசுகின்ற வரையிலே குறுக்கிட வேண்டாமென்று நினைத்துக் கொண்டிருந்தேன். மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய கொறடா, திரு. செங்கோட்டையன் அவர்கள், "தி.மு.க. ஆட்சியிலே பிற்படுத்தப்பட்ட தொழில் பிரிவுகளிலே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்குப் பதினைந்து சதவிகித மானியம் இரத்து செய்துவிட்டது; ஆனால், அம்மையார் ஆட்சியிலே அதைத் தொடர்ந்து கொடுத்தார்கள்; மீண்டும் இந்த ஆட்சியிலே கொடுக்கப்படுமா?" என்று கேட்டார். உண்மை என்னவென்றால், தி.மு.க. ஆட்சியிலே பதினைந்து சதவிகிதம் மானியம் தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்பட்டது, Backward areas. ஆனால், அ.தி.மு.க. ஆட்சியிலே கடந்த காலத்திலே மட்டும் இரத்து செய்துவிட்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முதலிலே, 1991–லேயிருந்து 1996 வரையிலே வழங்கினீர்கள். 2001–லேயிருந்து 2006 வரையிலே நடந்த ஆட்சியிலே அதை இரத்து செய்துவிட்டீர்கள். இப்போது இந்த ஆட்சியிலே, கலைஞர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்து வழங்குவதற்கான ஒரு குழுவை நியமித்து இருக்கிறார்கள். நிச்சயமாக பதினைந்து சதவிகித மானியம் இந்த ஆட்சியிலே வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் (குறுக்கீடுகள்)

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிசக்தித் துறை மற்றும் (குறுக்கீடுகள்) சிறு தொழில் மானியக் கோரிக்கையின்மீது–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பாண்டுரங்கன், திரு. ஜெயக்குமார் இரண்டு பேரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) குறுக்கிடக் கூடாது. உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது குறுக்கிடக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை, உட்காருங்கள். திரு. இராமகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** எரிசக்தித் துறை என்பது, அதன் மூலமாக தயாரிக்கப்படுகின்ற மின்சாரம் இன்றைக்கு நாட்டிற்குத் தேவைப்படுகிற ஒன்றாகக் கருதப்படுகின்றது. பெருகி வரும் ஜனத்தொகை... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டுரங்கன், திரு. ஜெயக்குமார், இரண்டு பேரும் உட்காருங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** ஜனத் தொகையின்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக்கொண்டு இருக்கும்போது குறுக்கிடக் கூடாது.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** ஜனத் தொகை தேவை...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை நடவடிக்கையிலே தலையிடுகிறீர்கள். உட்காருங்கள், உட்காருங்கள். நீங்கள் பேசுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** பெருகிவரும் ஜனத் தொகை...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மக்களுடைய தேவை...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் அவரவர்கள் பேசும்போது சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கருத்துகளையெல்லாம் அப்போது சொல்லுங்கள். உட்காருங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மின்சாரம் என்பது இன்றைக்குத் தட்டுப்பாடு நிறைந்ததாகவே இருக்கின்றது... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலே எதுவும் ஏறாது.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** அனல் மின்சாரத்தின் மூலமாக, புனல் மின்சாரத்தின் மூலமாக, நிலக்கரியின் மூலமாக, அணுசக்தியின் மூலமாக மின்சாரத்தை நாம் அதிகமாகத் தயாரித்தாலும்கூட இன்னும் மின்சாரத்



தேவை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், இன்றைக்கு உலக நாடுகள் முழுவதும் காற்றுச் சக்தியின் மூலமாக, சூரிய சக்தியின் மூலமாக, தாவர உயிர் சக்தியின் மூலமாக, கடல் அலை மின்சக்தியின் மூலமாக, கடல் வெப்ப சக்தியின் மூலமாக, பூமியின் வெப்ப சக்தியின் மூலமாக இன்றைக்கு எரிசக்தி வளங்களைப் பயன்படுத்தி வருகின்றன. இன்றைக்குத் தமிழ்நாட்டில் காற்று சக்தி, சூரிய சக்தி தாவர சக்தியின் மூலமாக, அதன்மூலம் கிடைக்கின்ற மின்சாரம் இன்றைக்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்றான நிலையில், சூரிய ஒளி மின்சக்தி என்பது இன்றைக்கு சுலபமாக மின்சாரம் கிடைக்கக்கூடிய ஒன்றாக கருதப்படுகின்றது. உள்ளாட்சி அமைப்புகளிலே சூரிய ஒளி வெப்பச் சக்திமூலம் கிடைக்கின்ற மின்சாரத்தின்மூலமாகத் தெரு விளக்குகளை அமைத்தால் மின் கட்டணச் செலவைக் குறைக்கலாம். இன்றைக்கு உள்ளாட்சி நிர்வாகம் பெருமளவு செலவு மின் கட்டணத்திற்கே செலவழிக்கப்படுகின்றது. அதனால் உள்ளாட்சி அமைப்புகள் அவதிக்கும், சங்கடத்திற்கும் ஆளாகியுள்ள நிலையில், அப்படிப்பட்ட திட்டத்தின்கீழ் தற்போது உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்தக் கொள்கைக் குறிப்பில் நகரப் பகுதியில் 500 தெரு விளக்குகளும், தெரு விளக்குகளைக் கட்டுப்படுத்தும் சூரிய அமைப்புகள் 200-ம் ஒதுக்கீடு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இன்றைக்கு மக்களின் ஜனத்தொகைக்கு ஏற்ப, வார்டுகள் எண்ணிக்கைகள் அதிகரித்துள்ள நிலையில், கூடுதலான சூரிய ஒளி தெரு விளக்குகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-20

சூரிய வெப்ப சக்தியின்மூலமாக, சூரிய சுடுநீர் கலன், solar water heaters - பெருமளவில் மின்சாரத்தைச் சேமிக்கலாம். இதை அரசு மருத்துவமனைகள், அரசு ஓய்வு இல்லங்கள், அரசு அலுவலகங்கள், நமது சட்டமன்ற உறுப்பினர் விடுதி போன்ற அரசு சார்ந்த இடங்களிலும், புதிதாகக் கட்டப்படும் கட்டடங்களுக்கு அரசுத் துறை அனுமதி வழங்கும்போதும், சூரிய சுடுநீர் கலன் பொருத்தினால்தான் அனுமதி வழங்கமுடியும் என்று கட்டாயப்படுத்த வேண்டுமென்ற என்னுடைய எண்ணத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான், பெருமளவு மின் சக்தியைச் சேமிக்கலாம்.

அதைப்போல, நான் ஏற்கெனவே வெட்டுத் தீர்மானம் கொண்டு வந்திருக்கின்றேன். இன்றைக்குத் தமிழ்நாட்டிலே உள்ள நகராட்சிகளில், மலைபோல் குப்பை சேர்ந்திருக்கிறது. அந்தக் குப்பைகளை அகற்றவும்

முடியாது; அகற்றினால் வேறொரு இடமும் வேண்டும். அந்தக் குப்பைகளை நாம் முழுமையாகப் பயன்படுத்துகின்ற வகையிலே, அதன்மூலமாக நாம் மின்சாரம் எடுக்கின்ற திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும். சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி போன்ற பெருநகரங்களிலும், பெரிய நகராட்சிப் பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான டன் குப்பைகள் அன்றாடம் சேருகின்றன. அவற்றைக் கொட்டுவதற்கு இடப் பிரச்சினை பெரிய காரணமாக இருக்கின்றது. குப்பைகளைக் கொட்டி வைப்பதால், சுற்றுப்புறச் சூழல் முழுமையாகப் பாதிக்கின்றது; சுகாதாரம் கெடுகின்றது. Aedes என்ற அந்தக் கொசு அதிகமாக உற்பத்தியாவதற்கும், Chikungunya நோய் பரவி, இன்றைக்கு எல்லோரும் முடவாத நோயினால் பாதிக்கப்படுகின்ற வகையிலே, நோயாளிகள் அதிகமாகி வருகின்றார்கள். அதையும் கட்டுப்படுத்துவதற்கு இந்தக் குப்பைகளை அழிப்பதற்குத் திட்டங்களை வகுக்கவேண்டும். இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு குப்பையிலேயிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை வைக்கின்றேன்.

அதைப்போல, பொதுவாக தமிழ்நாட்டிலே மின் கட்டமைப்புடன் இணைக்கப்படாத தொலைதூரக் கிராமங்களுக்கு, சூரிய ஒளி விளக்குகள்மூலம் மின் வசதி செய்து தருகின்ற திட்டம் விரைவுபடுத்தப்படவேண்டும். மலைப் பகுதிகளிலே மரங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அடிக்கடி மின் தடை ஏற்படும். அதேபோல, தொலைதூர hamlets, குக்கிராமங்களில் மின்சார வசதி இல்லாமல், இன்றைக்கு அந்தப் பகுதிகளிலே மக்கள் அவதிப்படுகிறார்கள். என்னுடைய கம்பம் தொகுதியிலேகூட, பலியன்குடிசை என்ற பகுதியிலே நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள். அந்த பலியன்குடிசையிலேயிருந்துதான், கண்ணகிக் கோட்டத்திற்குச் செல்லவேண்டிய வழியும் இருக்கின்றது; 10 கி.மீ. வழியும் இருக்கின்றது. அங்கே நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள். அங்கேகூட, மின்சார வசதி முழுமையாக இல்லை. இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே, 12 மாவட்டங்களிலே, 150 குக்கிராமங்களில், 6,237 சூரிய ஒளி வீட்டு விளக்குகளும், 300 சூரிய ஒளி தெரு விளக்குகளும் தருவதாகச் சொல்லியிருக்கின்றீர்கள்.

தமிழ்நாட்டிலே உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மின் கட்டமைப்பு இணைக்கப்படாத கிராமங்களில், மலைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு இந்தத் திட்டத்தை முழுமையாக அமல்படுத்த



வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கோரிக்கை வைக்கின்றேன். காற்றுச் சக்தியிலிருந்து பெரும்பாலும் மின்சாரம் தயாரிக்கப்படுகின்றது. புதிதாக காற்று ஆய்வு மையங்கள்; 2003—லிருந்து 2006 வரைக்கும் 3 ஆண்டுகளில், 8 இடங்களில் மட்டும்தான் ஆய்வு மையங்கள் அமைக்க அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் காற்று ஆய்வு மையங்களை மேலும் கூடுதலான மையங்களில் அமைக்க வேண்டும். ஏனெனில், காட்டுவளம் மிகுந்திருக்கக்கூடிய மாநிலம் நமது !மாநிலமாகும். அதைப்போல, இன்றைக்கு இந்தப் புனல் மின்சாரத்திலே எரிசக்தித் துறையிலேயிருந்து, 2.5 மெகாவாட் மின்சாரம் தயாரிப்பதற்குண்டான அந்தக் கொள்கையும் இந்தத் துறையிலே இருக்கின்றது.

கம்பத்திலேயிருந்து 10 கிலோ மீட்டர் தள்ளியிருக்கின்ற சுருளியாறு நீர்வீழ்ச்சியிலேயிருந்து, 2.5 மெகாவாட் மின்சாரம் எடுக்கக்கூடிய வாய்ப்பும், சூழ்நிலையும் அங்கே அதிகமாக இருக்கின்றது. அதேநேரத்திலே, இந்தத் திட்டமும் நிறைவேறினால், அரசுக்கும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கும் அது பயன்படுகின்ற திட்டமாக அமையும். மேலும், இந்தச் சூரிய ஒளி மின் சக்தி பயன்பாட்டைக் குறித்து, மாவட்டந்தோறும் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், அந்த மாணவ மாணவிகள் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை நான் வைக்கிறேன். தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், எரிசக்தி பூங்கா ஒன்றையும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழிலைப் பொறுத்தவரையிலே, நாட்டின் பொருளாதாரம், தொழில் முனைவோர், கிராமப்புற பொருளாதாரக் கட்டமைப்புக்கு சிறுதொழில் என்பது இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகின்றது. இன்றைக்கு சிறு தொழில் பெருகுவதன்மூலமாக, வேலைவாய்ப்பின்மை அறவே நீக்கப்படுகின்றது. இன்றைக்கு நம் பகுதியிலே, தேனி மாவட்டப் பகுதியிலே, சிறு தொழில்களை ஊக்குவிக்கின்ற வகையிலே பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. குறிப்பாக, ஓடைப்பட்டியிலே குளிர்பதனக் கிடங்கு ஒன்று தொடங்கப்பட்டுள்ளதாக இந்த பட்ஜெட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12—25

அங்கே 20,000 ஏக்கருக்கு மேலாக் திராட்சைப் பயிரிடப்படுகின்றது. கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் மெட்ரிக் டன் திராட்சை உற்பத்தி செய்யப்படுகின்றது. நூறு கோடி ரூபாய்க்கு வருவாய் உள்ள அந்த திராட்சை மழைக் காலங்களில் சேதாரத்தைத் தவிர்க்கவும்

அதைப்போல குளிர்காலங்களில் அதன் விலை குறைவதால் விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற அவலத்தைப் போக்கவும் அங்கே ஓடைப்பட்டியிலே குளிர்ப்பதனக் கிட்டங்கி ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. அதன்மூலமாக சேமிக்கலாம். ஆனால், அந்த பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகின்ற அந்தத் திட்டம்தான் மிக முக்கியமானது. அதிலே, நீண்டகாலமாக அந்த தொகுதி மக்களுடைய கோரிக்கை wine தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலை, சிறிய அளவிலே தயாரிக்கலாம், அல்லது jam தயாரிக்கலாம், அல்லது squash தயாரிக்கலாம், அல்லது juice தயாரிக்கலாம், இதுபோன்று அந்த சிறுதொழில்களைச் செய்வதற்கு அந்தப் பகுதி விவசாய மக்களுக்கு அல்லது சிறுதொழில் முனைவோருக்கு ஊக்கமளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல தென்னை விவசாயம். தென்னையிலே பல்வேறு பொருட்கள் நமக்குக் கிடைக்கின்றன. அந்தப் பொருட்களிலிருந்து கயிறு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: சீக்கிரம் பேசி முடியுங்கள். விரைவாகப் பேசி முடியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன். கயிறு தயாரித்தல், கயிறு நார் திரித்தல் போன்ற தொழிற்சாலைகளைத் தொடங்கலாம். மேலும் கம்பத்தில் தென்னைக் கழிவுகள் நிறைய இருக்கின்றன. அந்தக் கழிவுகள் மலைபோல இருக்கின்றன. அந்தக் குப்பையை அழிக்க வேண்டுமென்று சொன்னால், அரசாங்கமே அதைத் தொழிலாக எடுத்துக்கொண்டு Pleurotus என்ற நுண்ணுயிரின் மூலமாக அதை மக்க வைத்து வளம் இல்லாத நிலங்களுக்கு மானியமாக, இலவசமாக அந்த உரத்தைக் கொடுப்போமேயானால், நிலத்தில் பேரூட்டுச் சத்தும் நுண்ணூட்டுச் சத்தும் நிறைவுள்ளதாக அமையும் என்பதனை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டு உடல் ஊனமுற்றோர்களுக்கும், பெண்களுக்கும், ஆண்களுக்கும், இளைஞர்களுக்கும் சிறுதொழில் துறையின் மூலமாக வட்டியில்லா சிறப்பு மானியக் கடனை தந்து ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டு, மகளிர் குழுக்களுக்கு மண் புழு உரம் தயாரித்தல், நுண்ணுயிர் உரம் தயாரித்தல், குப்பையிலிருந்து உரம் தயாரிப்பது போன்ற சிறுதொழில்களை அவர்களுக்கு பயிற்சி நிலையங்கள் மூலமாக களப் பயிற்சி ஏற்படுத்தி அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டு, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன், நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

***திரு. அ. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு பேரணாம்பட்டு தொகுதியில் தேர்தலில் நிற்பதற்கு வாய்ப்பளித்து, எனக்காகப் பிரச்சாரம் செய்து, என்னை வெற்றிபெறச் செய்து வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் உறுப்பினராகப் பணியாற்ற எனக்கு வாய்ப்பளித்த வாழும் வள்ளுவர், வரலாற்று நாயகர், தொல்காப்பியப் பூங்கா, தமிழினத்தின் ஒப்பற்றத் தலைவர், தமிழ் சமுதாயத்திற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டுக்கொண்டிருக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு மின் துறை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், நாளைய நம்பிக்கை நட்சத்திரம் தளபதியார் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், இராணிப்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் அண்ணன் காந்தி அவர்களுக்கும்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) செல்ஃபோன் இயக்கம் நிறுத்தி வைத்தல்

*(பேரவையில் செல்ஃபோன் மணி ஒலித்தது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது செல்ஃபோன்கள் வைத்திருந்தால் ஆஃப் பண்ணி வையுங்கள்.

## 7. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 14 – எரிசக்தித் துறை—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 44 – சிறுதொழில்கள் துறை—தொடர்ச்சி

**திரு. அ. சின்னசாமி:** மற்றும் ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கும் இந்தப் பேரவைக்கு என்னை உறுப்பினராக அனுப்பிய பேரணாம்பட்டு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தங்கள் பாதங்களில் காணிக்கையாக்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழ்நாட்டு மக்களுக்காக மிகச் சிறந்த சேவையாற்றுகின்ற வகையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரிலும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரிலும் மிகச் சிறந்த ஒரு பணியை ஆற்றி வருகின்றது. இன்று தமிழகத்திலே மனு கொடுத்தால் உடனடியாக வீட்டு இணைப்பைப் பெறுகின்ற ஒரு நிலைமையை தமிழ்நாட்டிலே மட்டுந்தான் நாம் காண முடியும். மேலும், இன்றையதினத்திலே நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் அதற்குரிய நடவடிக்கையை எடுத்து வருகின்றார்கள். மேலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய மொத்த உற்பத்தியானது 10,011 மெகாவாட்டாக இருக்கின்றது. மேலும், உற்பத்தித் திறனை அதிகரிக்க பல்வேறு திட்டங்களை இந்த நாட்டிலே அறிமுகப்படுத்தி, கூடங்குளம் அணுமின் திட்டத்தின்மூலமாகவும் மற்றும் பைக்காரா நீர் மின் திட்டத்தின்மூலமாகவும் பல ஆயிரக்கணக்கான மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்து அதை அதிகரிக்க, செயல்படுத்த இருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

பிற்பகல் 12–30

மக்கள் மின்சக்திக்காக மின்சார வாரியத்தை மட்டும் நம்பியிராமல், தனிப்பட்ட முறையிலும் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றமுறைதான், காற்றாலைகள் மூலம் தயாரிக்கின்ற முறையாகும். மேலும், அந்தக் காற்றாலைகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்பதுபோன்று, அதை உற்பத்தி செய்கின்ற தனியார் துறைகளுக்கு மானியம் வழங்க இருப்பதை வரவேற்கின்றேன். மேலும், சூரிய அடுப்புகள், சூரிய ஒளி லாந்தர்கள், இந்த நாட்டின் மின் சக்தியைச் சேமிக்கக்கூடியதாக இருக்கின்றன. சூரிய ஒளி சக்தியைக் கொண்டு, தெரு விளக்குகளை எரிய வைப்பது, பம்பு செட்டுகளை இயக்குவது என்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

மேலும், கால்நடைகளின் சாணம், தாவரக் கழிவுகள், எஞ்சியவைகள், உணவுக் கூடங்களின் கழிவுகள், பேப்பர் கழிவுகள், சர்க்கரை ஆலைகளின் கழிவுகள், குப்பைகள் போன்றவற்றால் தயாரிக்கப்படும் மின்சாரத்தினால், மின்சாரத் தேவையை நிறைவு செய்வது பாராட்டுக்குரியதாகும். 2012 ஆம் ஆண்டிற்குள் அனைத்துக் கிராமங்களிலுள்ள வீடுகளுக்கும் மின்சாரம் வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்படுவது, பாராட்டுக்குரிய ஒன்றாகும்.



வேலைவாய்ப்பை அளிப்பதில், வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த பிரிவுகளுக்கு அடுத்தபடியாக, சிறுதொழில் பிரிவுகள் விளங்குகின்றன. சிறுதொழில்கள், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்காற்றுகின்றன. சிறுதொழில் துறை, தொழில் துறையைப் போன்று மேம்பாடு அடைய முக்கியப் பங்காக விளங்குகின்றது. மொத்த உற்பத்தியில் சிறுதொழில்களின் பங்கு 40 விழுக்காடாகவும், ஏற்றுமதியில் 35 விழுக்காடாகவும் உள்ளது என்பது மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகும். 30–06–2006 வரை தமிழ்நாட்டில் 5.16 இலட்சம் சிறுதொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதற்கான முதலீடு ரூ.16,199 கோடி ரூபாயாகும். இதன்மூலமாக 36 இலட்சம் பேருக்கு மேல், வேலைவாய்ப்பு அளித்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

ஊரகப் பகுதிகளில், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில், சிறுதொழில்கள் மற்றும் குறுந்தொழில்கள் ஆற்றுகின்ற பங்கை உணர்ந்து, தொழில் வளத்தில் பின்தங்கிய பகுதியாக உள்ள பகுதி மக்களுக்கு முதலீட்டு மானியமும், நிதியுதவியும் அளிப்பது, பாராட்டுக்குரியதாகும். தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் சிறுதொழில் நிறுவனம் ஆகியவற்றின் மூலமாக சிறுதொழில்கள் வளர்ச்சி பெற்று வருவது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

மேலும், நம்முடைய இந்தியாவிலேயே முதன்முதலாக இலவச மின்சாரத்தை தமிழக மக்களுக்கு வழங்கியது, நம்முடைய ஒப்பற்ற தலைவர், தானைத் தலைவர் கலைஞர் அவர்களாவார். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்றுதான், இன்று கைத்தறி நெசவாளர்களுக்கும், விசைத்தறி நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரத்தை வழங்கி, அவர்களுடைய வாழ்விலே ஒளியேற்றியிருப்பதும், நம்முடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

அதுமட்டுமல்ல. சுயநிதியின்மூலமாக, வேளாண்மை மின் இணைப்புத் திட்டத்தில், 2 இலட்சத்து 40 ஆயிரம் மின் இணைப்புகளுக்கு இலவச மின்சாரத்தை வழங்கி, அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று செயல்படுத்தியிருப்பதும், நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. அ. சின்னசாமி:** மேலும், பேரணாம்பட்டு தொகுதி, மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். மாதனூர், ஆலங்காயம், பேரணாம்பட்டு ஆகிய மூன்று ஒன்றியங்களை உள்ளடக்கிய மிகப்பெரிய தொகுதியாகும். எனது தொகுதி எல்லா வகையிலும் பின்தங்கிய நிலையில் உள்ளது. பேரணாம்பட்டு தொகுதி, 2 இலட்சம் மக்கட் தொகையைக் கொண்ட பெரிய தொகுதியாகும். பேரணாம்பட்டு நகரில் அரசினர் பகுதிநேர மருத்துவமனை ஒன்று உள்ளது. இதை முழுநேர மருத்துவமனையாக ஆக்கித்தரும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், பேரணாம்பட்டிலும், பேரணாம்பட்டைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் ஒரு இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். தற்போதுள்ள மருத்துவமனையால் அந்த மக்களுக்கு போதிய மருத்துவ வசதியைக் கொடுக்க முடியவில்லை. போதிய படுக்கை வசதியும் இல்லை. போதிய மருத்துவர்களும் இல்லை. மருத்துவமனைக்கு கட்டட வசதியும் இல்லை. ஆப்பரேஷன் தியேட்டர், எக்ஸ்—ரே பிரிவு இங்கு இல்லை. எனவே, தற்போது உள்ள பகுதிநேர மருத்துவமனையை முழு நேர மருத்துவமனையாக்க வேண்டுமென்றும், மருத்துவமனை நன்கு செயல்பட போதுமான வசதிகளையும் செய்து தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

பேரணாம்பட்டில் பேருந்து நிலையம் இல்லை. தினமும் நூறு பேருந்துகளுக்கு மேலாக இங்கே வந்து செல்கின்றன. ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களிலிருந்து பேருந்துகள் வந்து செல்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. அ. சின்னசாமி:** போதிய இடவசதியில்லாமையால், இப்பேருந்துகள் சாலையில் நிறுத்தப்படுகின்றன. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். பேருந்து நிலையத்தில் சரியான இடவசதி இல்லை. எனவே, பேரணாம்பட்டு நகரில் உடனடியாக பேருந்து நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



பிற்பகல் 12—35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டு காலத்தில் இந்த அவையிலே எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த நான், ஒவ்வொரு மானியத்தின்மீதும் மாண்புமிகு அமைச்சர்கள், முதலமைச்சரை அர்ச்சனை செய்ததை எண்ணிப்பார்க்கின்ற நேரத்தில், அப்படியொரு அர்ச்சனையை எங்களுடைய முதலமைச்சருக்கு செய்யவேண்டுமென்று நான் நினைத்தாலும்கூட அவர் அதை விரும்பமாட்டார் என்ற காரணத்தால், 1967 ஆம் ஆண்டு முதல் இதுவரையிலே 7 முறை சட்டமன்ற உறுப்பினராக போட்டியிடுவதற்கு வாய்ப்புக் கொடுத்து, வெற்றிபெற்று மூன்றாவது முறையாக அமைச்சராக்கி, இன்று இந்த மானியக் கோரிக்கைகளுக்கு விடையளிக்கக்கூடிய வாய்ப்பை அளித்த தலைவர் கலைஞர் அவர்களுக்கு நன்றியையும், (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வணக்கத்தையும் தெரிவித்து, நான் இந்த மானியக் கோரிக்கைகளில் பேசிய உறுப்பினர்களுக்கும், அந்தக் கோரிக்கைகள்மீது சொல்லவேண்டிய பதில்களையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் மாண்புமிகு ஆர்.டி. கணேசன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், அனல் மின் நிலையங்களிலே அ.தி.மு.க. ஆட்சியிலே, தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம் கிடைக்கப்பெற்றது என்று சொன்னார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட பதக்கங்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயும் மத்திய அரசு தமிழகத்திற்கு வழங்கியது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே அரசியல் இல்லை. ஏனென்றால், தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே அனல் மின் நிலையங்களிலே மிகச் சிறந்த முறையிலே உற்பத்தியைச் செய்கின்றோம் என்று மத்திய அரசு நம்மைப் பாராட்டுகிறது. அந்த வகையிலே தொடர்ந்து அந்தப் பரிசுகளை நாம் பெற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு கேள்வியைக் கேட்டார்கள். மத்திய அரசாங்கம் distribution, transmission and generation, இந்த மூன்று நிறுவனங்களையும் தனியாகப் பிரிக்கவேண்டுமென்று சொல்கிறார்களே, அதில் உங்களுடைய நிலைப்பாடு என்ன என்று கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லி சென்றிருந்தபொழுது அவரோடு நானும்

சென்றிருந்தேன். அப்பொழுது அங்கு இருக்கக்கூடிய மத்திய மின் துறை அமைச்சர் ஷிண்டே அவர்களைச் சந்தித்தேன். அவரும் அ.தி.மு.க. உறுப்பினர் கேட்டதைப் போலத்தான் ஒரு கேள்வியைக் கேட்டார். இந்தக் கொள்கைகளிலே தமிழக அரசாங்கம் என்ன முடிவு எடுக்கப்போகிறது என்று கேட்டார். நான் சிரித்துக்கொண்டே பதில் சொன்னேன். இந்தியாவிலே எல்லா மாநிலங்களும் distribution, generation, transmission—ஐ தனித்தனியாகப் பிரித்திருந்தாலும்கூட எங்களுடைய தமிழகத்திலே கடந்தகால ஆட்சியிலேயும் அதைச் செய்யவில்லை. இப்பொழுதுதான் நாங்கள் புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கிறோம். அதை நாங்கள் மூன்றாகப் பிரித்து நடவடிக்கை எடுத்தால், தொழிலாளர்கள் மத்தியிலே பல்வேறு பிரச்சினைகள் வரும். எனவே, என்றைக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய மாநிலத்திலே அதைச் செய்கிறார்களோ, அதற்கு அடுத்த நாளே தமிழ்நாட்டிலேயும் அதைப்பற்றி பரிசீலிக்கிறோம் என்று சொன்னேன். அப்படிச் சொன்னதற்குக் காரணம் நிச்சயமாக கேரளாவிலே இருக்கக்கூடிய அரசு அதை ஏற்றுக்கொள்ளாது கொள்கையளவிலே என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் நாங்கள் அதைச் செய்யமாட்டோம் என்று சொல்வதற்குப் பதிலாக, கேரள அரசு என்றைக்கு அதை அமல்படுத்துகிறதோ, அதற்கு மறுநாள் நாங்கள் அதை அமல்படுத்துகிறோம் என்று தைரியமாகச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அது மட்டுமல்ல, இங்கே.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். அமைச்சர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது எழுந்திருக்கக் கூடாது. உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) திரு. விசுவநாதன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்களுக்கு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். Not permitted. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்தபிறகு பார்க்கலாம். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் பதில் சொன்னதற்குப்பிறகு நீங்கள் கேட்கின்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. விசுவநாதன், குறுக்கிடாமல் உட்காருங்கள்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இன்னொரு கருத்தை, அ.தி.மு.க. உறுப்பினர் இன்னொரு கருத்தை, நல்ல கருத்தைச் சொன்னார்கள். எரிவாயுவை எந்தக் காரணத்தைக்கொண்டும் தனியாருக்குக் கொடுக்க மத்திய அரசாங்கத்தை அனுமதிக்கக் கூடாது என்று சொன்னார்கள். அதுதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய கொள்கை. நான் மின் துறை அமைச்சராக இருந்தபொழுது பல கடிதங்கள் மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறேன். தமிழ்நாட்டிலே கிடைக்கக்கூடிய எரிசக்தியை எந்தக் காரணத்தைக்கொண்டும் தனியாருக்குக் கொடுக்கக்கூடாது என்று சொல்லி மன்னார்குடியிலே, அதைப்போலவே இராமநாதபுரத்தில் வழுதூரில் இங்கே கிடைக்கக்கூடிய எரிசக்தியை, எரிவாயுவை நாம், மின்சார வாரியமே பயன்படுத்த வேண்டுமென்று சொன்னோம். ஆனால், கடந்த கால ஆட்சியில், இரண்டு நிறுவனங்களுக்கு, ஆர்.கே. நிறுவனம்—1, ஆர்.கே. நிறுவனம்—2 என்ற நிறுவனங்களுக்கு எப்படி தனியாருக்கு மத்திய அரசாங்கம் அந்த எரிவாயுவை கொடுத்தது என்பது எனக்குத் தெரியாது. அப்போதிருந்த அரசு அதை எதிர்த்திருக்குமானால் கூடுதலாக 100 மெகாவாட் மின்சாரத்தை எரிவாயுமூலம் உற்பத்திச் செய்வதற்கான வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கும்... (குறுக்கீடுகள்)

**திரு. இரா. விசுவநாதன்:** தலைவர் அவர்களே...

**திரு. டி. ஜெயக்குமார்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்வது எதுவுமே record ஆகாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நமக்கு கிடைக்கின்ற நிலக்கரியைப் பொறுத்தவரையில், (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** போதுமான நிலக்கரி கிடைக்காமல் இருக்கின்றதே, அந்த நிலக்கரியை, பற்றாக்குறையை நீங்கள என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார். பற்றாக்குறை நிலக்கரியை தமிழக அரசாங்கத்தைப் பொறுத்தவரையில்...

**திரு. டி. ஜெயக்குமார்:** தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், திரு. விசுவநாதன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், முதலிலே. ஏதாவது பதில் சொல்லவேண்டுமென்றால், பிறகு சொல்லலாம். உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் உரையை முடிக்கட்டும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தலையிட அனுமதியில்லை, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்களும், திரு. விசுவநாதன் அவர்களும் மின் துறை அமைச்சர்களாக இருந்தவர்கள் என்பது எனக்குத் தெரியும். நிச்சயமாக அவர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு, பின்னாலே நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்) பதில் சொல்லாமல் நான் இந்த அவையை விட்டு வெளியே போக மாட்டேன். (குறுக்கீடுகள்) எனவே, கடைசியிலே நீங்கள் கேட்டால் வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு இன்னொன்றையும் இங்கே சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஆர்.டி. கணேசன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, பற்றாக்குறை இருக்கின்ற நிலக்கரியை நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்ற ஒரு கேள்வியைக் கேட்டார்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தெளிவாக, கலைஞர் அவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் 1991-96-இலே அ.தி.மு.க. ஆட்சியிலே தனியார்மூலமாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்த நிலக்கரியைபோல, எந்தத் தனியாரிடத்திலிருந்தும் நாம் வாங்கக் கூடாது; மத்திய அரசுக்குச் சொந்தமான எம்.என்.டி.சி. மூலமாகத்தான் வாங்க வேண்டும் என்ற ஒரு கொள்கை முடிவை எடுத்திருக்கின்றோம். எந்தக் காரணத்தைக் கொண்டும் தனியாருக்கு நிலக்கரியை இறக்குமதி செய்து மின்சார வாரியத்திற்கு கொடுப்பதற்கான ஆணையை வழங்கமாட்டோம் என்ற வாக்குறுதியை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசங்கர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே லைன்—லாஸ் 18 சதவிகிதமாக இருக்கிறது; அதைக் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது உண்மை. இந்தியாவிலே ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது நாம் இரண்டாவது இடத்திலே இருக்கின்றோம். 18 சதவிகிதம் லைன்—லாஸ் இருக்கிறது. ஆனால், அதையும் குறைக்க வேண்டுமென்பதற்காக



முதலமைச்சர் அவர்கள் பல்வேறு யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த யோசனைகளை ஏற்று இந்த 5 ஆண்டு காலத்திற்குள்ளாக 18 சதவிகிதமாக இருக்கக்கூடிய லைன்—லாஸ் நிச்சயமாக 15 சதவிகிதம் அளவிற்குக் குறைப்போம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

துணை மின் நிலையங்கள் பல இடங்களிலே தேவைப்படுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய 8 பேரிலே, அனைவருமே பேசினார்கள். அது உண்மை. தமிழ்நாட்டிலே இன்றையதினம் பல இடங்களிலே மின்சாரம் சரியாக, சீராகக் கிடைக்க வேண்டுமென்று சொன்னால் டிரான்ஸ்பார்மர்கள் • பொருத்த வேண்டியது அவசியமானதாக இருக்கிறது. அந்தப் பற்றாக்குறையைப் போக்க கடந்தக் காலங்களிலே ஆண்டிற்கு 6 ஆயிரம் டிரான்ஸ்பார்மர்கள் வாங்கியதற்குப் பதிலாக, இந்த ஆண்டு தமிழ்நாடு முழுவதும் இந்த மின் சக்தி லோ—வோல்டேஜ் இருப்பதைப் போக்க வேண்டுமென்பதற்காக, 14 ஆயிரம் டிரான்ஸ்பார்மர்கள் வாங்கி (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து தொகுதிகளுக்கும், இதிலே அ.தி.மு.க. தொகுதி, தி.மு.க. தொகுதி, காங்கிரஸ் தொகுதி என்று பார்க்காமல், தமிழ்நாட்டிலே எங்குமே, லோ—வோல்டேஜ் இருக்கக் கூடாது என்ற எண்ணத்திலே, 14 ஆயிரம் டிரான்ஸ்பார்மர்கள் வாங்குவது என்று மின்வாரியம் முடிவு எடுத்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல டாக்டர் எம்.கே. விஷ்ணு பிரசாத் அவர்களின் குடும்பமே எனக்குத் தெரிந்த குடும்பம். அவர் தாத்தா எம்.எல்.ஏ.—வாக இருந்தபோதும் நான் இங்கு இருந்தேன். அவருடைய தகப்பனார் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது நான் எம்.எல்.ஏ.-வாக நாடாளுமன்ற உறுப்பினர் போட்டி போட்ட தொகுதியிலேதான், அவருடைய மகன் இன்று இந்த தொகுதிக்குப் போட்டி போட்டார். என்ன காரணத்தினாலோ, அவா பேசுகின்ற அவையிலே இருக்கிறார். நேரத்திலே தொழில்கள் செய்வதற்கு பதிலாக, இன்று சில பேர் படித்துவிட்டு அரசியலுக்கு வந்துவிடுகிறார்கள் என்று சொன்னார். அவர் ஒரு டாக்டர். அவர் வந்தது தவறு என்று நான் சொல்லமாட்டேன். அரசியலை மோசமாக நினைக்காதீர்கள். உங்களைப் போன்ற இளைஞர்கள் எதிர்காலத்திலே, படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், டாக்டர்களாக இருப்பவர்கள், அரசியலுக்கு

வந்தால் நல்லது. நாடு முன்னேறும். எனவே, நீங்கள் எந்தக் காரணத்தைக்கொண்டும் அரசியலுக்கு வருவதைத் தவறாகக் கருத வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–45

அதேநேரத்திலே, அவர்கள் சிறு தொழில்களைப் பொறுத்தவரையிலே ஏற்கெனவே செய்யாறு தொகுதியில் சிப்காட்மூலம் ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கு தி.மு.க. ஆட்சியிலே அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், ஒரு தொழிற்சாலைகூட வரவில்லை என்று சொன்னார்கள். நான் அருமைத் தம்பி விஷ்ணு பிரசாத்துக்கு சொல்லிக்கொள்கிறேன். அங்கே தொழிற்சாலைகளைத் தொடங்க நீங்கள் தொழில் முனைவோர்களைத் தேடிப் பிடித்து கொண்டுவருவீர்களேயானால், எத்தனைத் தொழிற்சாலைகளைக் கொண்டுவந்தாலும், அத்தனைத் தொழிற்சாலைகளுக்கும் நிதி உதவி செய்ய, இடத்தைத் தர, மின்சாரம் தர இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே பேசிய மாண்புமிகு பா.ம.க. உறுப்பினர் திரு. தமிழரசு அவர்கள் கயிறு உற்பத்தித் தொழிற்சாலைக்கு ஊக்கமளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்த ஆண்டு தமிழ்நாட்டிலே 10 ஆயிரம் பேர் கயிறு உற்பத்தித் தொழிலை மேற்கொண்டுள்ளோர் அதிக வேலை பெறுவதற்காக மத்திய அரசாங்கம் நமக்கு சிறப்பு அனுமதி வழங்கி இருக்கிறது. வேண்டுமானால், ஓமலூரிலே சட்டமன்ற உறுப்பினர் விரும்பினால் 5 ஆயிரம் பேர் கயிறு தொழில் செய்வதற்கான அனுமதியை நாங்கள் வழங்கத் தயாராக இருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான முயற்சிகளை அவர் மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போலவே, சேலத்திலே, குறிப்பாக தர்மபுரியிலேயெல்லாம் சில வேண்டுகோள்களை வைத்தார்கள். நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டியார் அவர்களும், நம்முடைய மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. கோ.க. மணி அவர்களும், தர்மபுரியிலே ஒரு தொழிற்பேட்டை வைப்பதற்கு இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று சொன்னார்கள். முதல்வர் அவர்களிடத்திலே கலந்து பேசினேன். நிச்சயமாக அது ஒரு பின்தங்கிய பகுதி, சிட்கோமூலமாக ஒரு தொழிற்பேட்டையை அங்கே உருவாக்குங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். (மேசையைத்



தட்டும் ஒலி) இந்த ஆண்டே அந்த சிட்கோ தொழிற்சாலை தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களும், மாண்புமிகு அமைச்சர் நம்முடைய வீரபாண்டியார் அவர்களும், அந்த சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்கு வேண்டிய நிலத்தைத் தேர்வு செய்து கொடுக்கும்படி நான் பணிவன்போடு அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி லீமா றோஸ் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே நல்ல கருத்துகளைச் சொன்னார்கள். அதிலே குறிப்பாக மினசார வாரியத்திற்கு நிலக்கரியைக் கொண்டுவருவது Poompuhar Shipping. எதற்காக அது ஒரு வேறு துறையிடம் இருக்கிறது. அந்தத துறையை கப்பல் போக்குவரத்து. Poompuhar Shipping Corporation–ஐ மின் வாரியமே எடுத்துக்கொள்ளலாமே என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது. விரைவிலே Poompuhar Shipping Corporation தமிழ்நாடு மின்சார வாரியத்தோடு இணைக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல ஆதிதிராவிடர்கள் குடியிருப்புகளுக்கெல்லாம் சில இடங்களிலே மின் இணைப்பு இல்லை என்று சொன்னார்கள். எந்தெந்த இடங்களிலே ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு இல்லை என்று அவர்கள் கருதுகிறார்களோ, அதை எழுதிக் கொடுப்பார்களேயானால் 30 நாட்களுக்குள்ளாக அத்தனைப் பகுதிகளுக்கும் அந்த விளக்குகளைப் பொருத்தித் தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, மலைப் பகுதிகளிலே இந்த ஆண்டு 94 இடங்களில் நாம் மின்சாரக் கம்பிகளை இழுத்துக்கொண்டு போய் மின்சாரம் கொடுப்பதற்கு அதிகமாக செலவாகும் என்ற காரணத்தால், சூரிய வெப்பத்தின்மூலமாக அப்படிப்பட்ட பகுதிகளிலே தெரு விளக்குகளும், வீட்டிற்கான விளக்குகளும், சூரிய வெப்பத்தின்மூலம் கொடுப்பதற்கு மத்திய அரசாங்கம் நிறைய நிதியை ஒதுக்கி இருக்கிறது. அந்த வெப்பத்தின் மூலமாக தெரு விளக்குகளும், வீட்டு விளக்குகளும் நிச்சயமாக செய்து தரப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சிட்கோ, சிப்காட் இவை எல்லாம் I.S.O. முத்திரை பதிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். நல்ல தரமான பொருட்களை நாம் உற்பத்தி செய்தால்தான் market–லே விலை

கிடைக்கும். அவரே பேசுகின்ற நேரத்திலே சொன்னார். சீனா, இன்றையதினம் அமெரிக்காவோடு போட்டி போடுகிறது. ஜப்பான் நாட்டோடு போட்டி போடுகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையிலே நம்முடைய நாடும் வரவேண்டுமென்று சொன்னார்கள். நிச்சயமாக சிறு தொழில் துறையிலே நானும் நினைத்துக்கொண்டிருக்கின்றேன். தொழில் உற்பத்தியிலே கடைசியிலே இருந்த சீனா இன்று அமெரிக்காவோடும், ஜப்பானோடும் போட்டி போடுகின்றதோ, அதைப்போல சீனாவிற்கு அடுத்தபடி இருக்கக்கூடிய அதிக மக்கள்தொகையைக் கொண்ட இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் சிறு தொழில்களை வளர்த்து, ஏராளமானவர்களுக்கு, இலட்சக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்து, நாம் சிறுதொழில்களை வளர்ப்பதற்கு இந்த அரசாங்கம் எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–50

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் பேசுகின்றபோது—அந்தக் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணப்பன் அவர்களேகூட, மரபுசாரா எரிசக்தித் துறை அமைச்சராக மத்தியிலே இருந்தார்கள். அப்போது நான் அமைச்சராக இங்கே இருந்தபோது நானும் அவரும் கலந்துபேசி இருக்கிறோம். அவர், மரபுசாரா எரிசக்தித் துறையிலே காற்றாலையிலிருந்து, சூரிய வெப்பத்திலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதிலே அதிக அக்கறையோடு தமிழக அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அப்படி கவனம் செலுத்தியிருக்கிறோம். நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் சொன்ன யோசனைகளையேற்று காற்றாலைகள் மூலமாக, அதைப்போலவே சூரிய சக்தியின்மூலமாக மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்வதறகு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை எடுத்துச் சொன்னார்கள். நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சென்னை மாநகராட்சிக்கு 1957-லிருந்து 1973 ஆம் ஆண்டு வரையில் ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு புதிய மேயரை தேர்ந்தெடுப்பார்கள். அது, சுழற்சி அதாவது, rotation முறையிலே அந்த மேயர் தேர்தல் நடக்கும். ஆனால், 1996-க்குப் பிறகு, 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேயர்



என்ற ஒரு சட்டம் வந்து, இன்றைய நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேயராக இருந்தார்கள். அதை ஏன் மாற்றினார்கள் என்றால், ஓர் ஆண்டுக்கு ஒரு மேயர் என்று சொன்னால், 6 மாத காலம் பாராட்டு விழாவிற்கு சரியாகப் போய் விடுகிறது, மீதி இருக்கக்கூடிய 6 மாத காலம் வழியனுப்பு விழாவிற்கு சரியாகப் போய் விடுகிறது. ஆனால், சென்னை மாநகரத்தை மேம்படுத்துவதற்கு வேண்டிய நேரமோ, காலமோ, நினைப்போ எதுவும் செலுத்துவதற்கான வாய்ப்பு இல்லை. எனவேதான், 5 ஆண்டு காலம் ஒரு வாய்ப்பு ஒருவருக்குக் கிடைத்தால் நிச்சயமாக எந்த மாநகராட்சியையும் நல்ல முறையிலே வளர்ச்சி அடையச் செய்ய முடியும். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்கள் மேயராக இருந்தபோது 9 மேம்பாலங்களைக் கட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பாலம் மிச்சமாக இருக்கிறது. சென்னையை சிங்காரச் சென்னையாக மாற்றினார்கள். அதிலே வேடிக்கை என்னவென்றால், அந்த 9 பாலங்கள் கட்டுவதிலே, டெண்டர்கள் கோரப்பட்டு, டெண்டர் கோரப்பட்டதிலே, அதைச் செய்து முடிக்கும்போது 30 கோடி ரூபாயை மிச்சப்படுத்திக் காட்டி (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே ஓர் எடுத்துக்காட்டாக அவர்கள் விளங்கினார்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், ஒரு துறை மிகச் சிறப்பாக விளங்க வேண்டுமென்று சொன்னால், அது எந்தத் துறையாக இருந்தாலும், 5 ஆண்டுக் காலம் அவகாசம் இருந்தால், அந்தத் துறை நிச்சயமாக முன்னேறும். ஆனால், எதிர்க்கட்சியிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் நான் அரசியல் பேசுவதாக நினைக்கக் கூடாது.

சிறு தொழில்களை ஏனோ, என்ன காரணத்தினாலோ கடந்தகால ஆட்சியில் அதற்கு ஒரு முக்கியத்துவம் தராமல் 5 ஆண்டு காலத்திலே 5 அமைச்சர்கள் அதற்கு பொறுப்பேற்றிருக்கிறார்கள். 2001–2002–ல், திரு. கே. பாண்டுரங்கன் அதற்கு அமைச்சர். 2002–2003–ல் மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் அவர்கள் அதற்கு அமைச்சர். 2003–2004–ல் திரு. ஆர். வடிவேலு, அதறகு அமைச்சர். 2004–2005–ல் மீண்டும் திரு. பாண்டுரங்கன், அந்தத் துறைக்கு அமைச்சர். 2005–2006–ல் அப்போது அமைச்சராக இருநத திருமதி வளர்மதி அவர்கள் அமைச்சர். இப்படி ஒரு துறைக்கு 5 ஆண்டு காலத்திலே 5 பேர் அமைச்சர்களாக இருப்பார்களேயானால், அந்தத் துறை எப்படி முன்னேறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர்கூட சொன்னார், ஓர் அமைச்சரை நியமிப்பதோ, துறை ஒதுக்குவதோ, அது

முதலமைச்சருடைய உரிமை என்று சொன்னார். அந்த உரிமையிலே நான் குறுக்கிடவில்லை. ஆனால், ஒரு துறைக்குக் குறைந்தபட்சம் ஒரு அமைச்சர் 5 ஆண்டு காலம் தொடர்ந்து இருப்பாரேயானால், அந்தத் துறை முன்னேறும். அந்தத் துறையிலே இருக்கக்கூடிய குறைபாடுகளை அவர் கண்டறிய முடியும். அந்தத் துறையிலே என்னென்ன முன்னேற்றங்களைக் கொண்டு வரவேண்டுமென்று சிந்திக்க முடியும். அதைப்போலத்தான் மின்சாரத் துறையிலேகூட, மாண்புமிகு திரு. ஜெயக்குமார் அவர்கள் மின்சாரத் துறை அமைச்சராக இருந்த காலத்தில் செயல்பட்டார்கள், நன்றாகவே செயல்பட்டார்கள். ஆனால், என்ன காரணத்தாலே அவரை மாற்றிவிட்டு, பிறகு வேறொருவரைக் கொண்டுவந்தார்கள். மறுபடியும் திரு. விசுவநாதனைக் கொண்டு வந்தார்கள். ஆக, மின்சார இலாகா என்பது சாதாரண இலாகா அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் பெயரைச் சொன்னதால் நான் இங்கே விளக்கம் அளிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனக்கு certificate தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சருடைய certificate எனக்குத் தேவை இல்லை என்றே நான் கருதுகின்றேன்.

பிற்பகல் 12–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்களை, நல்ல அமைச்சர் என்று சொன்னதற்காக வருத்தப்படுகின்றேன். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், அவர், அவருடைய அம்மையாருடைய certificate–ஐ எதிர்பார்க்கின்ற காரணத்தால், நான் என்னுடைய certificate–ஐத் திரும்பப் பெற்றுக்கொள்கின்றேன். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) நான் இதைச் சொல்வதற்குக் காரணம், மின்சார வாரியம் என்பது, சிறுதொழில்கள் மாதிரிகூட அல்ல. சிறுதொழில்களுக்காவது 10 கோடி ரூபாய், 50 கோடி ரூபாய் ஒதுக்குகிறோம். ஆனால், மின்சார வாரியத்திற்கு 14 ஆயிரம் கோடி ரூபாய் வரவு-செலவுத் திட்டம். 14 ஆயிரம் கோடி ரூபாய் வரவு-செலவுத் திட்டம் தீட்டக்கூடிய ஒரு



துறைக்கு ஐந்தாண்டுக் காலத்திலே மூன்று அமைச்சர்கள் நியமிக்கப்பட்டால், அவர்களுடைய முழுக் கவனத்தை எப்படி அதிலே செலுத்த முடியும் என்பதற்குத்தான் நான் சொல்கிறேனே தவிர, ஏதோ தனிப்பட்ட முறையிலே யாரையும் குறை சொல்வதற்காக அல்ல. ஆகவேதான், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு முதல்வராக இருந்திருக்கிறார் என்றால், அந்த ஐந்தாண்டுக் காலமும் மின்சாரத் துறை அமைச்சராக என்னைத்தான் நியமித்திருந்தார். எந்த அமைச்சரையும் இலாகா மாற்றவில்லை. எனவே, எந்தத் துறைக்கு அமைச்சராக நியமித்தாலும் குறைந்தது ஐந்தாண்டுக் காலம் அவகாசம் கொடுத்தால், அந்தத் துறையை மேம்படுத்த முடியும் என்பதற்குத்தான் இதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சிறுதொழில்களைப் பற்றி சில கருத்துகளை இங்கே சொல்ல விரும்புகிறேன். சிறுதொழில்கள் தமிழகத்தில் பொருளாதாரத்திலே மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. மொத்த தொழில் நிறுவனங்களில் சிறுதொழில்கள்தான் 95 சதவிகிதம் இருக்கிறது. இந்த 95 சதவிகித சிறுதொழில் நிறுவனங்களின் உற்பத்தி மொத்த உற்பத்தியில் 40 சதவிகிதம். பெரிய தொழிற்சாலைகள் உற்பத்தி செய்கின்ற அந்தப் பொருளோடு போட்டி போட்டு சில சிறு தொழில் நிறுவனங்கள் முன்னணியிலே நிற்கின்றன. ஏற்றுமதியில் சிறு தொழில்களின் பங்கு 35 சதவிகிதம். இதிலே 35 சதவிகித தொழில் நிறுவனங்கள் ஏற்றுமதியிலே முன்னணியிலே இருக்கின்றன. எனவேதான் சிறுதொழில்களை நாம் ஊக்குவிக்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் விரும்புகிறது. குறிப்பாக, சிறுதொழில் துறையிலே தொழில் வணிக இயக்ககம் -Directorate of Industries and Commerce- தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் SIDCO, தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் TANSI, அதுமட்டுமல்லாமல், தொழில் வணிக இயக்கத்தின்கீழ் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் INDCOSERVE, தேயிலை உற்பத்தி செய்யக்கூடியவர்களுடைய தொழில் கூட்டுறவு சங்கம். TEASERVE, அதேபோல SAGOSERVE, கயிறு துறை, தாய்கோ வங்கி என இத்தனை துறைகளும் சிறுதொழில்களில் இருக்கின்றன. இந்தச் சிறுதொழில்கள் எந்த அளவுக்கு கடந்தகால ஆட்சியிலே முன்னேற்றம் அடைந்தன என்பதைவிட, இப்போது நாங்கள் என்ன செய்யப் போகின்றோம் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், 20
ஆயிரம் பேர் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அதிலே
15 தேயிலை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இப்போது
நடந்துகொண்டிருக்கின்றன. அதிலே 475.87 இலட்சம் கிலோ பச்சைத்
தேயிலை கொள்முதல் செய்து, 4,289.16 இலட்சம் மதிப்புடைய 123.4
இலட்சம் கிலோ தேயிலை உற்பத்தி செய்து வருகின்றோம். இந்தத்
தேயிலை உற்பத்தியை இன்னும் ஊக்குவிக்கவேண்டும். ஏனென்றால்,
அங்கே இருக்கக்கூடிய தேயிலை உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி
செய்கின்ற தேயிலைக்கு சரியான விலை கிடைக்கவில்லை என்ற
காரணத்தால், கடந்தகால ஆட்சியிலே சில மானியம் கொடுத்தீர்கள்.
ஆனால், இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், TEASERVE என்ற
ஏல மையத்தில் அவர்களுக்கு விதித்திருக்கின்ற 4 சதவிகித பொது
விற்பனை வரி மற்றும் 2 சதவிகித மத்திய விற்பனை வரி ஆகிய இந்த
6 சதவிகித விற்பனை வரியை மாண்புமிகு முதல்வர் அவர்களுடனும்,
நிதியமைச்சர் அவர்களுடனும் கலந்துபேசி, ஒரே ஒரு சதவிகித
விற்பனை வரியைத்தான் வசூல் செய்யவேண்டுமென்று ஆணை
பிறப்பித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலமாக
5 சதவிகித விற்பனை வரி அவர்களுக்குக் கிடைக்கின்ற காரணத்தால்,
தேயிலை விலை இன்னும் கொஞ்சம் கூடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

அதைப்போலவே, கோயமுத்தூர் மற்றும் குன்னூரில் இருக்கின்ற
ஏல மையங்களுக்கு 8 சதவிகிதமாக இருக்கக்கூடிய வரியை
4 சதவிகிதமாகவும், மத்திய விற்பனை வரியை 4 சதவிகிதத்திலிருந்து
2 சதவிகிதமாகவும் குறைத்து, அதோடு தேயிலை விற்பனையில், கூடுதல்
விற்பனை வரி, மேல் வரி என்றிருக்கக்கூடிய இந்த இரண்டு வரிகளும்
இந்த ஆண்டு முதல் நீக்கப்படுகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை
அந்த மாவட்ட மக்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-00

SAGOSERVE ஜவ்வரிசித் தொழில், இம்மாநிலத்தில் 2.5 இலட்சம்
ஏக்கர் பரப்பளவில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடி
செய்யப்படுகிறது. இதிலே 5 இலட்சம் தொழிலாளர்கள்
ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த 5 இலட்சம் தொழிலாளர்களுடைய
வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் நான் துறையை
கேட்டுக் கொண்டிருப்பது இன்னமும் கூடுதலாக ஜவ்வரிசியை உற்பத்தி
செய்வதற்கு முயற்சியை மேற்கொள்ளுங்கள் என்று அதிகாரிகளை நான்



கேட்டுக் கொண்டிருக்கின்றேன். அவர்கள் சொன்னார்கள்; இங்கே இருக்கக்கூடிய ஜவ்வரிசி அதை இன்னும் தரமுள்ளதாக நாம் ஆக்க வேண்டும், அப்போதுதான் வெளிநாடுகளிலே நம்முடைய ஜவ்வரிசிக்கும் மற்றும் மாவிற்கும் நல்ல கிராக்கி கிடைக்கும் என்று சொல்லி அதற்கான திட்டங்களைத் தீட்டி இப்போது இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே அவற்றை நவீனப்படுத்துவதற்காக சாகோசர்வ் அளிக்கவுள்ள மானியத் தொகையில் 50 சதவிகிதத் தொகையை நாம் மானியமாக அந்தத் தொழிற்சாலைகளுக்குக் கொடுப்பதற்கு இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி லிமிடெட், தாய்கோ வங்கி இப்போது 27 இடங்களிலே செயல்பட்டு வருகிறது. இன்னும் சில மாவட்டங்களிலே அந்த வங்கி இல்லாத காரணத்தால் இந்த ஆண்டிற்குள்ளாக எந்தெந்த மாவட்டங்களிலே இல்லையோ அங்கே எல்லாம் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி லிமிடெட், அந்த நிறுவனத்தைத் தொடங்க இருக்கிறோம். முதற்கட்டமாக இப்போது மிக விரைவிலே வியாசர்பாடியிலே அந்த வங்கியைத் தொடங்க இருக்கிறோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொழில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், இது 675 கோடி ரூபாய் மத்திய அரசாங்கம் இந்தியா முழுவதற்கும் ஒதுக்குகிறது. அந்த நிதியில் சென்னையிலே வாகன உதிரி பாகக் குழுமம், திருப்பூரிலே பின்னலாடைக் குழுமம், மதுரையிலே தானியம் மற்றும் பருப்பு அரவைக் குழுமம், கோவையிலே மோட்டார் பம்பு மற்றும் Foundry தொழில் குழுமம், ஆம்பூரிலே தோல் தொழில் உற்பத்தி செய்கின்ற குழுமம். இந்தக் குழுமங்களுக்கு ஆன திட்ட மதிப்பீட்டுத் தொகை 370.89 கோடி ரூபாய். மத்திய அரசாங்கம் தமிழகத்திற்கு இந்தத் திட்டங்களுக்கு 198 கோடி ரூபாயை தனது பங்களிப்பாக ஒதுக்கி இருக்கிறது என்பதையும் நான் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக இப்போது இருக்கக்கூடிய மத்திய அரசாங்கம் திராவிட முன்னேற்றக் கழகம் பங்கு பெற்றுள்ள அரசாங்கம் என்ற காரணத்தால் மட்டுமல்ல, தமிழகத்திலே நாம் தொழில் துறையிலே அது சிறு தொழிலாக இருந்தாலும், பெருந்தொழிலாக இருந்தாலும் அதிலே அக்கறை காட்டுவோமேயானால் நாம் கேட்கின்ற மானியங்களை மத்திய அரசாங்கம் கொடுக்கத் தயாராக இருக்கின்றது.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் - SIDCO. இங்கே
மாண்புமிகு உறுப்பினர்கூட பேசினார். இதிலே 43 தொழிற்பேட்டைகள்
இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. 35 அரசு தொழிற்பேட்டைகள்
முதல் முகமை முறையாக பராமரித்து வருகிறது. இன்னும் இதை
விரிவுபடுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அதைத்தான் நான்
சொன்னேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம்
கேட்டுக்கொண்டதைப்போல தருமபுரியிலே அதை விரிவுபடுத்த
இருக்கின்றோம்.

நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய திருப்பூர்
சட்டமன்ற உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் என்னிடத்திலே
தனியாக பேசிக் கொண்டிருக்கும்போது சொன்னார்கள். திருப்பூரிலே
ஏராளமான பனியன் தொழிற்சாலைகள் இருக்கின்றன.
சென்னையைவிட அங்கே வீட்டு மனைகளோ அல்லது தொழிற்சாலை
தொடங்குவதற்கான இடங்களோ அதிக விலையிலே விற்கிறார்கள்.
எனவே, தனியாக சிட்கோமூலமாக ஒரு தொழிற்பேட்டை 2 ஆயிரம்
ஏக்கரிலே உருவாக்கித் தாருங்கள் என்று கேட்டார்கள்.
உண்மையிலேயே அங்கே இருக்கக்கூடிய நிலைமைகளை எல்லாம்
எண்ணிப் பார்த்து இந்த ஆண்டே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்
திரு. கோவிந்தசாமி அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றக்கூடிய
வகையில் அங்கே ஒரு தொழிற்பேட்டை உருவாக்கப்படும். அதிலேயும்
(மேசையைத் தட்டும் ஒலி) சுமார் 2 ஆயிரம் ஏக்கர் நிலத்திலே
அந்தத் தொழிற்பேட்டையை உருவாக்கி, 125 புதிய பனியன்
தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கும், அங்கே குடியிருப்பதற்கு
வீடுகள் அமைப்பதற்கும் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்
என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.
(மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-05

கயிறைப் பற்றி ஏற்கெனவே நான் சொல்லிவிட்டேன். சிறு தேயிலை
விவசாயிகளுக்கு இப்போது குன்னூரிலே தேயிலையை சேமித்து
வைப்பதற்கு இடமில்லை, Godown இல்லை. அதை மாண்புமிகு உறுப்பினர்
என்னிடத்திலே பேசும்போது சொன்னார்கள். நான்
முதலமைச்சரிடத்திலே கேட்டேன். அவர் எவ்வளவு இடம்
தேவைப்படும் என்று கேட்டார். அதற்கு நான் சுமார் 9 ஆயிரம் சதுர
அடி இருந்தால்தான் உற்பத்தி செய்கின்ற அந்தத் தேயிலையைப்
பக்குவப்படுத்தி அங்கே நாம் சேமித்து வைக்க முடியும் என்று
சொன்னேன். எவ்வளவு செலவாகும் என்று கேட்டார். 140 இலட்சம்



ரூபாய் செலவாகும் என்றேன். அந்த 140 இலட்சம் ரூபாய் திட்டத்திற்கு
நீங்கள் அனுமதி கொடுங்கள் என்று சொல்லிவிட்டு தமிழக அரசு
அதற்காக 30 இலட்சம் மானியமாக கொடுக்கும் என்றும்
தெரிவித்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, குன்னூரிலே
அப்படிப்பட்ட ஒரு Godown அமைக்கப்படும் என்பதையும் நான் இந்த
நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத்
தட்டும் ஒலி)

சென்னையிலே இருக்கின்றவர்களுக்கு பல பேருக்குத் தெரியும்.
எல்லோரும், சென்னையிலே இருக்கக்கூடிய சுமார் 60 இலட்சம்
மக்களுக்கு குறைந்தது இரண்டு இலட்சம் வீடுகள் இருக்கின்றன. பல
நேரங்களில் மின்சாரம் தடைபட்டு விடுகிறது. சில நேரங்களில் குடிநீர்
குழாய்கள் பழுதாகிவிடுகின்றன. சில நேரங்களில் Air-conditioner
பழுதாகிவிடுகிறது. சில நேரங்களில் plumbing works தடைபட்டு
விடுகிறது. இதற்கெல்லாம் திடீர் திடீர் என்று ஆளைத் தேடினால்
எங்கும் கிடைப்பதில்லை. Plumber எங்கேயிருக்கிறார், Electrician
எங்கேயிருக்கிறார், பிறகு Air-conditioner mechanic எங்கே இருக்கிறார்
என்று நாம் கண்டுபிடிப்பது மிகவும் கடினமாக இருக்கிறது. ஆகவே,
சென்னையிலே 20 இடங்களில் கூட்டுறவுத் துறை மூலமாக யார் யார்
பட்டம் பெற்று, diploma பட்டம் பெற்று இந்தத் துறைகளிலே, அவர்கள்
எல்லாம் சங்கங்கள் அமைத்து 20 இடங்களிலே அந்தத் தொழில்களைச்
செய்வதற்கு 500 பேர் முன்வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும்
ஒலி) அவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு society-க்கும் ஒரு இலட்சம்
ரூபாயை இந்த அரசாங்கம் மானியமாகக் கொடுத்து (மேசையைத்
தட்டும் ஒலி) அவர்களை ஊக்குவிக்க இருக்கிறது. அதன்மூலம் ஒரு
telephone செய்தால் ஐந்தாவது நிமிடத்திலே ஒரு Electrician
வருவதற்கும், ஐந்தாவது நிமிடத்திலே ஒரு Plumber வருவதற்குமான
ஒரு வாய்ப்பு கிடைக்கும். அப்படிப்பட்ட வசதியை இந்த அரசு
செய்வதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறது என்பதையும் நான்
தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் புதிய தொழில்களை
உருவாக்கி வேலைவாய்ப்புத் தர வேண்டுமென்று சொன்னார்கள்.
நம்முடைய நாட்டிலே அது ஒரு துரதிருஷ்டம். 55 இலட்சம் பேர்
Employment Exchange-லே வேலையில்லாமல் பதிவு செய்திருக்கிறார்கள்.
கடந்த கால ஆட்சியிலே வேலை நியமனத் தடைச் சட்டம் போட்ட
காரணத்தினாலே அரசாங்கத்திலேயும் வேலைக்கு ஆள்
எடுக்க முடியவில்லை. இப்போது அதை நீக்கிய காரணத்தினாலே

ஒரு 2½ இலட்சம் பேரை Employment Exchange மூலமாக seniority
அடிப்படையிலே நம்முடைய முதல்வர் அவர்கள் காலியாக உள்ள
இடங்களில் நியமிக்க ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

அதைப்போலவே, இந்தச் சிறு தொழில் நிறுவனங்கள் மூலமாக
தமிழ்நாட்டில் மேலும் ஒரு 50 ஆயிரம் சிறு தொழில் நிறுவனங்கள்
பதிவு செய்யப்பட்டு இந்த ஆண்டே ஒரு இலட்சம் பேருக்கு வேலை
கிடைப்பதற்கான வாய்ப்பை (மேசையைத் தட்டும் ஒலி)
உருவாக்கிக்கொள்வதற்காக நான் இதைச் சொல்கிறேன். இன்று ஆகஸ்ட்
மாதம் ஒன்றாம் தேதி, எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்கலாம். அடுத்த ஆண்டு
ஆகஸ்ட் மாதம் ஒன்றாம் தேதி பார்த்து ஒரு இலட்சம் பேருக்கு யார்
யாருக்கு வேலை கொடுத்தீர்கள் என்று கேட்கக்கூடும். அவர்களுக்கு
உறுதியாகச் சொல்கிறேன். நானேதான் இந்தத் துறைக்கு அமைச்சராக
இருப்பேன், கலைஞர் ஆண்டுதோறும் இந்தத் துறைக்கு அமைச்சர்களை
மாற்ற மாட்டார். எனவே, அடுத்த ஆண்டு பதில் சொல்லும்போது,
அந்தப் பட்டியலை ஒரு இலட்சம் பேருக்கு எங்கெங்கே வேலை
கொடுத்தோம் என்ற விவரத்தை நான் தருவதற்குத் தயாராக இருக்கிறேன்
என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.
(மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, டான்சி நிறுவனம். இதைச் சொல்லும்போது யாருமே
வருத்தப்படக் கூடாது. ஒரு காலத்திலே மிகச் சிறந்த முறையிலே
பணியாற்றிக் கொண்டிருந்த நிறுவனம் இன்று மிகவும் நலிந்து போய்
இருக்கிறது. அதிலே ஒரு காரணம், ஏதோ டான்சி நிலத்தை
விற்றுவிட்டார்கள் என்பது மட்டுமல்ல. டான்சி நிலம் விற்கப்பட்டது.
முன்னாள் முதலமைச்சர் வாங்கினார். உச்சநீதிமன்றத்திலே அதைத்
திரும்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள்.
(குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.
(குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் என்ன சொல்ல
வருகிறேன். (குறுக்கீடுகள்) நான் என்ன சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள். பதில்
சொல்கிறார் அல்லவா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்
திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். திரு. வைத்திலிங்கம், நீங்கள்
உட்காருங்கள்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு அ.தி.மு.க.
உறுப்பினர்கள் நான் என்ன சொல்கிறேன் என்பதைக் கேட்டுவிட்டு,
அதற்குப் பிறகு அவர்கள் பிரச்சினையை எழுப்பட்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்ல விரும்புவது,
உச்ச நீதிமன்றத்திலே அந்த நிலத்தைத் திருப்பிக் கொடுங்கள் என்று
சொன்னார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் நீங்கள்.

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு முன்னாள்
முதலமைச்சர் அந்த நிலத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டார். (குறுக்கீடு)
நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். அந்த நிலத்தை டான்சி
நிறுவனத்திற்குத் திருப்பிக் கொடுத்துவிட்டார். ஆனால், டான்சி
நிறுவனம் அதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலே இருக்கிறது.
என்ன காரணம் என்று கேட்டால், அவர்கள் வாங்கியபோது Stamp
Duty 3.5 இலட்சம் ரூபாய். இப்போது அந்த 3.5 இலட்சம் ரூபாயைச்
செலுத்தி அந்த நிலத்தை எங்களுக்குப் பதிவு செய்யுங்கள் என்று பதிவுத்
துறை அலுவலகத்திலே போய் கேட்டபோது, அவர்கள் சொன்னார்கள்,
இப்போது அந்த நிலத்தினுடைய மதிப்பு அதிகமாகிவிட்டது. எனவே,
3 கோடியே 15 இலட்சம் ரூபாய் கொடுத்தால்தான் நாங்கள் நிலத்தை
பதிவு செய்வோம் என்று சொன்னார்கள். முன்னாள் முதலமைச்சர்
அந்த நிலத்தைத் திருப்பிக் கொடுத்து 2 ஆண்டுகளுக்குமேல்
ஆகிவிட்டது. ஆனாலும், அதைத் திருப்பிப் பதிவு செய்து, அந்த
நிலத்தை, டான்சி நிறுவனம் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலே
இருக்கிறது. அதற்குக் காரணம் பதிவுத் துறை குறுக்கே நிற்கிறது.
Stamp Duty 35.9 இலட்சம் ரூபாய். எனவே. மேலும் 3 கோடியே
15 இலட்சம் ரூபாய் கொடுத்தால்தான் நாங்கள் நிலத்தைப் பதிவு செய்த
பத்திரத்தைக் கொடுப்போம் என்று சொன்னார்கள். முன்னாள்
முதலமைச்சர் அந்த நிலத்தை திருப்பிக் கொடுத்து
2 ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டது. ஆனாலும், அதைத் திருப்பிப் பதிவு
செய்து அந்த நிலத்தின் பத்திரத்தை டான்சி நிறுவனம் பெற்றுக்கொள்ள
முடியாத நிலையிலே இருக்கிறது. அதற்குக் காரணம் பதிவுத் துறை
குறுக்கே நிற்கிறது. இதை முதலமைச்சரிடத்திலே சொன்னவுடனே
சொன்னார். டான்சி நிறுவனம் என்பது அரசாங்க நிறுவனம்தானே,
எனவே, அவர்கள் சொல்லிய 3.5 இலட்சம் ரூபாயை பெற்றுக் கொண்டு

அதிகமாகக் கேட்கின்ற 3 கோடியே 15 இலட்சம் ரூபாயை அரசாங்கம் விதிவிலக்கு கொடுத்து, அதை இரத்து செய்து, நிலப் பத்திரத்தை உடனடியாக பெற்றுக்கொள்ளும்படி செய்யலாம் என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான அரசாங்க ஆணையை இந்த அரசாங்கம் விரைவிலே பிறப்பிக்கும். டான்சி அந்த நிலப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளும். இதிலே என்ன நான் தவறு சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. ஜெயக்குமார் உட்காருங்கள். (குறுக்கீடு) அது Adjustment-தான். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள் (குறுக்கீடு) Government-க்குள் adjustment-தான்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடாவும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும், நான் பேசியதிலே ஏதாவது தவறு இருந்தால் சொல்லுங்கள். உச்ச நீதிமன்றம் ஒரு ஆணை பிறப்பித்தது. முன்னாள் முதலமைச்சர் அதை மதித்தார். அந்த நிலத்தைக் கொடுத்தார். (குறுக்கீடு) நான் சொல்ல வந்தது, கடந்த காலத்திலே அந்த நிலைமை ஏற்பட்டது. இப்போது 3 கோடியே 15 இலட்சம் ரூபாய் கொடுத்தால்தான் அது மீண்டும் டான்சி நிறுவனத்திற்கு வரும் என்ற ஒரு நிலை இருந்தபோது, நான் இன்றைய முதலமைச்சரிடத்திலே கேட்டபோது, அதற்குக் கவலைப்படாதீர்கள், அந்த 3.5 இலட்சம் ரூபாயைப் செலுத்திவிட்டு, உடனே விதிவிலக்கு ஒன்று கொடுத்து, அதை டான்சி நிறுவனத்திற்கு மாற்றி விடுங்கள் என்று சொல்லி இருக்கிறார். அதற்கு விரைவிலே, ஓரிரு நாட்களிலே ஒரு அரசாணை பிறப்பித்து (மேசையைத் தட்டும் ஒலி) டான்சி நிறுவனத்திற்கு அந்த நிலம் ஒப்படைக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இங்கேகூட நான் பேசும்போது சொன்னார்கள். பின்தங்கிய பகுதிகளிலே தொழில் தொடங்க வருகின்றவர்களுக்கு 15 சதவிகிதம் மானியம் என்பது காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்து கொடுக்கப்பட்டு வந்தது. அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயும் கொடுக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயும் கொடுக்கப்பட்டது. ஆனால், என்ன காரணத்தினாலோ, 2002–2006-லே, தொழில் துறையிலே பிற்படுத்தப்பட்ட தொகுதியில் தொழில் ஆரம்பிக்கின்றவர்களுக்கு அந்த 15 சதவிகித மானியம் கொடுக்கவில்லை. அதற்குக் காரணம் கேட்டபோது எனக்கு அதிகாரிகள் சொன்னார்கள். புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று தொடங்கிய காரணத்தால், அதற்குச்



செலவிடுகின்ற பணத்தை, இதில் நாம் போட்டு, நாம் ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் தொழில் தொடங்கலாம் என்று அந்த அரசு முடிவு எடுத்ததாகவும் அதனாலே இதை நிறுத்திவிட்டதாகவும் சொன்னார்கள். ஆனால், அண்ணா புதிய மறுமலர்ச்சித் திட்டம் என்று நீங்கள் தொடங்கியதிலே குறை சொல்லவில்லை. ஆனால், இதிலே ஒரு குறை எனக்கு இருக்கிறது. ஏன் என்று சொன்னால், அண்ணா மறுமலர்ச்சி திட்டம் என்பது தி.மு.க. ஆட்சியிலே கொண்டு வந்தோம். நீங்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு ஒரு பெயர் வைக்கவேண்டும் என்றுகேட்டு இருந்தால் நாங்கள்கூட சொல்லி இருப்போம். அண்ணா மறுமலர்ச்சி புதிய திட்டம் என்று கொண்டு வந்து இருக்கலாம். ஆனால், புதிய அண்ணா மறுமலர்ச்சி என்று கொண்டு வந்திருக்கிறீர்கள். அண்ணாவிலே எங்கே புதிய அண்ணா இருக்கிறார், பழைய அண்ணா இருக்கிறார்? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்த ஆண்டு, இந்த குறிப்பிலேயே அண்ணா மறுமலர்ச்சி புதிய திட்டம் என்ற பெயரை நாங்கள் மாற்றி இருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் திட்டத்தை நாங்கள் மாற்றவில்லை. (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். விளக்கமாகச் சொல்கிறார்கள் இல்லையா? மாற்றி ஒன்றும் சொல்லவில்லை. உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. பாண்டுரங்கன் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** திட்டங்களை மாற்றவில்லை. புதிய அண்ணா என்பதற்குப் பதிலாக அண்ணா மறுமலர்ச்சி புதிய திட்டம் என்று மாற்றி, எந்தத் திட்டத்தை நீங்கள் கொண்டு வந்தீர்களோ அந்தத் திட்டம், தொடர்ந்து இந்த ஆட்சியிலேயும் நிறைவேற்றப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

*பிற்பகல் 1-15*

அடுத்து வேலையில்லாப் பிரச்சினைகளைப் பற்றி இங்கே சொன்னார்கள். நம்முடைய பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்பு திட்டம், ஒவ்வொரு மாநிலத்திற்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களை முன்னேற்றுவதற்காக—இன்னும் சொல்லப்போனால், தாய்மார்களை கைதூக்கி விடுவதற்கான ஒரு திட்டம்தான். பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டம் என்று அதற்கு

பெயர். அந்தத் திட்டத்தின்கீழ் 25,000 பேருக்கு நம்முடைய மாநிலத்திலே
அந்த திட்டத்தைப் பயன்படுத்தி வியாபாரம் செய்வதோ தொழில்
ஆரம்பிப்பதோ ரூ.2 லட்சம் வரையிலே அந்தப் பணத்தை வங்கி மூலமாக
பெற்று எங்கள் இலாகா மூலமாக பெற்று நிச்சயமாக தொழில்
தொடங்கலாம். அதன்மூலம் கிட்டத்தட்ட 50,000 பேருக்கு 60,000
பேருக்கு வேலை கிடைக்கும். இப்படிப்பட்ட திட்டத்தின் மூலம்
நம்முடைய மாநிலத்தில் 27,000 பேருக்கு வாய்ப்புக் கிடைக்கும்.
(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்கள் உண்மையிலேயே தொழில் தொடங்க
வேண்டுமென்று நினைக்கின்றவர்களுக்கு யாருக்காவது பணம்
வேண்டுமென்று நீங்கள் நினைத்தால் இதிலே கட்சி
அரசியல் கிடையாது. அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய Joint
Director—ஐ அணுகி, அவர்களிடத்திலே விண்ணப்பம் கேட்டு, அப்படி
விண்ணப்பம் கேட்கின்றவர்கள் அந்தத் தொழில் தொடங்குவதற்கு
தகுதி படைத்தவர்களாக இருந்தால் உடனடியாக ஒரு வார
காலத்திற்குள்ளாக அவர்களுக்கு பணம் கிடைக்க ஏற்பாடு செய்வார்கள்.
தொழிலும் வரும். அதன்மூலம் வேலையில்லாத் திண்டாட்டம்
போக்கப்படும். அதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று நான்
கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, மின்சாரத்தைப்பற்றி ஒருசில குறிப்புகளை நான் இங்கே
சொல்ல விரும்புகின்றேன். TEDA வைப் பற்றி பல உறுப்பினர்கள்
பேசி விட்டார்கள். எனவே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே
சூரிய சக்திமூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வது. காற்றாலைகள்
மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வது இப்படிப்பட்ட துறைகளிலே
முழு கவனத்தையும் செலுத்துவோம் என்பதை இந்த நேரத்திலே
தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றே ஒன்றை இப்பொழுது நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.
காற்றாலைகளை நாம் அதிகமாக ஆக்க வேண்டும் என்று
சொல்லும்போது கடந்த கால ஆட்சியில் காற்றாலைகளுக்கு
முன்னுரிமை கொடுக்கப்பட்டது. இன்னமும் அதிகமாக காற்றாலைகள்
வர வேண்டுமென்று மத்தியிலேயிருந்து அந்தத் துறையைச் சேர்ந்த
அமைச்சர் அவர்கள் நம்முடைய முதலமைச்சரைச் சந்தித்து நீங்கள்
தமிழ்நாட்டிலே கொஞ்சம் அதிகமாக காற்றாலைகளை நிறுவுங்கள்,
அதற்காக என்ன உதவி தேவைப்பட்டாலும் நான் செய்து தருகிறேன்
என்று சொன்னார்கள். அதை அடிப்படையாக வைத்து இன்றையதினம்
நாங்குநேரியிலே வணிக வரித் துறையின் முன்னாள் மத்திய



அமைச்சராக இருந்த திரு. முரசொலி மாறன் அவர்கள் தென்
பகுதிகளிலே இருக்கக்கூடிய ஏழையெளியோர்களுக்கு
வேலைவாய்ப்பை உண்டாக்கித் தர வேண்டுமென்பதற்காக ஒரு
தொழிற் பூங்காவை அங்கே உருவாக்கினார்கள். 2,500 ஏக்கர் நிலம்
அங்கே வாங்கப்பட்டது. அந்த 2,500 ஏக்கர் நிலத்தில் என்ன
காரணத்தாலோ 5 ஆண்டு காலத்திலே ஒரு தொழில்
தொடங்குவதற்குகூட முன்வரவில்லை. அதைத்தான் நம்முடைய
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்தியிலேயிருந்து வந்த மரபு
சாரா எரிசக்தித் துறை அமைச்சரிடத்திலே பேசும்போது
எங்களிடத்திலே 2,000 ஏக்கர் நிலம் இருக்கிறது, அதில் ஒரு ஆயிரம்
ஏக்கர் நிலத்தை மரபு சாரா எரிசக்தித் துறைக்காக கொடுக்கிறோம்,
அந்த ஆயிரம் ஏக்கரில் வெளிநாட்டிலிருந்து வந்து காற்றாலைகளை
உற்பத்தி செய்யக்கூடிய, உதிரி பாகங்களைச் செய்யக்கூடிய அந்த
நிறுவனங்களுக்கு நீங்கள் வரியில்லாமல் சலுகை கொடுத்து, எப்படி
திரு. முரசொலி மாறன் அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு
வந்தார்களோ, அதே சலுகையை அங்கே தொழில் தொடங்க
வருகின்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, அதை
மத்திய மரபு சாரா எரிசக்தித் துறை அமைச்சரும் ஏற்றுக்கொண்டு,
சுமார் 4,000 கோடி ரூபாயிலே 3 ஆண்டு காலத்திலே அங்கே 1,000
ஏக்கர் நிலத்தில் பல நாட்டு தொழில் விற்பன்னர்கள் வந்து,
அந்தக் காற்றாலையைத் தயாரிக்கக்கூடிய திட்டம் ஒன்று
தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்று, இந்த மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில்,
இப்பொழுது விவாதம் கிடையாது. மாண்புமிகு திரு. ஜெயக்குமார்
அவர்களுக்குத் தெரியும். இதற்கு முன்னால் ஒவ்வொரு ஆண்டும்
மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது இரண்டு நாட்கள்
விவாதிப்போம், உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்வார்கள். அதற்கு
நான் அமைச்சராக இருந்தபோது பதில் சொல்லியிருக்கிறேன். ஆனால்,
2003 ஆம் ஆண்டு மத்திய அரசாங்கம் கொண்டு வந்த சட்டத்தின்படி
இனிமேல் இந்த அவையிலே மின்சார வாரிய நிதிநிலை அறிக்கைமீது
யாரும் விவாதிக்கக் கூடாது. அதற்குச் சட்டத்திலே இடம் இல்லை
என்று ஒரு உத்தரவு பிறப்பித்துவிட்ட காரணத்தால் எரிசக்தித்
துறைக்குள்ளேயே இதற்கும் பதில் சொல்லிவிடலாம் என்று ஒரு
முடிவு செய்து நான் சில விளக்கங்களைச் சொல்லக்
கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1—20

இந்த மின்சார வாரியத்திலுடைய வரவு செலவு என்று நீங்கள் பார்த்தால், மின்சாரத்தை விற்பதன் மூலமாக 12,793.16 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு வருமானமாக வருகிறது. பிற விற்பனையில் இதர வருவாய் மூலம் 465.32 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. அரசு மானியம் 1,509 கோடி ரூபாய். உங்களுக்குத் தெரியும் எதற்கென்றால் என்று. இலவச மின்சாரம், குடிசைக்கு மின்சாரம், கைத்தறித் தொழிலுக்கு மின்சாரம், நெசவாளர்களுக்கு மின்சாரம் இப்படி பல துறைகளிலே இருக்கின்றவர்களுக்கு இலவச மின்சாரம் கொடுப்பது என்று தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையிலேயும் அறிவித்திருக்கின்ற காரணத்தினால் 1,509 கோடி ரூபாய் மானியம் வழங்குவது என்று முடிவு செய்துவிட்டோம். எனவே, அதையும் சேர்த்துப் பார்த்தால் 14,788.49 கோடி ரூபாய் வருமானமாக இருக்கிறது. ஆனால் செலவு எவ்வளவு என்று பார்த்தால் 16,786.58 கோடி ரூபாயாக இருக்கிறது. வருவாயிலுடைய பற்றாக்குறை 1998.09 கோடி. இவ்வளவு வருவாய் இருந்தும்கூட பற்றாக்குறை இன்றும் 1,999 கோடி ரூபாய் இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் எங்களுக்கு இன்றும் இந்தத் துறைக்கு இவ்வளவு இலவச மின்சாரம் கொடுங்கள், அதற்கு இலவச மின்சாரம் கொடுங்கள் என்று கொஞ்ச காலத்திற்குக் கேட்காமல் இருங்கள். இந்த 1,999 கோடி ரூபாய் அந்தப் பற்றாக்குறையைச் சரி செய்ததற்குப் பிறகு மற்றவற்றைப் பற்றி பரிசீலிக்கலாம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் எந்த அளவுக்கு ஒவ்வொரு துறையிலேயும் கவனம் செலுத்துகிறார் என்பதற்காகச் சொல்கின்றேன். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என்று அறிவித்துவிட்டார். தி.மு.க. ஆட்சிக் காலத்திலே ஒரு திட்டம் கொண்டுவந்தோம். ஏனென்றால் 5 இலட்சத்து 40 ஆயிரம் பேர் மின்சாரம் வேண்டுமென்று, விவசாயிகள் கேட்கும்போது யாருக்கு முன்னால் கொடுப்பது என்று தெரியவில்லை. அதிலே 10 ஆயிரம் ரூபாய் கட்டுகின்றவர்களுக்கு முதலிலே ஒரு வாய்ப்புக் கொடுக்கலாம். 10 சதவிகித விண்ணப்பங்கள்—40 ஆயிரம் என்று சொன்னால் 4 ஆயிரம் விண்ணப்பங்களுக்கு, 10 ஆயிரம் ரூபாய் கட்டுகின்றவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கலாம் என்று ஒரு முடிவெடுத்தோம். பிறகு அ.தி.மு.க. அரசு அதை 25 ஆயிரம் ரூபாயாக ஆக்கியது. ஆக, எதுவாக இருந்தாலும் விதிமுறைகள் என்னவென்றால் 10 ஆயிரம் கட்டினாலும்



சரி, 25 ஆயிரம் கட்டினாலும் சரி, அப்படி சுய நிதித் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு பெறுகின்றவர்கள் ஒரு H.P.–க்கு ஆண்டுதோறும் 250 ரூபாய் கட்ட வேண்டும், இல்லையென்றால் ஒரு யூனிட்டுக்கு 20 பைசா கட்ட வேண்டும். கலைஞர் அதை எண்ணிப் பார்த்தார். 16 இலட்சம் பேருக்கு இலவச மின்சாரம் கொடுக்கும்போது, இரண்டு இலட்சத்து 40 ஆயிரம் பேர் என்ன பாவம் செய்தார்கள்? அவர்களுக்கும் சேர்த்து (மேசையைத் தட்டும் ஒலி) இலவச மின்சாரத்தைக் கொடுத்துவிடலாம் என்று சொல்லி, சுய நிதித் திட்டத்தின்கீழ் மின்சாரம் பெற்றவர்களுக்குக்கூட இனிமேல் இலவச மின்சாரம் வழங்கப்படும். அதன்மூலம் 38 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு இழப்பு ஏற்படும் என்று சொன்னபோது, 1,509 கோடி ரூபாய் தருகிறோம் இன்னும் 38 கோடி ரூபாய் வாங்கிக்கொள்ளுங்கள் என்று தாராள மனதோடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கணினிமயமாக்கப்பட்ட மின்சார இணைப்பு மையங்களை முதலாவதாக தமிழகத்திலே நான் அமைச்சராக இருக்கும்போது சென்னையிலே அறிமுகப்படுத்தினேன். சென்னையிலே ஏறக்குறைய 80 Sub-stations இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். ஒரு பக்கத்திலே அடையாறு, இன்னொரு பக்கத்திலே வியாசர்பாடி என்று வைத்துக்கொள்ளுங்கள். எல்லோருக்கும் தெரியும் மின்சாரம் திடீரென்று அதிகமாகி பல்புகள் பிரகாசமாக எரியும். சில இடங்களில் வீடுகளில் டி.வி. உடைந்துவிடும், பல்புகள் உடைந்துவிடும். என்ன காரணம் என்று கேட்டால், high voltage என்று சொல்வார்கள். அதிக மின்சாரம் வரும்போது அப்படி சில இழப்புகள் வீடுகளுக்கு ஏற்படுவதுண்டு. சில இடங்களிலே பார்த்தால் low voltage இருக்கும். இந்த இரண்டையும் எப்படி சரிப்படுத்துவது என்று எண்ணிப்பார்த்து மதிப்பிற்குரிய திரு. பூர்ணலிங்கம், இ.ஆ.ப., அவர்கள் தலைவராக இருந்தபோதுதான் முதல் முறையாக சென்னையை ஒரு மண்டலமாக ஆக்கி, இருக்கக்கூடிய Sub-stations அனைத்தையும் computer மூலமாக இணைத்தார்கள். எங்கேயாவது அதிக மின்சாரம் இருக்குமானால் அந்த மின்சாரத்தை எங்கே குறைவான மின்சாரம் இருக்கிறதோ அந்த இடத்திற்கு automatic-காக, தானாகவே அனுப்புவதற்குரிய ஒரு compute system கண்டுபிடித்து, அதை நிறுவினார்கள். அது மிகச்சிறந்த பலன் அளிக்கிறது. சென்னையிலே இன்று நல்ல முறையிலே அந்தத் திட்டப் பயன்பட்டு வருகிறது. இதை, இன்று நாங்கள் மறுபடியுட அதிகாரிகளோடு கலந்துபேசி, எங்கெங்கே மாநகராட்சிகள்

இருக்கின்றதோ, அடுத்த கட்டத்திலே அனைத்து மாநகராட்சிகளிலும் இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதன்மூலம் எல்லா இடங்களிலேயும் சீரான மின்சாரம் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 1—25

நம்முடைய மாண்புமிகு திரு. ஜெயக்குமார் அவர்கள், குறிப்பாக நம்முடைய திரு. விசுவநாதன் போன்றவர்கள் எல்லாம் அமைச்சர்களாக இருந்த காலத்தில், திரு. விசுவநாதன் அவர்கள் பேசிய பேச்சை நான் எடுத்துப் படித்துப் பார்த்தேன். ரொம்பவும் குறைபட்டுக்கொண்டார். ஆற்காடு வீராசாமி மின்சாரத் துறை அமைச்சராக இருந்தபோது அறிவிப்புகளைச் செய்துவிட்டுப் போய்விட்டார். ஆனால், ஒரு யூனிட் மின்சாரம்கூட தமிழ்நாட்டிலே அவர்களுடைய காலத்திலே உற்பத்திச் செய்யவில்லை என்று சொன்னார்கள். கொஞ்சம் மனதைத் தொட்டுப் பாருங்கள். ஜி.எம்.ஆர். வாசவி இருக்கிறதே அது யார் காலத்தில் நிறுவப்பட்டது? தி.மு.க. ஆட்சிக் காலத்தில். சொல்லுங்கள். (குறுக்கீடு) I.P.P.—யா அல்லது மின்சார வாரியமா என்று எடுத்துக்கொண்டால், I.P.P. மூலமாகவும் நாங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்திருக்கின்றோம். மின்சார வாரியத்தின் மூலமாகவும் மின்சாரத்தை உற்பத்தி செய்திருக்கின்றோம்.

உதாரணத்திற்குச் சொல்கிறேன், I.P.P. என்பது நாங்கள் கொண்டுவந்தது அல்ல. 1993 ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், முதலமைச்சராக இருந்தபோதுதான், திரு. நரசிம்ம ராவ் காலத்திலே இந்தியாவிலே முதன்முதலாக I.P.P. தொடங்கப்பட்டது. யார் தனியார் வந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வோம் என்று சொல்கிறார்களோ அவர்களுக்கு அனுமதி வழங்கக்கூடிய திட்டம் அப்போதுதான் தொடங்கப்பட்டது. ஆனால், 12 நிறுவனங்களுக்கு அப்போது MoU செய்யப்பட்டதே தவிர, ஓரே ஒரு நிறுவனம்கூட அந்த 5 ஆண்டு காலத்திலே மின்சாரம் உற்பத்தி செய்யவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை நான் ஆராய விரும்பவில்லை. ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வந்த உடனே, எங்களை அணுகினார்கள், கேட்டார்கள். நாங்கள் இந்தத் திட்டத்தைத் தொடங்கயிருக்கிறோம், எங்களுக்கு MoU இருக்கிறது. 1993 ஆம் ஆண்டிலே செல்வி ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது MoU செய்திருக்கிறார் என்று காட்டினார்கள். நாங்கள்



உடனடியாக தொழிற்சாலையை ஆரம்பியுங்கள், மின்சாரத்தை உற்பத்தி செய்யுங்கள் என்று சொல்லி, ஜி.எம்.ஆர். வாசவிக்கு அனுமதி கொடுத்தோம். அந்தத் தொழிற்சாலையை நம்முடைய இன்றைய முதல்வர், கலைஞர் அவர்கள்தான் திறந்து வைத்தார்கள்.

அதைப்போல, பிள்ளைபெருமாள்நல்லூர் என்ற இடத்திலே 330 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்ய அனுமதி கேட்டார்கள். நாங்கள் அனுமதி தந்தோம். 31—3—2001—க்குள் அவர்கள் வேலைகள் முடித்திருந்தாலும்கூட, தேர்தல் வந்த காரணத்தினாலே, அதைத் திறக்கக் கூடாது என்று தேர்தல் ஆணையம் சொல்லிவிட்ட காரணத்தால், ஏப்ரல் மாதத்திலே, அப்போது அந்த நிறுவனம் செயல்பட வந்தது, அதற்குப் பிறகு வந்த ஆட்சியிலே நீங்கள் அதைத் திறந்து வைத்தீர்கள். ஆக, அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது தி.மு.க. ஆட்சிக் காலத்தில்.

அதைப்போல, நீர்மின் நிலையம் குந்தா பகுதியிலே, 50 மெகாவாட் மின்சாரத்தை தி.மு.க. ஆட்சியிலே நிறைவேற்றினோம். இப்படி பல திட்டங்களை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றியது மட்டுமல்ல; பல திட்டங்களுக்கு அனுமதியும் கொடுத்தோம். நான் இன்றைக்கும் தெரிவித்துக்கொள்கிறேன், கடலூரில் இருக்கக்கூடிய, Cuddalore Power Corporation-க்கு 1,309 மெகாவாட் கொடுத்தோம் அனுமதி. ஆனால், அவர்கள் என்ன காரணத்தினாலோ தொழில் தொடங்கவில்லை.

அதைப்போல, Vembar Power Corporation 1,880 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய அனுமதி கொடுத்தோம் கடந்த கால ஆட்சியிலே, அவர்கள் Power Purchase Agreement போடாத காரணத்தினாலே மத்தியிலே இருக்கக்கூடிய Power Trading Corporation-லே போய் அவர்கள் ஒப்பந்தம் செய்துகொண்டு, இப்போது நான் மீண்டும் அமைச்சரான உடனே என்னிடத்திலே வந்து, நாங்கள் Power Purchase Agreement போட்டுவிட்டோம்; இப்போதாவது தூத்துக்குடியிலே ஒரு 1,880 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய அனுமதியுங்கள் என்று கேட்டார்கள். நான் வேலைகளை தொடங்குங்கள் என்று சொன்னேன்.

இரண்டு தினங்களுக்கு முன்னால் ஹுவுசி என்ற இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த மிகப் பெரிய தொழில் வங்கியினுடைய தலைவர், அவர்தான் Chennai Power Corporation என்ற அந்த நிறுவனத்திற்கு அனுமதி கேட்டார். அதையும் நீங்கள்தான் வழங்கினீர்கள்.

1993–லே. ஆனால், 1996–லே நான் அதற்கு அனுமதி கொடுத்து P.P.A. sign செய்கிறேன் என்று சொன்னபோது, நிலம் வாங்குவதிலே அவர்களுக்குப் பிரச்சினை வந்தது. பிறகு எல்லாவிதமான அனுமதியும் கொடுத்துவிட்டோம். ஆனால், ஆட்சி போனதற்குப் பிறகு அவர்களும்...

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அவர்களும் அந்த மின்சாரத்தை உற்பத்தி செய்யாத நிலையிலே இருந்தார்கள். அவர்களும் டெல்லிக்குப் போய் Power Trading Corporation-லே 1,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு இப்பொழுது P.P.A. Power Purchase Agreement போட்டுவிட்டார்கள். நிலத்தையும் என்னூருக்குப் பக்கத்திலே இப்பொழுது வாங்கிவிட்டார்கள். அவர்களும் அடுத்த மாதம் 1,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான E.P.C. contract கொடுக்கவிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், எந்த ஆட்சி என்பதல்ல முக்கியம். அனுமதி கொடுத்தது அ.தி.மு.க.வாக இருக்கலாம். ஆனால், தி.மு.க. ஆட்சியிலே அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படலாம். மொத்தத்திலே தமிழ்நாட்டிற்கு மின்சாரம் தேவை. அதை எந்த அரசாங்கமாக இருந்தாலும், அதை நிறைவேற்றியாக வேண்டும். இங்கேகூட, கூடங்குளம்பற்றிச் சொன்னார்கள். நான் அமைச்சராக இருந்தபோதுதான், மத்திய அரசாங்கம் இரஷ்ய அரசாங்கத்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டு 2,000 மெகாவாட் அணு மின் நிலையம் உற்பத்தி செய்வதற்கு அங்கே ஒப்பந்தம் செய்தார்கள்.

அதற்குள்ளாக, அங்கேயிருந்த சிலபேர் தூண்டிவிட்டு, ஏதோ அங்கே அணு மின் நிலையம் வந்தால், அந்தப் பகுதியே பாழாகிவிடும், அழிந்துவிடும் என்றெல்லாம் பிரச்சாரம் செய்து அதை நிறுத்தினார்கள். அவர்களுக்கெல்லாம் சமாதானம் சொல்லி, இப்பொழுது அந்த நிறுவனக் குழு கஷ்டப்படுகிறது. 2007 மார்ச் மாதம் அது 1,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யவிருக்கிறது. அதில் 750 மெகாவாட். நமக்குக் கேட்டிருக்கிறோம். உறுதியாக 750 மெகாவாட் மின்சாரம் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).



அதைப் போல பழுப்பு நிலக்கரி. ஜெயங்கொண்டம் பகுதியிலே இருக்கக் கூடிய அந்தப் பகுதியிலே, நம்முடைய அரசு சற்று முன்பு இருந்த அரசுகூட, நில ஆர்ஜிதம் செய்ய முயற்சி எடுத்து, 3,800 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து, இப்பொழுது நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்குக் கொடுத்துவிட்டோம். அவர்கள் மின்சார இலாகாவிற்குக் கொடுக்க வேண்டிய 60 கோடி ரூபாய் பணத்தைக் கொடுத்துவிட்டு, அந்த நிலத்தை அடுத்த மாதம் எடுத்துக்கொண்டு அங்கேயும் அவர்கள் அந்தத் தொழிலை தொடங்குகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வேலையும் நடைபெறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வளவு திட்டங்கள் இருந்தாலும்கூட, நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கவர்னர் உரையிலே தெரிவித்தார்கள். இந்த ஆட்சியில், வட சென்னையிலே, 500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கும், மேட்டூரிலே மேலும் ஒரு 500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று சொன்னார். உடனே டெல்லிக்குச் சென்றோம். மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ஷிண்டேவை சந்தித்தோம். ஒரே வாரத்திலே 1,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அனுமதி கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் ஒரு மாத காலத்திற்குள்ளாக டெண்டர்கள் கோரப்பட்டு, இரண்டு ஆண்டு அல்லது 30 மாத காலத்திலே இந்த இரண்டு 500 மெகாவாட் மின்சார உற்பத்திக்கான வேலைகள் தொடங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

Power Finance Corporation என்ற ஒன்று இருக்கிறது. அது இப்பொழுது 900 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு கடன் கொடுத்திருக்கிறது. யாராக இருந்தாலும், அங்கேதான் deposit செய்யப் போகிறார்கள். நம்பிக்கையான வாரியம். ஏனென்று சொன்னால், கொடுத்த பணம் யார் கொடுத்தாலும், திருப்பிக் கொடுக்கக்கூடிய சக்தி படைத்த நிறுவனம். அதன் காரணமாக, அரசாங்க ஊழியர்களாக இருந்தாலும் சரி, அல்லது போக்குவரத்துத் தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, பென்ஷன் வந்தால் அல்லது கிராஜுவிட்டி வந்தால் அதைக் கொண்டுபோய் அங்கேதான் போடுகிறார்கள். காரணம், கொஞ்சம் அதிக வட்டி கொடுக்கிறார்கள். எனவே, அதன் மூலமாக அங்கே இருக்கின்ற பணத்தை மின் வாரியமும் பயன்படுத்திக்கொள்கிறது. மற்றத் துறையினருக்கும் கொடுக்கிறார்கள். எனவே, அந்த வாரியம் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை இந்த நேரத்திலே

தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இறுதியாக ஒன்றை இந்த அவைக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகின்றேன்.

கடந்தகால அ.தி.மு.க. ஆட்சியில், அரசாங்க ஊழியர்களுக்கு மத்திய அரசாங்கம் கொடுத்த சலுகையைப்போல, அவர்கள் வாங்குகின்ற D.A.-வில் 50 சதவிகிதத்தை சம்பளத்தோடு இணைக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தை மாநில அரசு ஊழியர்களுக்கு அமல்படுத்தினார்கள். ஆனால், மின்சார ஊழியர்கள் என்ன பாவம் செய்தார்களோ தெரியவில்லை? அவர்களுக்கு கடைசி வரையிலே, நேற்று வரையிலேகூட அந்தச் சலுகைகள் கிடைக்கவில்லை. தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது, தமிழக அரசுக்கு மத்திய அரசாங்கம் என்னென்ன சலுகைகள் கொடுக்கிறதோ, அதையெல்லாம் கலைஞர் அவர்கள் தமிழக அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுத்துக் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இதே தமிழக அரசாங்கம், கடந்த காலத்திலே அரசாங்க ஊழியர்களுக்கு 50 சதவிகித D.A.—வை சம்பளத்தோடு இணைத்துவிட்டு, ஒரு இலட்சம் பேர் வேலை செய்யக் கூடிய மின்சார ஊழியர்களுக்குக் கிடையாது என்று சொல்லிவிட்டார்கள்.

*பிற்பகல் 1—35*

இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள் எட்டு தொழிற்சங்கத் தலைவர்கள், அனைத்துக் கட்சியையும் சேர்ந்தவர்கள்தான். ஆனால், அந்தத் தலைவர்கள் எல்லாம் என்னிடத்திலே கேட்டது நாங்கள் என்ன பாவம் செய்தோம், ஏன் எங்களுக்கு மட்டும் கொடுக்காமல் இருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். நான் இரண்டு தினங்களுக்கு முன்னாலே முதலமைச்சரிடத்திலே தனியாகப் பேசினேன். பேசுவதற்கே எனக்குக் கூச்சம், ஏற்கெனவே 1,530 கோடி ரூபாய் கொடுத்துவிட்டார். இன்னொரு 38 கோடி ரூபாயும் இந்த 2 இலட்சத்து 40 ஆயிரம் சுய நிதி பம்ப்செட் வைத்திருக்கின்றவர்களுக்கு மானியமாகக் கொடுத்துவிட்டார். இவரிடத்திலே எப்படிப் போய் பணம் கேட்பது என்று யோசித்து அவரிடத்திலே மெல்ல போய் கேட்டபோது, நிதித் துறைச் செயலாளரைக் கூப்பிட்டார், அவர் சொன்னார் மின் துறை தொழிலாளர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை சம்பள விகிதம் மாற்றிக் கொடுக்கிறோம். ஆகவே, இதை கொடுக்க வேண்டுமா என்பதை நாம் யோசிக்கவேண்டும் என்று சொன்னார். உடனே முதலமைச்சர் சொன்னார், 5 ஆண்டுகளுக்கு



ஒரு முறை சம்பள உயர்வு கொடுப்பது வேறு, ஆனால், மத்திய அரசாங்கம் கொடுக்கின்ற சலுகைகளை மின்சார வாரியத்திற்குக் கொடுக்கக்கூடாது என்று எங்கேயும் சட்டத்திலே இடம் இல்லை. எனவே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே இதற்கு எவ்வளவு செலவாகும் என்று கேட்டார். ஒரு மாதத்திற்கு 10 கோடியே 50 இலட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும் என்று கூறினேன். அப்படியானால், இன்று முதல்கொண்டு மின்சார ஊழியர்களுக்கு 50 சதவீத D.A.—வை சம்பளத்தோடு இணைத்துவிடுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அறிவிப்பு செய்து விடுங்கள் என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே மின்சார வாரியங்களில் முதல்முறையாக சம்பளத்தோடு D.A.—வையும் இணைக்கின்ற திட்டம் தமிழ்நாட்டிலேதான் இப்போது அறிவிக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, கடந்த மாதம் ஓய்வூதியதாரர்கள் என்னை அழைத்து ஒரு விழா நடத்தினார்கள். அதிலே கடந்தகால ஆட்சியிலே பறிக்கப்பட்ட சலுகைகள் எல்லாம் எங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதையும் முதலமைச்சரிடத்திலே சொன்னேன். அவர் தெளிவாகச் சொல்லிவிட்டார். அரசாங்க ஊழியர்களுக்கு என்னென்ன சலுகைகள் அறிவித்திருக்கிறோமோ, ஓய்வு பெற்றவர்களுக்கு அந்தச் சலுகைகள் அத்தனையும் மின்சார வாரியத்திலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் கொடுக்கப்படும் என்று அறிவித்து விடுங்கள் என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலமாக ஓய்வு பெற்ற மின்சார அரசு ஊழியர்கள் 60 ஆயிரம் பேர், 33 ஆண்டுகள் பணியாற்றினால்தான் அந்தப் பலன்கள் கிடைக்கும் என்பதற்குப் பதிலாக, 30 ஆண்டுகள் பணியாற்றியிருந்தாலும் அந்தச் சலுகைகள் கிடைக்கும் என்பதிலிருந்து அனைத்துச் சலுகைகளும் அவர்களுக்குக் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். அந்த வெட்டுத் தீர்மானங்கள் எல்லாவற்றையும் நான் படித்துப் பார்த்தேன். நம்முடைய திரு. ஜெயக்குமார்கூட மகளிர் சுய உதவிக் குழுவில் இருக்கின்றவர்கள் உற்பத்திச் செய்கின்ற பொருட்களை நாமே வாங்கி விற்பனை செய்யவேண்டும் என்று ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். அந்தத் தீர்மானங்களை எல்லாம் படித்துப் பார்த்தேன். அத்தனைக்கும் பதில் சொல்ல வேண்டுமென்றால் இன்னும் ஒரு இரண்டு மணி

நேரம் தேவை. ஒன்றை மட்டும் சொல்லுகிறேன். இலாகாவினர் வந்திருக்கிறார்கள். நீங்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் அவர்கள் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். அத்தனை வெட்டுத் தீர்மானங்கள்மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொண்டு, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மின்சாரம் மற்றும் சிறு தொழில் அமைச்சர் அவர்கள் தன்னுடைய ஆழ்ந்த அனுபவத்தையும், தமிழகத்தினுடைய எதிர்காலத்தில் தனக்கு இருக்கின்ற கரிசனையையும், நலிந்தவர்கள்மீது இந்த அரசு கொண்டிருக்கிற அக்கறையையும் புலப்படுத்துகின்ற வகையிலே பல்வேறு அற்புதமான அறிவிப்புகளையெல்லாம் இன்று வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் உள்ளபடியே பாராட்டையும் நன்றியையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த PMRY, Prime Ministei 's Rozgar Yojana என்கிற திட்டத்தைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டு 27 ஆயிரம் இளைஞர்களுக்கு, இளம் பெண்களுக்கு கடனுதவி வழங்கப்படும் என்று சொன்னார்கள். அதிலே ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திலும் அதற்காக ஒரு Task Force நியமிக்கப்பட்டு அவர்கள் அதைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால், தேர்ந்தெடுத்து நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு வந்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு அவர்களுக்குக் கடனுதவி தருவதாக வாக்களிக்கப்பட்டு வங்கிகளுக்கு அவர்கள் பரிந்துரை செய்யப்படுகிறார்கள். ஆனால், formalities, procedures எல்லாம் முடிந்த பிறகும்கூட, அந்த வங்கிகள், அந்தக் கடன்களை வழங்குவது இல்லை. எனவே, இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு, நிச்சயமாகச் செய்ய வேண்டும். இந்த Task Force—ல் அந்த மாவட்ட Lead Bank அதிகாரியும் உறுப்பினராக இருக்கிறார். எனவே, ஒரு முறை இந்த Task Force கூடி அந்த இளைஞரைத் தேர்ந்தெடுத்துவிட்டால் அவருக்கு நிச்சயமாக எந்த வங்கிக்கு அந்த மனு அனுப்பப்படுகிறதோ, அந்த வங்கி அந்தக் கடனுதவியை வழங்க வேண்டுமென்கிற உறுதியினை நாம் பெற்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களினுடைய கோரிக்கை நியாயமானது. விண்ணப்பங்கள் கொடுத்து, பரிசீலனை செய்து, தகுதி படைத்தவர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே சில வங்கிகள் கடன் கொடுக்கவில்லை என்றால், அது தவறு. நான் நம்முடைய மத்திய நிதியமைச்சர், நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர், நிச்சயமாக அவர் சென்னைக்கு வரும்போது அவரிடத்திலே பேசி, ஏனென்றால் இது பிரதமருடைய பெயரில் உள்ள திட்டம் என்பதாலே, அவர் பெயராலே இருக்கிற திட்டம் என்பதாலே, எல்லா தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, இந்த விண்ணப்பங்கள் வந்தால், உடனடியாக ஒரு மாத காலத்திற்குள்ளாக அனைவருக்கும் பணம் கொடுத்தே தீரவேண்டும் என்ற ஆணையைப் பிறப்பிக்க வழி செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை. ஆரோக்கியமான விவாதம்தான். அனுமதிக்க வேண்டுகிறேன். Subject-தான். இது கருத்துதான், வேறொன்றுமில்லை. மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் நீண்ட பதிலுரையிலே ஒருசில விளக்கங்களைச் சொன்னார்கள். அதற்கு சில விளக்கங்களை அவரிடமும் நான் கேட்டுப் பெற விரும்புகிறேன். நானும் சில விளக்கங்களைச் சொல்ல விரும்புகிறேன். முதலிலே Gas allotment பற்றிச் சொன்னார்கள். மின்சார உற்பத்திக்குத் தேவைப்படுகின்ற எரிவாயு ஒதுக்கீட்டுப் பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். அதை ஒதுக்கீடு செய்கின்ற அதிகாரம் மத்திய அரசின் கையில்தான் உள்ளது. மத்திய அரசுதான் ஒதுக்குகிறது. இங்கே R.K. Energy, Rameswaram போன்ற தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட எரிவாயு பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கு அனுமதி வழங்கியது மத்திய அரசு. ஆனால், வழங்குவதற்கு முன்பாக மாநில

அரசையோ அல்லது தமிழ்நாடு மின்சார வாரியத்தையோ அவர்கள் தொடர்பு கொள்ளவேயில்லை. ஒரு மரியாதைக்குக்கூட தகவல் சொல்லவில்லை. அதுபோல, அதற்குப் பின்பு அவர்கள் ஒதுக்கீடு பெற்று வந்ததற்குப் பின்புதான் நாங்கள் இந்த மாதிரி ஒதுக்கீடு செய்தது தவறு என்று மீண்டும் அவர்கள் மத்திய அரசுக்கு நாங்கள் வலியுறுத்திச் சொன்னோம். அதற்குப் பின்பும் மத்திய அரசு இன்றைக்குத் தனியார்களுக்கு வழங்குகின்ற போக்கையே கொள்கை முடிவாகக் கொண்டிருக்கிறது. அந்தக் கொள்கை முடிவை தடுத்து நிறுத்துவதற்கு நீங்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிலக்கரி வாங்குவது தொடர்பாக மத்திய அரசு நமக்குக் கொடுக்க வேண்டிய, ஒப்பந்தப்படி கொடுக்க வேண்டிய நிலக்கரியை, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 14 சதவீதம் இப்போது குறைத்திருக்கிறது. அந்தப் பற்றாக்குறையைச் சமாளிக்க வெளி நாட்டிலேயிருந்து இறக்குமதி செய்ய வேண்டுமென்று நிலை வந்தபோது, சென்ற அம்மாவினுடைய அரசும், வெளி நாட்டிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யக் கூடாது என்று முடிவெடுத்து, மத்திய அரசினுடைய நிறுவனத்திலேயே P.T.C.–Power Trading Corporation–இலேதான் சென்ற மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கொள்முதல் செய்தது, மத்திய அரசினிடமிருந்துதான் வாங்கியது என்பதையும் இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். அதே அம்மாவினுடைய அரசு எடுத்த முடிவுகளையே, இந்த இரண்டு விஷயங்களிலேயும் நீங்கள் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மூன்றாவதாக இங்கே.. (மணியடிக்கப்பெற்றது) மின்சார வாரியத்தினை பிரிப்பது குறித்து (குறுக்கீடு) அவ்வளவுதான். அவர் சொன்னதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையாற்றக் கூடாது. (குறுக்கீடுகள்)

**திரு. இரா. விசுவநாதன்:** இல்லை, இல்லை. Support செய்கிறோம். நல்ல கருத்து. (குறுக்கீடுகள்) தமிழ்நாடு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேச்சை முடியுங்கள். (குறுக்கீடு) விரைவாகப் பேச்சை முடியுங்கள்.



**திரு. இரா. விசுவநாதன்:** தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பிரிப்பதிலே மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு எடுத்த கொள்கை முடிவை நீங்களும் அப்படியே ஏற்றுக் கொண்டிருப்பதற்கு நன்றி. ஆனால், ஒரு கருத்து. பக்கத்து மாநிலங்கள் ஏற்றுக்கொண்டால் நாங்களும் ஏற்றுக்கொள்கிறோம் என்ற நிலைப்பாடு தவறானது. பக்கத்து மாநிலங்கள் ஏற்றுக்கொண்டால் நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே, பக்கத்து மாநிலங்களை ஒப்பிடாமல் தமிழ்நாட்டிற்கு என்று தனித்தன்மையைக் கருதி எந்தச் சூழ்நிலையிலும் எப்போதும் தமிழ்நாடு மின்சார வாரியத்தை பிரிக்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதன், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் விளக்கம் சொல்கிறார், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** திரு. விசுவநாதன் அவர்கள் சொல்ல வந்ததை நான் புரிந்துகொண்டேன். புரிந்த வரையிலே சொல்கிறேன். அவர் முதலிலே சொன்னார். இந்த எரிவாயு எங்களுக்கே தெரியாமல் கொடுத்துவிட்டார்கள்; அது தவறு என்று சுட்டிக்காட்டினோம்; ஆனால், மீறி மத்திய அரசு கொடுத்துவிட்டது என்று சொன்னார்கள். அது மத்திய அரசாங்கத்தினுடைய போக்காகக்கூட இருக்கலாம். ஆனால், இப்போது இந்த அரசாங்கம் என்ன சொல்லியிருக்கிறது என்று சொன்னால், முதலமைச்சர் டெல்லிக்குச் சென்றபோது, எங்களுக்குத் தெரியாமல், ஒரே ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்குக்கூட தமிழ்நாட்டிலே தனியாருக்கு எரிசக்தி, எரிவாயு கொடுக்கக் கூடாது என்று சொல்லியிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி மீறிக் கொடுத்தால், Power Purchase Agreement போடக்கூடிய அதிகாரம் நம்மிடத்திலேதான் இருக்கிறது. நீங்கள் அதைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம். ஆனால், இப்போதும் சொல்கிறேன். அவர்கள் என்ன எரிவாயுவை வைத்துக்கொண்டு, மின்சாரம் உற்பத்தி செய்துவிட்டு, ஆகாயத்திலேயா கொடுப்பார்கள்? நம்முடைய அரசாங்கத்திற்குத்தான் கொடுக்க வேண்டும்.

P.P.A. sign பண்ணவில்லை என்றால் அந்த மின்சாரத்தை அவர்கள் ஒன்றும் செய்ய முடியாது. இருந்தாலும், அவர்கள் எதிர்த்து நிற்கிறார்கள். அதையும் மீறி கொடுத்துவிட்டார்கள் என்ற வாதத்தை ஏற்றுக்கொள்கிறேன். இந்த அரசாங்கத்தில், அப்படி மீறிக் கொடுத்தால், அப்படி யாராவது தொழில் தொடங்க வந்தால், இந்த அரசாங்கம் அவர்களுக்கு Power Purchase Agreement போட்டு, மின்சாரத்தை வாங்க மாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) அது ஒன்று. இரண்டாவது, நிலக்கரியைப் பொறுத்தவரையில், நீங்கள் M.M.T.C.—யிலே தான் வாங்கினீர்கள். நான் எந்தக் குறையும் சொல்லவில்லை. ஆனால், 1991—லிருந்து 1996—வது ஆண்டுவரை நிலை பெற்றபோது, நடந்ததை நான் சொன்னேன். வேறு ஒன்றும் நான் சொல்லவில்லை. மூன்றாவது, அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். அவையெல்லாம் பரிசீலிக்கப்படும் என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடு) சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு பேரிலே ஒருவர் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் மின்சாரத் துறையிலே பணி புரிகிற தொழிலாளர்களுக்கும், ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கும் பல்வேறு சலுகைகளை அறிவித்து, மகிழச் செய்திருப்பதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எனது வாழ்த்துதலையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மின் வாரியத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிற தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற ஒரு வேண்டுகோள் இருக்கிறது. அதையும் பரிசீலிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) கொடுப்பார், வாய்ப்புக் கொடுப்பார். கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) நான்தான் சொல்லிவிட்டேனே. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு உறுப்பினருக்கு நான் ஏற்கெனவே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியத்தைப் பாராட்டி நன்றி சொல்லிவிட்டீர்கள். இன்னும் என்ன? உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** திரு. ஜெயகுமார், நீங்கள் கேட்பதற்கு நான் பதில் சொல்கிறேன். முதலில் அதைச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அவருக்குப் பதில் சொல்லிவிட்டு அப்புறம் நீங்கள் கேட்பதற்குச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பற்றி இங்கே கேட்டார்கள். தி.மு.க. ஆட்சியிலேதான் காலித் கமிஷனிலே 18 ஆயிரம் பேருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று சொன்னபோது, முதலமைச்சர் அந்தத் தொழிலாளர்களை எல்லாம் கூப்பிட்டு வேலை கொடுங்கள் என்று சொன்னார்கள். 18 ஆயிரம் பேருக்கு வேலை கொடுத்தோம். அதைப்போலவே, அனல் மின் நிலையத்திலே இருக்கக்கூடிய ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று எல்லாக் கட்சிகளும் கேட்டன. அதற்கு ஒரு Attendance Register இருந்தது. அது மேட்டூராக இருந்தாலும், வட சென்னையாக இருந்தாலும், அங்கே அனல் அல்லது தூத்துக்குடியாக இருந்தாலும், அனல் மின்நிலையங்களிலே யார் யார் Contract Labourers இருக்கிறார்கள் என்று attendance இருந்தது. ஆனால், அவை அத்தனையும், அதுவும் 10 ஆயிரம் பேருக்கு நிரந்தரம் செய்துவிட்டோம். இப்போது இருப்பது Distribution side—இலே இருக்கக்கூடிய ஒப்பந்தத் தொழிலாளர்கள். அதை நான் விளக்க வேண்டும். Distribution—இலே இருக்கக்கூடியவர்களுக்கு

attendance கிடையாது. ஒரு நேரத்தில் வேலையிருந்தால் மயிலாப்பூரிலே செய்வார்கள், 10 நாளைக்கு. அதோடு சரி. அடுத்து 10 நாள் கழித்து பெரம்பூரிலே வேலை செய்ய வேண்டுமென்றால், அந்தச் சுற்று வட்டாரத்திலே இருக்கிற Contractor தான் வருவார். இதிலே சிக்கல்கள் இருக்கின்றன. இருந்தாலும்கூட, இந்த அரசாங்கம், அவருடைய கோரிக்கையை முதலமைச்சர் பரிசீலனை செய்வார், பரிவோடு பரிசீலனை செய்வார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில்கள் மற்றும் எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையின்மீது நடந்த விவாதத்தையொட்டி, நம்முடைய மூத்த அமைச்சர் இங்கே விரிவானதொரு பதிலுரையை வழங்குகிறபோது, எல்லா உறுப்பினர்கள் பேசியதற்கும், அந்தக் கோரிக்கைகளை ஏற்று, பல்வேறு அறிவிப்புகளை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றை ஒவ்வொன்றாகச் சொல்லிப் பாராட்டுவதற்குரிய நேரம் இல்லாத காரணத்தினாலே, அவற்றுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவிப்பதோடு, இங்கே, குறிப்பாக, தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் சம்பந்தமாகவும், அதேபோல தற்போது அவர்கள் பல கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கிறபோது, ஒப்பந்தத் தொழிலாளர்களையும், மீதி இருக்கக்கூடியவர்களையும், கருணையோடு பரிசீலித்து அவர்களுடைய கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்ததற்கும், என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அவரிடத்திலே (குறுக்கீடு) நேரில் கேட்டு கோரிக்கை வைத்தபோது, அந்தக் கோரிக்கையை ஏற்று, திருப்பூர் பகுதியிலே இரண்டாயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் ஒரு தொழிற் பேட்டை குடியிருப்பு வசதியோடு உருவாக்கப்படும் என்று இங்கே அறிவித்ததற்கும், திருப்பூர் தொகுதி மக்களின் சார்பிலும், தொழிலாளர்கள் அனைவரின் சார்பிலும் எங்களின் மனநிறைவயான நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா. (குறுக்கீடு) திரு. விசுவநாதன், நீங்கள்தான் முதலிலேயே பாராட்டிவிட்டீர்களே? (குறுக்கீடு) பாராட்டியாகிவிட்டது. நன்றி சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள்.



**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம்தான் மிக ஆரோக்கியமான ஒரு விவாதம் அமைதியான முறையில், சிறப்பாக இந்த மாமன்றத்திலே நடைபெற்றிருக்கிறது என்பதை நினைக்கின்றபோது பெருமையாக இருக்கிறது. அதை நடத்தி முடித்திருக்கின்ற நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு score பண்ணியிருக்கிறார்கள். சலுகைகளுக்கு மேலே சலுகைகளாக, அறிவிப்புகள் வெளியிட்டிருப்பதற்கு நான் உண்மையிலேயே நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1—50

அதேநேரத்திலே இலவசமாக விவசாயத்திற்கு நீங்கள் வழங்குகின்ற மின்சாரமும், வீடுகளுக்கு நீங்கள் கொடுக்கின்ற மின்சாரமும் கிராமப் பகுதிகளிலே ஒரே மின் இணைப்பின் மூலமாக வருகின்றது. விவசாயத்திற்கு அதிகமான மின்சாரத்தை அவர்கள் இழுத்துக்கொள்கின்றபோது, வீடுகளுக்கு மின்சாரம் வருவதில்லை. ஆகவே, Low voltage என்பது மட்டுமல்ல; சில இடங்களிலே மின்சாரமே வருவதில்லை. அதனாலே கிராமப்புறங்களிலே இருக்கின்ற குழந்தைகள் படிப்பும் கெட்டுப்போகின்றது. அதே நேரத்திலே, சென்னையிலேயும், சட்டமன்றத்திலேயும் என்ன நடக்கின்றது என்பதையும் தொலைக்காட்சிகளின் மூலமாக அவர்களாலே காணமுடியாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, அதற்காக வீடுகளுக்குத் தனியாகவும், விவசாயத்திற்குத் தனியாகவும் மின் இணைப்பு வழங்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக வீடுகளுக்குத் தனியாக, விவசாயத்திற்குத் தனியாகக் கொடுக்க வேண்டியதில்லை. புதிய மின்நிலையங்களை உருவாக்கிவிட்டால், அந்தக் குறை போய்விடும். இந்த ஆண்டு, 60 புதிய மின்நிலையங்கள் நாங்கள் தொடங்க இருக்கின்றோம். மாண்புமிகு அம்மையாருடைய தொகுதியிலே எங்கேயாவது தேவைப்பட்டால், புதிய Sub-stations கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத் துறையில் தொழிலாளர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதைப்போல நெசவாளர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். பல்வேறு நிலைகளிலே வந்த கோரிக்கைகளையெல்லாம் ஏற்று, இப்போது இதுவரை வரலாறு காணாத அளவிற்கு மின் துறைக்கு சலுகைகள் வாரி வாரி வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நல்ல செய்தியை சொல்லக்கூடிய அதே வேளையில், மின்சார வாரிய ஊழியர்கள் இதுவரை எப்பொழுதும் கண்டிராத அளவிற்கு மிகப்பெரிய சலுகைகளை வழங்கியிருக்கிற இந்தச் சூழ்நிலையில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, முதலமைச்சர் அவர்களுக்கும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, நன்றி என்று சொல்லி, அதைப்போல, தொழில் வளர்ந்து வருகிற மேட்டூர் நகரத்தில் ஒரு தொழிற்பேட்டையை வழங்கவேண்டும் என்று கேட்டிருந்தோம். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவாகள் அறிவிப்பார்களா என்பதை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்கள் நேராக என்னிடத்திலே பேசும்போது தருமபுரிக்கு ஒரு தொழிற்பேட்டை வேண்டுமென்றார். அதை அறிவித்தேன். இப்போது மேட்டூருக்குக் கேட்கிறார். நிலம் வாங்கித் தந்தால் அங்கேயும் தொழிற்பேட்டை அமைத்துத் தரப்படும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்) இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 14 – எரிசக்தித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 14 – எரிசக்தித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன். (குறுக்கீடுகள்)

**திரு. என். நன்மாறன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. விசுவநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன் இருக்கையில் இல்லை. திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி.

திரு. செ.ம. வேலுசாமி இருக்கையில் இல்லை. திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. பரஞ்ஜோதி.

**திரு. மு. பரஞ்ஜோதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. பரஞ்ஜோதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பாண்டுரங்கன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. சந்திரகாசி.



**திரு. மா. சந்திரகாசி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சந்திரகாசி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ஜெயபால்.

திரு. எஸ். ஜெயபால் இருக்கையில் இல்லை. திரு. எஸ். ஜெயபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்.

**திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.வி.ஆர். வீரகபிலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஜி. லதா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. மகேந்திரன்.

திரு. இ. மகேந்திரன் இருக்கையில் இல்லை. திரு. இ. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

திரு. சு. சிவராஜ் இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். பிரேமா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜாண் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

பிற்பகல் 1-55

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,211,56,44,000/–, மூலதனக் கணக்கில் ரூ.25,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.65,98,70,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (ஆ) கோரிக்கை எண் 44 – சிறுதொழில்கள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 44 – சிறுதொழில்கள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன், இருக்கையில் இல்லை. திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என். ஆர். ரங்கராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்.

**திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.வி.ஆர். வீரகபிலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி.

திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை. திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பாண்டுரங்கன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சந்திரகாசி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. விசுவநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன், இருக்கையில் இல்லை. திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. மகேந்திரன்.

திரு. இ. மகேந்திரன், இருக்கையில் இல்லை. திரு. இ. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன்.



**திரு. ஆர்.டி. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சிறுதொழில்கள் துறை பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.17,21,71,000/-, மூலதனக் கணக்கில் ரூ.15,04,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (2-8-2006) புதன்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-58 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

8. குறிப்பிடப்பட்ட சில வேளாண் விளைபொருட்களின் விற்பனைக்காக நீலகிரி மாவட்டத்தினை அறிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவித்தும், "நீலகிரி அங்காடிக் குழு" என ஒரு அங்காடிக் குழு அமைத்தும், விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பகுதிகளை முறையே உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி மற்றும் கூடலூர் விற்பனைக் கூடங்களின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளாக அறிவித்தும், வேளாண்மைத் துறையின் 9–1–2006 ஆம் நாளிட்ட 10 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(1)(C) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

9. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நாற்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

18. மானியக் கோரிக்கை எண் 14–தமிழ்நாடு மின்சார வாரியம், மின்சார ஆய்வுத் துறை, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் பற்றிய கொள்கை விளக்க குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

19. எரிசக்தித் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2006. (தமிழ், ஆங்கிலம்)

20. மானியக் கோரிக்கை எண் 44 – சிறுதொழில்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

21. சிறுதொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)



## இணைப்பு I

(59 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007

### தமிழ்நாடு மின்சார வாரியம்

1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின்கீழ் 1–7–1957 அன்று நிறுவப்பட்ட தமிழ்நாடு மின்சார வாரியம் ஒரு சட்ட நிலையுடன் கூடிய அமைப்பாகும். மின் உற்பத்தி, அனுப்புகை மற்றும் பகிர்மானம் ஆகியவற்றைச் சீரிய முறையில் மேற்கொண்டு மின் பயனீட்டாளர்களுக்குத் தரமான மின்சாரத்தை வழங்குவது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் முதன்மையான குறிக்கோளாகும்.

31–03–2006 அன்றுள்ளபடி தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மொத்த மின் உற்பத்தி நிறுவு திறன் 10,011 மெகாவாட்டாகும். இதில் வாரிய மின் உற்பத்தி நிலையங்கள் 5,531 மெகாவாட், தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் 1,101 மெகாவாட், மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பங்கு 2,841 மெகாவாட், வெளிப்புற உதவியாக 360 மெகாவாட் மற்றும் பிற (தன்பயன் மின்னாக்கிகள்) 178 மெகாவாட் ஆகியவை அடங்கும். இவை தவிர தனியார் காற்றாலைகளிலிருந்து 2,879 மெகாவாட்டும் வாரியத்தின் காற்றாலைகளிலிருந்து 19 மெகாவாட்டும் கிடைக்கப் பெறுகிறது. மேலும் இணைமின் உற்பத்தி நிலையங்களிலிருந்து 296.6 மெகாவாட் மின்சாரமும், தாவரவியல் (Bio-mass) நிலையங்களிலிருந்து 40.35 மெகாவாட் மின்சாரமும் பெறப்படுகிறது.

இதுவரை எட்டப்பட்டுள்ள உச்ச மின் தேவை 8,544 மெகாவாட்டாகும். இது 11–05–2006 அன்று எட்டப்பட்டது. மின்பயனீட்டு அளவின் வளர்ச்சி ஆண்டொன்றிற்கு 8 விழுக்காடாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 2005–2006 ஆம் நிதியாண்டின் மின் பயனீட்டளவு 56,055 மில்லியன் யூனிட்டுகளாகும். 05–04–2006 அன்று, ஒரு நாளின் உச்சப் பயனீடு 173.06 மில்லியன் யூனிட்டுகளாக எட்டப்பட்டுள்ளது.

31–03–2006 நிலவரப்படி மொத்தம் 1,110 துணை மின் நிலையங்களும், 1.47 இலட்சம் கி.மீ. மிக உயரழுத்த/உயரழுத்த மின் கம்பிகளும், 4.87 இலட்சம் கி.மீ. தாழ்வழுத்த மின் கம்பிகளும், 1.67 இலட்சம் மின் பகிர்மான மின் மாற்றிகளும் மற்றும் 178.03 இலட்சம் மின் இணைப்புகளும் உள்ளன.

## I. மின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்

அதிகரிக்கும் மின் தேவையை நிறைவுசெய்ய தமிழ்நாடு மின்சார வாரியம் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (2002–07) அதனுடைய மின் உற்பத்தித் திறனை 2,408.8 மெகாவாட் அளவிற்கு உயர்த்தவும் அதற்குத் தக்கவாறு மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மானத்தை விரிவாக்கவும் திட்டமிட்டுள்ளது.

2005–06 ஆம் ஆண்டில், மத்திய துறையில், தேசிய அனல்மின் கழகத்தின் தால்ச்சர் மிகு திறன் அனல் மின் நிலையம்– நிலை II–லிருந்து 500 மெகாவாட் திறனுடைய நான்காவது பிரிவு இயக்கி வைக்கப்பட்டதால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 136 மெகாவாட் மின்சாரம் பங்காகக் கிடைக்கப் பெறுகிறது. தனியார் துறையில் அபான் பவர் கம்பெனி என்ற நிறுவனம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கருப்பூரில் 113 மெகாவாட் திறனுடைய எரிவாயு மின் திட்டத்தை இயக்கி வைத்தது. வாரியத் துறையில் நீலகிரி மாவட்டத்தில் 150 மெகாவாட் திறன் கொண்ட பைக்காரா இறுதி நிலை புனல் மின் திட்டம் இயக்கி வைக்கப்பட்டது.

2006–07 ஆம் ஆண்டில் வாரியம், மத்தியத் துறை மற்றும் தனியார் துறையிடமிருந்து கூடுதல் நிறுவுதிறன் 749.3 மெகாவாட்டாக உயரும். (வாரியம்–130.3 மெகாவாட், மத்தியத் துறையிலிருந்து பங்கு–566 மெகாவாட் மற்றும் தனியார் துறை 53 மெகாவாட்) மேற்சொன்ன திட்டங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:—

வாரியத் துறையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூபாய் 38.5 கோடி செலவில் 9.5 மெகாவாட் திறன் கொண்ட வழுதூர் எரிவாயு சுழலி மின் திட்டமும் (கூடுதல்), ஈரோடு மாவட்டத்தில் ரூபாய் 19.5 கோடி செலவில் 30 மெகாவாட் திறன் கொண்ட பவானி கட்டளை தடுப்பணை-I புனல் மின் திட்டமும் இயக்கி வைக்கப்படும்.

தனியார் துறையில் எரிவாயுவை எரிபொருளாகக் கொண்ட 53 மெகாவாட் திறனுடைய மின் உற்பத்தித் திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வளந்தாவியில் ஆர்.கே.எனர்ஜி என்ற நிறுவனத்தினால் இயக்கி வைக்கப்படும்.



மத்தியத் துறையில் கூடங்குளம் அணுமின் நிலையத்தின் 1,000 மெகாவாட் திறன் கொண்ட முதல் பிரிவு 2006–07–ல் இயக்கி வைக்கப்படவிருக்கிறது. இதிலிருந்து 463 மெகாவாட் தமிழ்நாட்டின் பங்காகக் கிடைக்கும். மேலும், 2 x 220 மெகாவாட் திறனுடைய கைகா அணுமின் நிலையம் நிலை–2, 2006–07–ல் இயக்கி வைக்கப்படவிருக்கிறது. தமிழ்நாட்டின் பங்காக 103 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்.

## II. 2006–07-ல் மின் விநியோக நிலைமை

தமிழக அனல்மின் நிலையங்களின் செயல்பாட்டை மேம்படுத்தியும், காயங்குளம் எரிவாயு மின் உற்பத்தி நிலையம் மற்றும் கிழக்கு மண்டல மின் நிலையங்களிலிருந்து கூடுதலாக மின்சாரம் பெற்றும், தனியார் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பெறும் மின்சாரத்தை கட்டண விகிதாச்சார முறையில் பெற்றும், அரிய புனல் மின் இருப்பை சிறந்த முறையில் திட்டமிட்டுப் பயன்படுத்தியும், மின்வெட்டு/மின்தடை இல்லாத மின்சாரம் தமிழகத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாட்டில் உள்ள அனல்மின் நிலையங்களின் செயல்பாடு நன்றாக உள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்ந்து வடசென்னை, தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல்மின் நிலையங்கள் இந்திய அரசின் தங்கம்/வெள்ளிப் பதக்கங்களைத் தட்டிச் சென்றுள்ளன. மேலும், மேற்கண்ட அனல் மின் நிலையங்கள் 2005–06 ஆம் ஆண்டிற்கான தங்கம்/ வெள்ளிப் பதக்கங்களைப் பெறத் தகுதி பெற்றுள்ளன.

மேட்டூர் உட்பட 01–04–2006 அன்றுள்ளபடி நீர் இருப்பு 1,366.740 மில்லியன் யூனிட்டுகளாக இருந்தது. இது கடந்த வருடம் இதே நாளில் 1,095.535 மில்லியன் யூனிட்டுகள் என்ற அளவில் இருந்தது. 2005–06 ஆம் ஆண்டில் புனல் மின் உற்பத்தி 6,141 மில்லியன் யூனிட்டுகளாக இருந்தது. இந்தக் கூடுதல் புனல் மின் உற்பத்திக்கு காரணம் கடந்த வருடம் பெய்த கடும் மழை ஆகும். 2006–07 ஆம் ஆண்டில் புனல் மின் உற்பத்தி 4,250 மில்லியன் யூனிட்டுகளாக இருக்கும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2006–07 ஆம் ஆண்டின் மின் தேவை 9,200 மெகாவாட்டாகவும், சராசரி மின் பயனீட்டளவு நாளொன்றுக்கு 162 மில்லியன் யூனிட்டுகளாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கையிருப்பிலுள்ள நிறுவுதிறன் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள மேற்சொன்ன கூடுதல் நிறுவுதிறன் ஆகியவற்றைக் கொண்டும் மின் தேவையை நிறைவேற்ற முடியும்.

பத்தாவது திட்டக் காலத்தின் (2002–07) திட்ட மதிப்பீடு ரூ.8,000 கோடியாகும். 2006–07 ஆம் ஆண்டிற்கான மூலதன திட்ட மதிப்பீடு ரூ.1,797.65 கோடியாகும். வெவ்வேறு பிரிவுகளில் இப்பணிகளுக்கான திட்ட மதிப்பீடுகள் கீழே தரப்பட்டுள்ளன:–

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | விவரம் | பத்தாவது திட்ட மதிப்பீடு 2002 07 | 2006 07 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 1. | உற்பத்தி | 1,212 | 189.50 |
| 2. | புதுப்பித்தலும், நவீனமயமாக்குதலும் | 364 | 45.15 |
| 3. | மின் அனுப்புகை மற்றும் மின்பகிர்மானம் | 5,914 | 1,205.40 |
| 4. | ஊரக மின்மயமாக்குதல் | 490 | 100.50 |
| 5. | நில அளவை மற்றும் ஆய்வுகள் | 20 | 2.50 |
| 6. | கட்டுமான காலத்தின் வட்டி அளவு | | 254.60 |
| | மொத்தம் | 8,000 | 1,797.65 |

மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மான அமைப்பை மேம்படுத்தும் வகையில் 2006–07 ஆம் ஆண்டில் பல்வேறு மின் அழுத்தங்களில் 60 புதிய துணை மின் நிலையங்களும் சுமார் 800 சுற்று கிலோ மீட்டர் மிக உயரழுத்த மின் கம்பிகளும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பத்தாவது திட்டக் காலத்தில் (2002–07) மொத்தம் 315 புதிய துணை மின் நிலையங்களை அமைக்கவும், 4,000 சுற்று கிலோ மீட்டர் மிக உயரழுத்த மின்கம்பிகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## III. மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மான மேம்பாட்டுத் திட்டங்கள்

### 1. விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டம் (APDRP)

மத்திய அரசின் மின் துறை அமைச்சகம், மாவட்ட தலைநகரங்களை உள்ளடக்கிய ரூபாய் 18.91 கோடி செலவிலான 16 திட்டங்களுக்கு



ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டங்களை நடைமுறைப்படுத்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட வேண்டும். இதற்காக ஒப்பந்தத்தில் சில நிபந்தனைகளை (தனி உரிமை, சுற்றுமுறை அடிப்படை போன்ற) விலக்கிக்கொள்ளுமாறு தமிழ்நாடு அரசு இந்திய அரசின் மின் துறை அமைச்சகத்திடம் கோரியுள்ளது. இதற்கான பதில் மத்திய மின் துறை அமைச்சகத்திடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

### 2. ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கி திட்டங்கள் (NABARD)

ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி–IX–ன்கீழ் ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கி, தர்மபுரி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் கரூர் ஆகிய 5 மாவட்டங்களுக்கு ரூபாய் 63.48 கோடி அளவிற்கு நிதியுதவி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டங்கள் 2005–06–ல் முடிக்கப்படவேண்டும். இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 49.61 கோடி 31–03–2006 வரை செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூபாய் 13.87 கோடி 31–03–2007–க்குள் செலவிடப்படும். இதற்காக ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கியிடம் இத்திட்டத்திற்கு ஒரு வருட கால நீட்டிப்பு கோரப்பட்டுள்ளது.

### 3. ஊரக மின்மயமாக்கல் நிறுவனம் (REC) உதவும் திட்டங்கள்

ஊரக மின்மயமாக்கல் (REC) நிறுவனம் 2003–04 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுத் திட்ட செயல்பாடாக மின் தொடர் இழப்பைக் குறைப்பதற்காக நிதி உதவி வழங்கி வருகிறது. கீழ்க்காணும் மாவட்டங்களில் மின் தொடர் இழப்பைக் குறைக்கும் திட்டங்களுக்கு இந்த நிறுவனம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது.

| | திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| | – 87.86 |
| 1. கோயமுத்தூர் (வடக்கு) | – 138.92 |
| 2. திருச்சி (வடக்கு) | – 109.35 |
| 3. திண்டுக்கல் | – 75.64 |
| 4. மதுரை | – 411.77 |
| மொத்தம் | |

மேற்கண்ட திட்டங்களுக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு 31–03–2006 வரை ரூபாய் 99.19 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 4. மின் நிதிக் கழகம் உதவும் திட்டங்கள்

மின் நிதிக் கழகம், ரூபாய் 327.57 கோடி மதிப்பீட்டிலான 19 மாவட்டங்களை உள்ளடக்கிய 21 திட்டங்களுக்கு ரூபாய் 200.94 கோடி அளவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றில் ரூபாய் 106.42 கோடி செலவிலான 8 திட்டங்களுக்கான பத்திரங்கள் கையொப்பமாகி பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை தவிர 18 புதிய துணை மின் நிலையங்களை நிறுவுதல் மற்றும் 23 துணை மின் நிலையங்களில் மின் திறனாக்கிகளின் திறனை உயர்த்துதல் ஆகியவற்றிற்காக மின் நிதிக் கழகம் மொத்தம் ரூபாய் 79.05 கோடி அளவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

### 5. இராஜீவ் காந்தி கிராமப்புற மின்மயமாக்கல் திட்டம் (RGGVY)

இந்திய அரசின் மின் துறை அமைச்சகம் இராஜீவ் காந்தி கிராமப்புற மின்மயமாக்கல் திட்டம் (RGGVY) என்ற திட்டத்தை கிராமப்புறங்களில் மின்கட்டுமானம் அமைத்து அனைத்து கிராமப்புறங்களில் உள்ள வீடுகளுக்கு 2012 ஆம் ஆண்டிற்குள் மின்சாரம் வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு தொடங்கி வைத்தது.

தமிழ்நாட்டின் 29 மாவட்டங்களுக்கு தேவையான விரிவான திட்ட அறிக்கைகள் (சென்னை மாவட்டம் நீங்கலாக) ஊரக மின்மயமாக்கல் கழகத்திற்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

## IV. பொது

### 1. தாழ்வழுத்த மின்கட்டணப் பட்டியல் மற்றும் வசூல்–கணினி மயமாக்கும் திட்டம்

தாழ்வழுத்த மின் கட்டணப் பட்டியல் கணினிமயமாக்கும் திட்டம்–BEST (Billing of Energy Services by TNEB) 615 நகர்ப்புறப் பிரிவுகளில் ரூ.51.23 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 1,805 ஊரகப் பிரிவுகளில் (ரூ.163.5 கோடி செலவில்) 2006–07–ல் முடிக்கப்படும்.

### 2. கணினிமயமாக்கப்பட்ட மின்தடை நீக்கும் மையங்கள்

கணினிமயமாக்கப்பட்ட மின்தடை நீக்கு மையம் சென்னையில் வெற்றிகரமாக நடைமுறையில் இருப்பதைத் தொடர்ந்து, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாநகராட்சிகளில் இதைப் போன்ற மையங்கள் ரூபாய் 73 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த வசதியை சேலம், திருநெல்வேலி, ஈரோடு, நாகர்கோவில் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.



## மின்சார ஆய்வுத் துறை

### முன்னுரை மற்றும் நிர்வாகம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், மின்சாரம் பொதுப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்திய மின்சார சட்டம், 1910, மின்சார (வழங்கல்) சட்டம், 1948, மற்றும் மின்சார ஒழுங்குபடுத்துதல் ஆணைய சட்டம், 1998, ஆகியவை நீக்கப்பட்டு புதிதாக இயற்றப்பட்ட மின்சாரச் சட்டம், 2003 (2003 ஆம் ஆண்டின் 36–வது மத்திய சட்டம்), 10–6–2003 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

செப்டம்பர் 1961–லிருந்து அரசு தலைமை மின் ஆய்வாளரைத் துறைத் தலைவராக கொண்டு மின்சார ஆய்வுத் துறை உருவாக்கப்பட்டது. 01–08–1993 முதல் தலைமைச் செயலக எரிசக்தித் துறை தனியாக உருவாக்கப்பட்டதிலிருந்து, அத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் மின் ஆய்வுத் துறை உள்ளது.

### செயல்பாடுகள்

மின்சார ஆய்வுத் துறையிடம் கீழ்க்கண்ட கடமைகளும் செயல்பாடுகளும் ஒப்படை செய்யப்பட்டுள்ளன:—

1. மின்சார சட்டம், 2003 (2003–ன் 36–வது சட்டம்)இன்கீழ் ஒழுங்கு முறைகள் விதிக்கப்படும் வரையில், இந்திய மின்சார விதிகள் 1956–ன்கீழ் ஆய்வுகள் மற்றும் பணிகள் மேற்கொள்ளல்.
2. தமிழ்நாடு மின்தூக்கி சட்டம், 1997 (Tamil Nadu Lift Act, 1997) மற்றும் தமிழ்நாடு மின் தூக்கி விதிகள், 1997 (Tamil Nadu Lift Rule, 1997).
3. தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்குமுறை) விதிகள், 1957–ன்கீழ் குறிப்பிட்டுள்ள கடமைகள்.
4. மின்சாரத் தொழில்நுட்பம் தொடர்புடைய இந்தியத் தர நிர்ணயங்களை உருவாக்கும் இந்தியத் தர நிர்ணயக் குழுமத்தில் தொழில்நுட்பக் குழு உறுப்பினராகப் பணிபுரிதல்.
5. இந்திய மின்சார விதிகள், 1956–ன் விதி எண் 45–ன்கீழ் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மின்சார உரிமம் வழங்கும் வாரியத்திற்கு பதவி வழியில் அரசு தலைமை மின் ஆய்வாளர் தலைவராகப் பணிபுரிதல்.

6. தமிழ்நாடு திரையரங்கு (ஒழுங்குமுறை) விதிகள், 1957–ன்படி உருவாக்கப்பட்ட திரைப்படக் கருவி இயக்குனர்களுக்கான தேர்வாணையத்திற்கு அரசு தலைமை மின் ஆய்வாளர் பதவி வழியில் தலைவராகப் பணிபுரிதல்.

7. அரசாணை எண் 37, எரிசக்தி (சி2) துறை, நாள் 10–5–2005–ன்படி, தமிழ்நாட்டில் எரிசக்தி சேமிப்புச் சட்டம், 2001–ஐ (மத்திய சட்டம் 62/2001) ஒருங்கிணைக்கவும், கட்டுப்படுத்தவும், நடைமுறைப்படுத்தவும் மின் ஆய்வுத் துறை, தமிழக அரசால் நியமிக்கப்பட்டுள்ளது.

## இந்திய மின்சார சட்டம், 1956–ன்கீழ் வரும் செயல்பாடுகள்

1. மின் உற்பத்திக் கழகங்கள், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் உயர் மின்னழுத்த நுகர்வோர்கள், ஆகியோரால் நிறுவப்படும் உயர் மற்றும் அதிக உயர் அழுத்த மின்னமைப்புகளுக்கு இந்திய மின்சார விதிகள் 1956–ன் 46-வது விதியின்படி ஒப்புதல் அளித்தல் மற்றும் அவற்றிற்கான காலமுறை ஆய்வு செய்தல்.

2. இந்திய மின்சார விதிகள் 1956–ன் விதி எண் 46–ன்கீழ் உயர் மின்னழுத்த நிறுவனங்கள் மற்றும் மின்வணிக நிறுவனங்கள் ஆகியவற்றைக் காலமுறை ஆய்வு செய்தல்.

3. இந்திய மின்சார விதிகள், 1956–ன் விதி எண் 46–ன்கீழ், மின் விநியோகிப்பாளர்களின் உயர் மற்றும் அதிக உயர் மின்னழுத்த அமைப்புகளைக் காலமுறை ஆய்வு செய்தல்.

4. இந்திய மின்சார விதிகள் 1956–இன் விதி 44ஏ–ன்கீழ் மின்உற்பத்தி, மின் வழங்கல் மற்றும் மின் உபயோகம் ஆகியவற்றில் ஏற்படும் மின் விபத்துகள் குறித்து தகவல்கள் பெறப்பட்டதும் விபத்து நடந்த இடத்தில் புலனாய்வு செய்தல் மற்றும் அறிக்கை தயாரித்தல்.

## தமிழ்நாடு மின்சார நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிச் சட்டம் மற்றும் விதிகள், 2003

இச்சட்டம் ஏற்கெனவே இம்மாநிலத்தில் நடப்பில் இருந்த தமிழ்நாடு மின்சார நுகர்வு வரிச் சட்டம், 1962, மற்றும் தமிழ்நாடு மின் தீர்வைச் சட்டம், 1939, ஆகியவற்றிற்குப் பதிலாக "தமிழ்நாடு மின்சார நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிச் சட்டம் மற்றும் விதிகள், 2003", 16–6–2003 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.



இச்சட்டத்தின்படி மின்வரி

(அ) சுயமாக உற்பத்தி செய்து பயன்படுத்திக் கொள்ளப்படும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 10 காசுகள்.

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் ஏனைய உரிமதாரர்களால் விற்பனை செய்யப்படும் மின்சாரத்திற்கான மின்வரி நிகர கட்டணத்தின்மீது 5 சதவீதமாகும்.

(இ) இந்த மின்வரி விதிப்பிலிருந்து கீழ்க்காணும் இனங்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது:–

1. அனைத்து அரசுத் துறைப் பயன்பாடுகள்
2. இரயில்வே துறைப் பயன்பாடுகள்
3. உள்ளாட்சி அமைப்புகளின் பயன்பாடுகள்
4. தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் ஏனைய உரிமதாரர்களால் விற்பனை செய்யப்படும், வீட்டு உபயோகம், குடிசைகள் மற்றும் விவசாயப் பயன்பாட்டிற்கென வழங்கப்படும் மின்சாரம்
5. சிறப்பு பொருளாதார மண்டலங்களிலுள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகளின் பயன்பாட்டிற்காக விற்பனை செய்யப்படும் மின்சாரம்
6. தமிழ்நாட்டில் முதன்முறையாகத் தொடங்கப்படும் புதிய தொழில் நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக விற்பனை செய்யப்படும் மின்சாரத்திற்கு முதலீடு செய்யப்படும் தொகையினைப் பொறுத்து வர்த்தக ரீதியான உற்பத்தி தொடங்கும் நாள் முதல், 3 (அ) 4 (அ) 5 ஆண்டுகளுக்கு விலக்களிக்கப்படும்.

## தர நிர்ணய சோதனைக் கூடம் மற்றும் நடமாடும் ஆய்வுக்கூடங்கள்:–

அரசு தர நிர்ணய மின் ஆய்வுக்கூடம், சென்னையிலுள்ள கிண்டியிலுள்ளது. நடமாடும் ஆய்வுக்கூடங்கள், சென்னை, சேலம், திருநெல்வேலி, மதுரை, திருச்சி ஆகிய நகரங்களில் இயங்கி வருகின்றன.

[2006 ஆகஸ்ட் 1

# தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்

## முன்னுரை

தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களை மேம்படுத்தவும், அவற்றின் பயன்பாட்டை ஊக்குவிக்கவும் 1985 ஆம் ஆண்டில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டது. இதன்மூலம் மாநில மற்றும் மைய அரசுகளின் உதவியுடன் மாற்று எரிசக்தி வளங்களைப் பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய முயற்சிகளின் விளைவாக தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள்மூலம் (சிறு அளவிலான நீர் மின் திட்டங்கள் உட்பட) தமிழ்நாட்டில் 31–3–2006 வரை மொத்தம் 3,201 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் நிறுவப்பட்டுள்ளது. இது அகில இந்திய அளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின்கீழ் நிறுவப்பட்டுள்ள மொத்த உற்பத்தித் திறனில் சுமார் 40 சதவீதம் ஆகும். மேலும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் கட்டமைப்பின் மொத்தத் திறனில் இது 22 சதவீதம் ஆகும். அகில இந்திய அளவில் இது 5.5 சதவீதம் மட்டுமே உள்ளது. இவ்வாறு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களைப் பயன்படுத்துவதில் தமிழ்நாடு இந்தியாவில் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

## புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள்

காற்று சக்தி, சூரிய சக்தி, தாவர மற்றும் பிற உயிர் சக்திகள், கடல் அலை மின் சக்தி, எரி பொருள் கலன், கடல் வெப்பச் சக்தி மற்றும் பூமியின் வெப்பச் சக்தி ஆகியவை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களில் முக்கியமானவை. இவற்றுள் முதல் மூன்று வகை ஆதாரங்களான காற்றுச் சக்தி, சூரிய சக்தி மற்றும் தாவர உயிர் சக்தி ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் பயன்பாடு மட்டுமே இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் பெருமளவில் அதிகரித்திருந்தாலும் பிற வகை ஆதாரங்களை வணிக ரீதியாகப் பயன்படுத்தும் நிலை இன்னும் ஏற்படவில்லை.

### 1. காற்று சக்தி

### 1.1 காற்று ஆய்வு மையங்கள் மற்றும் செயல் விளக்கக் காற்றாலைப் பண்ணைகள்

காற்றின் வேகம் மணிக்கு 18 கிலோ மீட்டருக்கு அதிகமுள்ள பகுதிகளைக் கண்டறிய காற்று ஆய்வு மையங்கள் அமைத்து ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் அடிப்படையில் தமிழ்நாட்டில் 41 பகுதிகள் காற்று வளமிக்க பகுதிகள் எனக்



2006 ஆகஸ்ட் 1]

கண்டறியப்பட்டு அவற்றில் படிப்படியாக 19 மெகாவாட் திறன் கொண்ட செயல் விளக்கக் காற்றாலைப் பண்ணைகள் தமிழ்நாட்டில் நிறுவப்பட்டன. மேலும் 1990 ஆம் ஆண்டிலிருந்து, முதன் முதலில் தமிழ்நாட்டில் தனியார் காற்றாலைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு பின் பெருமளவில் நிறுவப்படுகின்றன. புதிய காற்று ஆய்வு மையங்கள் அமைக்க மைய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் அதன் செலவில் 80 சதவீதம் அளிக்கிறது. மீதி செலவை மாநில அரசு ஏற்கிறது. 2003–2006 வரையிலான மூன்றாண்டுகளில் மொத்தம் 8 புதிய காற்று ஆய்வு மையங்கள் அமைக்க ஒப்புதல் பெறப்பட்டு, அவை நிறுவப்பட்டு, ஆய்வு செய்யப்படுகின்றன. மேலும், சில குறிப்பிட்ட காற்று வளமிக்க பகுதிகளில் காற்று சக்தி அளவு பற்றி நுண் ஆய்வு (Micro Survey) செய்து, காற்றாலைப் பண்ணைகள் அமைப்பதற்கான இடங்களைத் தெரிவு செய்ய, அவற்றை அமைப்போருக்கு உதவும் வகையில் தகவல்கள் அளிக்கப்படுகின்றன. மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தால் ஆய்வு செய்யப்பட்ட, 19 இடங்கள் தவிர, மாநில அரசின் நிதி உதவியுடன் 5 இடங்களில் ஆய்வு முடிந்து மேலும் 3 இடங்களில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

### 1.2 அதிகரித்து வரும் தனியார் முதலீடு

காற்று ஆய்வு மையம் அமைத்து ஆய்வு செய்த 67 இடங்களில், காற்றாலை அமைப்பதற்கு தகுதியானவைகளாகத் தெரிவு செய்யப்பட்ட 41 இடங்களில் 22 பகுதிகளில் 31–3–2006 வரை மொத்தம் 2,898 மெகாவாட் மின் திறன் கொண்ட காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இது நாட்டின் மொத்தக் காற்றாலை மின் திறனில் 58 சதவீதமாகும். இவற்றில், 19 மெகாவாட் தவிர, மற்றவை யாவும் தனியார் முதலீட்டாளர்களால் அமைக்கப்பட்டவையாகும். காற்றாலைப் பண்ணைகளில் உற்பத்தியாகும் மின்சாரத்தைத் தமிழ்நாடு மின்சாரவாரியம், ஒரு யூனிட்டிற்கு ரூ.2.70 என்ற கட்டணத்திற்கு வாங்கிக் கொள்கிறது. மேலும் இந்த மின்சாரத்தைச் சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்த ஏதுவாக, முதலீட்டாளர்களுக்கு, மாநிலத்தின் பிற இடங்களுக்கு கொண்டு செல்லும் வீலிங் கட்டணமாக (Wheeling charges) 5 சதவீதமும், சேமித்து வைத்து பயன்படுத்தும் கட்டணமாக 5 சதவீதமும் வசூலித்து, சலுகைகள் அளிக்கப்படுகின்றன. மின்சாரக் கொள்முதல் தொடர்பான கட்டணம் மற்றும் பிற சலுகைகள் பற்றிய முடிவுகளை, இனி தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம்தான் எடுக்கும். இந்த ஆணையம் ஆகஸ்ட் 2005–ல் வழங்கிய ஆணைப்படி, தமிழ்நாட்டில், உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை அயலார்களுக்கு, சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு விற்கலாம்.

### 1.3 சிறிய காற்று சக்தி சாதனங்கள்

[2006 ஆகஸ்ட் 1]

மெகாவாட் அளவில் மின் உற்பத்தி செய்யும் மின் கூட மைப்புடன்
இணைந்த காற்றாலைகள் தவிர, தனித்து இயங்கும், 30 கிலோவாட்
வரை திறன் கொண்ட காற்று மின்னாக்கிகள் உள்ளன. காற்றாலைகளை
நேரடியாகக் குடிநீர் அல்லது சிறு விவசாயத்திற்கு நீர் இறைக்கவும்
பயன்படுத்தலாம். மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் இச்சாதனங்களை
அமைப்பதற்கு மானியமும் அளிக்கிறது.

## 2. சூரிய சக்தி

சூரிய சக்தியினை இரு வழிகளில் பயன்படுத்தலாம். முதலாவதாக
மின்சாரம் தயாரித்து விளக்கு மற்றும் பிற மின் தேவைகளுக்குப்
பயன்படுத்தல், இரண்டாவதாக வெப்பச் சக்தியை சுடுநீர்
தயாரிப்பதற்கும், வேளாண் பொருட்களை உலர்த்தவும் மற்றும்
தொழிற்சாலைகளின் தேவைகள், சமையல் ஆகியவற்றுக்கும்
பயன்படுத்தலாம்.

### 2.1 சூரிய ஒளியின் சக்தி

#### 2.1.1 சூரிய ஒளி கருவிகள்

சூரிய ஒளியைப் பயன்படுத்தி வீட்டு விளக்கு, அலுவலக மின்
விளக்கு மற்றும் தெரு விளக்குகள் அமைப்பதற்கு மைய அரசால் 50
சதவீதம் வரை மானியம் வழங்கப்படும் மானியத் திட்டத்தை மாநில
அரசு ஊக்குவித்து வருகிறது. உள்ளாட்சி அமைப்புகள், சூரிய ஒளி
தெரு விளக்குகளை அமைத்து மின் கட்டணச் செலவைக் குறைக்கலாம்.
தமிழ் நாட்டில், மொத்தம் 1,350 சூரிய ஒளி தெரு விளக்குகள், ஊரக
வளர்ச்சித் துறையால் கட்டப்படும் தொகுப்பு வீடுகளில்
அமைக்கப்பட்ட 429 விளக்குகள் உட்பட, மற்றும் 5,565 சூரிய ஒளி
தெரு விளக்குகள், ஊராட்சிகளில் அமைக்கப்பட்ட 3,000 விளக்குகள்
உட்பட, இந்த மானியத் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ளன. 2005–06
ஆம் ஆண்டில், மரபுசாரா எரிசக்தி அமைச்சகம், ஊரகப் பகுதிகளில்
நிறுவ 1,200 சூரிய ஒளி வீட்டு விளக்குகள் மற்றும் 400 சூரிய ஒளி
தெருவிளக்குகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

நகரப் பகுதிகளில் அமைப்பதற்காக, சூரிய ஒளி தெரு விளக்குகள்
(500), தெரு விளக்குகளைக் கட்டுப்படுத்தும் சூரிய ஒளி
அமைப்புகள் (200), சூரிய ஒளி விளம்பரப் பலகைகள் (55), சூரிய ஒளி
ரோட்ஸ்டட்கள் (1,000), சூரிய ஒளி பிளிங்கர்கள் (150), மற்றும் சூரிய
ஒளி போக்குவரத்து ஒழுங்குச் சாதனங்கள் (50) ஆகியவற்றுக்கும்



2006 ஆகஸ்ட் 1]
மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இவற்றை 6
மாநகராட்சிகள் மற்றும் 10 பெரிய நகராட்சிகளில் நகராட்சி நிர்வாக
ஆணையர் மூலமாக நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

#### 2.1.2 தொலைதூரக் குடியிருப்புகளுக்கு மின் வசதி

தமிழ்நாட்டிலுள்ள, மின் கட்டமைப்புடன் இணைக்கப்படாத
தொலைதூரக் குக்கிராமங்களுக்கு சூரிய ஒளி விளக்குகள்மூலம் மின்
வசதி செய்து தரும் திட்டத்தை தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்
எடுத்துக் கொண்டுள்ளது. அவை தொலை தூரத்தில் இருப்பதாலும்,
வனப் பகுதிகளில் அமைந்துள்ளதாலும், மின்கட்டமைப்புமூலம் மின்
வசதி அளிக்கப்படவில்லை. இதன் மொத்தச் செலவும் மத்திய, மாநில
அரசுகள் ஏற்கின்றன. 2005–06 ஆம் ஆண்டில், மாநில அரசு, ஏற்கெனவே
2003–04–ல் அளித்த ரூ.100 இலட்சம் தவிர, கூடுதல் மானியமாக
ரூ.366.75 இலட்சம் வழங்கியுள்ளது. மரபுசாரா எரிசக்தி அமைச்சகம்
நிர்ணயித்துள்ள விலையின் 90 சதவீதத்தில் மைய அரசு மானியம்
வழங்கப்படுகிறது. ஒப்பந்தப் புள்ளிமூலம் பெறப்படும் விலை
மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் நிர்ணயித்துள்ள விலையை விட
அதிகமாக உள்ளதால், மீதிச் செலவுக்காக இந்த கூடுதல் மானியம்
வழங்கப்பட்டுள்ளது. மரபுசாரா எரிசக்தி அமைச்சகம், ரூ.367.00
இலட்சம் முன்பணமாக அளித்துள்ளது. முதல் கட்டத்தில், 12
மாவட்டங்களிலுள்ள 150 குக்கிராமங்களில் 6,637 சூரிய ஒளி வீட்டு
விளக்குகளும் 300 சூரிய ஒளி தெரு விளக்குகளையும் நிறுவுவதற்கான
பணி ஆணையை, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்
பிறப்பித்துள்ளது. 5 வருட பராமரிப்பு உட்பட, இதற்கான மொத்தச்
செலவு ரூ.1,023 இலட்சம் ஆகும். இப்பணி செப்டம்பர் 2006–ல்
முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது கட்டமாக, 94 குக்கிராமங்களில் மின்வசதி அளிக்க,
மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் நிர்ணயித்துள்ள விலையில் 10
சதவீதமான ரூ.50.59 இலட்சம் மாநில அரசின் பங்காக, 2005–06–ல்
ஒதுக்கியுள்ளது. மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின் ஒப்புதல்
பெறப்பட்டதும், இத்திட்டம் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

### 2.2 சூரிய வெப்ப சக்தி

#### 2.2.1 சூரிய சுடுநீர் கலன்கள்

சூரிய வெப்பச் சக்தியைப் பயன்படுத்தி வீடுகள், விடுதிகள் மற்றும்
மருத்துவமனைகள் ஆகியவற்றில் சுடுநீர் தயாரிக்கலாம். 1993 ஆம்
ஆண்டிற்குப் பிறகு, இதற்கு மத்திய அரசு மானியம் வழங்கப்படவில்லை.

எனவே, மாநில அரசின் நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் மொத்தம் 3,522 வீடுகளுக்கான சூரிய சுடுநீர் கலன்கள், 403 நிறுவனங்களுக்கான அமைப்புகள், மத்திய மாநில அரசுகளின் மானியத் திட்டத்தின்கீழ் 31–3–2006 வரை நிறுவப்பட்டுள்ளன. மருத்துவமனைகள் போன்ற 59 அரசு நிறுவனங்களிலும் சூரிய சுடுநீர் கலன்கள், 100 சதவீதச் செலவையும் மாநில அரசே ஏற்று நிறுவப்பட்டுள்ளன.

சிலவகைப் புதிய கட்டடங்களில் சூரிய சுடுநீர் கலன்கள் அமைப்பதை, கட்டாயமாக்கி 2002–ல் மாநில அரசு ஆணை பிறப்பித்துள்ளது. வெவ்வேறு விதமான பயனாளிகளுக்கு ஏற்றவாறு சூரிய சுடுநீர் கலன்களின் திறன்கள் எவ்வளவு என்று தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் வழிமுறைகள் அனுப்பியுள்ளது. புதிய கட்டடங்களில் இதனைச் செயலாக்குவது குறித்து கருத்தரங்கம் ஒன்றும் நகர திட்ட அலுவலர்கள் மற்றும் நகராட்சி அலுவலர்களுக்கும் நடத்தப்பட்டது.

2005–06 ஆம் ஆண்டில் மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் சூரிய சுடுநீர் அமைக்கும் பயனாளிகளுக்கு உதவி அளிக்கும் திட்டத்தை மீண்டும் கொண்டு வந்துள்ளது. அதன்படி வீடுகளில் அமைப்பதற்கு 2 சதவீதம் மற்றும் பிற நிறுவனம் மற்றும் தொழிற்சாலை பயனாளிகளுக்கு 3 அல்லது 5 சதவீத வட்டியில் கடனாக, இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் (IREDA) மற்றும் பொது/தனியார் வங்கிகள் ஆகியவற்றின் மூலமாக அளிக்கப்படுகின்றது. மேலும் 2006–07 ஆம் ஆண்டில் கடன் வசதி பெறாத பயனாளிகளுக்கு முதலீட்டு மானியம் அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 2.2.2 சூரிய சுடுகாற்று அமைப்புகள்

சூரிய வெப்பச் சக்தியினைப் பயன்படுத்தித் தானியங்கள், பழங்கள், தேயிலை, தோல் ஆகியவற்றை உலர்த்துவதற்குத் தேவையான புதிய தொழில்நுட்பம் முதல் முறையாக தமிழ்நாட்டில் பயன்பாட்டில் உள்ளது. இவ்வகையில் தமிழ்நாடு அரசு மொத்தம் 840 சதுர மீட்டர் பரப்பளவிற்கு, ரூ.10.81 இலட்சம் மானியத்தை 2003–04 மற்றும் 2004–05 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கியுள்ளது. தமிழ்நாட்டில் மொத்தம் 4,300 சதுர மீட்டர் பரப்பளவிற்கு சூரிய சுடுகாற்று அமைப்புகள் அரசு உதவியுடன் நிறுவப்பட்டுள்ளன. சூரிய சுடுகாற்று அமைப்புகளுக்கு 2005–06 முதல் மானியம் அளிக்க மரபுசாரா எரிசக்தி அமைச்சகம்



தொடங்கியுள்ளது. நிறுவனங்களுக்கு 50 சதவீதமும், வணிக/தொழில் நிறுவனங்களுக்கு 35 சதவீதம் வரை, அதிகபட்ச உச்ச வரம்புக்குட்பட்டு மானியம் வழங்கப்படும். மார்ச் 2006–ல், மரபுசாரா எரிசக்தி அமைச்சகம், திருப்பூரிலுள்ள நிறுவனத்திற்கு 446 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட அமைப்பு நிறுவ ரூ.7.80 இலட்சம் மானியம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் மொத்தம் 1,455 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இரு அமைப்புகள் நிறுவ மானியம் கோரி கருத்துருக்கள் மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்திற்கு தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் அனுப்பப்பட்டுள்ளது.

### 2.2.3 சூரிய வெப்ப சமைப்பான்கள்

பெட்டி வடிவிலான சமைப்பான்களில் 4 அல்லது 5 பேர்களுக்கு சூரிய வெப்பச் சக்தியைப் பயன்படுத்தி உணவு சமைக்கலாம். இதனால் மரபுசார்ந்த எரிபொருளான விறகு, சமையல் வாயு ஆகியவை மிச்சப்படுத்தலாம். இச்சமைப்பான்களைப் பெற தற்பொழுது வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் வசதி செய்து ஊக்கப்படுத்தப்படுகிறது. மேலும் தட்டு வடிவிலான சமைப்பான்கள் 10 அல்லது 15 பேர்களுக்கு சமைக்கலாம். மேலும் சமுதாய சூரிய வெப்ப சமைப்பான்களில் கூடுதலான நபர்களுக்கு, கட்டடத்திற்குள்ளேயே சூரிய வெப்பச் சக்தியைப் பயன்படுத்தி சமைக்கலாம். இத்திட்டத்திற்கு மைய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் 30 சதவீதம் வரை, அதிகபட்ச உச்சவரம்பிற்குட்பட்டு மானியம் அளிக்கிறது. கொதிகலன்கள்மூலம் நீராவி உற்பத்தி செய்து பல ஆயிரம் பேர்களுக்கு சமையல் செய்யும் இடங்களில் சூரிய நீராவி சமைப்பான்கள் பயன்படுத்தலாம். இதற்கு, இலாப நோக்கில்லாத நிறுவனங்களுக்கு 50 சதவீதமும் பணி மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு 35 சதவீதம் வரை மானியம் அளிக்கப்படுகின்றது. மார்ச் 2006–ல் 500 தட்டு வடிவ சமைப்பான்களுக்கு மொத்தம் ரூ.8.25 இலட்சம் நிதி உதவியுடன் மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் சென்னை நிறுவனம் ஒன்றில் 1,150 ச.மீ. பரப்பில் சூரிய நீராவி சமைப்பான் நிறுவ ரூ.55.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

## 3. தாவர மற்றும் பிற உயிர்சக்திகள்

தாவர மற்றும் பிற உயிர்சக்திக் கழிவுகளிலிருந்து எரிவாயு மற்றும் மின்சாரம் தயாரித்து எரிசக்தி தேவைகளை நிறைவேற்றும் திட்டங்கள் கடந்த சில ஆண்டுகளாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 3.1 இணை மின் திட்டம்

சர்க்கரை ஆலைகளில் உயர் அழுத்த நீராவி கலன்கள் (Boilers) மூலம் கரும்புச் சக்கையிலிருந்து நீராவி உற்பத்தி செய்து அதிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்பட்டு உபரி மின்சாரத்தைத் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு விற்பதுடன், அழுத்தம் குறைந்த நீராவியை சர்க்கரை உற்பத்திக்கு பயன்படுத்தும் திட்டம் தமிழ்நாட்டில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 31–3–2006 வரை மொத்தம் 315 மெகா வாட் அளவிற்கு உற்பத்தித் திறன் உருவாக்கி (மின்கட்டமைப்பிற்கு வழங்கப்படும் உபரி மின்சாரத்தின் அளவு 183 மெகாவாட்) இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.

### 3.2 தாவரப் பொருள்/கழிவுகள்மூலம் மின் உற்பத்தி

விறகு, பிற விவசாயக் கழிவுகள் மற்றும் மிஞ்சியிருக்கும் தாவரப் பொருள்கள், பயன்படாத காய்கறிகள்மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊக்கமளித்து வருகிறது. தாவரக் கழிவுகளிலிருந்து மின் உற்பத்தி செய்யும் திறன் 31–3–2006 வரை 37.5 மெகாவாட்டாக (3 திட்டங்கள்) உள்ளது. இதனை மேலும் ஊக்குவித்து ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

### 3.3 தாவர எரிசக்தி வாயுகலன்கள்

தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்குத் தேவைப்படும் வெப்ப சக்தி மற்றும் மின் சக்தியைத் தாவர எரிசக்தி வாயுக்கலன்கள் மூலம் பெறுவதற்கு மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் மானியம் அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் தொழிற்சாலைகள் மற்றும் இதர நிறுவனங்களில் தாவர எரிசக்தி வாயுகலன்கள் அமைப்பதற்கு தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் ஊக்கம் அளித்து வருகிறது. இத்திட்டத்தின்படி மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் வெப்ப சக்தி பயன்களுக்கான கலன்களுக்கு 10 சதவீதம் மானியமும், முழுவதும் வாயுவைப் பயன்படுத்தி (100 சதவீதம்) மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு இயந்திரங்களுக்கான செலவில் 50 சதவீதம் வரையிலும் மானியம் வழங்குகிறது. தற்பொழுது டீசல், உலை எண்ணெய், சமையல் எரிவாயு ஆகியவற்றைப் பயன்படுத்தி வெப்ப சக்தி பெறுவதற்கு பதிலாக தாவர எரிசக்தி வாயுகலன்களை அமைக்க பரிந்துரை செய்யப்படுகிறது.





தமிழ்நாட்டில் 31–3–2006 வரை, மொத்தம் 26 வெப்ப சக்திகலன்கள் (3,050 கி.வாட்) மற்றும் 15 மின் சக்தி கலன்கள் (1,823 கி.வாட்) நிறுவப்பட்டுள்ளன. 5 மின் சக்தி கலன்கள் தவிர மற்றவை நிறுவப்பட்டுவிட்டன. ஊரகப் பகுதிகளில் முக்கியமாக உள்ளாட்சி அமைப்புகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பயன்பாட்டைப் பரப்புவதில், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் புதிய உந்துதல் கொடுத்துள்ளது. மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் மொத்தம் 135 சிறிய திறன் கொண்ட (9 கி.வா.) கலன்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றில் 60 கலன்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. நலிவடைந்த உள்ளாட்சி அமைப்புகளில் நிறுவ, மாநில அரசு கூடுதல் மானியம் அளித்துள்ளது.

### 3.4 கழிப்பறையுடன் இணைந்த எரிவாயுக் கலன்கள்

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், கழிப்பறையுடன் இணைந்த எரிவாயுக் கலன்கள் அமைப்பதை ஊக்குவிக்கிறது. 2003–05 ஆம் ஆண்டுகளில், மாநில அரசு 82 கலன்கள் அமைப்பதற்கு மொத்தம் ரூ.63.40 இலட்சம் வழங்கியுள்ளது. அவற்றில் 39 கலன்கள் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார மையங்களில் அமைக்கப்பட்டுள்ளன. உற்பத்தியாகும் வாயுவைக் கொண்டு நீர் இறைக்கும் பம்புகளை இயக்கி, மையங்களுக்கு தண்ணீர் வழங்கவும் மற்றும் சில இடங்களில் சமைக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

### 3.5 கிராம எரிசக்தி காப்பீட்டுத் திட்டம்

மின் வசதியில்லாத தொலைதூரக் குக்கிராமங்களின் முழு எரிசக்தி தேவைகளை அங்கே உள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களைக் கொண்டு பூர்த்தி செய்யும்விதமாக மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் இப்புதிய திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. தமிழநாட்டில் 4 குக்கிராமங்களில் பரிசோதனை அடிப்படையில் வன அலுவலர்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இதற்காக 90 சதவீதச் செலவை (ரூ.49.54 இலட்சம்) மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் அளிக்கிறது. மீதி 10 சதவீத செலவிற்கு மாநில அரசு நிதி ஒதுக்கியுள்ளது. மைய அரசின் நிதி உதவி பெற்று இத்திட்டத்தை மேலும் பிற தொலை தூரக் குக்கிராமங்களுக்கு விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 4.0 புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவிப்பதில் ஊரக வளர்ச்சித் துறையின் பங்கு

[2006 ஆகஸ்ட் 1

தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சாதனங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதில் ஊரக வளர்ச்சித் துறை பு(து) அளவில் ஈடுபட்டு வருகின்றது. அத்துறையின் நிறைந்த ஒத்துழைப்புடன், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், ஊராட்சிகளில் கீழ்க்கண்ட திட்டங்களை 2003–2004–ல் செயல்படுத்தியுள்ளது.

| எண் | திட்டம் | எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 1 | சூரிய ஒளி தெரு விளக்குகள் | 3,072 |
| 2 | சூரிய ஒளி வீட்டு விளக்குகள் | 429 |
| 3 | தாவரசக்தி வாயு கலன்கள் | 60 |
| 4 | கழிப்பறையுடன் இணைந்த எரிவாயு கலன்கள் | 39 |

மேலும், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஊரக வளர்ச்சித் துறையின் திட்ட அலுவலர்களை, புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான மாவட்ட சார்பு அமைப்பாக அறிவித்து ஊரக வளர்ச்சித் துறை ஆணை பிறப்பித்துள்ளது. இந்த நடவடிக்கை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை, விரிவாக்க மட்டுமன்றி உள்ளாட்சிகளும் மரபுசாரா எரிசக்தித் திட்டங்களில் பங்கேற்க உதவும்.

மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின் வழிமுறைகளின்படி, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் அனுப்பிய கருத்துருவின்பால், மாவட்ட ஆட்சியரின்கீழ் மாவட்ட அளவிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆலோசனைக் குழுக்கள் அமைக்க மாநில அரசு ஆணையிட்டுள்ளது. சென்னை உட்பட 30 மாவட்டங்களிலும் இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.1.50 இலட்சம் அளித்துள்ளது.



2006 ஆகஸ்ட் 1]

## 5.0 பிற திட்டங்கள்

### 5.1 கழிவுப் பொருள்களிலிருந்து எரிவாயு மின்சாரம் தயாரித்தல்

மரவள்ளிக்கிழங்கின் கழிவுநீர், கோழி எச்சம் மற்றும் காய்கறிக் கழிவுகள் ஆகியவற்றிலிருந்து எரிவாயு மற்றும் மின்சாரம் தயாரிக்கும் திட்டங்கள் தமிழ்நாட்டில் பின்வருமாறு செயல்படுத்தப்படுகின்றன.

(i) தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டியில் மரவள்ளிக்கிழங்கின் கழிவு நீரிலிருந்து எரிவாயு மற்றும் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் (500 கிலோ வாட்) முடிவடைந்துள்ளது.

(ii) நாமக்கல் மாவட்டத்தில் கோழி எச்சத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டமும் (1.5 மெகாவாட்) முடிவுற்றுள்ளது. மேலும், 2.5 மெகாவாட் திறன் கொண்ட திட்டத்திற்காக நாமக்கல் மாவட்டத்தில் பணிகள் நடந்து வருகின்றன.

(iii) சென்னையில் கோயம்பேடு காய்கறி மொத்த விற்பனை வளாகக் காய்கறிக் கழிவுகளைக் கொண்டு மின்சாரம் தயாரிக்க மைய அரசு நிதி உதவி அளித்துள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சி நிறுவனம் இத்திட்டத்தைச் செயல்படுத்துகிறது. இத்திட்டம் முடிவுற்று, மின் உற்பத்தி (250 கிலோவாட்) தொடங்கியுள்ளது.

### 5.2 மின் கலத்தால் இயங்கும் வாகனங்கள்

பெட்ரோல் மற்றும் டீசல் ஆகிய எரிபொருட்களைக் கொண்டு இயங்கும் வாகனங்கள் வெளியேற்றும் நச்சுப்புகை சுற்றுப்புறத்தை மாசுபடுத்துவதைத் தவிர்க்கும் வகையில் மின்கலத்தால் இயங்கும் வாகனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய வாகனங்களைப் பயன்படுத்தும் தகுதியான நிறுவனங்களுக்கும் பிற அமைப்புகளுக்கும் மைய அரசு, வாகன விலையில் 33 சதவீதம் வரை மானிய உதவி வழங்குகிறது. இவ்வாகனங்களை வனவிலங்குச் சரணாலயங்கள், சுற்றுலா முக்கியத்துவம்மிக்க பகுதிகள், மருத்துவமனைகள் ஆகிய இடங்களில் பயன்படுத்திச் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்துக் கொள்ளலாம். தமிழ்நாட்டில் இதுவரை 27 வேன்கள் மற்றும் 2 மூன்று சக்கர வாகனங்களுக்கு மைய அரசு மானியம் வழங்கியுள்ளது.

[2006 .ஆகஸ்ட் 1

## 5.3 விளம்பரம் மற்றும் விழிப்புணர்வுப் பணிகள்

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பயன்பாட்டினை விரிவுபடுத்தவும் எரிசக்தி சிக்கனத்தைத் தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களில் செயல்படுத்தவும், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகள் நடத்துவதுடன் பிற அமைப்புகள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறது. பொதுமக்கள் மற்றும் குறிப்பிட்ட பயனாளிகளான தொழிற்சாலைகள், ஊராட்சிகள், அரசுசாரா நிறுவனங்கள் ஆகியவற்றிடையே, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளர்ச்சியைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மாவட்ட அளவில் தீவிர பிரச்சாரப் பணிகளை மேற்கொண்டுள்ளது. சூரிய சக்தி பற்றி கல்விக்கான கருவிகளை (மொத்தம் 480) அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு 50 சதவீத மானியத்தில் வழங்க, மாநில அரசு கடந்த இரண்டாண்டுகளில் (2004–06) மொத்தம் ரூ.16.25 இலட்சம் வழங்கியுள்ளது. பள்ளி மாணவர்களிடையே சூரிய சக்தியின் பயன்பாட்டைக் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த இது உதவும். மாபுசாரா எரிசக்தி அமைச்சகம், இத்திட்டத்தை நாடு முழுவதும் செயல்படுத்த முடிவு செய்துள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள்/அவற்றால் இயங்கும் பலவித சாதனங்கள் மற்றும் கருவிகள் ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வை மாணவர்களிடையே, முக்கியமாக பொறியியல் கல்லூரிகளில் ஏற்படுத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மன்றங்கள் அமைக்க மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இதற்காக இந்த அமைச்சகம், வருடத்திற்கு, ஒரு கல்லூரிக்கு ரூ.25,000/– வழங்குகிறது. தமிழ்நாட்டில், 88 பொறியியல் கல்லூரிகளில், இத்தகைய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மன்றங்கள் அமைக்க மார்ச் 2006–ல் மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் ரூ.22.00 இலட்சம் வழங்கியுள்ளது.

## 5.4 எரிசக்திப் பூங்காக்கள்

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சாதனங்களின் பயன்பாடு குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பல்கலைக்கழகங்கள் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் எரிசக்திப் பூங்காக்கள் அமைப்பதை தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் ஊக்குவிக்கிறது. மாவட்ட அளவில் நிறுவப்படும் முதல் பூங்காவிற்கு 75 சதவீதமும், 2–வது பூங்காவிற்கு 50 சதவீதமும் மானியமாக மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் அளிக்கிறது. மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் ஒப்புதல்



2006 ஆகஸ்ட் 1]

அளித்த 14 பூங்காக்கள் முடிக்கப்பட்டு விட்டன. மேலும் 5 பூங்காக்கள் 2003–04–லும் 23 பூங்காக்கள் 2005–06–லும் ஒப்புதல் பெறப்பட்டு அவற்றை நிறுவும் பணிகள் நடந்து வருகின்றன. மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் மார்ச் 2006–ல், மாநில அளவிலான எரிசக்திப் பூங்கா அமைப்பதற்கு, ரூ.89.00 இலட்சம் அளிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன் கட்டுமானப் பணிக்காக மாநில அரசு ஏற்கெனவே, ரூ.35.00 இலட்சம் நிதி வழங்கியுள்ளது. இந்தப் பூங்கா, சென்னை கோட்டூர்புரத்திலுள்ள தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் மைய வளாகத்தில் அமைக்கப்பட உள்ளது.

## 5.5 திருத்தியமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம்

ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம் 21 வட்டாரங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தை மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் திருத்தியமைத்ததன்பேரில், 2005–06–ல் தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மொத்தச் செலவை மத்திய மாநில அரசுகள் 50:50 என்ற சதவீதத்தில் ஏற்கின்றன. நடப்பு ஆண்டில் (2006–07) இத்திட்டத்தை 29 மாவட்டங்களுக்கும் அரசு விரிவுபடுத்தி செயல்படுத்த உள்ளது. இத்திட்டம் தொகுப்பு கிராமங்களின் எரிசக்தி உறுதிப்பாடு (Energy Security) தொடர்பான திட்டங்களைச் செயல்படுத்த ஏதுவாக இருக்கும்.

சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் நீடித்த எரிசக்தி பாதுகாப்புக்கான விரிவான திட்ட அறிக்கை ஒன்றை அண்ணா பல்கலைக்கழகம் மூலம் தயாரிக்க, மாநில அரசு ரூ.4.00 இலட்சம் வழங்கியுள்ளது. இந்த ஆய்வு முடிக்கப்பட்டு விட்டது. இதன் அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

## 5.6 மலைப் பகுதி மற்றும் மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டங்களில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பணிகள்

தாவர சக்தி வாயு கலன், சூரிய ஒளி தெரு விளக்குகள், கழிப்பறையுடன் இணைந்த எரிவாயுக் கலன்கள், எரிசக்திப் பூங்கா, காற்று ஆய்வு மையம் அமைத்தல் போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பணிகளை மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் நிறைவேற்ற மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் (2004–06) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு மொத்தம் ரூ.111.90 இலட்சமும், மலைப்பகுதித் திட்டத்திற்கு ரூ.93.65 இலட்சமும்

ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலும் (2006–07) முறையே ரூ.41.13 இலட்சத்திற்கும் மற்றும் ரூ.51 இலட்சத்திற்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 5.7 இராஷ்டிரிய சம்விகாஸ் யோஜனா

இத்திட்டத்தின்கீழ் திண்டுக்கல் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் எரிசக்திப் பூங்கா அமைப்பதற்கு ரூ.30.00 இலட்சம் மாநில அரசு அளித்துள்ளது. இந்த எரிசக்திப் பூங்காவிற்கான உபகரணங்களை வாங்குவதற்கான தொழில்நுட்ப உதவிகளை தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் அளித்து வருகிறது.

### 5.8 ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள்

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் மூன்று ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை அண்ணா பல்கலைக்கழகம் மூலம் செயல்படுத்த மாநில அரசு, தன் பங்காக ரூ.20.00 இலட்சம் 2005–06–இல் வழங்கியுள்ளது. அண்ணா பல்கலைக்கழகமும் தன் பங்கிற்கு 50 சதவீதப் பணிச் செலவாக ரூ.20.00 இலட்சம் அளிக்கிறது. இப்பணி விரைவில் தொடங்கப்பட்டு 2 ஆண்டுகளில் முடிவுபெறும்.

### 6. 2006–2007 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தின்கீழ் புதிய திட்டங்கள்

2006–2007 ஆம் ஆண்டில், புதுப்பிக்கவல்ல எரிசக்தி சார்ந்த கீழ்க்காணும் திட்டங்களுக்காக ரூ.345.90 இலட்சம் பகுதி–2 நிதியாக ஒதுக்க அரசு உத்தேசித்துள்ளது:—



| வரிசை எண் | திட்டப் பணிகளின் விவரம் | ஒதுக்கப்படவுள்ள தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | 94 தொலைதூரக் குக்கிராமங்களுக்கு மின் வசதி (இரண்டாவது கட்டம்) மைய அரசின் நிதி உதவி போக, மாநில அரசின் பங்கு (எதிர்பார்க்கப்படும் ஒப்பந்தப்புள்ளி விலைக்கும் மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் நிர்ணயித்த விலைக்கும் உள்ள வேறுபாட்டினைச் சரிசெய்ய ஆகும் கூடுதல் செலவுக்காக) | 300.00 |
| 2 | சென்னையில் அமைக்கப்பட உள்ள மாநில அளவிலான எரிசக்திப் பூங்கா கட்டடப் பணிக்கான கூடுதல் செலவிற்கு | 17.00 |
| 3 | புதிய காற்று ஆய்வு மையங்கள் (3) அமைப்பதற்கான, மாநில அரசின் பங்கு (20 சதவீதம்) | 6.00 |
| 4 | அரசு மருத்துவமனை / விடுதிகள் / அரசு நிறுவனங்களில் (முழுச் செலவுடன்) சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகள் நிறுவுதல் | 10.50 |
| 5 | உள்ளாட்சிகள் மற்றும் நிறுவனங்களில் கழிப்பறையுடன் இணைக்கப்பட்ட எரிவாயுக் கலன்கள் அமைக்க 10 கன மீட்டர் ரூ.50,000/- வீதம் மானியம் | 10.00 |
| 6 | 50–க்கும் குறைவான குழந்தைகள் / மாணவர்கள் உள்ள மதிய உணவு மையங்களுக்கு சூரிய சக்தி தட்டு வடிவ சமைப்பான்கள் வழங்குதல். | 2.40 |
| | மொத்தம் .. | 345.90 |

## தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் 27–06–1991 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது. இந்நிறுவனம் பாரத ரிசர்வ் வங்கியில் வங்கிசாரா நிதி நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமானது தமிழ்நாடு மின் திட்டங்களுக்கு, குறிப்பாக மின் உற்பத்தி, மின் பங்கீடு மற்றும் மின் வினியோகத் திட்டங்களுக்குத் தேவையான நிதியைத் திரட்டுவதாகும். இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 கோடியாகும். இதில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.22 கோடியாகும்.

### வைப்பீட்டுத் தொகைகள்

இந்நிறுவனம், வைப்பீட்டாளர்களுக்கு பரிவோடு சிறந்த சேவை புரிந்தும், தொடர்ந்து இலாபம் ஈட்டியும் வைப்பீட்டுத் தொகையை

அதிகரித்ததோடு மட்டுமன்றி வைப்பீட்டாளர்களின் மனதில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளது. இதன் பயனாக 1991–1992 ஆம் ஆண்டில் ரூ.2.09 கோடியாக இருந்த வைப்பீட்டுத் தொகை 31–3–2006 அன்று 2,027 கோடியாக கணிசமான அளவிற்கு வளர்ந்துள்ளது. இதுபோன்று 1991–1992 ஆம் ஆண்டில் 816 ஆக இருந்த வைப்பீட்டாளர்களின் எண்ணிக்கை 31–3–2006 அன்று 1,79,091 ஆக உயர்ந்துள்ளது.

**கடனுதவி**

இந்நிறுவனத்தால் திரட்டப்படுகின்ற நிதி, தமிழ்நாடு மின்வாரியத்தின் மின் உற்பத்தி/ மின் பங்கீடு மற்றும் மின் வினியோகத் திட்டங்களுக்குக் கடனாக அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் தொடங்கிய நாள் முதல் 31–3–2006 வரை ரூ.5,516 கோடி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கடனாக அளித்துள்ளது. இதில் 31–3–2006 நிலுவையில் உள்ள நிகர கடன் தொகை ரூ.2,183.97 கோடியாகும். மேலும் இந்நிறுவனம் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஆகியவற்றிற்கும் அளித்துள்ள கடன் தொகை ரூ.38 கோடியாகும்.

**அரசு திட்டங்கள் செயலாக்கம்**

பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் ரூ.175.46 கோடியை வைப்பீட்டுத் தொகையாக 1,15,171 குழந்தைகளுக்காகப் பெற்றுள்ளது.

திருக்கோயில்களின் ஒரு கால பூஜை திட்டத்தின்கீழ் 31–3–2006 வரை ரூ.25.40 கோடியை 10,158 திருக்கோயில்களிடமிருந்து இந்நிறுவனம் வைப்பீட்டுத் தொகையாகப் பெற்றுள்ளது.

**இலாபம் மற்றும் ஈவுத்தொகை**

இந்நிறுவனம் துவக்கத்தில் இருந்தே தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. செலுத்தப்பட்ட மூலதனத்தில் 20 சதவிகிதத்தை ஈவுத் தொகையாக ஒன்பது ஆண்டுகளாக கடந்த 1995–1996 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து அரசிற்கு வழங்கி வருகிறது. 2004–2005 நிதியாண்டு வரை இந்நிறுவனம் ஈவுத் தொகையாக மொத்தம் ரூ.38.82 கோடியை தமிழ்நாடு அரசுக்கு வழங்கியுள்ளது. இந்நிறுவனம் 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.30.66 கோடி வரிக்கு பிந்திய இலாபம் ஈட்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.



**எதிர்காலத் திட்டங்கள்**

1. 2006–2007 ஆம் நிதியாண்டில் இந்நிறுவனம், ரூ.180 கோடியை நிகர வைப்பீட்டுத் தொகையாக பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து திரட்டத் திட்டமிட்டுள்ளது.
2. 2006–2007 ஆம் நிதியாண்டில் இந்நிறுவனம், எரிசக்தி மற்றும் அடிப்படை கட்டுமானத் திட்டங்களுக்காக ரூ.900 கோடியை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கடனாக வழங்கத் திட்டமிட்டுள்ளது.
3. மேற்படி நிதியாண்டில் ரூ.50 கோடியை இதர நிறுவனங்களுக்குக் கடனாக வழங்கத் திட்டமிட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 1

# இணைப்பு II

***(59 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)***

**மானியக் கோரிக்கை எண் 44-சிறு தொழில்கள் துறை**

**கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007**

## சிறு தொழில் துறை

சிறு தொழில்கள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. சிறு தொழில் துறை, தொழில் முனைவோர் மேம்பாடு அடைவதற்கான நாற்றங்காலாக விளங்குகிறது. மொத்தத் தொழில் நிறுவனங்களில் 95 விழுக்காடு சிறு தொழில் நிறுவனங்களாகும் மொத்த உற்பத்தியில் சிறு தொழில்களின் பங்கு 40 விழுக்காடும், ஏற்றுமதியில் 35 விழுக்காடும் ஆகும். 30–6–2006 வரை தமிழ்நாட்டில் 5.16 இலட்சம் சிறு தொழில் நிறுவனங்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன இதற்கான முதலீடு ரூ.16,199 கோடிக்கு மேலாகும். இதன்மூலம் 36 இலட்சம் பேருக்கு மேல் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு அளிப்பதில் வேளாண்மை மற்றும் அது சார்ந்த பிரிவுகளுக்கு அடுத்தபடியாக சிறு தொழில்கள் பிரிவு விளங்குகிறது. வர்த்தக கருத்துகளுக்கு ஆதாரமாக சிறு தொழில்கள் விளங்குகின்றன. சிறு தொழில்களில் பயனளிக்கக்கூடிய வேலைவாய்ப்பை அதிகரித்தால்தான் தற்சார்புடைய பொருளாதார வளர்ச்சி வெற்றிபெறும் என்பதை டாக்டர் கலைஞர் அரசு உணர்ந்துள்ளது அதனால் சிறு வணிகம் மற்றும் தொழில் முனைவதற்கு உகந்த சூழ்நிலை உருவாக்க அரசு முயன்று வருகிறது. 24–5–2006 அன்று மாநில சட்டமன்றப் பேரவையில் ஆற்றப்பட்ட ஆளுநர் உரையில் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது:

"முதலீட்டாளர்கள் எளிதில் அணுகக்கூடிய வகையில் அவர்தம் நண்பனாக இவ்வரசு செயல்பட்டு, அவர்கள் தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கும். அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கவல்ல சிறு தொழில்களை ஊக்குவிக்கும் வகையில், மாநிலத்தில் தொழில்வளத்தில் பின்தங்கியுள்ள பகுதிகளில் ஏற்படுத்தப்படும் அனைத்து சிறு தொழில்களுக்கும் முன்னர் அளிக்கப்பட்டு வந்த முதலீட்டு மானிய நிதியுதவித் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்".



ஐந்தாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்றுள்ள டாக்டர் கலைஞர் தலைமையில் அமைந்துள்ள ஆட்சியில் 2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அறிவித்துள்ளவாறு.

"ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் சிறு மற்றும் குறுந்தொழில்கள் ஆற்றி வரும் முக்கியப் பங்கை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. தொழில் வளத்தில் பின்தங்கிய பகுதிகளில் ஏற்படுத்தப்படும் தொழில்களுக்கு கடந்த தி.மு.க. ஆட்சியின்போது, முதலீட்டு மானிய நிதியுதவி அளிக்கப்பட்டு வந்தது. இத்திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும் என்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிவிப்புக்கு ஏற்ப தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளைக் கண்டறியத் தேவையான வரைமுறைகளைப் பரிந்துரை செய்ய அலுவலர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்று சிறு தொழில்களுக்கு முதலீட்டு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக ரூ.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது".

## 2. தொழில் வணிக இயக்ககம்

தமிழ்நாட்டில் சிறு தொழில்கள் துறை வளர்ச்சிக்காக தொழில் வணிக இயக்ககம் மைய முகமையாக விளங்குகிறது. தொழில் வணிக இயக்ககம் தொழில் வளர்ச்சி, தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தரக் கட்டுப்பாடு ஆகியவற்றில் முனைப்புடன் பல்வேறு திட்டங்களைச் செயலாக்குகிறது.

### 2.1 சிறு தொழில் நிறுவனங்கள் பதிவு செய்தல்

சிறு தொழில்கள் தொடங்க விரும்பினால், தொழில் வணிக இயக்ககத்தில் பதிவுசெய்து கொள்ளலாம். தொழில் முனைவோர் வசதிக்காக, இணைய தளம் மூலம் தற்காலிகச் சான்றிதழ் பெறும் முறை மாநிலத்தில் உள்ள 269 இணையதள மையங்களில் செய்யப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் 60,211 தொழில் முனைவோர்கள் இணையதளம் மூலம் பதிவு செய்துள்ளனர். துறை வழங்கும் தற்காலிகப் பதிவுச் சான்றிதழின் அடிப்படையில் தொழில் முனைவோர் அனைத்து சட்டபூர்வமான அனுமதிகளையும் பெறலாம். கடன் பெறுதல், மின் இணைப்பு மற்றும் சிட்கோ தொழில் பேட்டையில் தொழிற் கூடங்கள் அல்லது மனையைப் பெறுதல் போன்றவற்றிற்கு தகுதியளிக்கிறது. ஒரு தொழில் நிறுவனம் உற்பத்தியைத் தொடங்கியவுடன் நிரந்தர பதிவுச்

சான்றிதழுக்குத் தகுதியுடையதாகிறது. 2005–06 ஆம் ஆண்டில் 67,005 தற்காலிக மற்றும் 20,399 நிரந்தர பதிவுச் சான்றிதழ்களும் இயக்ககத்தால் வழங்கப்பட்டுள்ளன. 2006–07 ஆம் ஆண்டு, 70,000 தற்காலிக மற்றும் 30,000 நிரந்தர பதிவுச் சான்றிதழ்கள் வழங்க இத்துறை அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

### 2.2.1 ஒற்றைச் சாளரமுறை சேவைகள்

விருப்பமுள்ள தொழில் முனைவோர்களின் இடர்ப்பாடுகளைத் தீர்த்து, விரைவாக தொழில் துவங்குவதற்கு வசதியாக மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், உள்ளாட்சிகள், தீயணைப்புத் துறை, பொது சுகாதாரத் துறை மற்றும் ஏனையோரிடமிருந்து பெற வேண்டிய சட்டபூர்வமான அனுமதிகளைப் பெற ஒற்றைச் சாளரமாக மாவட்ட தொழில் மையங்கள் திகழ்கின்றன.

### 2.2.2 பரிசோதனை, பழுது நீக்குதல் மற்றும் உற்பத்தி வசதிகள்

#### 2.2.2.1 வேதியியல்

கிண்டியில் உள்ள வேதியியல் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக் கூடம் பொருட்களின் பரிசோதனைகளான இயற்பியல் பரிசோதனை, வேதியியல் பரிசோதனை, உபகரணம் அளவீடு குறித்தல் ஆகியவற்றை மேற்கொள்கிறது. மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடியில் உள்ள மண்டல பரிசோதனைக் கூடங்கள் அப்பகுதியில் உள்ள சிறு தொழில்களுக்கு மேற்கண்ட சேவைகளை வழங்குகின்றன. இப்பரிசோதனைக் கூடங்கள் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் நிறுவனங்களுக்கு பரிசோதனைக் கட்டணத்தில் 50 விழுக்காடு சலுகை வழங்குகின்றன. கடந்த ஆண்டில் இவ்வைந்து பரிசோதனைக் கூடங்கள் 52,191 மாதிரிகளை பரிசோதனை செய்துள்ளன.

#### 2.2.2.2 மின்சார உபகரணங்கள்

காக்களூரில் உள்ள மத்திய மின்பொருள் பரிசோதனைக் கூடம் மின் உபகரணங்களுக்கு பரிசோதனை வசதியளிக்கிறது. ஏறத்தாழ 100 மின் சாதனங்கள் மற்றும் சிறு குழல் விளக்குகள், பலவசதி அட்டை உணர்கருவிகள், தானியங்கி மின் சேமிப்பு சாதனம் மற்றும் ஏனைய புதிய மின் மற்றும் மின்னணு சாதனங்கள் இப்பரிசோதனைக் கூடத்தில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. ஓசூரில் உள்ள பொது வசதி மையம் அப்பகுதியில் உள்ள மின்னணு நிறுவனங்களுக்கு உற்பத்தி மேம்பாட்டு வசதிகளை அளிக்கிறது. இதன் வளாகத்தில் தொழில் முனைவோர்



உற்பத்தி மேம்பாடு செய்வதற்காக சுற்றுச்சூழல் அறை வாங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. 2005–06 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 4,823 மாதிரிகள் இவ்விரண்டு வசதி மையங்களிலும் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

#### 2.2.2.3 அரசு அறிவியல் கண்ணாடி உபகரணங்களுக்கான உற்பத்தி மையம், கோயம்புத்தூர்

இம்மையம் வேளாண்மைத் துறை, மற்ற அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்களின் பரிசோதனைக் கூடங்களுக்குத் தேவையான அறிவியல் கண்ணாடி உபகரணங்களைத் தயாரிக்கிறது.

#### 2.2.2.4 மின்மருத்துவ உபகரண மையங்கள்

அரசு மருத்துவமனைகளில் உள்ள மின்மருத்துவ உபகரணங்களில் பழுது நீக்கி சேவை செய்வதற்காக கிண்டி, மதுரை, தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் மின்மருத்துவ உபகரண மையங்களை அரசு அமைத்துள்ளது.

### 2.3. பயிற்சி நிறுவனங்கள்

#### 2.3.1. மண்பாண்ட தொழில்நுட்ப நிறுவனம்

விருத்தாச்சலத்தில் உள்ள மண்பாண்ட தொழில்நுட்ப நிறுவனம் மண்பாண்ட தொழில்நுட்பத்தில் பட்டயப் படிப்பை நடத்துகிறது. இப்படிப்பின் காலம், ஆறு மாத தொழில் வளாக பயிற்சி உட்பட மூன்றரை வருடங்கள் ஆகும். ஒவ்வொரு கல்வி ஆண்டும் முப்பது மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

#### 2.3.2. அரசு அறிவியல் கண்ணாடி பயிற்சி மையம், கிண்டி

இம்மையம் இரண்டாண்டு சான்றிதழ் படிப்பை நடத்துகிறது. இதில் மாணவர்களுக்கு அறிவியல் கண்ணாடி உபகரணங்கள் தயாரிப்பதில் நடைமுறைப் பயிற்சி வழங்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் 25 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 31–3–2006 வரை ஐம்பத்திமூன்று அணி மாணவர்கள் பயிற்சியை முடித்துள்ளனர்.

#### 2.3.3. அரசு தொழில்நுட்ப மையம், கிண்டி

இம்மையம் இயந்திரப் பொறியியல் படிப்பில் கருவிகள் மற்றும் வார்ப்புப் பொறியியல், குளிர்பதனப்படுத்துதல் மற்றும் குளிரூட்டுதல் ஆகிய சிறப்புப் பிரிவுகளுடன் மூன்றாண்டு பட்டயப் படிப்பை நடத்துகிறது. ஒவ்வோர் ஆண்டும் முறையே முப்பது மற்றும் நாற்பது

மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இதுதவிர வார்ப்புமுறை கருவிகள வடிவமைப்புப் படிப்பில் ஆண்டுதோறும் 10 மாணவர்களுக்கு முதுநிலை பட்டயப் படிப்பும் நடத்தப்படுகிறது.

## 2.3.4. கருவிகள் பொறியியல் நிறுவனம், திண்டுக்கல்

இந்நிறுவனம் கருவி மற்றும் வார்ப்புத் தொழில்நுட்ப சிறப்புப் பிரிவுடன் மூன்றாண்டு இயந்திரப் பொறியியல் பட்டயப் படிப்பினை ஆண்டுதோறும் 30 மாணவர்களுக்கு வழங்குகிறது.

2.3.5. தொழில்நுட்ப கல்வி இயக்ககம் மேலே குறிப்பிட்டுள்ள படிப்புகளுக்காக தேர்வுகளை நடத்தி பட்டயச் சான்றிதழ்களை வழங்குகிறது. அனைத்துப் படிப்புகளும் புதுடெல்லியில் உள்ள அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு உள்ளன.

## 2.4 ஒழுங்குமுறை நடவடிக்கைகள்

### 2.4.1. தரக்கட்டுப்பாட்டு ஆணைகளை அமலாக்குதல்

தொழில் வணிக இயக்ககத்தில் உள்ள தரக்கட்டுப்பாட்டு ஆணை அமலாக்க மையம் 1981 ஆம் ஆண்டு வீட்டு மின்உபகரணங்கள் (தரக்கட்டுப்பாடு) ஆணை மற்றும் 2003 ஆம் ஆண்டு மின்கம்பி, உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் உபபொருட்கள் (தரக்கட்டுப்பாடு) ஆணை, ஆகியவற்றை அமலாக்கம் செய்கிறது. முதல் ஆணையை மீறுபவர்களை 1955 ஆம் ஆண்டு அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின்படி தண்டிக்க முடியும். இரண்டாம் ஆணையில் குறிப்பிட்ட பொருட்கள் இந்திய தரக்கட்டுப்பாட்டு நிறுவன முத்திரை இல்லாமல் தயாரிப்பது அல்லது விற்பனை அல்லது விநியோகத்திற்காக சேமித்து வைப்பது ஆகியவற்றை தடை செய்கிறது. இவ்வாணையை மீறுவது இந்திய தரக்கட்டுப்பாட்டு நிறுவன சட்டத்தின்படி குற்றமாகும். மாவட்டங்களில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள் இவ்வாணைகளை நடைமுறைப்படுத்த "உரிய அலுவலர்"களாக நியமிக்கப்பட்டு உள்ளனர். சென்னையைப் பொறுத்தவரை துணை இயக்குநர் (மின் மற்றும் மின்னணு) அந்த அதிகாரம் படைத்த அலுவலர் ஆவார்.

### 2.4.2. சிறு மற்றும் துணை தொழில் நிறுவனங்களுக்கு தாமதமாக செலுத்தும் தொகை மீதான வட்டி சட்டம் 1993 ஐ நடைமுறைப்படுத்துதல்

சிறு மற்றும் துணை தொழில் நிறுவனங்களுக்கு தாமதமாக செலுத்தும் தொகை மீதான வட்டி சட்டம் 1993-ன்கீழ் தொழில்



வசதியாக்கக் குழுக்கள் அமைக்க மாநில அரசுகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களில் தொழில் வசதியாக்கக் குழுக்களை அமைத்துள்ளது.

## 2.5 அரசு தொழிற்பேட்டைகள்

### 2.5.1 மண்பாண்ட தொழிற்பேட்டை

இத்துறை விருத்தாச்சலத்தில் மண்பாண்டப் பொருட்களுக்கான தொழிற்பேட்டை ஒன்றைத் துவக்கியுள்ளது. இத்தொழிற்பேட்டையில் 64 தொழிற்கூடங்கள் உள்ளன. இங்குள்ள நிறுவனங்கள் குறைந்த மின்அழுத்த இன்சுலேட்டர்கள், சுகாதாரப் பொருட்கள், கலைப் பொருட்கள், உயர் வெப்பம் தாங்கக்கூடிய செங்கற்கள் மற்றும் உயர் வெப்பம் தாங்கக்கூடிய பொருட்களைத் தயாரிக்கிறது.

### 2.5.2. மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகள்

அரசு மின் மற்றும் மின்னணு தொழில்களுக்காக மட்டும் எட்டு தொழிற்பேட்டைகளை அமைத்துள்ளது. இவற்றில் இரண்டு சென்னையிலும் (திருவான்மியூர் மற்றும் பெருங்குடி) மற்றும் திருவள்ளூர் (காக்களூர்) மதுரை (கப்பலூர்) சேலம் (சூரமங்கலம்) கோயம்புத்தூர் (மாநகரம்) கிருஷ்ணகிரி (ஓசூர்) மற்றும் திருச்சி (துவாக்குடி) ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றும் உள்ளது. இத்தொழிற்பேட்டைகளில் 515 மனைகளும் 140 தொழிற்கூடங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 2.6 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்தல் மற்றும் நடத்துதல்

தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் மாநிலத்திலுள்ள தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்கான செயல் பதிவாளர் ஆவார். 31-3-2006 அன்று 306 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் இத்துறையால் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 203 சங்கங்கள் 2004-05 ஆம் ஆண்டின் தணிக்கையின்படி நிகர இலாபம் ஈட்டியுள்ளன. 2005-06 ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் ரூ.394 கோடி மொத்த விற்பனையாக ஈட்டியுள்ளன.

### 2.6.1 தேயிலை கூட்டுறவுச் சங்கங்கள்

நீலகிரி மாவட்டத்திலுள்ள 17 கூட்டுறவுச் சங்கங்கள் இத்துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 15 தயாரிப்பு சங்கங்கள் மற்ற இரண்டும் விற்பனைச் சங்கங்கள் ஆகும்.

### 2.6.1.1 தேயிலை கூட்டுறவு தொழிற்சாலைகள்

இத்துறை நீலகிரி மாவட்டத்தில் 20,000 சிறு தேயிலை உற்பத்தியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட 15 தேயிலை தொழிற் கூட்டுறவு தொழிற்சாலைகளை நடத்தி வருகிறது. 2005–06 ஆம் ஆண்டில் இத்தொழிற்சாலைகள் 475.87 இலட்சம் கிலோ பச்சை தேயிலையை கொள்முதல் செய்து ரூபாய் 4,289.16 இலட்சம் மதிப்புடைய 123.12 இலட்சம் கிலோ தேயிலையை உற்பத்தி செய்துள்ளன. டாக்டர் கலைஞர் அரசின் நிதிநிலை அறிக்கையில் தேயிலைக்கான விற்பனை வரி குறித்து கீழ்க்கண்டுள்ளவாறு அறிவிக்கப்பட்டுள்ளது:

"நமது மாநிலத்திலுள்ள ஆயிரக்கணக்கான சிறிய தேயிலை விவசாயிகளுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் உதவிடும் வண்ணம் டீ சேர்வ் (Tea Serve) ஏல மையத்தில் விற்கப்படும் தேயிலைமீது தற்போது விதிக்கப்படும் 4 சதவிகித பொது விற்பனை வரி மற்றும் 2 சதவிகித மத்திய விற்பனை வரி ஆகியவை 1 சதவிகிதமாகக் குறைக்கப்படும். கோயம்புத்தூர் மற்றும் குன்னூரிலுள்ள பிற ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலைக்கான பொது விற்பனை வரி தற்போதுள்ள 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும் தற்பொழுதுள்ள மத்திய விற்பனை வரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகவும் குறைக்கப்படும். இந்த ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலை விற்பனையின்மீது விதிக்கப்படும் கூடுதல் விற்பனை வரி மற்றும் மேல் வரி ஆகியவை நீக்கப்படும்".

### 2.6.1.2 இண்ட்கோசர்வ்

1965 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு சிறு தேயிலை உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் கூட்டமைப்பு லிமிடெட் (இண்ட்கோசர்வ்) தற்போது இந்தியாவில் மிகப்பெரிய தேயிலை விற்பனை கூட்டுறவாகத் திகழ்கிறது. மற்ற பணிகள் போக, இந்நிறுவனம் பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ.2,835 இலட்சம் மதிப்புடைய 3,185 மெட்ரிக் டன் ஊட்டி தேயிலையை கடந்த ஆண்டில் விற்பனை செய்துள்ளது. இந்நிறுவனம் கடந்த ஆண்டில் ரூ.2,880 இலட்சத்திற்கு நேரடியாக மொத்த விற்பனை செய்து ரூ.294.44 இலட்சம் உத்தேச இலாபம் ஈட்டியுள்ளது.





### 2.6.1.3 தேயிலை உற்பத்தியாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவுச் சங்கம் (டீ சர்வ்)

ஊட்டியில் தேயிலை மின்னணு ஏல விற்பனை மையத்தை நடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட இச்சங்கம் ஏலங்கள் ஒளிவுமறைவற்றதாக நடைபெறவும், சரியான விலை பெறவும் உதவியுள்ளது. கடந்த ஆண்டில் இச்சங்கத்தின் மூலம் ரூ.4,500.67 இலட்சம் மதிப்புடைய 12,796 மெட்ரிக் டன் தேயிலை விற்கப்பட்டுள்ளது. இச்சங்கம் ரூ.0.84 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

### 2.6.2. ஜவ்வரிசி மற்றும் மரவள்ளிக்கிழங்கு மாவுப் பொருட்கள்

சேலம் மரவள்ளிக்கிழங்கு மாவு மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கம் (சேகோசர்வ்) தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் மிகவும் வெற்றியடைந்த சங்கங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. இச்சங்கத்தில் 370 உறுப்பினர்கள் உள்ளனர். இதன் பங்கு மூலதனம் ரூ.564.82 இலட்சம். இதில் அரசின் பங்கு ரூ.99.83 இலட்சம். தற்பொழுது இச்சங்கத்தில் 2.25 இலட்சம் மூட்டைகள் சேமித்து வைக்கக்கூடிய 10 சேமிப்புக் கிடங்குகள் உள்ளன. இச்சங்கம் ஆரம்பித்தபிறகு மரவள்ளிக்கிழங்கு மாவு மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள், குறிப்பாக சிறு உற்பத்தியாளர்கள், தங்களுடைய தயாரிப்பிற்கு நல்ல விலை பெற முடிகிறது. கடந்த ஆண்டில் இச்சங்கத்தின் மொத்த வியாபாரம் ரூ.23,029.00 இலட்சமாகும், அதன் உத்தேச இலாபம் ரூ.84.12 இலட்சம் ஆகும்.

### 2.6.3. கயிறு துறை

மாநிலத்தில் 10,750 உறுப்பினர்களுடன் ரூ.279.83 இலட்சம் பங்கு மூலதனத்துடனும் 68 கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதில் அரசின் பங்கு மூலதனம் ரூ.231.18 இலட்சம். இந்த 68 சங்கங்களில் 54 கயிறு திரித்தல், 8 நார் பிரித்தல், 4 விற்பனை, 1 சுருள் கயிறு மற்றும் 1 இரப்பர் கயிறு சங்கங்கள் ஆகும். கூட்டுறவு தொழிற் கயிறு சங்கங்களுக்கு விற்பனை மேம்பாடு உதவி திட்டத்தின்கீழ் 2005–06 ஆம் ஆண்டில் ரூ.34.77 இலட்சம் உதவியை மாநில அரசு வழங்கியுள்ளது. இச்சங்கங்கள் கடந்த ஆண்டில் ரூ.1,068.78 இலட்சம் மொத்த விற்பனை செய்துள்ளன.

### 2.6.4 சேவை கூட்டுறவுச் சங்கங்கள்

தொழில் வணிக இயக்ககம் 1983 முதல் 2000 வரை ஒரு புதிய முயற்சியாக 7 தொழிலாளர் சேவை கூட்டுறவுச் சங்கங்களை இம்மாநிலத்தில் அமைத்தது. தற்காலிக மற்றும் தொழில் திறன் பெறாத தொழிலாளர் ஆகியோரை ஒரு குழுவாக அமைத்து அவர்களுக்கு நிலையான வேலைவாய்ப்பு பெற்று சட்டபூர்வமான அனைத்து சலுகைகளையும் பெற இச்சங்கங்கள் உதவுகின்றன. தற்போது 7 சங்கங்களும் 3,706 உறுப்பினர்களுடன் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

### 2.6.5. தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி

தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இத்துறை தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியை ஆரம்பித்துள்ளது. இவ்வங்கியை தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்கு நபார்டு மறுநிதித் திட்டத்தின்கீழ் கடன் [illegible]சதி வழங்கும் நிறுவனமாக இந்திய ரிசர்வ் வங்கி அங்கீகரித்துள்ளது. தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் வழங்குவதைத் தவிர, பொது மக்கள் மற்றும் சம்பளம் வாங்கும் பணியாளர்களுக்கு மற்றவகையான கடன்களை வழங்குகிறது. கடந்த ஆண்டில் இவ்வங்கி ரூ.297 இலட்சம் உத்தேச இலாபம் ஈட்டியுள்ளது. 2004–05 ஆம் ஆண்டிற்காக இவ்வங்கி 12 விழுக்காடு இலாப ஈவுத் தொகை வழங்கியுள்ளது.

### 2.6.6. தொழில் கூட்டுறவு தொழிற்பேட்டைகள்

தொழில் வணிகத் துறை கூட்டுறவு முறையில் 11 தொழிற்பேட்டைகளை ஏற்படுத்தியுள்ளது. இவை சென்னை, கோயம்புத்தூர், சேலம், சிவகாசி, தூத்துக்குடி, மதுரை, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ளன. இவற்றில் 8 செயல்பட்டு வருகின்றன. மூன்று [அண்ணா தொழிற்பேட்டை (கோயமுத்தூர்), பிரியதர்ஷினி தொழிற்பேட்டை (தென்காசி) மற்றும் சேலம் கிராணைட் தொழிற்பேட்டை (பகலப்பட்டி)] செயலாக்கத்தில் உள்ளன. இத்தொழிற்பேட்டைகளின் முக்கிய நோக்கம் சிறு தொழில் முனைவோர்களுக்கு மனைகள், தொழிற்கூடங்கள் மற்றும் பொது வசதிகள் ஆகியவற்றை அளிப்பதாகும். இக்கூட்டுறவுச் சங்கங்களில் 2,319 உறுப்பினர்கள் உள்ளனர்.



### 2.6.7. மற்ற தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

குறிப்பிட்ட துறை தொடர்பான சங்கங்கள் தவிர, ஏறக்குறைய 200 இதர கூட்டுறவுச் சங்கங்கள் தொழில் வணிகத் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் பல்வேறு வகையான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. 31–3–2006 அன்று 41 சிறப்பு வகை சங்கங்கள் 40 ஆட்டோ மற்றும் வாடகை கார் சங்கங்கள், 30 அச்சு சங்கங்கள், 19 கைவினைப் பொருட் சங்கங்கள், 17 தையல் சங்கங்கள், 13 பாலிதீன் சங்கங்கள், 11 பொறியியல் சங்கங்கள், 8 உலோக சங்கங்கள், 7 செங்கல் தொழிற் சங்கங்கள், 6 தீப்பெட்டி சங்கங்கள், 5 நிலக்கரி சங்கங்கள் மற்றும் 3 தோல் பொருள் சங்கங்கள் ஆகியன மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் பாலிதீன் மற்றும் தையல் சங்கங்களிலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் பெண்களே.

## 2.7 துறையால் செயல்படுத்தப்படும் பெரிய திட்டங்கள்

### 2.7.1 பாரதப் பிரதமர் சுயவேலைவாய்ப்புத் திட்டம்:

1993 ஆம் ஆண்டு அக்டோபர் 2 முதல் செயல்படுத்தப்படும் இத்திட்டம் குறைந்த அளவு படித்த ஏழைகளுக்கு சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதை குறிப்பான குறிக்கோளாகக் கொண்டுள்ளது. 2005–06 ஆம் ஆண்டில் 21,773 பயனீட்டாளர்களுக்கு 85.41 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளன. 2006–07 ஆம் ஆண்டில் 27,000 பயனாளிகளுக்கு உதவ திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.7.2. தொழிற்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் குழும கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்காக மொத்த திட்ட மதிப்பீட்டில் 75 விழுக்காடு அல்லது ரூ.50 கோடி இதில் எது குறைவான தொகையோ அதனை மத்திய வர்த்தக மற்றும் தொழில் அமைச்சகம் உதவித் தொகையாக வழங்குகிறது. 31–3–2006 வரை 1. வாகன உதிரி பாக குழுமம், சென்னை, 2. பின்னலாடை குழுமம், திருப்பூர், 3. தானியங்கள் பருப்பு அரவை குழுமம், மதுரை, 4. பம்ப் மோட்டார் மற்றும் வார்ப்பட குழுமம், கோயம்புத்தூர் மற்றும் 5. தோல் குழுமம், ஆம்பூர் ஆகிய ஐந்து திட்டங்களுக்கு ரூ.370.89 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசு ரூ.198.05 கோடி வழங்க இசைந்துள்ளது. இந்த 5 திட்டங்களும் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

[2006 ஆகஸ்ட் 1

### 2.7.3 அண்ணா மறுமலர்ச்சி புதிய திட்டம்

மாநில அளவிலான கண்காணிப்புக் குழு கூட்டத்தில் கடந்த ஆண்டு ரூ.839.99 கோடியில் 385 வட்டாரங்களில் 1,346 திட்டங்கள் தொடங்க அனுமதியளிக்கப்பட்டது. அதில் ரூ.260.32 கோடியில் 212 வட்டாரங்களில் 102 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு உற்பத்தி தொடங்கி 9,608 பெண்கள் உட்பட 14,084 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. ரூ.112.03 கோடியில் 212 திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் நிறைவேற்றப்படவுள்ளன. மேலும், ரூ.153.99 கோடியில் 227 திட்டங்கள் பல்வேறு நிதி நிறுவனங்கள்மூலம் நிதி உதவி பெற விண்ணப்பித்துள்ளன. இதுவரையில் ரூ.824.86 இலட்சங்கள் சிறப்பு மூலதனமானியம் மற்றும் குறைந்த மின்னழுத்த மானியங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

### 2.7.4 சிறு தொழில் நிறுவனங்களுக்கு பின்முனை வட்டி மானியம்

குறு மற்றும் சிறு தொழில்கள் கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் வாங்கிய கடன் மீதான வட்டியை குறைக்கும் வகையில் அரசு இத்திட்டத்தை டிசம்பர் 2003 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது:

(அ) தொழில் நுட்பமேம்பாடு மற்றும் நவீனமயமாக்கலுக்கான கடன்.

(ஆ) தேசிய சமபங்கு நிதித் திட்டம்.

(இ) ஐ.எஸ்.ஓ (I.S.O.) தரச்சான்றிதழ் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றின்மூலம் காப்புரிமை பெறுவதற்காக பெறும் கடன்.

(ஈ) தேசிய சிறு தொழில் நிறுவனம் – சிறு தொழில் வளர்ச்சி கழக கூட்டமைப்புத் திட்டம் கூட்டுக்காலக் கடன் மற்றும் கடன் உத்திரவாத நிதி குழுமதிட்டத்தின் குறுந்தொழில்கள் பெறும் திட்டம்.

இத்திட்டத்தினைப் பயனாளிகளுக்குக் கொண்டு செல்ல அரசு முயற்சிப்பதுடன் எதிர்காலத்திலும் இதனைத் தொடர்ந்து செயல்படுத்தும்.

### 2.7.5 தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்:

தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாத் தேவையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2005–06 ஆம் ஆண்டில் இத்துறை 35,560 மகளிர் தொழில் முனைவோர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது.



2006 ஆகஸ்ட் 1]

இதுதவிர, சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பயிற்சி திட்டத்தின்கீழ் கணினிமயமாக்கப்பட்ட இயந்திரங்களை இயக்குவதில் தொழில் திறனை மேம்படுத்த 500 தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 2.7.6 தேயிலை உற்பத்தியாளர்களுக்கு உதவி

நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் கடந்த ஆண்டு ஜூலையில் அரசு சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் பாதுகாப்புத் திட்டத்தை 6 மாதங்களுக்கு அறிவித்தது. பச்சை தேயிலைக்கு விலை வீழ்ச்சியைக் கருத்திற்கொண்டு ஒரு ஏக்கருக்கு ரூ.2,800 உதவி இத்திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்டது. மேலும், அரசு ஒரு ஏக்கருக்கு ரூ.1,400 கூடுதல் உதவித் தொகை அறிவித்தது. இதன்மூலம் 31–3–2006 வரை 43,296 தேயிலை உற்பத்தியாளர்கள் இக்கூடுதல் உதவித் தொகையைப் பெற்றுள்ளனர்.

2006–07ஆம் ஆண்டில் மாண்புமிகு டாக்டர் கலைஞர் ஆட்சியில் தொழில் மற்றும் வணிக இயக்ககம் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்திட திட்டமிட்டுள்ளது:

(1) பல்வேறு மாவட்டங்களிலுள்ள சிறு தொழில்களின் உட்பிரிவுகளை சோதனை பகுப்பாய்வு மூலம் கண்டறிந்து, இயக்ககத்தையும் மற்றும் திட்டங்களையும் தற்போதைய தேவைக்கேற்ப மறுசீரமைப்பு செய்ய நடவடிக்கை எடுத்தல்.

(2) இந்திய அரசு விரைவில் அறிவிக்கை செய்ய உள்ள 2006 ஆம் ஆண்டு மிக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வளர்ச்சி சட்டத்திற்கிணங்க, சிறு தொழில் துறையினருடன் கலந்தாலோசித்து, சிறு தொழில் வளர்ச்சிக்காகக் கொள்கை வகுத்தல்.

(3) நுகர்வோர் நலனைப் பாதுகாக்கும் வகையில் தரக்கட்டுப்பாட்டு ஆணைகளில் உள்ளவாறு தரக்கட்டுப்பாட்டை சிறந்த முறையில் செயலாக்குதல்

(4) வங்கிகளுடன் இணைந்து (அ) குறுந்தொழில்களுக்காக வட்டார மொழியில் ஒரு பொது விண்ணப்பப் படிவத்தை உருவாக்குதல் (ஆ) சிறு தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை.

(5) மாவட்ட தொழில் மைய அளவில் வெளிநாட்டு வர்த்தகம் போன்றவற்றில் தரமான வழிகாட்டுதலை அளிப்பதற்காகவும், தொழில் முனைவோர் எதிர்பார்ப்பிற்கு ஏற்ற வழிகாட்டுதல் வழங்க ஏதுவாகவும்

[2006 ஆகஸ்ட் 1

தொழில் வணிக இயக்குநரக அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தல் 2006–07ஆம் ஆண்டில் இப்பணிக்காக ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

(6) தொழில் கூட்டுறவுகளை இயலும் இடங்களில் எல்லாம் சீரமைப்பு செய்ய நடவடிக்கை எடுத்தல். மேலும், தேவையான தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை இலாபத்தில் இயங்க நடவடிக்கை எடுத்தல்.

(7) பெரியகுளம் நார் கயிறு தொழிலாளர்கள் சங்கம், கன்னியாகுமரி மாவட்ட மத்திய கயிறு சங்கம் மற்றும் இன் [illegible] பனையகோட்டை ஆகிய இடங்களில் ரூ.30 இலட்சம் மொத்த செலவில் பொது வசதி மையம் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

## தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் தமிழ்நாட்டில் சிறு தொழில்களை வளர்க்கும் குறிப்பான நோக்கத்துடன் தமிழக அரசு நிறுவனமாக 1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தொழில் நுட்ப வல்லுநர்கள், படித்து வேலை இல்லாத இளைஞர்கள் மற்றும் மகளிர் தொழில் முனைவோர்களுக்காக சிட்கோ நிறுவனம் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

சிட்கோ www.sidco.tn.gov.in என்ற புதிய இணையதளத்தை ஏற்படுத்தி சிட்கோவில் உள்ள எல்லாத் திட்டங்களைப் பற்றிய விரிவான தகவல்களையும், தொழிற்பேட்டைகளில் உள்ள காலி மனை மற்றும் தொழிற் கூடங்களின் நிலையினையும் மூலப் பொருள் கிடங்குகளில் உள்ள மூலப் பொருட்களின் இருப்பு குறித்த தகவல்களையும் அளிக்கிறது.

### 2. கீழ்க்கண்ட வளர்ச்சிப் பணிகள் சிட்கோவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

### 2.1 தொழிற்பேட்டைகளை உருவாக்குதல்

சாலை வசதி, வடிகால் அமைப்பு, புயல் வெள்ள வடிகால் அமைப்பு, தெரு விளக்கு, நீர் விநியோகம் ஆகிய கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட தொழிற்பேட்டைகளை உருவாக்குவது சிட்கோவின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். இந்தத் தொழிற் பேட்டைகளில் சிட்கோ மனைகளை மேம்படுத்தியும், பல்வேறு தரப்பட்ட அளவுகளில் தொழில் கூடங்களைக் கட்டியும், அவற்றினை சுலபத் தவணை மற்றும் மொத்த விற்பனை முறையில் ஒதுக்கீடு செய்கிறது. 43 ஆக



2006 ஆகஸ்ட் 1]

தொழிற்பேட்டைகளுக்கு முகவராக இருப்பதோடு மட்டுமின்றி 43 தொழிற்பேட்டைகளை சிட்கோ இதுவரை உருவாக்கியுள்ளது.

2.2 சிட்கோ கடந்த ஆண்டில் 376 மனைகளையும் 22 தொழிற்கூடங்களையும் விற்றுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டில் பல்வேறு தொழிற்பேட்டைகளில் 507 மனைகளை மேம்படுத்தவும் மற்றும் 644 மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் 60 தொழிற்கூடங்களை விற்கவும் உத்தேசித்துள்ளது.

2.3 சிறுதொழில் நிறுவனங்களுக்கு மூலப் பொருட்களை நியாய விலையில் வினியோகம் செய்வது இந்நிறுவனத்தின் பணிகளில் ஒன்றாகும். கிண்டி, கோயமுத்தூர், மதுரை, திருச்சி, ஓசூர், சாத்தூர், சிவகாசி, ஈரோடு, சேலம், தஞ்சாவூர், வேலூர், திருநெல்வேலி சிட்கோவின் தலைமை அலுவலகம், விருதுநகர் கிளை அலுவலகம், கிருஷ்ணகிரி கிளை அலுவலகம், கோயமுத்தூர் கிளை அலுவலகம், மதுரை, திருச்சி கிளை அலுவலகம் ஆகிய கிடங்குகளிலிருந்து சிட்கோ மூலப் பொருட்களை வினியோகம் செய்து வருகிறது.

இக்கிடங்குகள் பின்வரும் மூலப்பொருட்களைக் கையாளுகின்றன:

1. இரும்பு மற்றும் எஃகு
2. மெழுகு
3. பொட்டாசியம் குளோரேட்
4. அச்சகக் காகிதம்

கடந்த ஆண்டுக்கான கச்சாப்பொருட்களின் விற்பனையும் 2006–07 ஆம் ஆண்டுக்கான நிர்ணயிக்கப்பட்ட இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | விவரங்கள் | 2005–2006 ஆம் ஆண்டுக்கான சாதனை மெ.டன் | 2006–2007 ஆம் ஆண்டுக்கான இலக்கு மெ.டன் |
|---|---|---|---|
| 1. | இரும்பு மற்றும் எஃகு | 9,146.10 | 20,000 |
| 2. | மெழுகு | 448.50 | 1,500 |
| 3. | பொட்டாசியம் குளோரேட் | 44.35 | 60 |
| 4. | அச்சகக் காகிதம் | 1,647.74 | 2,265 |

[2006 ஆகஸ்ட் 1

## 2.4 விற்பனை உதவித் திட்டம்

விற்பனை உதவித் திட்டத்தின்கீழ் சிட்கோவில் பதிவு செய்து கொண்ட சிறுதொழில் நிறுவனங்களின் சார்பில் அரசுத் துறை மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களால் விளம்பரப்படுத்தப்படும் ஒப்பந்தப் புள்ளிகளில் சிட்கோ கலந்துகொள்கிறது. சிட்கோ கடந்த ஆண்டில் ரூபாய் 65 இலட்சங்களுக்கான விற்பனையை நிறைவேற்றியுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 70.00 இலட்சங்களுக்கு விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

## 2.5 ஏற்றுமதி உதவித் திட்டம்

இத்திட்டத்திற்காக சிட்கோ நிறுவனம், www.sidcoexports.com என்ற இணைய தளத்தினை உருவாக்கி அதன்மூலம் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ள நிறுவனங்களின் பொருட்கள் மற்றும் அந்நிறுவனங்களைப் பற்றிய குறிப்புகளை விளம்பரப்படுத்தி உதவி புரிந்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரையில் 97 நிறுவனங்கள் பதிவு செய்துள்ளன.

## 3 தொழிற்பேட்டைகளுக்குக் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தியும் மேம்படுத்தியும் தருதல்

இந்நிறுவனம் தொழிற்பேட்டைகளில் உள்ள கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த முயற்சி மேற்கொண்டுள்ளது.

3.1 கடந்த ஆண்டில் ரூ.61 இலட்சங்கள் செலவில் ஓசூர் தொழிற்பேட்டையில் கட்டமைப்பு வசதிகளை ஒருங்கிணைந்த தொழில் கட்டமைப்பு மேம்படுத்துதல் திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் வலுப்படுத்தியுள்ளது. கப்பலூர் பகுதி–2, குறிச்சி மற்றும் விருதுநகரிலுள்ள தொழிற்பேட்டைகளில் கட்டமைப்பு வசதிகளை ஒருங்கிணைந்த தொழிற்கட்டமைப்பு மேம்படுத்துதல் திட்டத்தின்கீழ் மேம்படுத்துவதற்கான செயற்குறிப்புகளை இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கிக்கு அளித்துள்ளது. கிண்டி தொழிற்பேட்டையின் கட்டமைப்பை வலுப்படுத்தும் பணி ரூ.1,002.24 இலட்சம் செலவில் 'கிண்டி தொழிற்பேட்டை கட்டமைப்பு மேம்படுத்தும் நிறுவனம்' என்ற பெயரில் ஒரு சிறப்பு நோக்குக் குழுமம் மூலம் நடைபெற்று வருகிறது.

3.2 பேட்டை, இராணிப்பேட்டை மற்றும் கப்பலூர் பகுதி–1. ஆகிய தொழிற்பேட்டைகளில் கூடுதல் மத்திய உதவி திட்டத்தின்கீழ் பெறப்பட்ட தொகை மற்றும் 20 விழுக்காடு ஒதுக்கீட்டாளர்களின் பங்குத்தொகை பெறப்பட்டு, மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2006 ஆகஸ்ட் 1]

3.3 அம்பத்தூர், திருமுடிவாக்கம் மற்றும் திருமழிசை தொழிற்பேட்டைகள், 'தொழிற்பேட்டை கட்டமைப்பு மேம்படுத்தும் திட்டத்தின்' மூலம் ரூ.4,720 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக இந்திய அரசின் பங்களிப்பாக 75 விழுக்காடும், பயனாளிகளின் பங்களிப்பாக 15 விழுக்காடும் மாநில அரசு மற்றும் நிதிநிறுவனங்களின் பங்களிப்பாக 10 விழுக்காடும் வழங்கப்படும். தமிழக அரசு ரூபாய் 90 இலட்சம் அதனுடைய பங்களிப்பாக வழங்கியுள்ளது. 'சென்னை வாகன உதிரி பாகங்கள் கட்டமைப்பு மேம்படுத்தும் நிறுவனம்' என்ற பெயரில் ஒரு சிறப்பு நோக்குக் குழுமம் இத்திட்டப் பணிகளை செயல்படுத்தி வருகிறது.

3.4 கோசாகுளம் புதூர் (மதுரை) சேலம் மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் நாற்பதாண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட தொழிற்பேட்டைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக மொத்த செலவில் ஒரு பகுதியாக 2006–07 இல் ரூபாய் 25 இலட்சம் மானியமாக வழங்க அரசு முன்வந்துள்ளது.

3.5 இதைத்தவிர அனைத்து தொழிற்பேட்டைகளையும் படிப்படியாக மேம்படுத்த சிட்கோ திட்டம் தீட்டும். 2006–07 இல் கீழ்க்காணும் தொழிற்பேட்டைகளில் பணியைத் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்:

| வரிசை எண் | தொழிற்பேட்டை |
|---|---|
| 1 | திண்டுக்கல் |
| 2 | புதுக்கோட்டை |
| 3 | கிருஷ்ணகிரி |
| 4 | கரூர் |
| 5 | திருப்பூர் |
| 6 | திருச்செங்கோடு |
| 7 | நாமக்கல் |

## 4. புதிய தொழிற்பேட்டைகள்

4.1 2006–2007 ஆம் ஆண்டில், சிட்கோ கீழ்க்கண்ட இடங்களில் புதிய தொழிற்பேட்டை அமைக்க முடிவு செய்துள்ளது:

[2006 ஆகஸ்ட் 1

### 4.1.1 வாழவந்தான்கோட்டை (பகுதி—2) திருச்சி மாவட்டம்

சிட்கோ 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து 230.72 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தை திருச்சி மாவட்டம் வாழவந்தான்கோட்டையில் வாங்கியுள்ளது. இதில் 65 ஏக்கர் பரப்பளவு நிலம் இந்தியன் ஆயில் கழகத்திற்கு, சென்னை–மதுரை எண்ணெய் சேமிப்பு முனைய திட்டத்திற்காக விற்பனை செய்யப்பட்டது. மேலும் 51.70 ஏக்கர் நிலம், 2002–2003 இல் மகளிர் தொழிற்பூங்கா (பகுதி–1) அமைய பயன்படுத்தப்பட்டது.

4.1.2 பாரத மிகுமின் நிறுவனத்தின் துணைப்பிரிவு தொழிற்சாலைகள் தற்போது திருச்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மனைகளை வாங்க ஆர்வம் காட்டி வருகின்றன. எனவே, அவற்றின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில் வாழவந்தான்கோட்டை தொழிற்பேட்டை பகுதி 2 இல் 83.55 ஏக்கர் நிலத்தை சுமார் ரூ. 12.5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

4.1.3 மேலும், மதுரையில் மகளிர் தொழிற்பேட்டை (மகளிர் தொழிற்பூங்கா) மற்றும் தேனி, விண்ணமங்கலம் மற்றும் மயிலாடுதுறையில் தொழில் நுட்ப தொழிற் பேட்டை (தொழில் நுட்பப் பூங்கா) நிறுவுவதற்கும் நடவடிக்கைகள் ஏற்கெனவே துவங்கப்பட்டுள்ளன.

4.1.4 சிட்கோ தேவையுள்ள இடங்களில் கூடுதலாக புதிய தொழிற்பேட்டைகளை நிறுவும்.

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி)

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) 1965 ஆம் ஆண்டு, மாநிலம் முழுவதுமுள்ள சிறு தொழிற் கூடங்களின் கூட்டமைப்பாக, ஆரம்ப திட்ட காலங்களில் 64 சிறு தொழிற்கூடங்களின் தொகுப்பாக தொழில் வணிக துறையால் மாநிலத்தில் தொழில் நடவடிக்கைகள் குறைவாக இருந்தபோது உருவாக்கப்பட்டது. டான்சி நிறுவனம் வார்ப்பு, இயந்திரக் கருவிகள், முலாம் பூசப்பட்ட கம்பிகள், வார்ப்படங்கள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மற்றும் தோல் பொருட்கள், மின்சாரக் கருவிகள், இயந்திரச் சாதனங்கள், கனரக தளவாடங்கள், முலாம் பூசுதல், இலகு பொறியியல், இரும்பு மற்றும் மர அறைகலன்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இதற்குப்பின் பெரும்பாலான நடவடிக்கைகளில் தனியாரின் முயற்சி ஆரம்பமானது.



2006 ஆகஸ்ட் 1]

2. தனியார் தொழில் முனைவோர் பல நிறுவனங்களை ஆரம்பித்ததால் டான்சி தன்னுடைய நடவடிக்கைகளைக் குறைத்துக் கொண்டது. தற்பொழுது 23 உற்பத்திக் கூடங்கள் மற்றும் 5 செயல் பிரிவுகள் டான்சியின்கீழ் இயங்கி வருகின்றன.

3. டான்சி நிறுவனம் முலாம் பூசப்பட்ட மின்கடத்து கோபுரங்கள், நுண் அலை கோபுரங்கள், கனரக தளவாடங்கள், ஆழ்குழாய் கைப்பம்புகள், தாமான மரம் மற்றும் இரும்பு அறைகலன்கள் ஆகியவற்றில் பெயர் பெற்று விளங்குகிறது. சர்வ சிக்சா அபியான் கரும்பலகை செயல்திட்டம், வறட்சி காலத்தில் குடிநீர்ப் பம்புகள் அமைத்தல் மற்றும் குழாய் உதிரி பாகங்கள் ஆகியவற்றை மாநிலம் முழுவதும் டான்சி நிறுவனம் வழங்கி வருகிறது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம், பாரத மிகுமின் நிலையம் மற்றும் இந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் நிறுவனம் ஆகியவற்றிற்கு மிகவும் நுட்பமான உதிரி பாகங்களை வழங்குகிறது. டான்சி துணை நிறுவனமான தமிழ்நாடு பெயிண்ட் மற்றும் உபபொருட்கள் லிமிடெட் (டாப்பாப்), அம்பத்தூர் மற்றும் திருச்சியிலுள்ள டான்சியின் இரு ஆழ்குழாய் கைப்பம்புகள் நிறுவனம் மற்றும் வேலூர், பழனி, இராஜபாளையத்தில் உள்ள அறைகலன்கள் தயாரிப்பு நிறுவனங்கள் ஐ.எஸ்.ஓ. 9001:2000 தரச் சான்றிதழ் பெற்றுள்ளன.

4. மாசுக் கட்டுப்பாடு விதிகளுக்கிணங்க டான்சி செயல்படுவதற்காக மேட்டூர் அணையிலுள்ள துத்தநாக முலாம் பூசும் நிறுவனத்தில் காற்று மாசுபடுதலைத் தடுக்கும் உபகரணங்களை நிறுவுவதற்காக ஒரு பகுதியாக ரூ.25 இலட்சம் சலுகைக் கடன் வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

5. 2006–07ஆம் ஆண்டில் டான்சி நிறுவனத்தை நிதி சீரமைப்பு செய்து போட்டியிடும் திறன், உற்பத்தித் திறன் மற்றும் பணி ஆணைகளை மேம்படுத்த அரசு உதவி செய்யும்.

## சிறு தொழில் துறை
## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு
## கோரிக்கை எண் 44

(ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்பு | 2005–06ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு | 2006–07 இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு | 2006–07 திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 2851 கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் | 640008 | 394616 | 417958 |
| 2852 தொழில்கள் | 34692 | 39683 | 40679 |
| 2885 தொழில்கள், கனிமப் பொருள்கள் குறித்த ஏனைய செலவுகள் | 10000 | 1 | 1 |
| 3451 தலைமைச் செயலகம் – பொருளாதாரப் பணிகள் | 11726 | 13383 | 13534 |
| 4425 கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு | 0 | 0 | 3000 |
| 4551 மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 0 | 1 | 1 |
| 4851 கிராமத் தொழில்கள், சிறுதொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 3498 | 3 | 1503 |
| 6851 கிராமத் தொழில்கள், சிறுதொழில்களுக்கான கடன்கள் | 17944 | 0 | 2500 |
| மொத்தம் | 717868 | 447687 | 479176 |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை செயலகம்
227416
சென்னை-600 009
நூலகம்

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.